T.B. No 942.

பகவத் கீதை உசுமை

R.65,L:g
N27
58734

942
294.592
REGISTRAR OF BOOKS
25 MAY 1927
MADRAS

உ

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ணயபரப்பிரமணேநம:

தஞ்சை

# பகவற்கீதைவசனம்.

இது

வடமொழிமூலத்திற்கியைய

ஸ்ரீ சங்கரபாஷியார்த்தத்தை
யனுசரித்து

மூதறிஞரால்
மொழி பெயர்க்கப்பட்டது.

தஞ்சைமாநகரம்,

ந. வீரபத்திரபிள்ளை
அவர்களுக்குள்ள

எடிடர் சுதந்தரத்தை அவர்சகோதரர்

ந. கோவிந்தபிள்ளை

அவர்களிடத்திற் பெறப்பட்டதை

சர்வசுதந்தரத்துடன்

**M. A. சுப்பிரமணிய முதலியார்**

அவர்களால் தமது
மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
சென்னை:

1927

*All Rights Reserved.* இதன் விலை ரூபா 1-8-0.

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட A. MANI
March மாதம் 1986 வருடம்
செப்பனிட்டு முடித்த
March மாதம் 1986 வருடம்
ஆராய்ச்சி உதவியாளர்
கையொப்பம்

R65, 6
N27

58734

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 MAY 1927
MADRAS

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ணாயபரப்பிரமணேநம:

# தஞ்சை
# பகவற்கீதை வசனம்.

இது
வடமொழி மூலத்திற்கிசைய
ஸ்ரீசங்கரபாஷியார்த்தத்தை யனுசரித்து
மூதறிஞரால் மொழி பெயர்க்கப்பட்டது.

தஞ்சைமாநகரம்,
ந. வீரபத்திரபிள்ளை அவர்களுக்குள்ள
எடிடர் சுதந்தரத்தை அவர்சகோதரர்
ந. கோவிந்தப்பிள்ளை அவர்களிடத்திற்
பெறப்பட்டது.

இஃது
சர்வசுதந்தரத்துடன்
M. A. சுப்பிரமணிய முதலியார்,
அவர்களால் தமது
சென்னை: செல்வரங்கம் கம்பெனி
மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

Copy-Right Registered.

இதன் விலை ரூபா. 1 8 0

மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்தின்
புத்தக விளம்பரம்.

## ஞானவாசிட்ட வசனம்.

இது வசனகாவியம் ஸ்ரீராமபிரானுக்கு வசிட்டமாமுனிவர் உபதேசித்த விஷயங்களெல்லாம் அடங்கப்பெற்றது இக்கிரந்தம் ஒன்றைமாத்திரம் கவனமாய்ப்படித்தால் உலகம், ஜீவன், ஈசுவரன் என்பவைகளையறிந்து உலகத்தை அனித்தியமென்று விடுத்து ஈசுவரனைப் பூசித்து, அவனது அருளால் மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தை அடைவது சத்தியம். இச்சற்குண ஞான நூல் ஒவ்வொரு சற்குணஸ்த்தர் வீட்டிலும் குடும்ப ஞானஇரத்தினமாகப் பாவிக்கவேண்டியது.

இதன் விலை ரூ. 2.

| | | |
|---|---|---|
| தத்துவராயசுவாமி பாடுதுறை | 0 | 12 |
| கைவல்ய நவநீத வசனம் | 0 | 4 |
| ஷை மூலம் | 0 | 2 |
| சானந்தகணேசர்புராணம் உரை | 0 | 12 |
| மஹாராஜா துறவு என்னும் ஸ்ரீகுமாரதேவர் 16-சாஸ்திரம் | 0 | 10 |
| வள்ளலார் 20-சாஸ்திரம் | 1 | 8 |
| சேந்தன் திவாகரம் 12-தொகுதி | 0 | 12 |
| சோதிட பாலசிட்சை | 0 | 6 |
| சப்தரிஷிவாக்கியம் 5500-பாடல் | 4 | 0 |
| உத்தரகீதை என்னும் யோக சாஸ்திரம் | 0 | 4 |
| ராமதாஸ் முதலிய 6-தாசர்களின் கீர்த்தனை | 0 | 12 |

இவை தவிர தங்களுக்கு வேண்டும் பலவித புத்தகங்களும், ஸ்டேஷனெரி சாமான்களும், வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். ½-அணா ஸ்டாம்பு அனுப்பினால் கேட்லாக்கு இனாம்.

கொ. செல்வரங்கம் கம்பெனி,
எம். ஏ. சுப்பிரமணிய முதலியார்,
வைத்தியனாத முதலி தெரு 29-ெந. வீட்டிலிருந்த
மனோன்மணி விலாசம் பிரஸ்,
மின்ட் பில்டிங் போஸ்டு, சென்னை.




வெண்பா.

அடியேனை யாள வருண்மேனி சாத்திப்
படிமீது வந்த பரனே - கொடியேனென்
றெண்ணா திமைப்பளவி லிங்ஙனே வீடளித்த
கண்ணா கடைபோகக் கா.

வாசுதேவாய நம:

# அட்டவணை.


| அத்தியாயத்தின் பெயர், | | [பக்கம் |
|---|---|---|
| 1. | சோக அத்தியாயம். | ௯௧ |
| 2. | சாங்கியயோக அத்தியாயம். | ௨௫ |
| 3. | கர்மபிரமயோக அத்தியாயம். | ௪௧ |
| 4. | ஞானயோக அத்தியாயம். | ௫௨ |
| 5. | சந்நியாசயோக அத்தியாயம். | ௬௫ |
| 6. | அப்பியாசயோக அத்தியாயம். | ௭௫ |
| 7. | விக்ஞானயோகமென்னப்பட்ட பத்தியோக அத்தியாயம். | ௮௮ |
| 8. | அக்ஷரப்பிரமயோக அத்தியாயம். | ௯௮ |
| 9. | இராசகுய்யயோக அத்தியாயம். | ௧௦௫ |
| 10. | விபூதி அத்தியாயம். | ௧௧௬ |
| 11. | விசுவரூப அத்தியாயம். | ௧௨௫ |
| 12. | பத்தியோக அத்தியாயம். | ௧௩௫ |
| 13. | பிரகிருதிபுருஷவிபாகயோக அத்தியாயம். | ௧௪௦ |
| 14. | குணத்திரயவிபாகயோக அத்தியாயம். | ௧௫௦ |
| 15. | புருஷோத்தம அத்தியாயம். | ௧௫௭ |
| 16. | தெய்வ அசுரசம்பத்து விபாகயோக அத்தியாயம். | ௧௬௩ |
| 17. | சிரத்தாத்திரயவிபாகயோக அத்தியாயம். | ௧௬௯ |
| 18. | சந்நியாச அத்தியாயம். | ௧௭௫ |




(இரண்டு ரூபாய் முத்திரை ஸ்டாம்பு.)

## பகவற்கீதைவசனம் என்னு மிந் நூலின் எடிடர் பாத்திய விற்கிரய பத்திரத்தின் நகல்.

1899ஹ மேமீ 29உ சென்னப்பட்டணம் வைத்தியநாதமுதலி வீதி 29-வது நெ-வீட்டிலிருக்கும் வேளாளஜாதி சிவமதம் புஸ்தக வியாபாரம் கொண்ணூர் நாராயணமுதலியார் குமாரர் மாணிக்க முதலியார் அவர்களுக்குத், தஞ்சாவூர் கருந்தட்டாங்குடி மந்தாரடி வடுகத்தெருவிலிருக்கும் 23-வது நெ-வீடு வெங்கிடாசலபிள்ளை மகன் வேளாளசாதி சிவமதம் வெல்லு வியாபாரம் கோவிந்தபிள்ளை யெழுதிக் கொடுத்த புஸ்தக எடிடர் கிரயபத்திரம் என்னவென்றால், என் தமையனார் இறந்து போன க. வீரபத்திரபிள்ளை அவர்கள்பெயர் எப்பொழுதும் புஸ்தக ரூபமாய் விளங்கும்பொருட்டு அவர்கள் பெயர் வைத்து அவரால் அச்சிட்டு விற்பனைசெய்துவந்த பகவற்கீதைவசனம் என்னும் புஸ்தகத்தின் அமைப்பு அல்லது எடிடர் பாத்தியதையைத் தாங்களுக்கு நான் நாளது தேதியில் சாசனஞ்செய்துகொடுத்து அதற்காக நான் பெற்றுக்கொண்டது ரூபா-200. இந்த இருநூறு ரூபாயும் இதின் மூலமாய்த் தங்களால் அச்சிடப்படும் ஷை புஸ்தகம் 200-க்கு மதிப்பு ரூபா-200. இப்புஸ்தகம் இருநூறில் எனக்கு ஐம்பது புஸ்தகம் காலிகோ பயின்டுசெய்து கொடுப்பதாகவும், பாக்கி 150 புஸ்தகமும் பயின்டு அன்றியில் கொடுப்பதாகவும் தங்கள் ஏஜெண்டு குருசாமிநாயுடு அவர்கள் முன்னிலையில் பேசி ஒப்புக்கொண்டவகையில் மேல்கண்ட இருநூறுரூபாயும் என்பற்றுகிவிட்டபடியால், இனி புஸ்தகத்தை அச்சில்பதிப்பித்து விற்பனைசெய்துகொள்ளவும், தவிர ஷை புஸ்தகத்தை அச்சிற்பதிப்பிக்க எனக்கு எவ்வித பாத்தியமும் இல்லை. நான் உட்பட மற்றவர்கள் மேற்படி புஸ்தகத்தை அச்சிட்டு விற்பனைசெய்தால் அதினாலுண்டாகும் சகல நஷ்டத்தையும் அச்சிட்டவர்களிடம் தாங்களே வாங்கிக்கொள்வீர்களாகவும். இதற்குமுன் இந்தப்பாத்தியதையைத் தங்களுக்குத் தவிரவேறே யாருக்கும் அச்சிடும்படி யெவ்வித அனுமதியும் நான் கொடுக்கவில்லையென்று உறுதிசொல்லி யிந்தச் சுத்த கிரயசாசனம்செய்து கொடுத்துவிட்டபடியால் சாசனவாசகப்படிக்குள்ள சகல பாத்தியதையும் தாங்களே அனுபவித்துக் கொள்வீர்களாகவும்.

இந்தப்படிக்கு மாணிக்கமுதலியாரவர்களுக்குக் கோவிந்தப்பிள்ளை சுத்தகிரயசாசனஞ்செய்து கொடுத்தேன்.

(ஒப்பம்) கோவிந்தப்பிள்ளை கையெழுத்து.

சாக்ஷிகள்.

சிதம்பரத்திலிருக்கும் கொ. மா. ஏஜெண்டு என். குருசாமிநாயுடு அறிவேன்.

தஞ்சாவூர்க் கருந்தட்டாங்குடி மேட்டுத்தெருவி லிருக்கும் நல்லி நாயுடுமகன் சாமிநாதநாயுடு அறிவேன்.

ஷெ யூர் மார்க்கட்டுப் புத்தகவியாபரம் க. கி. சோலைமுத்துப் பிள்ளை அறிவேன்.

தஞ்சாவூர்க் கருந்தட்டாங்குடி மந்தாரடி கீழ் வேளாளத்தெருவி லிருக்கும் செல்லகுருநாதபிள்ளை குமாரன் கோவிந்தசாமிபிள்ளை கெட்டெழுத்துள்பட அறிவேன்.

## றிஜிஸ்டர்ட் அறிவிப்பு.

இதனால் சகல கனவான்களுக்கும் அச்சுக்கூடத் ததிபருக்கும் அறிவிப்ப தியாதெனில் இந்தப்பகவற்கீதை [illegible]சனம் என்னும் [illegible] அமைத்த ந. வீரபத்திரபிள்ளைசகோதரர் ந. கோவிந்தப் பிள்ளை யவர்களிடம் இந்நூலிற்குள்ள (எடிடர் பாத்தியதை எல்லா [illegible]தந்தரத்தை, இத்துடன் சேர்த்திருக்கிற விற்கிரயபத்திர நகல்பிரகாரம் [illegible]து மைத்துனர் ம-௱-௱ஸ்ரீ, கொண்ணூர்-லோகநாத முதலியார் அவர்களின் பிதா கொ-மாணிக்கமுதலியாரால் கிரயத்திற்கு வாங்கப்பட்டு அச்சிற் பதித்து றிஜிஸ்டர்ட் செய்திருப்பதால் இப்புத்தகத்தை என்னுடைய அநுமதியன்றியில் யாரேனும் அச்சிடுவாராயின் 1867 - ஹுத்திய 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின்படி நான் கோரும் நஷ்டத்திற்கும் இண்டியன் பினல்கோடு என்னும் ஆக்ட்டின்படி குற்றத்திற்கும் உத்தரவாதிகளாக வேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகிறேன்.

இப்படிக்கு,

ம. அ. சுப்ரமணிய முதலியார்.

மனோன்மணிவிலாச அச்சுக்கூடம்:

மின்ட் பிள்டிங்ஸ் போஸ்டு, சென்னை.



ஸ்ரீகிருஷ்ணயபரப்பிரம்மணேநம:

# பகவற்கீதாமான்மிய சங்கிரகம்.

சைவபுராணங்களு ளொன்றாகிய வராக புராணத்தில் ௩௦-சுலோகங்களினால் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றதைச் சுருக்கிச் சொல்லுமாறு சௌனகரென்னு முனிவர் சூதமகா ரிஷியைப்பார்த்து சுவாமின்! தேவரீர் வியாஸபகவானாற் கேட்டிருக்கிற பகவற்கீதா மான்மியத்தை அடியேனுக் கநுக்ரகம் பண்ணவேண்டுமென்று வினவச் சூதர் சொல்லுகிறார்.

வாரீர் ரிஷியே! நீர்கேட்ட கீதா மான்மியமானது பெருமையிற் சிறந்ததும், இரகசியமானதும், உத்தமமானதாயு முள்ளது. அதன் பெருமை யொருவராலு முரைத்தற் கரியதாயினும் நான் கேட்டபிரகாரஞ் சிறிது கூறுகிறேன்.

ஸ்ரீபகவானால் அருச்சுனனுக் குபதேசித்த கீதையானது அமிர்தத்துக் கொப்பானதாயும் சம்சார சமுத்திரத்தைத் தாண்ட ஒரு தெப்பமாயு மிருக்கிறது. இதை விசுவசித்துக் கேளாதவன் ஊர்ப்பன்றிக்குச்சமானம். கீதையையே அத்தியயனஞ் செய்கிறவன் மோக்ஷத்தையடைவன். இதைப் பாராயணஞ் செய்தாற் சகல வேதங்களும் சாஸ்திரங்களும் படித்ததற்குச் சமானம். கீதையில் பாதிபடித்தாற் கோதான பலமும், மூன்றிலொருபங்கு படித்தாற் சோமயாகபலமும், ஆறிலொருபங்கு படித்தாற் கெங்காஸ்நானபலமும், தினம் இரண்டத்தியாயம் படித்தால் இந்திரலோகத்தில் கற்பகாலவாசமும், ஓரத்தியாயம் வாசிப்பவனுக்குச் சிவகணமாகி உருத்திரலோகத்தில் நெடுநாள் வாசமும், ஓரத்தியாயத்திற் பாதியல்லது நாலிலொருபாகம் படித்தால் நீண்டநாள் சூரிய லோகவாசமும், பத்து அல்லது எழு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று, அரை சுலோகங்களையாவது படிப்பவர்க்குப் பத்துக்கோடி வருஷஞ் சந்திரலோக வாசமுஞ் சித்திக்கும்.

மரணசமயத்திற் கீதா அர்த்தத்தைச் சிந்திப்பவர்களும் பாராயண சப்தத்தைக் கேட்பவர்களும் மோக்ஷமே யடைவார்கள். கிரியைகள் நடத்தும்போது பாராயணஞ்செய்தால் சகல குற்றமு நீங்கும்.

9. நர்மதாதீரத்தில் மாகிஷ்மதிபுரத்தில் வசிக்கும் மாதவனென்கிற பிராமணன் யாகம் நடாத்த முயலுகையில் கீதா ஒன்பதாமத்தியாயப் பிரபாவத்தால் காலபுருஷனிடத்திருந்து உண்டான நீச புருடனையும் ஸ்திரீயையும் அந்தத் தானம் வாங்கிய பிராமணன் செயித்த விபரமும் இராஜன் மோக்ஷமடைந்த சங்கதியும் யாகத்துக்காகக் கொண்டுவந்திருந்த ஆடு சொல்லத் தெரிந்து தானும் அந்த ஆடும் ஒன்பதா மத்தியாய பாராயணத்தால் மோக்ஷமடைந்தார்களென்றும்,

10. காசியில் தீரதியென்கிற பிராமணன் தீரஞானமுடைய ஜீவன் முத்தராய் ஒருதினம் சிவலிங்கத்தின்மீது கால்நீட்டி நித்திரை செய்வதையும் சிவலோகர் அவருக்குப் பணிவிடை செய்வதையும் பிருங்குரிஷியானவர் கண்டுவினவப் பரமசிவன் வாக்கினாலேயே அன்னமொன்று சாபம் நீங்கினதும் கமலமுகியாயிருந்து துர்வாசர் சாபத்தால் ஐந்துபூவாகிய பத்மினியின் வாசனாகிரகணத்தால் அறுபதினாயிரம் பேர் விஷ்ணுசாயுச்சியமடைந்ததோடு அவள் சாபம் நீங்கினதும், தீரதியென்பவருக்கு இவ்வளவுமகிமை வந்ததும் ஆகிய அனைத்தும் கீதையின் தசமாத்தியாயத்தின் பாராயண மகத்துவமென்று விஸ்தாரமாகச் சொல்லப்பட்டதென்றும்,

11. பிராணிதீரம் மேகங்கிபட்டணம் ஆலயத்தில் வசிக்கும் சுனந்தனென்னும் பெயருடையவர் கீதா பதினோராமத்தியாயப்படனத்தால் ஜீவன் முத்தராய்ச் சரிக்குங்காலையில் எதிர்ப்பட்ட ராக்ஷதனும் அவனாலதுவரை விழுங்கப்பட்டிருந்தவர்களும் பதினோரா மத்தியாய உபதேசத்தால் மோக்ஷமடைந்தார்களென்றும்,

12. தெக்ஷணத்தில் கோலவாபுரியென்னும் பட்டணத்தில் வசிக்கும் சித்திரமாதியென்கிற பிராமணர் கீதா பனிரெண்டாமத்தியாய பாராயணவிசேடத்தால் ஓர் இராஜகுமாரன் விருப்பப்படி தேவர்களால் அபகரிக்கப்பட்ட யாகக் குதிரையுந் தருவித்து இறந்துபோன அவன்பிதாவையும் பிழைப்பித்து அவ்வுபதேசத்தினாலேயே மோக்ஷமடையச் செய்தாரென்றும்,

13. தக்ஷணத்தில் அரியரன்பட்டணத்தில் துராசாரியென்ற ஒரு ஸ்திரீ வனத்திற் புலியாலடியுண்டிறந்து நீசஸ்திரீயாய்ஜெனித்துச் சரிக்குங்காலையில் ஒருநாள் வாசுதேவனென்னும் பிராமணன் கீதையின் பதின்மூன்றும் அத்தியாயம் பாராயணம்பண்ண அதிற் சில கேட்டுக்கொண்டே மோக்ஷமடைந்தாளென்றும்,



14. சிங்களதேசத்து இராஜகுமாரன் வேட்டைக்குப் போனபொழுது பெரியவர்கள் பரதோதகசம்பந்த லேசத்தினால் மிருகாதிகளும் திவ்யதேகம் பெற்றமை கீதா சிரவணமான்மியமென்று தெரிந்து தானும் கீதா பதினான்காவது அத்தியாய உபதேசம்பெற்று மோக்ஷமடைந்தானென்றும்,

15. கௌடதேசத்தில் கிருபாகராசியன் என்னும் இராசன் வேட்டைக்குப் போனபொழுது கிடைத்த ஓரிலையிலெழுதிய கீதா வாக்கியத்தைப் படிக்கப்படித்த விசேஷத்தால் தன் குதிரை மோக்ஷமடைந்ததைப் பார்த்து வியப்புற்றுத் தானும் கீதா பதினைந்தாமத்தியாயத்தின் அரைச்சுலோகமாகிய அதைப் பெரியவர்களாலுபதேசிக்கப்பெற்றுச் சந்தத் தியானத்தால் மோக்ஷமடைந்தானென்றும்,

16. உச்சரிதேசத்துக் கஷ்கபாதனென்கிற அரசன்மதங்கொண்டதனது பட்டத்துயானைக்குச் சமீபமாய்வந்த ஒரு பிராமணனை அது உபத்திரிக்காதவிட்டகாரணம் கீதையின் பதினாறுமத்தியாய சிலசுலோக பனன விசேடமென்றறிந்து அந்தவேதியரால் அரசனும் அவ்வாக்கிய உபதேசம்பெற்றுக் கிரீடத்துடன் மோக்ஷமடைந்தானென்றும்,

17. மேற்படி கஷ்கபாதன்பிள்ளை அச்சியானன் கனிற்றுற் கொல்லப்பட்டு யானையாய்ப் பிறந்து மரணசமயத்தில் வைத்தியஞ் செய்யவேண்டுவதில்லையென்றும், கீதா பதினேழாமத்தியாயம் படித்தவர்களை யழைப்பித்துப் பாராயணஞ் செய்வது நலமென்று சொல்ல, அந்தப்படி அவனும் அரசனும் மோக்ஷமடைந்தார்களென்றும்,

18. கீதா பதினெட்டாமத்தியாயத்தில் ஆறுசுலோகம் படித்தவனுக்கு இந்திரபட்டங்கிடைத்த விபரத்தைப் பூர்வ இந்திரனறிந்து தானுங் காவேரியென்னும் பிராமணர் முகமாகப் பதினெட்டாமத்தியாய வுபதேசம்பெற்று விஷ்ணு சாயுச்சியமடைந்தானென்றும், பத்ம புராணத்தில் விரிவாகக் கூறியிருப்பதோடு,

இந்தயுகத்திற் சிலநாட்களுக்குமுன் இராச்சியஞ்செய்த இதரமதஸ்தராகிய பக்ஷாவொருவர் இகபரசாதனமான சாஸ்திரமெதுவென்று ஒருகால் உசாவ, அக்காலத்தில் மகா புத்திசாலியாயிருந்த அப்பாஜியவர்கள் பகவற்கீதையே யவர்கருதிய எண்ணத்துக்கியைந்ததென்று தெரிவிக்க, அதை விசுவசிக்கவொட்டாது தடுத்தவர்களின் அயோக்கியதையும் நன்குணர்ந்து அப்பாஜியவர்கள்அபிப்பிராயப்படி நம்பிப் பிரதி தினமும் பகவற்கீதா பாராயணஞ்செய்து ஜீவன்முத்தரானாரென்றும்,

இவைகளையன்றி யேறக்குறைய 100-வருஷங்களுக்குமுன் நடந்திருக்கிறதாய்த்தெரியவருகிற ஒருஆச்சரியகரமான அற்புதங்கூறுதும்.

அக்காலத்தில் இத்தேசத்துக்கதிபதியாகவும் கெவர்னர் ஜெனராலாகவும் கோர்ட்ஆப்டைரெக்டர்ஸ் அவர்களால் நேமிக்கப்பட்டுவிஜயஞ் செய்திருந்த கனம்பொருந்திய (Warren Hastings) உவாரன் ஹேஸ்டிங்ஸ் துரையவர்கள், இந்துமதசாஸ்த்ரமான வுண்மைநூல்களின் எதார்த்தத்தை ஒருவாறு ஆராய்ச்சிசெய்வதில் ஈஸ்வரபிரேரணையால் பகவத் கீதாகிரந்தமான பரமரகசிய நூலே சர்வத்திலுஞ் சிறந்ததென்று புத்திக்குத்தோற்றி அதன் சாரம்சத்தை இந்துதேசத்தவர்களனுபவித்துக் களிப்பதுபோல ஐரோப்பியதேசத்தவர்களனைவரும் அதன் பிரயோசனத்தை யடையவேண்டுமென்ற அபிப்பிராயத்தால் இக்கிரந்தத்தை ஆங்கிலேய பாஷையிலும் மொழிபெயர்க்க வேண்டிய போதுமான பொருளுக்கு சாங்கிஷன்செய்து அதற்குத் தக்க வல்லவராகிய ஒருவரை நேமகஞ் செய்வதே கோர்ட் ஆப் டைரெக்டர்ஸ் அவர்களின் முக்கிய கடமையாயிருக்கிறதென்று தெரிவிக்க, அவர்களும் இவர் கருத்துக்கிசைந்து, சகல சாஸ்திர சம்பன்னரும் மகாபுத்திசாலியுமாகிய ஒருவரை நேமிக்க அவருந் தக்க முயற்சி செய்து கூடியபிரயாசையெடுத்து இவ்விடத்திய வித்துவான்களின் பேருதவியினால் அதன் சாராம்சத்தை நன்றுயறிந்து ஐரோப்பியர்களுக்குப் பிரயோசனமாகத்தக்க இங்கிலீஷில் மொழிபெயர்த்திருக்கிறார். ஹீப்ரு, லத்தின் முதலிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அவர் இக்கிரந்த மான்மியத்தைக் குறித்துச் சொல்லிய விபரமாவன :—

"என்னுடைய புத்திக்குத் தோன்றினமட்டும் பகவற்கீதையே யெந்த நூல்களிலுஞ் சிறந்தது, இதனாலேயே இந்துக்களுக்கு இவ்வளவு மகிமையுங் கிடைத்திருக்கிறது. இதன் அர்த்தத்தில் இந்துமத பிரபல சாஸ்திரிகளே மயங்குவார்களேயாகில் யானெப்படிக் கூற வல்லவனாவேன்; ஆகையால் இதை வாசித்துப்பார்ப்பவர்களுக்கு ஏதேனுஞ்சிறிது குற்றங்கள் தோன்றுமாகிலும், அதுவும் என்னுடைய குற்றமாகவே கொள்ளவேண்டுமேதவிர, மகத்துவம் பொருந்திய இந்தநூலினிடத்துக் கிஞ்சித்தும் அகௌரவமெண்ணக்கூடாது."

என்றும், இன்னம் அநேகவிதமாகக் குறிப்பித்திருப்பதும் யவரது மொழிபெயர்ப்பைப்பார்த்த இங்கிலீஷிலும் தமிழிலுந் தேர்ந்த மகாவித்துவான்களும் மெய்யன்பர்களு மானவர்களால் தெரியவருகிறது. இன்னும் இக்கீதையினது மான்மியத்தை விஸ்தாரமாகச்சொல்



லும் சரிதங்களநேகமாயிருப்பினும் இதுவரை கூடியார்த்தமாய் வடமொழி, தென் மொழிகளால் வெளிப்பட்டிருப்பவைகளைப்போலல்லாத அமிர்தப்பிரவாகமாய்த் தோன்றியிருக்கிற இந்தக் கிரந்தத்தை விசுவசித்துப்பார்க்கும் முமுக்ஷுக்களுக்குத் தற்சமயம் மனதிலேயே இதன்மான்மியம் நன்றாய்த் தோன்றத்தக்கதாயிருத்தலின் ஏனைய சரிதங்களை விரிக்காது இம்மட்டில் நிறுத்தியிருக்கின்றனம்.

---

௨

## நூலின் வரலாறு.

அன்புடன் பாராயணஞ் செய்யப்பட்டவர்களுக்கு அப்பிரதிபந்த சாக்ஷாத்காரஞானத்தை யவசியங் கொடுக்கத்தக்க இக்கீதாஅமிர்தவசனமானது ஏறக்குறைய நூறுவருடத்திற்கு முற்பட்ட காலத்தில் தஞ்சை இராஜதானியிற் செங்கோல்நடாத்திய சோழ ராஜாக்களிலொருவர் கீதையினிடத்தி லத்தியந்த விசுவாசமுடையவராய்த் தினந்தோறும் நியமமாகப் பாராயணமும் அர்த்தவிசாரமுஞ் செய்து வருகிறதைக் கேட்டிருந்த அவரது பட்டமஸ்திரீமுதலானவர்களுக்கு மதிற்சிரத்தையுண்டாய், ஸ்திரீஜென்மத்தையடைந்த யாங்கள் கீதா மூலம் பாராயணஞ் செய்ய அருகராகவில்லாததினாலே அதனர்த்தத்தைத் திராவிட பாஷையிற் செந்நடையாகத் தெளிந்த மகான்களால் வெளிப்படுத்தும்படியான தயவு செய்யவேணுமென்று குறிப்பித்த அன்புடைய நாயகியின் ஆசை மேலிட்டை அக்காலத்திற் றனேடிமையுண்டிருந்த மகான்களிடத்திற் றெரிவிக்க, அவர்களுங் கிருபைகூர்ந்து சங்கரபாஷ்யத்தையே யாதாரமாகக் கொண்டெழுதிய இவ்வரிய நூலானது அரண்மனையிலிருந்து நாற்பதுவருஷங்களுக்கு முன் வெளிப்பட்டுப் பெரியோர்களாற் பிழையறவெழுதிச் சேமஞ் செய்யப்பட்டிருந்த இரண்டு ஏட்டுப் பிரதிகளிக் காலத்தில் ஈசுர பிரேரணையால் வெளிப்பட்டது.

இதுவரை பகவற்கீதையைப் பலவாறு பார்த்திருப்பவர்களுக்கும் இனிமேற் பார்ப்பவர்களுக்கு மிக்காலத்திற் கீதா அர்த்தம் ஸ்பஷ்டமாய்த்தெரியாது மயங்கும் ஜீவர்களிடத்தி லிரக்கத்தாற் சாட்சாத்பகவானே திருவுருக்கொண்டு திருவாய் மலர்ந்ததாவெளிதிற்புலப்படும்.

இக்கிரந்தமானது கற்றவர்களன்றி மற்றவர்களும் கீதா அர்த்தசம்பன்னராக வேணுமென்கிற கிருபையால் வெளிப்படுத்தப்

பட்டதா யிருத்தலின், வாக்கிய நடையாதிகளிற் சாமஞ்சஸ்ய எழுத்துச் சோர்வுகளை மட்டுந் திருத்தியதைத் தவிர மற்றுப்படி யெவ்வித பேதமுஞ் செய்யாமையின் இதன் அர்த்தமானத்தவிர வியர்த்தமான குற்றங்களை அத்தியந்தம் நோக்காதொழித்தற்பாலனவாயு மிருக்கிறது.

அருமையாகிய இக்கிரந்தத்தை அனுதினம் ஆசாரத்தோடு இயன்ற அளவு பாராயணஞ்செய்து அவரவ ரடையவேண்டிய மோக்ஷலாப வுத்தேச ஆராதனைஞ் செய்யும்பொழுது ஆதியிலிவ்வமிர்தத்தை வெளிப்படுத்திய மகானுபாவா வியாசோ அவர்களுக் களவற்ற வந்தனஞ் சமர்ப்பிவிப்பதோடு அதை யிக்காலத்தில் வெளிப்படுத்த முயன்ற அன்பர்களுக்கும் ஈஸ்வரப் பிரசாதத்தால் மோக்ஷ லாபம் எவ்விதமுஞ் சித்திக்கவேணுமென்று பிரார்த்தித்தல் கடமையாகவு மிருக்கிறது.



உ

கணபதிதுணை.

சர்வம் சின்மயம்.

REGISTRAR OF BOOKS
20 MAY 1927
MADRAS

# பகவற்கீதை வசனம்.

## காப்பு.

பாதியோர் பெண்மையான் பரிந்துபெற்றதோர்
சோதியாங் களிற்றினைத் தூய வண்மையிற்
பேதியா துளம்பெறப் பேணிப் பாகவற்
கீதையான் மொழிகுவன் ஞானங் கிட்டவே.

ஒருபத மடித்தொரு பதம்பொற் றேர்மிதித்
தொருகையிற் குசைகசை யொருகை ஞானமாய்ப்
பொருகையில் விசயனைப் புரிந்து நோக்கிமெய்
தருபொரு ளுரைத்தவர் சரணம் போற்றுவாம். (க)

அரியயனோ டாதி யகிலந் தன்னை
யாக்கியளித் தழிக்கின்ற வனித்தைக் கென்றுங்
கரியதுவாய்க் காந்தத்தி னிரும்பு போலக்
கரணத்தின் சலனத்திற் கே துவாகி
வரியமரு மரவணைமே லெனிய வேதி
வைகுண்டத் தினிதமரு மாயோன் மண்மேற்
பரிபுனரு மணிநெடுந்தேர் பார்த்தற் கூர்ந்த
பாண்டவர்கள் சாரதிநாம் பரவுந் தெய்வம். (உ)

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கண் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவளை யாழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம். (ங)

திருமடந்தைதன் காதலன் சிறந்ததா னமருங்
கருணை யந்தடங் கண்களு நாபியங் கமலத்
தொரு குழந்தையு முடிக்கபொன் முடியுங் கொடுத்த
மருமலிந்தடாந் துளவுமென் மனத்துள்வா ழியவே. (ச)

காப்பு - முற்றிற்று.

சயர் சொல்லுவாரென்று உத்தரவுகொடுத்தருளிவிட்டு அவருடைய ஆசிரமத்தைச் செழுந்தருளினார். அப்பால் திரிதராட்டிரமகாராஜாவானவர் சஞ்சயனைப்பார்த்துத் தருமத்தைக்கொடுக்கிற குருக்ஷேத்திரத்திலே யுத்தஞ்செய்யக் கூடிவந்துநிற்கிற நம்முடைய துரியோதனாதிகளும் பாண்டவர்களும் என்னசெய்கிறார்களென்று கேட்க. (௧)

சஞ்சயர் சொல்லுகிறார், அணிவகுத்து நிற்கிறபாண்டவர்கள் சேனையைப்பார்த்துத் துரியோதனன் துரோணாசாரியரிடத்திற் சொல்லுகிற விபரத்தைக்கேளும். (௨)

சுவாமீ! உம்முடைய திருஷ்டிக்குமுன்னாலே உம்முடைய சீடனான வீமசேனனாலே அணிவகுத்து நிற்கப்பட்ட பாண்டவாள் சேனையைப்பாரும்? (௩)

இந்தச் சேனையிலே வீமார்ச்சுனர்களுக்குச் சமானமாயிருக்கிற சூரர்களும், வில்வித்தையிற் கைக்காரர்களுமாகிய உதாானன், விராடன், துருபதன்— (௪)

திருஷ்டகேதனன், செயிக்கிதானன், காசிராஜா, உருசித்தன், குந்திபோசன், சைப்பியன்— (௫)

உதாமன்னியன், விக்கிராந்தன், யுதாமேபோசன், அபிமன்னன் பிருதிவிந்தியாதி, திரௌபதேயே பிரமுகாளரான மகாரதிகாளிருக்கிறார்கள். (௬)

பிராமணோத்தமரே! நம்முடைய சேனையிலே முக்கியமாயிருக்கிறபேர்களையுஞ் சொல்லுகிறேன் கேளும். (௭)

நீரும், வீட்டுமரும், கன்னனும், கிருபனும், சமத்திஞ்சையனும், அசுவத்தாமாவும், விகர்னனும், சோமதத்தனும். (௮)

பின்னையுஞ் சூராளாயிருக்கிறபேர்க ளநேக ரென்னிமித்தமாகப்பிராணனை விடுகிறோமென்று அநேகமான அஸ்திரசஸ்திரசம்பன்னாளாய் யுத்தத்திற் சமர்த்தாளாய் அநேகமான ரதிகாளிருக்கிறார்கள். (௯)

ஆனாலும் வீட்டுமரால் இரட்சிக்கப்படாநின்ற நம்முடைய பெலம்மிகவுந் தாழ்வாய்க் காணப்படுகிறது. வீமனால் இரட்சிக்கப்படாநின்ற பாண்டவாள்சேனை மகா செழும்பிரமாய்த் தோற்றப்படுகிறது. (௰)



இந்தக் காரணத்தினாலே யெல்லாத்திக்குகளிலும் நீங்களெல்லாருஞ் சாவதானமாக இருந்துகொண்டு வீட்டுமரைத்தானே காத்துக்கொள்ளுங்களென்று துரியோதனன் சொன்னவார்த்தையைக்கேட்டு. (௧௧)

வீட்டுமரானவர் துரியோதனனுக்குச் சந்தோஷம் வரும்படியாக அட்டகாசம்பண்ணிச் சங்கத்தொனி பண்ணினவுடனே.—

மற்ற மகாரதிகருஞ் சங்கத்தொனியும், பேரிகைவாத்தியங்களும் முழக்கினார்கள். அந்தச்சத்தங்கள் பூமி ஆகாயமெங்கு நிறைந்தன. (௧௨)

வெள்ளைக் குதிரையோடுங் கூடின கனம்பொருந்திய மகாரதத்திலிருக்கப்படாநின்ற கிருஷ்ணமூர்த்தியும், அருச்சுனன் முதலானவர்களுந் திவ்யமாயிருக்கப்படாநின்ற சங்கத்தொனி செய்தார்கள். (௧௩)

அந்தச் சங்கங்களுடையபேர்க ளேதென்றால், ரிஷீகேசர் பாஞ்சசன்னியமும், தனஞ்செயன் தேவதத்தமும், பயங்கரமான வீமசேனன் பவுண்டரமும்.— (௧௪)

தருமராஜா அனந்தவிஜயமும், நகுல சகாதேவாள் சுகோடகமும், மணிபுட்பகமுங் கோஷித்தார்கள். (௧௫)

பின்னையுங் காசிராஜாவும், மகா ரதிகனான சிகண்டியும், துஷ்டத்துய்மனும், வியாடனும், சாத்தகியும்.— (௧௬)

அபிமன்னனும் துருபதனும், துரோபதையினுடைய குமாரர்களும், இன்னமுந் திக்குகளிலிருக்கப்பட்ட மகாரதிகளும் அவாளவாள் சங்கத்தைக் கோஷித்தார்கள். (௧௭)

இந்த விபரங்களெல்லாம் திருதராட்டிரனைப் பார்த்துச் சஞ்சயர்சொன்னதற்கு மறுபடி யென்னநடந்ததென்று கேட்கச் சஞ்சயர்சொல்லுகிறார். (௧௮)

உயுத்தமுகத்தில் வந்திருக்கிற துரியோதனாதிகளைப் பார்த்துப்பாணங்கள் பிறயோகஞ் செய்வதற்கு நல்ல சமயமென்றருச்சுனனினைத்து வில்லை நாணேற்றினான். (௨௦)

அப்பாற் கிருஷ்ணபகவானைப் பார்த்து அச்சுதா! உபய சேனைமத்தியில் நம்முடைய ரதத்தைக் கொண்டுபோய் நிறுத்தவேண்டும்; எதற்கென்றால்.— (௨௧)

இந்த ரணகளத்தில் யாரோடே நான் யுத்தம்பண்ண வேண்டுமோ அவர்களைப்பார்க்கவேண்டுமென்று அருச்சுனன் சொன்னதுமல்லாமல். (உஉ)

இன்னமும் இந்த யுத்தத்தில் துற்புத்தியாகிய துரியோதன னுக்குப்பிரியம்வரும்படியாகக் கூடியிருக்கப்பட்டவர்கள் யாரோ அவர்களையெல்லாம் பார்க்கவேண்டு மென்று சொன்ன. (உ௩)

அருச்சுனனாலே பிரேரேபிக்கப்பட்டு ரிஷீகேசரானவர் உபய சேனைமத்தியில் வீட்டுமர் துரோணர் முதலிய பிரமுகருக்கு முன் பாக ரதத்தைக்கொண்டுபோய் நிறுத்தி அருச்சுனா! இதோ நிற்கப் பட்டகவுரவர்களைப் பாரென்று சொல்லுமிடத்தில்.— (உ௪-உ௫)

அருச்சுனனானவன் யுத்தரங்கத்தில் வந்திருக்கப்பட்ட பிதாக் களையும், பாட்டன்மார்களையும், ஆசிரியர்களையும், ராசாக்களையும், தமையன்மார்களையும், பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் இஷ்டாள் முதலானவர்களையும்.— (உ௬)

இன்னமும் உபயசேனை மத்தியிலிருக்கப்பட்ட மாமன் மார் களையும், சுகிர்த்தாயிருக்கப்பட்டவர்களையும், பந்து ஜனங்களையும் பார்த்து என்பொருட்டாகச் சேனைத் திரணீகரித்து யுத்தத்தை துவக்கிவந்து நிற்கிறார்களென்கிற தாற்பரியத்தினாலே. (உ௭)

அருச்சுனனானவன் மிகவுந் தயவோடுங் கூடினவனாய்ப் பகவா னைப்பார்த்து யுத்தம் செய்கிறதற்குச் சித்தமாய்வந்திருக்கிற இந்தச் சுசனனாகிய இவர்களைப் பார்க்கும்போது என்னுடைய அவயவங்க ளெல்லாம் தடுமாறுகிறது. வாயிலிருக்கிறஜலம் எல்லாம் உலர்ந்து போகிறது, என்சரீரமுழுதிலும், நடுக்கலும் மயிர்க்கூச்சலுமுண்டா கிறது. (உ௮-உ௯)

பின்னை யிவர்களைப் பார்க்குந்தோறுங் காண்டீபமுங் கையிலி ருந்து நழுவுகிறது தேகமெல்லாம் தாபத்தை யடைகிறது. மன தானது ஒருவழியிலும் நில்லாமல் வியாகுல மடைகிறது. இரதத்தி லிருந்து சண்டைசெய்ய நான்சக்தனல்லை. (௩0)

சுவாமீ! விபரீதங்களாகிய சகுனங்களோ வெகுவாய்க் காணப் படுகிறது, இந்த யுத்தத்தி லெனக்குரிமையாயிருக்கப்பட்ட ஆசிரியர் முதலான பந்துக்களைச் சங்காரஞ்செய்தால் அதனால் வரப்பட்ட ஐஸ்வரியமும் இன்பமு மெனக்குத் தேவையில்லை. (௩௧)



சுவாமி! இவர்களையெல்லாங்கொன்றுஇராச்சியத்தைச்செயித்து அதனால் வரப்பட்ட சுகத்தை யடையவேண்டுமென்று நான் அபேட் சிக்கப்பட்டவனல்ல, ஆனதா லிந்தராச்சியத்தின லுண்டான்போகத் தை நான் பிராணனை வைத்துக்கொண் டநுபவிக்கிறதி லென்னபிர யோசனம், அதைவிட என் பிராணன் போனாலும் போகட்டும் அந்த விஷயத்தி லெனக்கு நிரம்பவுந் திருப்தியாயிருக்கிறது. (௩௨)

சுவாமி! எவர்கள் நிமித்தமாக ராச்சியமும் போகங்களுஞ் சம்பாதிக்கவேண்டுமோ அப்படிப்பட்ட ஆசிரியர் முதலான பந்து ஜனங்கள் தனங்களுக் கபேட்சித்துப் பிராணனை விட்டுவிடுகிறோ மென்று இந்தயுத்தத்திற் றுணிந்து வந்து நிற்கிறார்கள். (௩௩)

சுவாமி! அவர்களெப்படிப்பட்டவர்களென்றால் நான் பூசைகள் செய்துவரப்பட்ட ஆசிரியர், பிதாமார்கள், பாட்டன்மார்கள், அம்மான்மார்கள், மைத்துனன்மார்களா யிருக்கிறது மன்றி நான் பிரியஞ்செய்யும்படியான பிள்ளை பேரப்பிள்ளைகள் சம்பந்திகளான பேர்களாகவல்லோ இருக்கிறார்கள். (௩௪)

சுவாமி! இப்படியாயிருக்கிறதினாலே யிவர்களை நான் சங்காரஞ் செய்வதைவிட அவர்க ளென்னைக் கொன்றாலும், நல்லதே இவர் களைச்சங்கரித்ததினாலே திரிலோகாதிபத்தியம் வந்தாலும் எனக்கு வேண்டுவதில்லை, ஆதலா லிவர்களை நான் சங்கரிக்கத் தக்கவனல்ல. அப்படியிருக்கச் சொற்பமான இந்த ராச்சிய லோபத்தைக்குறித்து எனக்கு வேண்டுவதென்ன. (௩௫)

சனார்த்தனா! துரியோதனாதிகளைச்சம்மாரஞ்செய்தால் அதனால் நமக் கென்ன சந்தோஷமாகத்தக்கது. *ஆததாயிகளாயிருந்த போதிலும் பந்துசனங்களுடனேகூடிய இவர்களைக் கொன்றால் நம் மைப்பாபமடையாமற் போகுமா. (௩௬)

சுவாமி! இவ்விதமா யிருக்கிறபடியினாலே பந்துசனங்களுடனே கூட இந்த துரியோதனாதிகளை நான் கொல்ல எத்தனப்படுகிறது யுத்தமல்ல. மாதவா! சுசனனைக் கொன்றுபோட்டு எப்படிச் சுகத் தையடையத்தக்கவர்களாவோம். (௩௭)

சுவாமி! லோபகுணத்தினாலே அடிப்பட்ட மனதோடுங் கூடின வர்களாகிய இந்தக் கவுரவர்கள், மித்திரரை வதைசெய்வதிலும்,

* ஆததாயிகளாரெனில், தனத்தை யபகரித்தவன், தாரத்தை யபக ரித்தவன், பூமியை யபகரித்தவன், விஷமூட்டினவன், அக்கினியிட்டவன், கொல்ல ஆயுதத்தோடு வந்து நிற்பவன்,

அதனால் குலட்சயமாவதினும் பாவம் வருமென்று எண்ணத்தக்கவர்களல்ல, அப்படி நானெண்ணப் பட்டவனல்ல. (௩௮)

சனார்த்தனா! குலட்சயத்தினாலுண்டாகப்பட்ட தோஷங்களை யாலோசித்துப் பார்க்கப்பட்ட நம்மாலே யிந்தப் பாபத்தைப்பரிகரிக்கிறதற்கு எந்த வுபாயமுமில்லாததினாலே நானெவ்விதமும் பாவத்தையே யடையவேண்டியவனாகிறேன். (௩௯)

சுவாமீ! இந்த ராஜாக்கள் முதலானவர்களுடைய குலமெல்லாம் நாசமாய்ப்போனாற் புராதனமாயிருக்கப்பட்ட குலதருமங்களெல்லாம் நாசத்தையடையும் அப்படிப்பட்ட தருமங்கள் நஷ்டமானார் குலமெல்லாம் அதர்மத்திலே பிரவிர்த்திக்கும். அதனால் எவ்வளவு பாவமடையும்படியாகச் சம்பவிக்கும். (௪௦)

சுவாமீ! இப்படிப்பட்ட அதன்மத்தினாற் குலஸ்திரீகளெல்லாந் தூஷிக்கப்படுவார்கள். ஸ்திரீகள் துஷ்டாளாய்விட்டால் வர்ண சங்கரமாகுமே. (௪௧)

அப்படிப்பட்ட சங்கரகத்தினால் அவர்களுக்கு நரகமுண்டாகிறது மல்லாமல் அவர்களுடைய பிதுர்க்கணங்களும் பிண்டோதகக்கிரியா ஈனளாய் நரகத்தையடையும்படியாகச் சம்பவிக்குமே, இவைகளுக்கெல்லாங் காரணம் நானல்லோ ஆகவேண்டும். (௪௨)

சுவாமீ! இன்னமுங் குலங்களைக்கெடுத்ததினாலே வர்ண சங்கரமாய்க் குலதருமங்களுஞ் சாசுவதமா யிருக்கப்பட்ட சாதிதருமங்களும் கெடுதலாய்ப் போகிறதினாலே யெவ்வளவு பாபம்வந்தடையும். இதுபெரியவாளாயிருக்கிறவர்கள் ஒப்புக் கொள்ளுவார்களா. (௪௩)

சனார்த்தனா! குலதருமங் கெட்டுப்போன மனிதர்களுக்கு நரகத்தில் வாசமென்பது நிச்சயமென்று சாஸ்திர புராணங்களிற் சொல்லப்படுவதை அநந்தவிடங்களில் நான் கேட்டிருக்கிறேன். அப்படியிருக்க அதைக்கெடும்படியாகச் செய்தவனுக்கு நரகம் விட்டுப்போகுமா. (௪௪)

தெய்வமே! ராச்சியலோபத்தினால் ஆசிரியர் முதலான சுசனாளைச்சம்பாரம்பண்ணி அவர்களுடைய செல்வத்தை யிச்சித்து மகத்தான பாபம் வரப்பண்ணிக்கொள்ள எத்தனப்பட்டோமே அப்படி முயற்சிக்கிறதைவிட. (௪௫)

சுவாமீ சஸ்திர அஸ்திரங்களுடன் இந்த யுத்தரங்கத்தில் வந்திருக்கிற துரியோதனாதிகள் கோபத்தோடு மென்னைக் கொன்றாலும்



யாதொருபதிலுஞ் செய்யாதவனாய்ப் பொறுத்துக்கொண்டிருக்கிறதே நன்மையென்றென் புத்திக்குத்திட நிச்சயமாயிருக்கிறது. (௪௬)

இவ்விதமாய் அருச்சுனனானவன் பகவானிடத்தில் விண்ணப்பஞ்செய்து பரிதாபத்தோடுங் கூடினவனாகியும் சோகத்தினால் வியாகுலமனதையுடைத்தானவனாய்க் கண்ணீர் சோரும்படி கையிலிருக்கிற வில்லைப் போட்டுவிட் டிருந்தானென்று திரிதராட்டிரனுக்குச் சஞ்சயர்சொன்னார். (௪௭)

முதலாவது சோக அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ கிஷ்ணயபரமகுருவே துணை.

உ

ஸ்ரீ வாசுதேவாயநம.

## இரண்டாவது
# சாங்கியயோக அத்தியாயம்.

அதற்குப் பின் என்ன நடந்ததென்று திரிதராட்டிரன் கேட்கச் சஞ்சயர்சொல்லுகிறார். கண்ணீர்பெருகித் துக்கசமுத்திரத்தில் முழுகியிருக்கப்பட்ட அருச்சுனனைப்பார்த்து. (௧)

மகாராசா - இந்த யுத்தரங்கத்தில் விசமத்தோடுங் கூடினதாயுங் கேவலமான புத்தியுடைத்தானவர்களாலே நடக்கப்பட்ட நடத்தையாயும் சொர்க்கவிரோதமாயும் அபகீர்த்தியையுடைத்தான, இந்த மோகமானது நின்னை யெந்தக்காரணத்தினா லடைந்தது, இஃதுனக்கெவ்வளவேனும் யோக்கியமல்லவே. (௨)

அருச்சுனா! பயமும் அதன்மமுமாகிய விசமபாவத்தை யடையாதே: இது க்ஷத்திரிய தருமத்துக்குத்தகுந்ததல்ல குறைவானமனதையுடைத்தானவனாய் அதனாலுண்டாகப்பட்ட துற்பலத்தை விட்டுவிட்டுச் சுதர்மமாயிருக்கப்பட்ட யுத்தஞ்செய்கிறதற் கெழுந்திருவென்று சொன்ன பகவானைப்பார்த்து. (௩)

அருச்சுனனானவன் வணக்கத்தோடுங்கூடி சுவாமீ! யிந்த யுத்தகளத்தில் வந்திருக்கிற என்னாற்செய்யப்பட்ட பூசைக்கு யோக்கியராகிய வீட்டுமர் துரோணர் முதலானவர்கள் பேரில் நானெந்தவிதமாகத் தீட்சண்யமா யிருக்கப்பட்ட பாணங்களைப் பிரயோகஞ்செய்வேன். பாக்கியங்களைச் சம்பாதிப்பதுஞ் செய்து குருக்கள்மாருக்கும் தன்னுடைய இனத்தார் முதலானவர்களுக்கும் உபயோகப்படுத்த

வேண்டிவது தருமமாயிருக்க அதை விட்டு விட்டு அவர்களைச் சங்கரித்துப் பின் அந்தப்பாக்கியங்களைக்கொண்டு என்னசெய்கிறது, அதனாலவர்களுடன் யுத்தஞ்செய்யமாட்டேன். (௪)

சுவாமீ! குருக்கள்மாரயும் மகானுபாவர்களுமாகிய வீட்டுமர் துரோணாதிகளைச் சங்கரித்து நரகத்தையடைகிறதைப் பார்க்கிலும் பிச்சைவாங்கியாவது பிழைக்கலாம். அதுவே வெகுநல்லது, அவர்களைச் சங்கரித்துப் பின் நான் அநுபவிக்கப்பட்ட அர்த்த காமமுதலாகிய போகங்களானவை இகத்தில் அவர்களுடைய இரத்தத்தைக் குழைத்துப் புசிப்பதற்குச் சமானமாகும். (௫)

ஆனதாற் சுவாமீ! எனக்கெதுவிகிதமோ அதையறியேன்: இதுவுமன்றி நான் ஜெயிப்பேனே அல்லது அவர்களோ ஜெயிப்பார்களோ, எதிரேவந்துநிற்கிற குருக்கள் முதலான இவர்களைச் சங்கரித்தாலல்லாதே நாம்பிழைக்கமாட்டோமோ எல்லாரும் யுத்தமுகத்தி, லொருமைப்பட்டுப் பிராணனுக்குத் துணிந்துவந்து நிற்கிறார்களே யிவர்களுடன் யுத்தஞ் செய்வதனை லெவ்வளவு ஐஸ்வரியம் வந்தபோதிலும் எனக்கு வேண்டுவதில்லை, ஆகையால் நான்யுத்தஞ் செய்யவேமாட்டேன். (௬)

சுவாமீ! இது இதமென்றும் இது அயிதமென்றும் அறிந்துநடக்கத் தெரியாமலிருக்கிற என்னுடைய மூடமான சித்தத்துக்கு எது சிரேசுகரமாயிருக்குமோ அந்த நிச்சயார்த்தத்தைத்தெரியும்படி யநுக்கிரகஞ் செய்யவேண்டும்; எதனாலென்றால் சுவாமிகளுக்கு நான் சீஷனாகவும் சுவாமிகளைத்தவிர எனக்கு வேறே கெதியில்லையென்று உங்களையே சரணமடைந் திருப்பதால் என்னை யெப்விதமும் இரட்சிக்கவேண்டும். (௭)

சுவாமீ! குருக்கள் முதலான பந்துக்களை நாசஞ்செய்யப்பட்ட யுத்தத்தினால் திரிலோகாதிபத்தியங் கிடைத்தாலும் எனக்குவேண்டுவதில்லை. வாயுலர்ந்துபோகிறது கண்க ளிருட்டிக்கொண்டு வருகிறது தேகமெல்லாம் வியர்வை யுண்டாகிறது. இதனாற் கையிலிருக்கிற காண்டீபமும் நழுவி விழுந்துவிட்டது. சுவாமிகள் சொல்லப்பட்ட வாக்கியங்கள் காதில் நுழைகிறதில்லை. மனது சுவாதீனமில்லாமற் சோகத்தையடைந்திருக்கிறது. இந்திரியங்களெல்லாம் பலவீனமாய்ச்சோகத்தையடைந்திருப்பதினாலே யிவைகள் விலகும்படியான உபாயத்தை யநுக்கிரகம்பண்ண வேண்டுமென்று சொல்லிப்போட்டு யுத்தஞ்செய்கிறதில்லையென்று அருச்சுனன் இருந்துவிட்டான். (௮)

சஞ்சயர் திரிதராட்டிரரைப்பார்த்து அருச்சுனனானவன் பகவானைப்பார்த் திந்தப்பிரகாரஞ் சொன்னதற்கு அப்புறம் என்னநடந்ததென்று கேட்கப் பகவானானவர் மறுபடி அநுக்கிரகஞ்செய்த விபரத்தைச் சொல்லுகிறார். (௯)



அதன்பின்பு இரண்டுசேனைக்கும் நடுவேநின்று துக்கப்படுகிற அருச்சுனனைப்பகவானானவர்பார்த்துக் குஞ்சிரிப்புக்கொண்டு என்ன உத்தரவுசொல்லுகிறாரென்றால். (௧௦)

அருச்சுனா! துக்கப்பட யோக்யரல்லாத பேரைக்குறித்து நீ துக்கப்படுகிறாய், சகலமுமறிந்தவன் போலவும் சொல்லுகிறாய், பிராணசகிதமாய் அநித்ய தருமத்தோடுங்கூடிய தேகமானது மரிக்கப்படுகிறதைப்பற்றியும் நாசமின்றி நித்தியமாயிருக்கப்பட்ட ஆன்மதருமத்தோடுங்கூடியிருக்கிற பரமான்மாவைப் பற்றியும் பெரியோர்களெவ்வளவேனுந் துக்கப்படார்கள். (௧௧)

அருச்சுனா! துக்கப்பட யோக்கியமல்ல வென்பதற்குக் காரணம் யாதெனில், பகவானாயிருக்கிற நானொருபோது மில்லாதவனல்ல எப்போதும் நித்தியமாயிருப்பதுபோல நீயு மிந்த யுத்தமுகத்தில் வந்திருக்கிற சகலராஜாக்கள் முதலானவர்களும் நித்தியர்களாகவேயிருக்கிறீர்கள் இனி மேலும் நீங்களெல்லாரும் சாஸ்வதமாயிருக்கப்பட்டவர்களே! எதனாலென்றால் எல்லாச்சீவர்களும் நம்முடைய அம்சமானபடியினாலே யினிமேலும் பிறக்கிறோமென்கிற எண்ணமுந் தேவையில்லை. அருச்சுனா! இவ்விதமாக நாமெல்லோரும் எப்போதுமிருக்கிற பேர்களா யிருக்கும்போது நீ துக்கப்படக் காரணமேயில்லை. ஆகையால் அஞ்ஞானத்தினா லுண்டாயிருக்கிற துக்கத்தை விட்டு விட்டுத் தருமமாயிருக்கிறயுத்தத்தைப்பண்ணென்றுசொன்ன பகவானைப்பார்த்து. (௧௨)

பகவானாயிருக்கிற தேவரீருக்குமாத்திரம் ஜெனன மரணமில்லையென்பது சரியே; சீவர்களெல்லாருக்குங்கூட ஜெனன மரணமில்லாமலெப்படிப்போகும். அருச்சுனா! தேகத்துக்குப் பாலியம், கௌமாரம், யவ்வனம், சரைவந்தாலும் போனாலும், தேகியான ஆன்மாவுக் கெப்படி நாசமில்லையோ அப்படி வேறே தேகம்வந்தாலும்போனாலும் ஆன்மாவுக்கு நாசமில்லை, இந்த அர்த்தத்தில் புத்திமானாயிருக்கிறவனெவ்வளவும் மோகத்தை யடைவான். (௧௩)

சுவாமீ! தேகத்துக்குள்ளிருக்கப்பட்ட ஆன்மாவைக் குறித்துத் துக்கப்படவில்லை நான் பூசைசெய்யும்படியானவர்கள் தேகத்தைவிழுந்து போகும்படி சம்பவிக்கிறதைக் குறித்து எனக்கு துக்கமுண்டாகிறது. அருச்சுனா! தேகங்கள் மாயா காரியமானதால் தோற்றுகிற

தும் மறைகிறதுஞ் சுபாவமே, அதனுள்ளிருக்கும் நான்மட்டும் ஒருக்காலுஞ்சாகிறவனுமல்ல, பிறக்கிறவனுமல்ல, இதனாலே துக்கப்படக் காரணமேயில்லை ஆனாற் சுகதுக்கப்படுகிறதுஏதென்றால், இந்திரியங்களானவை விஷயங்களைக்கிரகிக்கும்டத்திற் சீதோஷ்ணமுஞ் சுகதுக்கமுஞ் சம்பவித்ததுபோல் தோற்றுமேதவிர அவைகள் வாஸ்தவமேயல்லவென்று நீ நிச்சயிக்கவேண்டும். (௧௪)

சுவாமீ! சுகதுக்கம் நிசமல்லவென்று தேவரீர் அநுக்கிரகஞ் செய்தபோதிலும் எனக்குமட்டுஞ் சத்தியம் போலவே தோற்றுகிறபடியால் அவைகள் வாராமற்செய்ய உபாயங்களில்லையா? அருச்சுனா! வாராதபடிசெய்வதிலும் வந்ததைச் சகிக்கிறதே நல்லது எதனாலெனில் புருஷாளுக்குள்ளேஉத்தமனேசுகதுக்கங்களானவைஎந்தப்புருஷனை மகிழும்படி வாடும்படி செய்விக்கமாட்டுவதில்லையோ யாதொரு தீரனானவன் சுகதுக்கங்களைச் சமமாகப்பார்க்கிறானோ அவனே மோட்சத்துக்கதிகாரியாவன். நீயும் மோட்சத்தை யபேட்சிக்கிறபடியால் சுகதுக்கங்களைச் சமமாய் நினைத்துத் தீரனா யிருந்துகொண்டு யுத்தத்தைச் செய்வாயாகில் மோட்சத்துக் கருகனாவாய். (௧௫)

சுவாமீ! சுகதுக்கங்களை யெப்படிச்சமனாய்ச் சகிக்கலாம். அருச்சுனா! மண்ணைத்தவிரக் குடங்களில்லாதது போலச் சுகதுக்கம் ஆத்மாவைத்தவிர இல்லையென்றும் அசத்தான தேகத்துக்கு ஒருக்காலும் நித்யத்துவமில்லை, சத்தான ஆத்மாவுக்கு ஒருக்காலும் அநித்யத்துவமில்லையென்றும்இல்லாத தொருக்காலுமில்லை, இருக்கிறதொருக்காலும் போகாதென்றுந் தத்துவஞானிகளாயிருக்கிறபேர்கள் இந்த இரண்டு நிர்ணயமும் விசாரணையினாலே நிச்சயித்திருப்பார்கள் அப்படிப்பட்ட புத்தியினாலே சகிக்கலாமேதவிர மற்றப்புத்திகளாற் கூடாது.()

சுவாமீ ! இல்லாதது போகட்டும், இருக்கிற ஆத்மாவுக்கு எப்போதும் நாசம் வரமாட்டாதென்கிறதற் கென்னபிரமாணம். அருச்சுனா ! யாதொரு பரமாத்மாவானவர் தேகேந்திரியாதிக ளெல்லாம் வியாபிக்கப்பட்டு அவைகளை யெல்லாம் பிரகாசிக்கும்படி செய்வித்துக் கொண்டிருக்கப்பட்ட அந்த ஆத்மாவுக்கொருக்காலும் நாசமேகிடையாது. அப்படி நாசமில்லாத அந்தஆத்மாவுக்கு எவைகளாலும் நாசம் பண்ணிவைக்க யாதினாலுங்கூடாது ; எதனாலெனில், பிரகிருதிகுணங்களினால் விளங்கும்படியான பதார்த்தம் குணங்களுக் கப்பாற் பட்டவரை யெப்படி நாசம்பண்ணிவைக்கும் சுவாமீ ! தேகமானது வருகிறதும் போகிறதும் சத்தியமாகவேதோற்றுகிறதே. அருச்சுனா! பிரகிருதியினாலுண்டான மனசு இந்திரியங்கள் முதலியவைகளால் அறியக்



கூடாதவராயும் எப்போதும் ஒரேபடித்தாய் நித்தியராயும் நாசமில்லாதவராயும், எல்லையில்லாதவராயும் இன்னபடியென்றுசொல்லப்போகாதவராயு மிருக்கிற சரீரியாகிய ஆத்மாவுக்குத் தேகமானது வருகிறாப்போலவும் போகிறாப்போலவுந் தோற்றுவது மாத்திரமே யல்லாமல் அவைகள் நிசமேயல்ல. இன்னமும் அந்த ஆத்மா எப்படிப் பட்டவரென்றால், புராதனமாயிருக்கப் பட்டவர், அவரொருக்காலும் நாசமடையப் பட்டவரேயல்ல. இவைகள் யதார்த்தமென்று தத்துவஞானிகள் சொல்லுவார்கள் ஆகையால் அவருக்குநாசமில்லை, சுகதுக்காதிகளுமில்லை யாகையால் அஞ்ஞானத்தினாலுண்டான சமுசயத்தையுந் துக்கத்தையும் விட்டுச் சுதன்மமாயிருக்கிற யுத்தத்தைப்பண்ணு.

சுவாமீ! தேகாதிகளைக்குறித்து வந்ததுக்கம் போய்விட்டது, நான் கொல்லுகிறேனென்கிற துக்கம் போகவில்லை. அருச்சுனா! யாதொருவன் நான் கொல்லுகிறேனென்றும், இவனால் நான் கொல்லப்படுகிறேனென்றும், இவராற் கொன்றேனென்றும், இவராற் கொல்லப்பட்டேனென்றும், சொல்லுகிறானோ அவனெல்லாந் தத்துவ சொரூபமாகிய ஆத்மாவை யதார்த்தமா யறிந்தவனேயல்ல, இவன் அறிவில்லாதவனே. நித்தியமான ஆத்மாவானவர் ஒருவரைக் கொல்லுகிறவருமல்ல ஒருவனாலே கொல்லப்படுகிறவருமல்ல; ஆனதாற் கொல்லுகிறவனுமில்லை, கொல்லப்படுகிறவனுமில்லை. (௧௯)

சுவாமீ! கொல்லாமலும், கொல்லப்படாமலு மிருக்கிறதெப்படி. அருச்சுனா! ஆத்மாசட்பாவ விகாரமின்றியிருப்பவர் ஆகையாற் செனிக்கவுமில்லை மரிக்கவுமில்லை, முன்னொருகாலத்திற் பிறந்திருந்தாரென்பதுமில்லை யினி யிறக்கப் போகிறாரென்பதுமில்லை சென்மாதிரகிதராயும், சாஸ்வதராயும், நித்யராயும், புராணராயு மிருக்கப்பட்ட ஆத்மாவானவர், சரீரங்கள் மரிக்கப்பட்டாலும் மரிக்கப்படாதவர், ஆதலாலவரையொருவர் கொல்லுவாருமில்லை, அவரொருவரைக் கொல்லவுங் காரணமில்லை. (௨௦)

அருச்சுனா! ஆத்மா வுண்டானாரென்பதும் வளர்ந்தாரென்பதுமின்றி நாசமில்லாதவரென்றும், நித்தியரென்றும், குறை வில்லாதவரென்றும் சமுசயமின்றி எவனறிகிறானோ அவனெவனைக்கொல்லப் போகிறான், எவனவனைக் கொல்லப்போகிறான், ஆகையாற்கொல்லுகிறவனுமில்லை, கொல்லப்படுகிறவனு மில்லை யென்று சொன்னதுண்மையே. (௨௧)

சுவாமீ! ஆத்மாவுக்கு நாசமில்லாமற் போனாலும் அவர்களுடைய சரீரத்துக்கு நாசம்வரும்போது அவர்களுக்குண்டா [illegible]

தைப்பற்றி யெனக்குத் துக்க முண்டாகிறது! அருச்சுனா! விவேகத்தையுடைய புருஷன் சீரணமான வஸ்திரத்தை லட்சியமின்றியெறிந்துவிட்டுச் சந்தோஷமாய் நூதனமான வஸ்திரத்தைப் பெவ்விதமாய்த் தரித்துக்கொள்ளுவானோ அப்படி யிந்தச் சீவனானவன் சீரணமாய்ப்போன சரீரங்களை விட்டு விட்டு நூதனமான சரீரத்தைக் கிரகிக்கிறது சுபாவமாகையால் அந்த விஷயத்திலும் விவேகியானவன் துக்கப்படக் காரணமே யில்லை. (௨௨)

சுவாமி! ஆத்மாவானவர் ஒன்றினாலும் பாதிக்கப்படாததற்கென்ன காரணம் அருச்சுனா! ஆத்மாவை அம்புகள் பேதிக்கமாட்டாது, ஆயுதங்களும் வெட்டமாட்டாது, அக்கினியுந் தகிக்கமாட்டாது, சலமும் நனைக்கமாட்டாது, வாயுவும் உலர்த்தமாட்டாது. (௨௩)

சீவனானவனை வெட்டவுந் தகிக்கவும், நனைக்கவும், சோஷிக்கவுங் கூடாததெதனாலெனில்; எப்போதும் நாசமின்றி நித்யமாயும், சர்வவியாபகமாயும், ஸ்திரமாயும், அசலமாயும், புராணனாயும், வேறொரு ரூபத்தை யடையாததாயும், தன்மை குன்றாததாயும், ஆதியந்தமின்றி யிருக்கிறதாயும். (௨௪)

அவ்யக்தமாயும், மனதால் நினைக்கக்கூடாததாயும், சட்பாவவிகாரங்களில்லாததாயும், கைகளினா லெடுக்க வைக்கக் கூடாததாயும், கண்களினாற் பார்க்கக்கூடாததாயு மிருக்கிறதால் அவரை பஞ்சப் பதார்த்தங்களைக் கொண்டு எவ்விதமாய் நாசஞ்செய்யக்கூடும்; அதனாலொன்றினாலும் பாதிக்கப்படுகிறவ ரல்லவென்று வேதங்கள் முதலானவை கோஷிக்கிறதுந் தவிர மகாநுபாவாளாயிருக்கிற பெரியோருமிப்படியே சொல்லுவார்கள். ஆகையா லிப்படிப்பட்ட ஆத்மாவைக் குறித்து நீ சோகத்தையடைய எவ்வளவுங்காரணமேயில்லை. (௨௫)

அருச்சுனா! ஆத்மாவுக்குச் சனன மரண மில்லாததாற்றுக்கமில்லையென்று சொன்னேனும், இப்போது தேகத்தோடே கூடின சீவனுக்குக் கூடத் துக்கமில்லை யென்கிறதைச் சொல்லுகிறேன்கேள் ஆத்மாவாகிய சீவனானவர் எப்போதும் பிறக்கிறவர் எப்போதும் மரிக்கிறவ ரென்பாயாகில், அப்போது மதைப்பற்றி மகாநுபாவனாயிருக்கிற நீ சோகமடையக் காரணமில்லை. (௨௬)

அருச்சுனா! எப்படியெனில் பிறந்த போதே மரணம் நிச்சயம், மரித்தவனுக்குச் சனனம் நிச்சயம்! இந்த அர்த்தத்தைப் பரிகரிக்கக் கூடாததால் துக்கத்துக் கிடமேகாணேம், தேகங்களுடைய சுபாவத்தையாலோசித்தால் அப்போதுஞ் சோகப்படத்தேவையில்லை. (௨௭)

அருச்சுனா! இன்னனுஞ் சகல சீவாளும் ஆதியில் பிரகிருதியினி



டத்தி லீனமாயிருந்தார்கள். அப்போதும் யாதொன்றுந் தெரியமாட்டாது. மரணகாலத்திலு மப்படியே யொன்றுந்தெரியாதே மத்தியகாலத்தில் மாத்திரம் சொப்பனம்போல இருக்கிறாப்போலவும் போகிறாப்போலவும் நானென்றும், அவனென்றும், சுகமென்றுந் துக்கமென்றும் இவைகளை யநுபவிக்கிறே னென்றும் பிரமையை யுடையதாயிருக்கும் மாயா சம்பந்தமானதால் அவிவேகிகளுக்கு மட்டுஞ் சத்தியமாகவும் ஆசையுடைத்தானதாகவு மிருக்கும். இப்படியிருக்கிற விபரங்களை யறியாமல் சொப்பனத்திற்கண்ட இதமானபந்துக்களை விழித்த பின் காணேனென்று துக்கப்படுகிறவனைப்போல இந்தச் சரீரங்களைக் குறித்து நீ துக்கப்படுகிறாய். (௨௮)

சுவாமீ! அடியேனுக்கு வேண்டுமானால் துக்கமுண்டாயிருக்கலாம் விவேகிகளாயிருக்கிற மகாபண்டிதர்கூடத் துக்கப்படுகிறார்களே அது ஏதனால். அருச்சுனா! ஆத்மாவை யதார்த்தமாயறியாததால் அவர்களுந் துக்கமேயடைவார்கள். அறிந்தாற்போல் வசனிக்கிறார்களேயெனில் ஆத்மாவைக் குருவாலுஞ் சாஸ்திரங்களாலும் பரோட்சமாயறிந்திருக்கப்பட்ட பரோட்சஞானிகள் ஆத்மாவினிடத்தில் ஆநந்தாதி குணங்களுண்டாயிருப்பதுபோலச் சொல்லுவார்கள். சிலரவரையோக மார்க்கமாய்த் தரிசனஞ்செய்ததுபோல யோகிகள் வசனித்துக்கொண்டிருப்பார்கள். இன்னுஞ் சிலபக்தா ளவரிடத்தி லநந்த மகிமைகளு மநந்த கல்யாண குணங்களு முண்டாயிருப்பதுபோலக் கொண்டாடிக் கொண்டிருப்பார்கள். கருமிகள் வைகுண்டாதி தலங்களிற் பகவானிருக்கிறாரென்று பரோட்சமாய் சாஸ்திரபுராணங்களிற் கேட்டு விசுவாசத்துடன் பூசை முதலியகருமங்கள் செய்துகொண்டு வருவார்கள் இவர்களெல்லாம் ஆத்மாவை யதார்த்தமாயும் நன்றாயுமறிந்தவர்களே யல்ல. அறியாமற்போவதற் கென்னகாரணமெனில், குருவினிடத்திற் கேட்டாலுஞ் சாஸ்திரங்கள் விஸ்தாரமாய் வாசித்திருந்தாலும் அப்படியே யந்த அர்த்தங்களை பிறருக்கு விபரமாகப் போதிக்கும்படியான சக்தியிருந்தாலும் அவர்களுக்குமட்டுஞ் சமுசயபாவனை, அசம்பாவனை, விபரீதபாவனை போகாமலிருப் பதினாலேயும் தேகமே தானென்றும், ஜகத்திற் சத்திய புத்தியுண்டாயிருப்பதினாலேயும் ஆத்மாவையறியக்கூடாது. பின்னையறிவது தாரெனில் இவர்களுக்கெல்லாம் சிரேஷ்டமாயு மிகவும் அதிசூட்சுமமான புத்தியுடையவர்களாயுமிருக்கிற புருஷாளோ அவர்களாலறியலாமேதவிர மற்ற எல்லாராலும் அரியலாமென் றெண்ணவேண்டாம். (௨௯)

ஆகையால், அருச்சுனா! எல்லாருடைய சரீரத்திலுமிருக்கிற சீவ

னவனையொருவராலுங் கொல்லக்கூடாததால் எல்லாச் சீவர்களைக் குறித்தும் நீ துக்கப்படவேண்டியதில்லை யென்று சொன்னதற்கு ()

சுவாமி! அநேகவிதமாய்ப் போதித்தாலும் யுத்தஞ்செய்கிற விஷயத்திற் பயமாய்ச் சரீரம் நடுங்குகிறதே. அருச்சுனா! தருமத்தைக் குறித்தானெப்போதும் பயப்படவேண்டுவதில்லை அதர்மமாயிருந்தால் நீ சொன்னபடி பயப்படவேண்டுவது விஹிதமே க்ஷத்திரியனுக்குத் தருமத்தைக்கொடுக்கிற யுத்தத்தைவிட வேறே காரியங்கிடையாது மகத்தாயிருக்கிற நன்மையானது தானேவந்தால் அந்த விஷயத்திற் பயப்படக்காரணமே யில்லையே. (௩௧)

அருச்சுனா! சுவர்க்கத்வாரமடையும் பொருட்டுத் தெய்வாதீனமாய்ச் சம்பவித்திருக்கிற யுத்தத்தைப்பாக்கியவான்களாயிருக்கிற க்ஷத்திரியனடையவே வேண்டும். அப்படியிருக்க யுத்தஞ்செய்யாமற் போனாலதனாலுண்டான தோஷங்களைச் சொல்லுகிறோம். (௩௨)

தருமத்தைக்கொடுக்கிற யுத்தத்தைப் பண்ணவிட்டால்சுதன்மத்தையுமிழந்து அபகீர்த்தியுமுண்டாய்ப் பாவத்தையு மடைவாய். இது மாத்திர மல்ல. (௩௩)

எல்லாரும் வெகுநாளைக் கபகீர்த்தியும் சொல்லுவார்கள் வெகுமானத்துடன் கூடியிருக்கிற புருஷனுக்கு அபகீர்த்தியானது மரணத்தைக்காட்டிலும் அதிகம். (௩௪)

அருச்சுனா! பயத்தினாலே யுத்தஞ்செய்யாமற் போனானென்று வீட்டுமாதியான பேர்களெல்லாங் கேவலமாக எண்ணுவார்கள். யாரொருவர் உன்னை வெகுமானமாக எண்ணினார்களோ அவர்களெல்லாரும் அவமானமாக எண்ணுவார்கள். அது க்ஷத்திரியதருமத்துக்குச் சரியல்ல. (௩௫)

அருச்சுனா! உனக்குச் சத்துருக்களாயிருக்கிறபேர்கள் உன்னுடைய சாமர்த்தியத்தை நிந்தித்துச் சொல்லத்தகாத வார்த்தையைச் சொல்வார்கள், இதைவிட வேறே துக்கமேது. (௩௬)

சுவாமி! செயிப்பேனா செயிக்கமாட்டேனா அதுவுந் தெரியவில்லை. அருச்சுனா! யுத்தத்தில் மரித்தாலுஞ் சுவர்க்கமுண்டு, செயித்தாலும் பூமியும் கீர்த்தியுமுண்டு. ஆகையாற் க்ஷத்திரியதருமமாகிய யுத்தஞ் செய்யவேண்டுமென்னும் நிச்சயத்தோடேகூட எழுந்திரு. ( )

சுவாமி! பாவம்வருமென்று பயமாயிருக்கிறதே? அருச்சுனா! ஆத்மஞானமுண்டானவனுக்குச் சுகதுக்கம் லாபசேதம், செயாபசெயமிவைகளைச் சமமாய் நினைத்துக்கொண்டு யுத்தஞ்செய்வாயாகிற் பாவத்தை யடையமாட்டாய். (௩௮)



அருச்சுனா! இந்த யுத்தமானது சுதன்மமென்று புத்தியினாலே திடம்பண்ணிக்கொண்டு செய்வாயாகில் ஜனனமரணத்தைவிட்டு நீங்கிப் பரமபதத்தையே யடைவாய் இதுவரையிலும் ஞானயோகத்தைக் குறித்துச் சாங்கியசாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிற தத்துவத்தின் பிரகாரம் உபதேசித்தேன், அது உனக்குத்தெரியாமல் மயங்கியிருக்கிறாயாதலால், அந்தக்கரணசுத்தி வரவேண்டும், அது வரும்படி பகவான் பிரீதியாகக் கன்மங்கள்செய்தால் அந்தப் பகவானுடைய அநுக்கிரகத்தினாலே சித்தசுத்திதுவாரா ஞானம்வந்து மோக்ஷத்தை யடைவாய், அதனாலே கருமயோகத்தைக் குறித்துச் சொல்லப்பட்ட யுத்தியைக்கேட்டு; நல்லபுத்தியை யுடைத்தானவனாய்க் கன்மபந்தங்களி லிருந்தும் விடுபடுவாயோ அவைகளைச் சொல்லுகிறேங் கேள். (௩௯)

சுவாமி! பயிர்ச்செய்கையைப்போலக் கன்மங்களிலே விக்கினங்கள் மிகவு முண்டாயிருக்கும்போது பல மெப்படி வரும். குறைந்தாற்றோஷமுண்டே? அப்படியிருக்கக் கருமங்களெப்படிச்செய்கிறது? அருச்சுனா! பகவத் பிரீதியாகப்பண்ணுகிற கருமங்களுக்குக் கொஞ்சம் விக்கினம்வந்தாலுந் தோஷமில்லை, இந்தக் கருமமானது துவக்கினமாத்திரத்தில் எவன் எவன் எவ்வளவு எவ்வளவு அநுஷ்டிக்கிறானோ, அவ்வளவு அவ்வளவுக்குச் சம்சாரபயமின்றி யிரட்சிக்கும், காமிய கருமம்போலே சற்றே குறைந்தவுடனே பலமில்லாமற் போவதுபோலப் போகாது. (௪௰)

அதெப்படியெனிற், பகவானுக்குப் பிரீதியாகச் செய்கிறோமென்றெண்ணிப் பகவானுடைய பத்தியினாலே அவசியஞ் செய்யவேண்டுமென்று கருமஞ்செய்கிறவனுடைய புத்தியானது காமிய நிஷேத கருமங்கள் செய்யப்பட்டவர்களுடைய புத்திகளைக்காட்டிலும் அதிகமாயும் அநந்தங்களாயுமிருக்கும். (௪௧)

சுவாமி! ஜனனங்களையும், துக்கங்களையுங் கொடுக்கப்பட்ட கருமங்களைவிட்டுப் பகவான் பிரீதியாக, வேதங்கள் முதலானவைகளைப் படித்த வித்வாமிசாள் முதலானவர்களும் ஏன் பண்ணவில்லை? அருச்சுனா! அர்த்தவாதங்களைச் சொல்லப்பட்ட வேதவாக்கியங்களில் ஆசையையுடையவர்களா யிதைக்காட்டிலுமதிகம் வேறொன்று மில்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறபேர்கள். (௪௨)

பலன்களிடத்தில் இச்சையோடுங்கூடின மனதையுடைத்தானவர்களாய்ச் சுவர்க்கமே புருஷார்த்தமென்றெண்ணிக் கொண்டிருக்கப்பட்ட அந்த வித்வாமிசாள் போக ஐஸ்வரியங்களை யுத்தேசித்துச்

சென்மத்தையுங் கன்மத்தையுங் கொடுக்கப்பட்டதாயும் விஸ்தாரமான விசேடகன்மங்களையுடைத்தாய்ப் புஷ்பித்த கொடியைப்போல மனோகரமாகிய வசனங்களைப் பேசிக்கொண்டிருப்பார்கள் இதனாலே பகவானிடத்திற் பத்திவாராது. (௪௩)

அருச்சுனா! இப்படிப்பட்ட வசனங்களினாலே மனதைப் பறி கொடுத்தவராய்ப் போகங்களிடத்தில் மிகவு மிச்சையை யுடையவர் களுக்குப் பகவானுடைய தியானஞ் செய்யவேண்டுமென்றும் அவ ரைப்பற்றி நிஷ்காமகருமங்கள் செய்யவேண்டுமென்றும் புத்தியே யுண்டாகமாட்டாது. அதனா லவர்கள் செய்யவில்லை. (௪௪)

சுவாமி! சுவர்க்காதிகள் பரமபதமாகாதேபோனால், வேதங்களில் அந்தக்கருமங்கள் சொல்லுவானேன்? அருச்சுனா! திரிவிதகுணங்கட் குட்பட்ட வேதத்தில் தேகமே தானென்றும் ஜெகத்துச் சத்தியமெ ன்று மெண்ணிக் காமங்களை யுடையவர்களுக்கே சுவர்க்கமுண்டெ ன்று சொல்லுகிறது. நீயோ வேதங்களுக் கதீதமான குணாதீதனாயுந் தேகவிலட்சணனாயு மாகப்போகிறவனாகையாற் காமங்க ளின்றியே யிருந்து பாவ புண்ணியங்களினால் வரப்பட்ட துக்கசுகம் சீதோஷ் ணாதிகளைப் பொறுத்துக்கொண்டு சமபுத்தியோடுஞ் சத்துவகுணப் பிரதானனாய், வாராததை வரவேண்டுமென்கிறதையும் வந்ததில் ஆசக் தியில்லாமலும் விட்டு ஞானவந்தனாயிரு. (௪௫)

சுவாமி! வேதங்களிற்சொல்லுகிற கன்மங்களையும் பலனையும் விட்டு விட்டுப் பகவானுக்காகக் கன்மங்கள் செய்கிறது பொல்லாத புத்தியல்லவா? அருச்சுனா! வெகு பிரயாசைகளோடுங்கூடிப் பல தீர்த்தங்களிலும் ஸ்நானாதிகள்செய்து பலவிதமான பலன்கள் பெறு வதைப்பார்க்கிலும் அனவிந்திய சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்வா னுக்கு லெகுவான பிரயாசையும் விசேடமானபலனும் கிடைப்பது போலவும், பல விதமாயிருக்கப்பட்ட வேதசாஸ்திர புராணாதிகளை யாராய்ந்து அந்தப்படி நடந்து பலன்களைப் பெறுவதைப்பார்க்கிலும் பிரமநிஷ்டான் முகமாகச் சிரவணஞ்செய்து அந்தப்படி நடக்கிறதி னாலே லெகுவான பிரயாசையும் விசேடமான பலனும் கிடைப்பது போலவும், பலவிதமான தேவதைகளைக் குறித்துப் பலவித இச்சை களோடும் காமியகருமங்களைச்செய்து பலவித பலன்களை யடைகிற தைப்பார்க்கிலும், பகவானைக்குறித்து நிட்காமமாய்ச் செய்யப்பட்ட கன்மங்களினாலே அதிக பிரயாசையுமின்றிச் சித்த சுத்தித்துவாரா லோகங்களி லதிக சிரேஷ்டமாயிருக்கப்பட்ட பலமான ஞானத்தை யடைந்து மோட்சமடைவா னானதால், அவன்புத்தி பொல்லாத



தல்ல, சத்துவகுணத்தோடுங்கூடின சிரேஷ்டமான புத்தியை யுடை யவனென்று நீயறி. (௪௬)

சுவாமி! கன்மங்கள் பிரயாசைப்பட்டுச்செய்வானேன். அவை களை மறுபடியும் ஈசுரார்ப்பணமாகப் பண்ணுவானேன், சித்தத்தை யெந்நேரமும் பகவத் தியானத்திலேயே வைத்துவிட்டால் மோட்சங் கிடைக்காதா? அருச்சுனா! நீ சொன்னது சரியே, அந்தப்பிரகாரம் பிரமநிஷ்டாள்யாரோ அவர்களால் மட்டும் நடக்குமேதவிர இதரா ளாலாகாது; அதுவுமன்றி, இந்தவிஷயத்தில் க்ஷத்திரியனாகிய உனக்கு அதிகாரமே கிடையாது. அல்லது அந்தப்படி சாதிக்கலாமென்கிற பட்சத்திலும் கூட முதலாவ துனக்குச் சித்தசுத்தியே யில்லாததால் அது வரும்பொருட்டு நீ நிஷ்காம கருமமேசெய்யவேண்டும். அதற் கே நீ யதிகாரியென் றெண்ணிச் செய்யவேண்டும். அப்படிச் செய்யா விட்டால் தேகத்தை நானென்கிறதும் நிரியத்திற் சத்தியத்துவமும் விஷயங்களி லிச்சையும் போகாது. போகாததால் ஜனனமரணமான பந்தத்தைக்கொடுக்குமானதால் அவசியம் மோட்சத்துக்குச் சாதன மான நிஷ்காமகன்மத்தையே பண்ணவேண்டும். (௪௭)

சுவாமி! நிஷ்காம கன்மங்களைச்செய்தாற் பலன்வாராம லெப்ப டிப்போகும். பலனை யிச்சியாம லெப்படியிருக்கக்கூடும்? அருச்சுனா! மனதைப் பகவானிடத்தில்வைத்து எல்லாம் பகவானாலேயே யுண்டா யிருக்கிறது, அவரே புத்திக் கந்தரியாமியாயிருந்துகொண்டு எல்லாக் கருமங்களையுஞ் செய்யும்படி. பிரேரகஞ்செய்விக்கிறாரென்றும், இந்தக் கருமம் நான் செய்கிறேனென்றும், இந்தப்பலன்கள் என்னை யடையு மென்னும் எண்ணத்தையும்விட்டுப் பலனுண்டானாலு மில்லாமற்போ னாலுஞ் சமபுத்தியுடனே யிருக்கிறவனுக்குப் பலன்கள் வருவதற்கும் இச்சிக்கிறதற்கும் எதுவில்லையே, ஆனதால் நிஷ்காமகருமங்களைத் தவிர மோட்சத்துக்கு வேறே சாதனமில்லாததாற் பலன்களை யுத்தே சித்துக் கன்மங்களைச் செய்யாதே? செய்தாற் பலன்வருமென்று பண் ணாமலு மிராதே? (௪௮)

சுவாமி! பின்னை யான் யாதுசெய்யத்தக்கது? அருச்சுனா பகவா னிடத்திலே யொருமைப்பட்டவனாய் நான் செய்கிறேனென்கிற அபி மானத்தையும்விட்டு, ' நிஷ்காமகருமத்துக்குப் பலம் ஞானம் வருகிற படியினாலே சுகதுக்கத்திற் சமமாயிருந்துகொண்டு பகவான் பிரீதியா கக் கன்மங்களைச்செய்; இப்படிச்செய்கிறவர்களையே பெரியவாளெ ன்றுசொல்லுவார்கள். ஞானத்துக்குச் சாதனமாயிருக்கிற நிஷ்காம கன்மத்தைக் காட்டிலுங் காமியகன்மமானது மிகவுந் தாழ்வாகையால் ஞானத்துக் கேதுவாயிருக்கிற கன்மத்தைப்பண்ணு பலத்துக் காசைப்

படுகிறவன் * கிருபண சித்தத்தையுடையவனே. (சகூ)

சுவாமி! நிஷ்காமகன்மஞ் செய்கிறவன் அதிகமா? அருச்சுனா! சுவர்க்கத்தையும் நரகத்தையுங்கொடுக்கிற கருமங்களைச்செய்கிற புருஷன் புண்ணிய கருமங்களைச்செய்து பகவானுக் கற்பணஞ்செய்தால் இந்தச் சென்மத்திற்றனே பகவானுடைய அநுக்கிரகத்தினால் ஞானத்துவாரா மோட்சமே யடைவன், ஆகையால் மோட்சத்தைக் கொடுக்கப்பட்ட நற்கருமங்களையேசெய். (ருய)

சுவாமி! இது மோட்சத்தைக் கொடுக்குமா? அருச்சுனா! கன்மபலத்தைப் பகவான்பிரீதியாகச் செய்தபேர்கள் ஞானவந்தாளாகிச் சென்மமாகிற பந்தத்தைவிட்டு ஓ ருபத்திரவுமின்றியிருக்கிற மோட்சமே யடைந்திருக்கிறார்கள். (ருக)

சுவாமி! இவ்விதங்களா யிருப்பதனாலே நானெப்போ தந்த மோட்சத்தையடைவேன்? அருச்சுனா! சர்வமு மென்னைத்தவிர வேறே யாதொன்றுங் கிடையாதென்கிற திடபுத்தியினால் தேகமே நானென்கிற மோகமான காட்டையெப்போது கடக்கிறாயோ, நமக்கானபடியினாலே யிவ்வளவு தெரிந்திருக்கிற தென்கிற அகங்காரத்தையும் இப்போது நாம் சொன்ன அர்த்தத்திற் சம்சயம்வந்து இன்னமும் பிறரிடத்திற் கேட்கவேண்டுமென்பதினால் உனக்கெப்போது நிராசைவருகிறதோ, அப்போது கேட்டதற்கும் கேட்கவேண்டுவதற்கும் முடிவை யடையப்போகிறாய். (ருஉ)

அருச்சுனா! முன் நாநாவிதமாயிருக்கிற கேள்வியினாலே விட்சேபத்தை யடைந்திருக்கிற உன்னுடைய புத்தியானது ஆத்மாவினிடத்திலே மக்னமாகி விஷயங்களை யடையாதிருக்கிறதோ அந்த அப்பியாசத்தினாலே தத்துவஞான முதயமாகி மோட்சத்தை யடைவாயென்று அநுக்கிரகஞ்செய்த பகவானைப்பார்த்து:— (ருங)

அப்படிப்பட்ட ஞானவந்தாளுடைய லட்சணங்களெல்லாந் தேவரீருக்குத் தெரியுமானதால் அவர்களெப்படிப் பேசுவார்கள்? எவ்விதமாயிருப்பார்கள்? எவ்விதமாய் நடப்பார்கள்? அதைத் தெரிந்துகொள்ள இச்சையுடையவனா யிருப்பதால் அநுக்கிரகஞ் செய்யவேண்டும். (ருச)

அருச்சுனா! மனதிலே யாதோ ரிச்சையுமின்றிச் சகல இச்சைகளையு மெப்போது நன்றாய் விடுகிறானோ, பரமாநந்த சொரூபமாயிருக்கிற தன்னிடத்திலேதானே சந்தோஷத்தை யுடையவனா யெப்போதாகிறானோ அவனைத்தான் ஞானியென்று சொல்லப்படும். (ருரு)

* கிருபணம் - உலோபம்



அருச்சுனா! துக்கம்வந்தாற் கிலேசமும், சுகம்வந்தாற் சந்தோஷமுமின்றி யெப்போதாகிறானோ, இராகம் பயம் குரோதம் இவைகளைச் சுத்தமாய் விட்டவனா யெப்போதிருப்பானோ அவனை அப்போதுதான் ஞானியென்று சொல்லப்படும். (ருசா)

அருச்சுனா! பெண்சாதி பிள்ளை முதலானபேரிடத்திற் பிரியமின்றிப் பேசிக்கொண்டு பிராரத்தகன்மத்தினால் நல்லதுவந்தாற் சந்தோஷப்படாமலும், பொல்லாததுவந்தாற் றுக்கப்படாமலும் இருக்கப்பட்டவனெவனோ அவனைத்தான் ஞானி யென்று சொல்லப்படும். ()

அருச்சுனா! இன்னமுங்கேள், ஆமைக்குண்டான பஞ்ச அவயவங்களும் ஒன்றைப் பார்த்தவுடனே யெப்படிச் சங்கோசித்துக்கொள்ளுகிறதோ அப்படிப் பஞ்சவிஷயங்களிலெவனுடைய இந்திரியங்களானவை செல்லாமல் திடபுத்தியினால் நிறுத்துவானோ அவனைத்தான் ஞானியென்று சொல்லப்படும். (ருஅ)

சுவாமி! விஷயங்களைக் கிரகியாமலிருக்கிறதே ஞானவந்தாளுடைய லட்சணமானாற் சித்தப்பிரமணத்துவ முடையவனும், உபாசனை விரதங்கள் முதலானவைகளால் உபவாசமாயிருக்கிறவர்களும், வியாதியுடையவர்களும், விஷயங்களைக் கிரகியாம லிருக்கிறார்களே அவர்களையும் ஞானியென்று சொல்லக்கூடாதா? அருச்சுனா தேகமே நானென்றுஞ் செகந்தான் சத்தியமென்று மெண்ணிக்கொண்டிருக்கப்பட்டவர்கள் வியாதி விரத முதலானவைகளால் அந்தத் தருணங்களில் மட்டும் விஷயங்களைக் கிரகியாமல் நிறுத்தல் செய்துவைத்தார்களே தவிர விஷயங்களி லாசை அவர்களைவிட்டுப் போகவேயில்லை. நாம் சொன்னஞானியோ சுகசொரூபராயிருக்கிற பரமான்மாவைத் தானாக அறிந்து அநுபவிக்கிற சந்தோஷத்தினாலே அநாத்ம தன்மத்தோடுங்கூடின விஷயங்களிலே சுத்தமா யாசையை விட்டிருப்பான். இவனே பரமானந்தசொரூபமாகிய நன்மை யடைவன். அருச்சுனா! இதுதான் ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பேதம். (ருகூ)

சுவாமி! ஞானி அப்பியாசஞ் செய்கிறகாலத்தில் இந்திரிய நிக்கிரகஞ் செய்யாவிட்டால் அதனா லென்னதோஷமுண்டாகும்? அருச்சுனா ஞானப்பியாசத்தி விடைவிடாமற் பிரயத்தனஞ்செய்து வரப்பட்ட வித்வாமிசனைக்கூட கலக்கஞ்செய்யப்பட்டசுபாவத்தையுடைய இந்திரியங்களானவை பலாத்காரமா யவனுடையமனதைக் கெடுக்கும்படியான சாமர்த்தியம் அதற்குண்டாயிருப்பதால் அவசியம் நிக்கிரகஞ் செய்தே யிருக்கவேண்டும். (சாய)

சுவாமி! இப்படியானால் ஞானியானவன் எவ்விதமா யிந்திரியநிக்

கிரகஞ் செய்துகொண்டிருப்பன்? அருச்சுனா! மேலாகச்சொன்ன ஞானி யானவன் இந்திரியங்களையெல்லாந் தன்வசமாகச்செய்துகொண்டு வாசுதேவனாகிய நானே சிரேஷ்டமான வஸ்துவென்று பத்திபூர்வமாக இடைவிடாமல் நினைத்துக்கொண்டேயிருப்பன். அருச்சுனா! இந்திரியங்க ளெவனுக்குச் சொன்னபடி வசமாயிருக்குமோ அவனுடைய புத்தியே திரமாயிருக்கும். அவனைத்தான் ஞானியென்று சொல்லப்படும். (௬௧)

அருச்சுனா! பாகியேந்திரியநிக்ரகஞ் சொன்னோம், இனி அந்தரேந்திரியத்தையும் நிக்ரகஞ் செய்யவேண்டு மென்றும், அது செய்யாவிட்டால் அதனால்வரப்பட்ட தோஷத்தையுஞ் சொல்லுகிறோம். மனதினாலே விஷயங்களை நல்லதென்றெண்ணி அவைகளைத் தியானஞ்செய்கிற புருடனுக்கு விஷயங்களிற் பற்றுதலுண்டாகும்; அந்தப் பற்றுதலினாலே காமமுண்டாகும்; அந்தக் காமனுக்கு விக்கினம் வந்த மாத்திரத்திற் கோபமுண்டாகும். (௬௨)

கோபத்தினாலே திடமான மோகம்பிறக்கும்; அது பிறந்தவுடனே யின்னகாரியஞ்செய்யலாம் இன்னகாரியஞ் செய்யக்கூடாதென்றதும், தெரியாமல் நடக்கிறதுந்தவிர குருமுகமாகக்கேட்ட சிரவணத்தினாலும் உபதேசத்தினாலும் நிச்சயித்திருக்கிற அர்த்தமும் மறந்துபோகும்; அதனாலவனுடைய விவேகமான புத்தியானது நாசத்தையடைந்துவிடும், அதனாலவனைப்புருஷனென் றெண்ணக்கூடாது

சுவாமி! இந்திரியங்கள் விஷயங்களிலே செல்லுகிறது சுபாவமாயிருக்க அவைகளை யெப்படி நிறுத்தக்கூடும்; நிறுத்தாவிட்டால் ஞானமெப்படிவரும்? அருச்சுனா! ஞானியானவன் மோட்சத்தையிச்சித்தனத்தனப்பட்ட துவக்கத்திலே முதலாவது சாதனத்திற் பிரமசொரூபத்தைத் தவிர அன்னியமாய்க் காணப்பட்ட செகமெல்லாம் மித்தையென்று நிச்சயித்தும் அவைகளில் இரண்டாஞ்சாதனத்தாலிச்சையையுஞ் சுத்தமாய்விட்டிருப்பதினாலே அவனுக்குமனமுதலாகிய இந்திரியங்கள் சுவாதீனமாயிருக்கும் அப்படிச் சுவாதீனமாயிருக்கப்பட்ட இந்திரியங்களினாலே ஞானியானவன் இராகத் துவேஷங்களின்றி விஷயங்களைக் கிரகித்தாலும் அவைகளில் ஆசக்தி யில்லாதவனாகவே யிருப்பன் அதனால் நம்முடைய பிரசாதத்தையே யடைவன்.

சுவாமி ஞானிக்குமாத்திரம் உம்முடைய பிரசாத மெப்படியுண்டாகும்? அருச்சுனா! அந்தஞானிக்கு மனது நிர்மலத்துவ முண்டானபடியினாலே சந்தோஷம்பிறக்கும்; அதனாற் சகலதுக்கங்களும்நசிக்கும் இந்தவிதமாகப் பிரசன்னசித்தனான அந்த ஞானிக்குச் சீக்கிரத்தில்



ஞானந் திடமாய் அதனால் நம்முடைய சொரூபத்தையேயடைவன். ()

அருச்சுனா! இந்திரியங்கள் வசமில்லாத புருடனுக்கு ஆத்மத்தியானம் செய்யவேண்டுமென்கிறதிற் புத்தியே வாராது, ஒருவேளை யந்தப் புத்தியுண்டானாலுந் தியானஞ் செய்யச் சக்கிய மாகாது, தியானமில்லாவிட்டால் மனது உபசாந்தியாகமாட்டாது. உபசாந்தியெப்போதில்லையோ அப்போது மோட்சசுகமுமில்லை. (௬௬)

சுவாமி! புருஷனாகப்பிறந்து மிப்படிப்போவதற் கென்னகாரணம் அருச்சுனா! விஷயங்களி லிச்சித்த ஓரிந்திரியத்துடனே மனது போகும்படிச் செய்வானேயாகில் அப்படிப்பட்ட மனதுடனேகூடின இந்திரியம் யோகீந்திரனுடைய ஞானத்தைக்கூட அபகரிக்கும். அப்படியிருக்க எல்லா இந்திரியங்களுடனேயும் மனதுபோகும்படிச் செய்வானேயாகில் அவனுக்குவருங் கேடு சொல்லிமுடியுமா? அதற்குத் திட்டாந்தம், போதைவசத்தினாற் சித்தம் சுவாதீனமில்லாத புருடனானவன் ஓடக்காரனாகச் சம்பவித்துவிட்டால் வாயுவசத்தினால் ஓடமானது சமுத்திரத்தில் திசைகள்தப்பி யலைவதுபோல் இராகாதிவிருத்திகளுண்டாகி விட்சேபங்களை யடைந்து ஜனன மரணமாகிய சமுத்திரத்திலிருந்தும் கரையேறமாட்டான். (௬௭)

அருச்சுனா! இந்திரியநிக்கிரகமே ஞானிக்கு லட்சணமும் சாதனமுமாகையால், எவனுக்கு இந்திரியங்கள் விஷயங்களிற் செல்லாமல் நிற்கிறதோ அவனுக்குத்தான் ஞானம் லப்தமாகும்; அவனைத்தான் ஞானியென்றுங் கிருதகிருத்தியனென்றுஞ் சொல்லப்படும்(௬௮)

சுவாமி! நித்திரைசெய்கிறவனுக்கு ஒன்றுந்தெரியாமலும் சலனத்துவமில்லாமலு மெப்படியிருக்கிறதோ அப்படி யிருக்கப்பட்டவர்கள ஞானியென்று சொல்லுகிறபட்சத்தில் அப்படி யொருவருமிருக்கமாட்டார்கள்போலத் தோற்றுகிறதே? அருச்சுனா! சகலசீவாளுக்கு மெந்த, ஆத்மஞானமானது இரவுபோல நித்திரையாய்க் காணப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஆத்மஞானத்தில் இந்திரியங்களைச்செயித்த யோகியானவன் எப்போதும் விழித்துக்கொண்டேயிருப்பான் சகல சீவாளுஞ் சமுசாரத்துக்குக் காரணமாயிருக்கப்பட்ட எந்த விஷயங்களில் விழித்துக்கொண்டிருப்பார்களோ அப்படிப்பட்ட விஷயங்களுடன் கலந்திருந்துங் கலவாமலிருக்கப்பட்ட ஆத்மாவையறிந்த யோகியானவன் கோட்டானைப்போல நித்திரை செய்துகொண்டிருப்பான். (௬௯)

சுவாமி! இடைவிடாமலிந்த நிஷ்டையில் யாவாளிருந்தால் தேகசமரட்சணைக் கென்னசெய்வார்கள், அல்லது கிடைத்தாலு மெவ்வித

மாகப் புசிப்பார்கள்? அருச்சுனா! ஜலமே பூரணமாயும் அசலமாயுமிருக்கப்பட்ட சமுத்திரத்திற் சலனத்தோடுங்கூடிய நதிகள் பிரவேசிப்பது போல அந்த ஞானிக்குப் பிராரத்தானுகுணமாய்ச் சகல விஷயங்களும் வலுவில் வந்தடையும். அப்படி யடைந்தபோதிலும் சலனத்துடன் கூடின அநேக நதிகள் அடைந்தபோதிலும் அந்தச் சமுத்திரத்தினுடைய நிலவரத்தை யெவ்விதமாய்க் கலக்கஞ் செய்து வைக்கமாட்டுவதில்லையோ அப்படி யந்தர்முகத்தையுடைய அந்த ஞானியினது திரமான புத்திக்குச் சலனத்துவஞ் செய்துவைக்கமாட்டாது. அவ னெவ்விதமு மோட்சத்தையே யடைவன். (எO)

சுவாமி! இதுவரையு மோட்சமென்னப்பட்டது இத்தன்மையவான பெருமையுடைத்தானதென்றும், அதை யடைந்த மகான்களுடைய லட்சணங்களும், அதையடைய அபேட்சிக்கிறவர்கள் நடக்கவேண்டிய லட்சணங்களும், அப்படி நடவாவிட்டால் அதனால்வருந் துன்பங்களும் அநேகவிதமா யநுக்கிரகஞ்செய்தீர்கள், அவைகளெல்லாந்தாரணைக்கு வருவது வருத்தமாயிருக்கிறது; ஆகையால், நடப்பதற்குச் சுலுவாயுமிருக்கவேண்டும், மோட்சமுமடையவேண்டும், அதற்கனுசரித்துச் சங்க்ரகமாக அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று கேட்ட அருச்சுனனைப்பார்த்துப் பார்த்தா! விஷயபோகங்கள் வேண்டுமென்றிச்சிக்கப்பட்ட புருஷனுக்கு ஒருக்காலும் மோட்சஞ்சித்தியாது ஆகையால், யாதொருபுருஷனானவன் பிராரத்தானுகுணமாய் வலுவில்வந்த விஷயங்களி லாசக்தியில்லாமலும், உபேட்சையில்லாமலும், வாராத போகங்களிற் கோரிக்கையும், புத்திராதிகளிடத்தில் எனதென்கிற மமதையுந், தேகத்தில் நானென்கிற அகந்தையும் விட்டு இவைகளெல்லாம் ஈர்மானதினாலே விட்டோமென்கிற நினைப்புநீங்கி ஆத்மாவினிடத்தி லொருமைப்பட்டவனா யெவனிருக்கிறானோ அவனே மோட்சத்தையடைவன். (எக)

அருச்சுனா! இதுவரையுஞ்சொன்ன அர்த்தங்களெல்லாம் பிரமஞானியினுடைய நிஷ்டையென்று சொல்லப்படும். இந்த நிஷ்டையடைந்த புருஷன் ஒருகாலு மோகத்தையுஞ் சஞ்சலத்தையு மடையான்; அதையுனக்கு அநுக்கிரகம்பண்ணினேம்; இந்த நிஷ்டையை மட்டும் அருச்சுனா! மரணசமயத்திலாவது பொருக்ஷணமாத்திரமடைந்தாலும் மோட்சத்தையே யடைவன். இப்படியிருக்க, வாலிபந்தொடங்கிஞானாப்பியாசஞ் செய்கிறவன் மோட்சமடைவனென்று நாம் சொல்லவா வேண்டும். (எஉ)

துக்கசமுத்திரத்தில் அழுந்தியிருந்த பக்தனான அருச்சுனனைச் சாங்கியவிசாரமான ஓடத்தைக்கொண்டு கரையேறும்படிச் செய்வித்த



பகவானாகிய கிருஷ்ணமூர்த்திக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். (எ௩)

இரண்டாவது

சாங்கியயோக அந்தியாயம் முற்றிற்று.

ஆகு அத்தியாயம், உ-க்குச் சுலோகம்-ககக.

---

உ

ஸ்ரீ அச்சுதாயநம:

மூன்றாவது

# கர்மபிரமயோக அத்தியாயம்.

அவதாரிகை. இவ்விதங்களாக வாசுதேவனாலே ஞானயோகத்தையும் கன்மயோகத்தையும் அருச்சுனனானவன் கேட்டதில் ஞானயோகம் மிகவும் சிரேஷ்டமாயிருக்க அதை விட்டுவிட்டுக் கோரமாயிருக்கிற யுத்தத்தை யேன் பண்ணச் சொல்லுகிறாரென்கிற அபிப்பிராயங்கொண்டு தனக்குண்டான சமுசயத்தைநிவிர்த்திசெய்து கொள்ளத் தொடங்கினான்.

சனார்த்தனா! கன்மயோகத்தைக் காட்டிலும் ஞானயோகமே சிரேஷ்டமென்று தேவரீருக்குச் சம்மதமா யிருக்குமானால் அதை விட்டுவிட்டுக் கோரமாயிருக்கிற யுத்தத்தைப் பண்ணும்படியாக அடியேனை யேதுக்கு நேமிக்கிறீர்கள்? (க)

சுவாமி! இன்னமும் ஓரிடத்திற் கன்மத்தைத் தோத்திரஞ் செய்கிறீர்கள்; ஓரிடத்தில் ஞானத்தைத் தோத்திரஞ் செய்கிறீர்கள் இந்த மிசிர வாக்கியங்களினாலே யென்னுடைய புத்தியானது மோகத்தை யடைகிறது; அதனாலென்புத்திக்கு இதுநானிச்சயமென்பது வெளிப்படாததனால் கன்மஞ்ஞானமென்ற யிரண்டுவிதத்தில் நானெதுசெய்தாற் சிரேயசுகரமுண்டாகுமோ அதை யுபதேசஞ்செய்ய வேண்டுமென்று வணக்கத்துடன்கேட்ட அருச்சுனனைப்பார்த்து வாசுதேவரானவர் சொல்லத்தொடங்குகிறார். (உ)

அருச்சுனா! லோகத்திலே யதிகாரிபேதத்தைக் குறித்துப் பூர்வத்திலே சாங்கியாளுக்கு ஞானநிட்டையும், கருமயோகிகளுக்குக் கரும நிட்டையும் சொல்லப்பட்டிருக்கிறது. யாதொருவர் அந்தக் கரண சுத்தியுடனே யிருக்கிறார்களோ அவர்களுக்கு மோட்சசாதனமான ஞானத்தையும், அந்தக் கரணசுத்தி யில்லாதவர்களுக்கு அது வந்து ஞானத்துவாரா மோட்சமடைவதற்காகக் கன்மயோகத்தையும்

அநுக்கிரகம்பண்ணினேன்; அதனாற் சித்தசுத்திவருமளவும் அவனவன் சாதிவருணாச்சிரமத்துக்குத் தகுந்த நிஷ்காமகன்மங்களைப்பண்ணவேண்டும். பண்ணாவிட்டால் ஞானம் வாராது. அதெப்போது வரவில்லையோ அவனுக்கு மோட்சமுஞ் சித்தியாது. (௩)

சுவாமி! புருஷனானவன் கன்மங்கள் செய்யாமல் ஞானமடையமாட்டானென்றால் சகல கன்மத்தையும்விட்ட சந்நியாசத்தினாலேயே மோட்சமென்று சொல்லுவானேன்? அருச்சுனா! புண்ணியகன்மங்களைச்செய்து பலனுக்கு இச்சியாமற் பகவானுக் கற்பணஞ் செய்கிறதே விடுகிறதற் கருத்தமேயல்லாமற் கருமங்களைச்செய்யாமலேவிட்டிருக்கிறதல்ல; எதனாலென்றால், தேகமே தானென்றுஞ் செகத்துச் சத்தியமென்றும் எண்ணியிருக்கப்பட்டவன் கன்மங்களை யெப்போது ஆசரிக்காமல் விட்டானோ அவனொருக்காலு மோட்சத்தையடையானாகையால், ஒருபோதுங் கன்மங்களைவிடவேகூடாது. (௪)

அருச்சுனா! ஞானியானாலும் அஞ்ஞானியானாலும் ஒரு க்ஷணநேரங்கூடக் கன்மங்கள் செய்யாம லிருக்கமாட்டார்கள்; எதனாலென்றால் கன்மங்களினாலேயே சென்மமுண்டாயிருப்பதால் எந்தெந்தத்தேக மெடுத்தாலும் அந்தந்தக்கருமங்கள் செய்யவேண்டுமோ அவைகள் செய்தே தீரவேண்டியவை தானபோதும், பிரகிருதியினாலுண்டான குணங்களுக்கு வசமான புருஷா னெவ்விதமுங் கருமங்கள் செய்யாமலிருக்க ஒருபோதுஞ் சக்கியமாகமாட்டாது. ஆகையாற், பெரியோர்கள்கூட அசுதந்தரர்களாக இருந்துகொண்டு கருமங்கள் செய்துவரும்போது அப்பியாசியா யிருக்கப்பட்ட நீ யெப்படிச் செய்யாமலிருக்கக்கூடும்.

சுவாமி! சிலர் பெரியவர்களென்றுசொல்லிக்கொண்டு கன்மங்கள் செய்யாமலே யிருக்கிறார்களே? அருச்சுனா! அவாளாரென்றால் சுத்த அஞ்ஞானத்தையுடையவர்கள்; அதுவுமன்றிப் பிறருடைய திரவியங்களை அபகரிக்கவேண்டுமென்கிற கோரிக்கைகளை அந்தரத்தில் வைத்துக்கொண்டு வெளிக்குப் பகவானைத் தியானஞ்செய்கிறவனைப்போலக்கன்மேந்திரியங்களைமட்டும் நிக்கிரகஞ் செய்துகொண்டு மனதினாலே விஷயங்களை நினைத்துக்கொண்டேயிருப்பன்; இவனே சுத்தமூடாத்மா; இடம்பத்தோடு மகிமைகள் வேண்டுமென்னு மிச்சையுடையவன், மித்தையான ஆசாரமுடையவுன், இவனுக்கொருபோதும் நல்லகதியுண்டாகவே மாட்டாது. (௬)

சுவாமி! நல்லகதி யடையப்பட்டவ னெவ்விதமாய்க் கருமங்கள் செய்யவேண்டும்? அருச்சுனா! மனமுதலிய யிந்திரியங்களை விஷயங்களிற் செல்லாமல் நிக்கிரகஞ்செய்துகொண்டு பலாபேட்சையுமின்றிக்



கன் மேந்திரியங்களினாலே வருணாச்சிரம தன்மத்துக்குத்தகுந்த கன்மங்கள் செய்துகொண்டு வருவன், இவனுக்குச் சித்தசுத்தித்துவாரா ஞானம்லப்தமாகி மோட்சமே யடைவன்; இதனாலிவனேசிரேஷ்டன்.

சாங்கியாளெல்லாரும் கன்மங்கள்செய்தாற் பந்தமென்று சொல்லுகிறார்களே? அருச்சுனா! நிடேதகாமிய கன்மங்கள் பந்தமென்று அவாள்சொன்ன தாற்பரியமேயல்லாமல், நிட்காம கன்மங்களைக்குறித்துச்சொன்னதல்ல. ஆகையால், பலாபேட்சையின்றிப் பகவான் பிரீதியாகப் புண்ணியகன்மங்களவசியஞ் செய்யவேண்டும்; செய்யாவிட்டாற் சரீர மெதற்காகவந்ததோ அந்தத்தன்மஞ்சித்தியாது. சித்தியாவிட்டாற் பாக்கியிருக்கும். அதனாலனந்தசனனங்களுண்டாகும். இதனாற்றான் அபேதபுத்தியுடன் கூடியிருக்கப்பட்ட மகான்கள்கூட வுலகத்தோடொத்து நிட்காமமாகக் கன்மங்கள் செய்தே வருவார்கள். அப்படியிருக்கப் பேதபுத்தியுடன்கூடி யிருக்கிற நீ யெப்படிச் செய்யாம லிருக்கக்கூடும். (௮)

அருச்சுனா! கன்மங்களில் நிஷ்காமத்தோடுங்கூடின இஷ்டாராதனைரூபமான கன்மங்களே சிரேஷ்டமானதனாலேயும், அதுதவிர மற்றக் கன்மங்களெல்லாம் பந்தங்களைக்கொடுக்கும்படியான தாலேயும், அவைகளைவிட்டு நிஷ்காமனாய் நீ கன்மஞ்செய்வாயாகில் தப்பாமல் மோட்சத்துக் குருகனாய்விடுவாய். (௯)

அருச்சுனா! இந்தக் கன்மங்களாற் சிரேயசுகரமுண்டாகுமென்பதைக்குறித்துப் பிரமதேவர் வாக்கினாற்சொன்ன அர்த்தத்தையுஞ் சொல்லுகிறேன்கேள். பூர்வத்திற் பிரமதேவர் கன்மங்களுடனே பிரசைகளைச் சிருட்டித்துச் சீவானே! நீங்கள் விட்டுணுரூபமாயிருக்கப்பட்ட எக்கியங்கள் செய்வித்து விருத்தியடையுங்கள்; அப்படிச்செய்யப்பட்ட எக்கியங்களானவை உங்களுடைய இஷ்டமான கோரிக்கைகளைக் கொடுக்கும். (௧௦)

சனங்களே! நீங்களெக்கியத்தினாலே தேவதைகளை யாராதனை செய்யுங்கள்; அந்தத்தேவதைகள் உங்களை மழைரூபமாய் விருத்தி செய்விப்பார்கள்; அந்தத்தேவதைகளும்நீங்களும் பரஸ்பரம்விருத்தியடைந்து சிரேயசுகரத்தையடையுங்களென்று சொன்னபடி யிதுவரைக்கும் நடந்துவருகிறது. (௧௧)

அருச்சுனா! இவ்விதங்களாய் நடந்துவருகிற எக்கியங்களினாலே பூசிதமாகிய தேவதைகள் மழைமுகமா யெல்லாருக்கும் இஷ்டமாகிய சகல போகங்களையுங் கொடுக்கும்போது அந்தப் பதார்த்தங்களையெக்கியரூபமாய்த் திரும்பவும் அவர்களுக்குக் கொடுத்துப் பிரசாதரூப

மாய்ப் புசியாமற் சுதேவா, தான் புசிக்கிறேனென் றெவன்புசிக்கிறானோ அவன் பெரியவாளாலேதூஷிக்கப்படுவன், இவனே பாமமூடன்; இவனே மகாதிருடன். (௧௨)

அருச்சுனா! பஞ்ச எக்யங்கள் செய்து மிஞ்சின அன்னத்தைப் பிரசாதரூபமாய்க் கிரகிக்கப்பட்ட வித்வாம்சன் பஞ்சவிதமான பாபங்களினின்று விடுபடுவன், இப்படியன்றி யெவனாகிலுந் தனக்காகப் பாபஞ்செய்யச் சொல்லுகிறானோ அப்பேர்ப்பட்ட துராசாரன் பாபரூபமாகிய அன்னங்கள் புசிக்கிறானென்று நீயறியவேண்டும்; மேலும் லோகமெல்லாங் கன்மங்களாலேயே விளங்குகிறபடியாற் கன்மமே செய்யவேண்டும். (௧௩)

கன்மத்தாலேயே லோகமெல்லாம் எவ்விதமாய் விளங்குகிறதெனில் கேள். சுக்கிலசுரோணிதத்தினாற் பரிணமித்த பிராணிகள் அன்னத்தினாலுண்டாம்; அந்த அன்னங்கள் மழையினாலுண்டாம்; அந்தமழையிந்திரன் பிரசாதத்தாலுண்டாம் அந்த இந்திரன் பிரசாதம் எக்யங்களினாலுண்டாம். அந்த யெக்யங்கள் கருமத்தாலுண்டாம். (௧௪)

அருச்சுனா! அந்தக்கன்மங்கள் வேதங்களிற் சொல்லப்படுகிறது; அந்த வேதமும் பரப்பிரம்மத்தினாலுண்டாம்; அந்தப் பரப்பிரமமெங்கும் வியாபகமாயும் நித்யமாயு மிருந்தாலும் அந்தப் பிரமத்துக்கு எக்யம் அவசியமானதால் எக்யங்களிடத்திற் சுதசித்தமாயிருக்கும். (௧௫)

அருச்சுனா! பகவானானவர் எல்லாப் பிராணிகளுக்கும் புருடார்த்தம் வரவேண்டுமென்று கன்மசக்கர முண்டாக்கி வைத்திருப்பதால் அந்தக்கன்மசக்கரத்தின்படி நடவாதவனுடைய சீவனம் விருதாவாய்முடியும்; அதெப்படியென்றால் பகவானுடைய வாக்கியமான வேதத்தினாலே புருஷாளுக்குக் கன்மத்திலே பிரவிர்த்திவரும்; அதனால் மழையுண்டாம, அதனால் அன்னமுண்டாம், அன்னத்தாற் சீவாளுண்டாவார்கள; அந்தச் சீவாளுக்குக் கன்மங்களிற் பிரவிர்த்தி வரும்; இப்படி வருகிற கன்மசக்கரத்தை யெவனநுட்டிக்கவில்லையோ அவன் பாபரூபமாயிருக்கிற ஆயுளையுடையவனே, அவனிந்திரியங்களினால் விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு விருதாச் சீவனஞ் செய்கிறான்; இவனே சுத்த அஞ்ஞானி; யாதொரு நல்லகதியையும் அடையானாகையால், கன்மங்களைச் சணமாத்திரங்கூட விடக்கூடாது. அப்படி விடாமற்செய்தால் சித்தசுத்தியுண்டாகும்; அந்தச் சித்தசுத்தியினால் அப்புருடனானவன் ஒருபோதும் விருதாவாய்ப்போகான்.

அருச்சுனா! ஞானிக்குமாத்திரம் ஒரு கன்மமுந் தேவையில்லையாதனாலென்றால் யாதொருவன் புத்திராதிமுதலான பிரபஞ்சத்தில் எவ்வளவும் மனதுவையாதவனும், ஆத்மாவினிடத்தில் அத்யந்தம் பிரியத்தையுடையவனும், ஆத்மாநுபவத்தில் திருப்தனும், சதா சந்தோஷத்தை யுடையவனும் இருக்கிறவனுக்கு அவைகளைக்காட்டிலும் விசேடமாய்ச் செய்யவேண்டுவதொன்றுமில்லாததனால் அவன் மட்டும் ஒரு கன்மமுஞ் செய்யவேண்டுவதில்லை. (௧௭)



அருச்சுனா! அப்படிப்பட்ட ஞானி உலகத்தோடொத்திருக்கப்பட்டவனானதால் சத்கருமங்கள் செய்துகொண்டேவருவான்; அதனாற் புண்ணியமுமில்லை, உலகத்தைவிட்டஞானி செய்யாமல்விட்டிருப்பன், அதனாற் றுன்பமுமில்லை, மோட்சத்துக்கு விக்கினம்வரப்போகிறதென்று தேவதைகளை யநுசரிக்கவேண்டாமா வென்றால் அது அப்பியாசதிசையிலேயே தவிர ஆருடதிசையில் அவர்களுடைய விரோதம் வந்தாலும் அவர்களுக்கொரு பாதகமு மில்லாததனாலும், எறும்புமுதற் பிரமதேவர் பரியந்தமுள்ள சகலசீவாளிடத்திலும் அவனுக் காசரிக்க வேண்டியகாரியம் ஒன்றுமில்லாததால் ஒரு கன்மமுஞ் செய்யவேண்டுவதில்லை; லோகோபகார நிமித்தமாக ஞானவந்தாள் சத்கருமங்களை யநுசரிப்பார்கள் (௧௮)

ஆனதால் அருச்சுனா! கன்மபலத்தி லாசையின்றி யிடைவிடாமற் செய்யவேண்டிய கன்மங்களை நீ செய்; புருடனானவன் அசங்கனாய்க் கன்மங்களைச்செய்து பகவான் பிரீதிபண்ணினால் மோட்சமேயடைவன். (௧௯)

சுவாமி! இவ்விதமாகக் கன்மங்களை யநுட்டித்து மோட்சத்தை யாரடைந்தார்கள்? அருச்சுனா! சனகாதிகள் முதலாய்க் கன்மங்கள் செய்ததனாலே சித்தசுத்தித்துவாரா ஞானசித்தியடைந்து மறுபடியும லோகோபகார நிமித்தம் கன்மங்கள் செய்துவந்து மோட்சமடைந்திருக்கிறார்கள்; அப்படிப்பட்ட ஞானம் உனக்குச் சித்தித்திருந்தபோதிலும் லோகோபகார நிமித்தமானாலும் சத்கருமங்கள் செய்விக்கிறதற்கு நீ யோக்யனானதால் அப்போதும் செய்தேதீரவேண்டும்.

சுவாமி! அப்பியாசதிசையில் செய்யவேண்டியது விகிதமே; ஆரூடதிசையிலும் அவர்கள்செய்கிற கன்மங்களினால் லோகத்துக்கெப்படியுபகாரமாம்? அருச்சுனா! ஆரூடதிசையையடைந்த சிரேஷ்டமான புருடாள் எந்தக்கருமங்களை யநுட்டிக்கிறார்களோ அவைகளையே அஞ்ஞானிகளும் அநுசரிப்பார்கள். பெரியோர்கள் எந்தச் சாஸ்திரங்களைப் பிரமாணமாக எண்ணுவார்களோ அவைகளையே யவர்களு மெண்ணுவார்கள். ஆதலால் அவசியஞ் சத்கருமங்களை யநுஷ்டித்தே வருவார்கள். (௨௧)

சுவாமி! இன்னம் ஞானம் சித்தித்தபின்னும் யாராவது லோகோபகாரநிமித்தஞ் சத்கரும மநுஷ்டிக்கிறதுண்டா? அருச்சுனா! திரிலோகத்திலும் எனக்குச் செய்யவேண்டுவதும் பின்னுக் கடையவேண்டுவதும் முன்னடையாததும் ஒன்றுமில்லை; அப்படியிருந்தும் சத்கருமங்களில் வெகு பிரியத்தோடுங் கூடினவனாகவிருந்துகொண்டு செய்துவருகிறேனே அப்படியிருக்க அப்பியாசியாயிருக்கிற நீ யெப்படிக் கருமங்கள் செய்யாமலிருக்கலாம். ஆனால் நீங்களெந்தக்கருமங்கள் செய்தீர்களென்று கேட்கிறாயோ சொல்லுகிறோம்கேள். முதலாவது சாத்திரியமாக விவாகாதி முதலானவையும் செய்துகொண்டிருக்கிறோம்; சாந்திபரிஷியாகிய குருவிடத்திற்போய் உபதேசமும் பெற்றுக்கொண்டிருக்கிறோம்; இன்னம் அந்தக் குருவுக்கும் அவருக்குச் சமானமாகிய குசலவர் முதலான மகான்களுக்கும் சிசுருஷை முதலானவையும் செய்துகொண்டும் இன்னம் அப்படிப்பட்டவர்களுடைய பாதரேணுக்காகப் பின்றொடர்ந்து திரிந்துகொண்டுமிருக்கிறோம். இன்னமும் வேதாந்தமான சத்கருமங்களை நான் செய்துவருகிறது உனக்கும் பிரத்தியட்சமாய்த் தெரிந்திருந்தும் தெரியாதவன்போற் கேட்டாய். (௨௨)

சுவாமி! லோகோபகாரமாக நீங்கள் செய்யாவிட்டால் அதனாலென்னவாதகம்? அருச்சுனா! நாம் பண்ணாவிட்டால் லோகமெல்லாங் கெட்டுப்போம்; எப்படியென்றால், நான் கன்மங்கள் செய்யாவிட்டால் எல்லாரும் என்னுடைய மார்க்கத்தையே யநுசரிப்பார்கள். (௨௩)

அப்படி அநுசரித்தாலென்னவென்றால் நாம் கன்மங்கள் பண்ணாததைக்குறித்து மற்றப்பேர்களும் செய்யாமற்போகவே வருணங்களெல்லா மயக்கித் தலைகாலாய்க் கெட்டுப் பாவங்களையடைந்து நாசத்தையடைவார்கள். இப்படிக் கெடுத்ததற்கு நாமே கர்த்தாவாய் விடுவோம், ஆகையாற் பிரமஞானியாயிருந்தாலும் பிராணிகளிடத்தில் தயவினாற் கன்மங்கள்செய்தே வரவேண்டும். (௨௪)

அதனால் அருச்சுனா! அவாளெப்படிச்செய்யவேண்டுமெனில் அஞ்ஞானிகள் பலாபேட்சையோடுங்கூடிப் பிரியத்துடன் பண்ணுவதுபோல ஞானிகள் நிராசையோடுங்கூடி லோகோபகாரார்த்தமாய்க் கன்மங்கள் பண்ணவேண்டுவது. (௨௫)

சுவாமி! இந்தச் சீவாளை ரட்சிக்கவேண்டுமென்றெண்ணியிருக்கப்பட்ட மகான்கள் அவர்களுக்குத் தத்துவ உபதேசத்தையே பண்ணலாகாதா? அருச்சுனா! பலன்களை யபேக்ஷித்துச் செய்யப்பட்ட அஞ்ஞானிகளை ஞானிகள் நிஷ்காமமாய்க் கன்மங்கள் செய்யுங்களென்று கூடச் சொல்லி அவர்களுடைய புத்திக்குப் பேதத்தையுண்டுபண்ணக்கூடாது அப்படியிருக்க இவர்களுக்கும் காமியமாய்க் கூடப் புண்ணிய கன்மங்கள் செய்யாதவர்களுக்கும் தத்துவ உபதேசத்தை யெப்படிச் செய்வார்கள். ஆகையால், ஞானிகள் தங்களுடைய வருணாச்சிரமத்துக்குத் தகுந்த கன்மங்களைச்செய்தும் மற்றவர்களையுங் கன்மங்கள் செய்யச்சொல்ல வேண்டுமேதவிர ஒருபோதுந் தத்துவ உபதேசம் பண்ணலாகாது; பண்ணினாலோ அவர்களை நரகத்தில் தள்ளினதாகும். (௨௬)



சுவாமி! கன்மங்கள் செய்கிறபட்சத்தில் ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பேதமென்ன? விஜயா! மூலப்பிரகிருதி சம்பந்தமான திரிவித குணங்களினாலுண்டான தேகேந்திரியாதிகளை நானென்கிற அகங்காரத்துடன் கூடியிருக்கிற அஞ்ஞானியானவன் மாயையினாலே மறையப்பட்டு மாயாகாரியமாயிருக்கிற தேகேந்திரியாதிகளினாலே பண்ணப்படுகிற கருமங்களெல்லாம் நான் பண்ணுகிறேனென்றெண்ணுவான், இதனாற் பந்தமேகொடுக்கும். (௨௭)

அருச்சுனா! ஞானியானவன் தேகேந்திரியாதிகளும் நாமல்ல, கன்மங்களும் நமக்கல்லவென்றுந், தன்னுடைய நிசரூபத்தையறிந்து மூலப்பிரகிருதி சம்பந்தமான தேகேந்திரியாதிகளினாலே பண்ணப்படுகிற கன்மம் திரிவிதகாரணங்களாலேயே பண்ணப்படுகிறதென்றும், தானொரு கன்மமும் பண்ணுகிறவனல்லவென்றும் நிட்சயஞ் செய்திருப்பன்; இதனாலே மோட்சமேயடைவன் (௨௮)

அருச்சுனா! மாயையின் குணத்தினாலே மூடாளாயொன்றும் அறியாத மந்தபுத்தியுடையவர்களாயிருக்கிறபேர்கள் தங்களுக்குத் தோன்றினபடி கருமங்களைப் பண்ணுவார்கள். எல்லாமறிந்த ஞானிகள் அவர்களுடைய புத்தியைக் கெடுக்கலாகாது, இப்படி ஞானிகள் முதலாய்க் கன்மங்கள் பண்ணவேண்டுவதாயிருக்க நீ யிப்போது ஞானியல்லவே ஆகையாற் கன்மத்தையே பண்ணு. (௨௯)

தேவரீர் எப்படியும் செய்தே தீரவேண்டுமென்று உறுதியாயநுக்கிரகஞ்செய்வதால் நானெவ்விதமாய்க் கன்மஞ்செய்கிறது? அருச்சுனா! பகவாதீனமாயிருக்கிற கன்மத்தைப் பண்ணுகிறோமென்றெண்ணி யிந்திரிய நிக்கிரகத்துடனேயிருந்துகொண்டு சகல கன்மங்களையும நம்மிடத்திலேயே சமர்ப்பித்துப் பலன்வேண்டுமென்கிற இச்சையுமின்றி நான் செய்கிறேனென்கிற அபிமானமுமின்றி யிந்தக்கன்மங்கள் செய்யவேண்டுமேயென்கிற துக்கத்தையும் ஆந்தரத்தில் நிசேஷமாய்விட்டு யுத்தத்தைப்பண்ணு. (௩௦)

சுவாமி! இப்படிச்செய்தா லென்னபல னுண்டாகும்? அருச்சுனா! யாதொருவர் துக்கரூபமாயிருக்கிற கன்மத்தைப் பண்ணச் சொல்லுகிறேனென் றெண்ணாமல் சிரத்தாவந்தராய் நம்மிடத்தில் அசூயையின்றி யென்றாற்சொல்லப்பட்ட விதமாயே யெப்போதும் அநுஷ்டிக்கிறார்களோ அவர்களுக்குச் சித்தசுத்தித்துவாரா ஞானம் வந்து கன்மபந்தங்களிலேநின்றும் விடுபட்டு மோட்சத்தையே யடைவார்கள். (௩௧)

சுவாமி! இவ்விதமாய் நடவாமற் போனதனா லென்னதோஷ முண்டாகும்? அருச்சுனா! நம்முடைய மதப்பிரகாரம் நம்மிடத்தில் அசூயையினாலே யார்செய்யாமலிருக்கிறார்களோ அவர்கள் பிரமஞானமும், கருமஞானமுமன்றியில் நல்லகதியடைவதற்குச் சாதகமான யாதொரு ஞானமுமின்றி விவேகமுங்கெட்டு நாசத்தையே யடைவர். (௩௨)

சுவாமி! அவாளவாள் சுதன்மத்தினாலேயே சுலுவாய் மோட்சமடையும்படியான போதவிருக்க, இந்திரிய நிக்கிரகஞ் செய்துகொண்டு பலத்தினு மாசையின்றி யெல்லாரும் ஏன் சுதன்மஞ்செய்யவில்லை? அருச்சுனா! தேகத்தினுடைய குணதோஷ முதலானவை விசாரித்தறிய வேண்டியதை யறிந்திருக்கப்பட்ட மகான்கள் முதலாய்அவரவர்கள் முன்செய்திருக்கிற கன்மாநுசாரியாக ஒவ்வொருவரோவ்வொருவிதமான சுருமங்களைச் செய்யும்படியா யிருக்கும்போது அஞ்ஞானிகள் முன்செய்த கன்மாநுசாரியாகத் துர்ப்புத்தியை யுடையவர்களாய் நடக்கும்படிச் சம்பவித்து அவாள் நடக்கும்போது அவாளாலே யிந்திரிய நிக்கிரக மெப்படிச்செய்யப்படும். அவர்களுக் கிதுசெய்யவேண்டுமென்றும் இதுசெய்யாதேயென்றுஞ் சொல்வது கூட விருதாவாகமுடியும். (௩௩)

சுவாமி! பூர்வஞ்செய்த கன்மாநுசாரமாக நடக்கவேண்டுவதுமெயமாயிருக்கும்போது யார்தா னெப்படி யிந்திரிய நிக்கிரகஞ் செய்யக்கூடும். அதனால்ராகத்துவேஷங்க ளுண்டாய்த் தப்பாமற் பந்தமானது சம்பவிக்குந்தான். இப்படியிருக்கச் சிவாள்பேரில் எவ்விதமாய்க் குற்றங்கள்சொல்லுகிறது? அருச்சுனா! இந்திரியங்கள் விஷயங்களைக் கிரகிக்கிறபோது நல்லதானால்ராகமும், பொல்லாததானாற் றுவேஷமு முண்டாகும், இது முமுட்சுவுக்குச் சத்துருவானதால் அவைகளின் வசத்தை யடையலாகாதென்று சாஸ்திரத்தினாலும் பெரியவாளாலே யுஞ் சொல்லப்படுகிறது. பூர்வகன்மத்தால் ஆற்றிலே விழுந்த புருஷனைக் கரையேறவொட்டாமல் ஆழ்த்துவது போலப் பிரவிர்த்தி சாஸ்



திரங்களும் அவனவன் முன்செய்த பாபகன்மங்களுஞ் சத்கருமங்களைச்செய்து பகவானை யுபாசிக்கும்படிச் செய்யாமல் விஷயங்களை நினைக்கும்படிச்செய்வித்து அதனால்ராகத் துவேஷங்களை யுண்டாக்கிப் பந்தங்களைக் கொடுக்கும்படிச் செய்விக்கும். பூர்வசென்மங்களில் நல்ல புண்ணியகன்மங்கள்செய்து பகவானை யுபாசித்திருந்தால் நிவிர்த்தி சாஸ்திரங்களானவை இராகத்துவேஷங்களின்றிப் பகவானை யுபாசித்து மோட்சமடையச் சொல்லியிருக்கிறதையே நம்பியுபாசித்து மோட்சமடையவேண்டுமென்னும் இச்சையுடையவனை யிந்திரிய நிக்ரகஞ்செய்யாமற்போகும்படிப் பூர்வ கன்மமானது ஒருபோது மிழுக்காது. அவன் அப்படியே நடந்து மோட்சமேயடைவன். ஓடமேறினவனை ஆழ்த்தாமற் கரையேறிச் சுகமாய்ப்போவது போல நீயே அனந்த சென்மங்களில் நல்ல புண்ணியகன்மஞ் செய்தவனாயிருப்பதாலும் அதற்கு குசுவாக விஷயங்களில் ஆசத்தியில்லாமல் மோட்சத்தி லிச்சை யிருப்பதினாலேயும் அதை நிறைவேற்றும்பொருட்டுப் பரிபூரண பரப்பிரம சொரூபமாகிய நானே யுனக்குச் சாரதியாக வந்திருப்பதுமன்றி ஞானோபதேசமுஞ் செய்துவருகிறதனாலேயும், உன்னைப்போலொத்தவர்களுக்கு இந்திரிய நிக்கிரகம் சுகசுமாயாகாலம், ஆகையா லிராகத்துவேஷமின்றிச் சுதன்மமாயிருக்கிற யுத்தத்தைச்செய்து பகவானுக் கற்பணஞ் செய்வாயாகில் இந்தச் சென்மத்திலேயே மோட்சத்தையடைவாய்; இதைத்தவிர வேறே மார்க்கமில்லை. (௩௪)

சுவாமி! கன்மங்கள்செய்வதே மோட்சத்துக்குச் சாதகமானால் இந்த யுத்தத்தைத்தவிர வேறே சிரேஷ்டமான கன்மங்கள் செய்யக்கூடாதா? தனஞ்சயா! பிறருடைய தன்மங்கள் சிரேஷ்டமாயும் நல்லதாயு மிருக்கிறதென்று அவைகளைச் செவ்வையாகச் செய்வதிலும் குணமில்லாததாயிருக்கிற சுதன்மமே சிரேஷ்டம். இது சம்பந்தகாரத்தை யுடையதாதலால் இராகத் துவேஷங்களின்றிச் சாவதானமாயிருந்துகொண்டு சுதன்மங்களையே நடப்பிவை, யிதே சிரேஷ்டம். சுதன்மத்திலே மரணமடைந்தாற் பரலோகமுங் கிடைக்கும்; பிறருடைய தன்மங்கள்செய்தால் இகலோகத்திலும் பரலோகத்திலும் பயமுந்துக்கமும் குறைவும் உண்டாகும். அவாளவாள் தன்மங்களிற்சிலது குறையாயிருந்தாலும் இருக்கலாமேதவிர பிறருடைய தன்மங்களைக் கோரக்கூடாது. (௩௫)

சுவாமி! புருடனைவ னிராகத்துவேஷங்களை யடைந்து பாவஞ்செய்யக்கூடாதென்றும், புண்ணியமே செய்யவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தாலும் அந்தவழியே நடக்க வொட்டாமற்

பலாத்காரமாக ஒருவனு லேவப்பட்டுச் சனனமரணங்களுக் கேது வான பாபகன்மங்களைச் செய்யும்படியாகச் செய்விக்கப்பட்டவனூர்?

அருச்சுனு! புருஷனுனவனைப் பாபகன்மங்கள் செய்யும்படியாகச்செய்துவைக்கிறவன் யாரென்றால், இராசதகுணத்தினுலுண்டான காமனென்னப்பட்டவனுலே செய்விக்கப்படுகிறது; இன்னமும் அந்தக்காமனுனவ னிச்சித்த பதார்த்தம் லபிக்காவிட்டாற் குரோதரூபமாயும் பரிணமிப்பன்; எத்தனை போகங்கள் வந்தாலும் அநுபவித்தாலும் போதாது; அவனுடைய வசமானவா ளெல்லாரையும் பாபங்களையே பண்ணச் சொல்லுவான்; மகா பாபிஷ்டன் மோட்சமார்க்கத்துக்கு முக்கியமான சத்துரு இவனென்று நீயறி. (௩௭)

சுவாமி! மோட்ச மார்க்கத்துக்கு அக்காம னெப்படிச் சத்துருவாவன்? அருச்சுனு! தூமத்தினுல் அக்கினி மறைபட்டாற்போலவும், அழுக்கினுற் கண்ணுடி மறைபட்டாற்போலவும், தோற்பையினுற் பிண்டம் மறைபட்டாற்போலவும் யதார்த்தமாயிருக்கிற ஞானத்தை யிச்சையாகிய காமனென்பவன் மறையப்பண்ணிப் புருஷனை நல்ல மார்க்கத்தில் நடக்கவேண்டு மென்கிற எண்ணங்கூட எண்ணவொட்டாமலுந் தன்னுடைய யதார்த்த சொரூபத்தைத் தெரியவொட்டாமலே நாசத்தையடையும்படியாகச் செய்விப்பன். (௩௮)

அருச்சுனு! பின்னும் ஞானத்துக்குச் சத்துருவாகியும், ஒருவராலேயும் அறியாதவனுயும் விஷயங்களைக் கோருகிறதில் திருப்தியடையாதவனுயும் அக்கினியைப்போலத் துக்கத்தை யுண்டாக்குகிறவனுயும் ஞானிக்குச் சத்துருவாயுமிருக்கப்பட்ட காமனுலே யதார்த்தமாயிருக்கப்பட்ட ஞானம் சுத்தமாக மூடப்பட்டிருக்கும். (௩௯)

சுவாமி! இப்படிப்பட்ட காமனிருக்கிற இடத்தை யநுக்கிரகஞ் செய்யவேண்டும்? அருச்சுனு! காமனுக்கு இந்திரியங்கள், மனது, புத்தியேயிருப்பிடம் ஆகையால், இந்திரியங்கள் மனது புத்திகளினுலேயே யதார்த்தமான ஞானத்தை மறைவுசெய்து தானிந்தக்காலத்திற் பிறந்தவனென்றும், இந்தக் காலத்தில் மரணமடையப்பட்டவனென்றும், தானின்னுனுடைய பிள்ளையென்றும், இன்னவிதமான குலவந்தனென்றும் பலவிதமான பிரமைகளையுண்டாக்கித் தேகியாயிருப்பவனை மோகிக்கச்செய்துகொண்டிருப்பன். (௪௦)

சுவாமி! மோட்சமார்க்கத்துக்குக் காமன் சத்துருவாகையால் அவனைச் செயிக்கிறதற்கு உபாயத்தை யநுக்ரகம்பண்ணவேண்டும்? அருச்சுனு! காமனுனவன் உன்னை வசப்படுத்திக்கொள்ளுகிறதற்கு முன்னமே ஆசிரியருடைய கிருபைபெற்று ராகாதிகளைவிட்டுப் பத்தி



சிரத்தையுடனே விகிதமான புண்ணியகர்மங்களில் இந்திரியங்களை நியமித்துவிட்டாற் புத்தி முதலான சகல இந்திரியங்களும் நிர்மலங்களாய் செய்தனவாய்விடும்; அப்போது சாஸ்திரங்களாலும் ஆசிரியராலுஞ் சொல்லப்பட்டிருக்கிற அர்த்தங்களைத்தெரிந்து நிச்சயித்திருக்கிற பரோட்சஞானத்தையும் அந்தப்படி யநுபவமாகிய அபரோட்ச ஞானத்தையும் நாசமடையும்படிப் பண்ணுந்தன்மையுள்ள அந்தக் காமனைச் செயிக்கலாமே தவிரவேறுமார்க்கமில்லை. (௪௧)

சுவாமி! புத்திமுதலான இந்திரியங்களையும் சன்மார்க்கங்களில் வைக்கும்படிச் செய்வதனாலே யிந்திரியநிக்ரகமுண்டாகி அதனாற் காமனைச் செயிக்கலாமென் றநுக்கிரகஞ்செய்தீர்கள்; அந்தப் புத்தி முதலானவைகளைக் காட்டிலுந் தனியே யொருவனிருந்தல்லோ அப்படிச்செய்யவேண்டும், அதனால் அவனை யெனக்குத் தெரியும்படி யநுக்கிரகஞ்செய்யவேண்டும்? அருச்சுனு! தூலபூதமான தேகங்களைக்காட்டிலும் சூட்சுமமான இந்திரியங்கள் அதிகம். அந்த இந்திரியங்களைக்காட்டிலும் மனது சூட்சுமம். சங்கற்பவிகற்பங்களையுண்டாக்குகிற மனதைக்காட்டிலும் நிச்சயிக்கிற புத்தி சூட்சுமமும் சிரேஷ்டமுமாகும்; அந்தப்புத்திக்குச்சிரேஷ்டமாயும் சாட்சியாயுமிருக்கிறவரே தேகியென்கிற ஆன்மா; அவர்தானனது நிசரூபம்; அவரையே தொம்பதலட்சியார்த்தமான கூடஸ்தரென்றும், பிரத்தியே கான்மாவென்றும். அவரே தற்பதலட்சியார்த்தமான பரமாத்மாவென்றுஞ் சொல்லப்படும். அருச்சுனு! இந்த நிச்சயத்தினாலே சஞ்சிதமும் ஆகாமியமும் விட்டுப்போனாலும் பிராரத்தமுள்ளவரையில் திரிவித கரணங்களைக்கொண்டு புண்ணிய கருமங்களையேசெய்து வருவாயாகில் காமனைச் செயித்தவனுவாய். (௪௨)

அருச்சுனு! சகல கன்மங்களும் புத்திக்கேயென்றும் ஆத்மா நிர்விகாரி புத்திக்குச் சாட்சியென்றறிந்து இப்படி விசாரித்த புத்தியால் மனதை நிக்ரகஞ்செய்து ஒருவராலும் செயிக்கக்கூடாத இச்சாரூபமான சத்துருவாயிருக்கிற காமனைச் செயம்பண்ணிப் போட்டு ஆநந்தமாயிருக்கக்கடவாய். (௪௩)

யாதொருபகவானைச் சுதன்மத்தினாலே பூசித்த பெரியோர்கள் மோட்சத்தை யடைவார்களென்று பரமாநந்த ரூபமாயிருக்கிற கிருஷ்ண மூர்த்தியாற் சொல்லப்பட்டதோ அவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். (௪௪)

மூன்றுவது

கர்மபிரமயோக அத்தியாயம் முற்றிற்று.

ஆ. அத்தியாயம் மூன்றுக்குச் சுலோகம் - ௪௩.
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திசகாயம்.

உ
ஸ்ரீ பாண்டுரங்காயநம:

நான்காவது

# ஞானயோக அத்தியாயம்.

அவதாரிகை. முன்சொன்ன இரண்டாவது மூன்றாவது அத்தியாயங்களினாலும் தற்பதலட்சியார்த்தமான பரமாத்மாவே தொம்பதலட்சியார்த்தமான கூடஸ்தரென்றுசொன்ன அர்த்தத்தில் அநாத்மதன்மமாகிய தேகாதி கிரியைப் பிரபஞ்சமிஞ்சியிருப்பதாகச் சமுசயந்தோற்றுகையால், அதுவும் தன்னைத்தவிரக் கிடையாதென்பதைப் போதிக்கிற நிமித்தமாகவும், முன்சொன்ன அர்த்தம் பெலப்படும்படியாகவும் இந்த யோகமானதைக்கேட்ட முன்னோர்கள் அவரவரெந்தெந்த ஆச்சிரமத்திலிருந்தார்களோ அந்தந்த விதங்களாகவேயிருந்து வருகிறார்களென்கிற விபரந்தெரியவேண்டியும் இந்த ஞானயோகத்தை அநுக்கிரகஞ்செய்கிறார்.

அருச்சுனா! சாசுவதமாயும் அவ்வியக்தமாயுமுள்ள மோட்சபாக்கிய பலத்தைக் கொடுக்கத்தக்கதாயுமிருக்கிற இந்த ஞானயோகத்தைப் பூர்வத்தில் ஆதித்தனுக்கு நான் உபதேசம் பண்ணினேன்; அந்த ஆதித்தனவர் தன் புத்திரனான வைவசுதமனுவுக்குச்சொன்னார், அந்த மனு இட்சுவாகு மகாராஜாவுக்குபதேசம் பண்ணினார். (௧)

அருச்சுனா! இப்படிப் பாரம்பரையாயடைந்துவந்த இந்த ஞானயோகத்தை ரிஷிகளும் ராசரிஷிகளும் ராஜாக்களும் தங்கள் பிதாக்கள் உபதேசிக்க அறிந்துடைந்தார்கள். அந்தக்காலம் இப்போதைக்கு வெகு காலமாகிப்போனபடியினாலேயும், இந்த லோகத்திலுள்ள சீவாள் காமனுக்கு வசமாய்ப் போய்விட்டதனாலேயும், அந்த யோகமானது பிரபலமில்லாமல் நஷ்டமடைந்திருக்கிறது. அது இனி யுன்னாலே பிரகாசிக்கவேண்டுமென்று நினைத்து முன் னிரண்டத்தியாயத்திலுஞ் சொன்னேன். அதையே யின்னமுந் திடப்படும்படியாக உனக்குச் சொல்லுகிறேன் கேள். (௨)

அருச்சுனா! உனக்குமாத்திரஞ் சொல்வானேனென்றால், இப்போது நீ நம்முடைய பக்தனாயிருப்பதுமன்றித் தோழனாயிருக்கிற



படியினாலும், விஷயங்களில் ஆசக்தியில்லாதவனாயிருப்பதனாலும், சீவாளிடத்திற் கருணையும் மோட்சத்திலிச்சையுமுடையவனாயிருப்பதனாலேயும், புராதனமாயும் உத்தமமாயும் அத்தியந்த ரகசியமாயுமிருக்கப்பட்ட அந்த யோகத்தை யின்னமுனக் கநுக்கிரகம் பண்ணுகிறேனென்பதற்கு. (௩)

சுவாமி! வசுதேவருக்கு இப்போது சொற்பகாலத்துக்கு முன் பிறந்த தேவரீர் பூர்வீகமாயிருக்கிற ஆதித்தனுக் கெவ்விதமாக உபதேசித்தீர்கள்? இதைப்பார்த்தா லொன்றுக்கொன்று பரஸ்பரம் விரோதமாயிருக்கிறதே? (௪)

அருச்சுனா! நமக்கு முனக்கும் அனேக சென்மங்கள் நடந்திருக்கிறது. நமக்கு மாயை சுவாதீனமானதினாலேயுஞ் சர்வஞ்ஞனானதினாலேயும் அந்தச் சென்மங்களும் அப்போது நடந்த காரியங்களும் நமக்குத்தெரியும்; நீயோ அவித்தைக்கு வசமாகி வியஷ்டியாகிய ஒரு தேகத்தி லபிமானம்வைத்துக் கிரியைகளி லாசையுடைத்தான சீவனாய்ப்போய்விட்டதால் ஒன்றுமறியமாட்டாய் (௫)

சுவாமி! புண்ணிய பாவ சனன மரணமாகிய விகாரங்களின்றி யெப்போதும் அவ்வியக்தமாயிருக்கிறவரென்று முன் அநுக்கிரகஞ்செய்தீர்கள்; அதைநானும் நம்பியிருக்க இப்போது சீவனைப்போலச் சனனாதி பெயருமுண்டாயிற்று? அருச்சுனா! லோகங்களுக்கெல்லாம் பகவானாயிருக்கிற நாமேபிறந்தோமென்றும் வளர்ந்தோமென்றும் பரமபதமடைந்தோமென்றும் இன்னம் பலவிசமானசெய்கைகள் செய்வித்தோமென்று மகா வித்வாமிசாளுடைய விருதயத்திற்கூட இந்தச் சமுசயமிருப்பதால் அது வெளியாகும்பொருட்டுப் பார்த்தா! நீ நல்ல சங்கைசெய்தாயென்று பகவானவர் ஆந்தரத்தில் மிகவுஞ் சந்தோஷத்தையுடையவராய் நீ சொன்னபடி புண்ணிய பாவ சனன மரணாதிகளின்றி யெப்போதும் அவ்வியக்தமாயிருப்பது சரிதான்; அதில் எவ்வளவுஞ் சந்தேகப்பட வேண்டுவதில்லை; ஆனாலவதாரஞ் செய்ததுபோலத்தோற்றுகிறதேயென்றால் சுத்த சத்துவரூபியாகிய நம்முடைய சுத்தசங்கற்பமென்னப்பட்ட மகாமாயையை யிடைவிடாத ஞானசத்தியானது நாமவதாரஞ்செய்ததுபோலவும் இடைவிடாதஞானம், வயிராக்யம், எபசு, அஷ்ட ஐஸ்வரியம், பலமென்னப்பட்ட வீரியம், லட்சுமிகரம் இந்த ஆறுகுணங்களுடன் கூடியுண்டாயிருப்பது போலவுஞ்செய்வித்திருக்கிறதே தவிர நா மெதார்த்தமாய்ப் பிறக்கவேயில்லை; இப்படியிருந்தால் மகா மகாவித்வாம்சான் முதலானவாளும் நா மவதாரஞ்செய்ததுபோ லநுமானமின்றிக்

கொண்டாடுகிறார்களே யென்றால் அவித்தைக்கு வசமாகிச் சனன மரணத்துக் குடன்பட்டிருக்கிற சீவாளரோ அவர்களுக்கு மாத்திரம் நாமவதாரஞ் செய்திருக்கிறோமென்றுஞ் சகலவினைதகளும் நடப்பிவைக்கிறோமென்றும் நிசம்போலத் தோற்றிப பலவித்ரா யவாளவாளுடைய சித்தத்துக்குத் தோற்றினபிரகாரம் வசனித்துக்கொண்டிருப்பார்கள். ஆனாற் சாஸ்திர புராணாதிகளிலும் சொல்லப்பட்டிருக்கிறபோது இவ்விதமாய்ச் சொல்லலாமாவென்றால், அருச்சுனா! அதுவு மிந்தச் சீவாளைப்பற்றி யிவ்விதமாயாவது கடைத்தேறட்டுமென்று சொன்னதேதவிர யதார்த்தமல்ல. இவைகளினுடைய யதார்த்தம் நம்முடைய மாயையைக்கடந்து நம்மை யறிந்திருக்கப்பட்ட மகான்களுக்குமட்டுந் தெரியுமேயல்லாமல் மற்றவர்களுக்குத் தெரியத் தக்கதல்ல. (௬)

சுவாமி! சீவாளுக்குத் தோற்றும்படியா யாவது எப்போதெப்போ தவதரிப்பீர்கள்? அருச்சுனா! தன்மங்களுக்கானியும் அதன்மங்களுக்கு விருத்தியு மெப்போதுண்டாகுதோ அந்தந்த யுகந்தோறு மவதரிப்பேன். (௭)

சுவாமி! தன்மத்துக்கானியும் அதன்மத்துக்கு விருத்தியு முண்டானால் தேவரீருக்கென்ன? அருச்சுனா! சகல சீவாளும் நம்முடைய அம்சமானபடியினாலே அவாள் நம்மை யடையும்பொருட்டுண்டாக்கி வைத்த வேதவாக்கியங்களின்படி சரியாய் நடவாமல் அதன்வழியில் நடக்கப்பட்டபேர்களைச் சங்கரிக்கவும் நம்மை யதார்த்தமாயறிந்து ஆந்தரத்தில் அவிபசாரமாகிய பக்தியும், பாக்கியத்தில் திரிவிதகரணங்களைக்கொண்டு நிட்காம கன்மங்களுஞ் செய்துவரப்பட்ட சாதுக்களை ரட்சிக்கிறதற்குமாக யுகந்தோறு மவதரிப்போம். (௮)

தேவரீருக்கே யொருவரை ரட்சிக்கிறதுந் தெண்டிக்கிறதுமாக இருக்கும்போது தேவரீர் ரட்சிக்கிறதற்குச் சமானமுள்ள சாதுக்களாகியும் அடியேனுக்குக் குருவாயுமிருக்கப்பட்டவர்களுடன் நான் யுத்தஞ்செய்வது தன்மமல்லவென்றால், அது சரியானதல்லவென்றுஞ்சொல்லுகிறீர்கள். தேவரீருக் கெப்போதுஞ் சனனமேயில்லையென்றுந்தேவரீரைத்தவிர அன்னியமே கிடையாதென்றுஞ் சொல்லியிருக்க, இப்போது சிலர் சற்சனாயுஞ் சிலர் துற்சனாயுமிருக்கிறது போலவும் அவாள் நிமித்த மவதாரஞ்செய்கிறதாயுஞ் சொல்லுகிறீர்கள். இந்தப்பட்சத்திற் பற்றுதலுக் கேதுவுண்டாகுமே? அருச்சுனா! உனக்குக் குருவாயிருக்கப்பட்டவாள் சாதுக்களென்பது நிசமே, அவாளுன்னுடைய சத்துருபட்சத்திற் சேர்ந்து யுத்தத்துக்கு வரும்படியாகச் சம்பவித்திருக்கிறபடியால் அவர்களுடன் நீயுத்தஞ்



செய்வது தன்மமே நாமவதாரஞ் செய்ததாகச் சீவபாவத்தையுடைய நீ யொப்புக் கொள்ளுகிறபட்சத்திலு துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனமான இந்த இரண்டு விதமும் லோகோபகாரமேயல்லாமல் நமக்கு அதனால் யாதொரு பிரயோசனமும் சந்தோஷமும் கிலேசமுங் கிடையாது. இவைகளினாலேயும் நம்மைத்தவிர அந்நியமேயில்லாததனாலும் இந்தச் சகத்தானது கானற்சலத்துக்குச் சமானமாகத் தோற்றுகிறபடியினாலேயும் நமக்குப்பற்றுதலுண்டாக எவ்வளவுங் காரணமேயில்லை, மேலும் திவ்வியமாயிருக்கப்பட்ட நம்முடைய அவதாரமென்ன லோகரட்சணார்த்தமாக நாம செய்யப்பட்ட கன்மங்களென்ன இவைகளனைத்தும் நாம் செய்யவேயில்லையென்றும் நம்முடைய மாயாசத்தியானது சகலமுஞ் செய்வித்திருக்கிறதென்றும் விதிபூர்வமாயும் யதார்த்தமாயும் எவனறிகிறானோ அவன் அந்தச் சனனத்திலேயே தேகாபிமானத்தைவிட்டு நம்முடைய சாயுச்சியபதவியைத் தப்பாமலடையும்படியா யிருக்கும்போது நமக் கெங்கே பற்றுதலடையப்போகிறது. (௯)

தேவரீருடைய நிசரூபத்தை யறிந்தா லெப்படியடைவன்? அருச்சுனா! இராகம், குரோதம், பயமின்றி நம்மைத்தவிர வேறே யாதொன்றுங் கிடையாதென்றும், நமமிடத்திலிடைவிடாமல் மனதுவைத்துத் திரிவித கரணங்களினாற் புண்ணிய கன்மங்களையே செய்துவந்த ரிஷியீசுரான் முதலான பெரியோர்கள் நம்முடைய அநுக்கிரகத்தினால் ஆத்ம ஞானமுண்டாய் நம்முடையசாயுச்சிய பதத்தையே யடைந்திருக்கிறார்கள். (௧௰)

தேவரீரை யுபாசித்தால் மோட்சமும், அப்படிக்கில்லாதவர்களுக்குக்கிடையாதென்றாற் பட்சபாதமுண்டாகாதா? அருச்சுனா! புருஷனானவன் மோட்சபலத்தை யாசித்து நம்மை யுபாசித்தால் அவனுக்கந்தப்பலமும், இந்திராதிதேவதைகளை யுத்தேசித் தந்தப் பலன்களை யடையவேண்டுமென் றிச்சித்தால் அந்தத் தேவதைகளுக்குள்ளும் நாமே யந்தரியாமி ரூபமா யிருந்துகொண்டு அந்தப் பலன்களையுங் கொடுத்து வருகிறோம். இதனா லெப்படிப் பட்சபாதமாகும். அருச்சுனா! எவாளெவாளுடைய கோரிக்கைக ளெப்படியோ அப்படியப்படிப் பலன்களையு மடைகிறார்களேதவிரக் கற்பக விருட்சம்போலிருக்கிற நமக்கு ஒருவரிடத்திற் பட்சமும், ஒருவரிடத்திற் றுவேஷமுமுண்டாகக் காரணமேயில்லை: அப்படியிருக்க, நம்மிடத்திற் பட்சபாத முண்டாயிருப்பதுபோல நீ சொல்லப்பட்டது வீணானவார்த்தையே யல்லாமல் எவ்வளவும் சரியானதல்ல, (௧௧)

சுவாமி! மோட்ச பலத்தைக் குறித்தே எல்லோரும் ஏனுபா

சிக்கவில்லை? அருச்சுனா! இந்த மனிதலோகத்திலிருக்கப்பட்ட சீவாள் தங்களுக்கிருக்கிற இச்சைகளினாலே மோட்சத்திலென்னசுகமிருக்கிறதென்று இந்திராதி தேவதைகளைக் குறித்துக் காமிய கன்மங்களைச் செய்தால் சுவர்க்காதிபலன்களைச் சீக்கிரத்தி லநுபவிக்கலாமென்று நினைத்துக் காமியகன்மங்களையே செய்துகொண்டு உடனுக்குடன் அந்தப் பலன்களை யநுபவித்துச் சனன மரணத்தையும் அடைந்துவருகிறார்கள். அதற்கு நாமென்னசெய்யலாம். (கஉ)

சுவாமி! இப்படி யுபாசிக்கச்சொல்லுகிறதுந் தேவரீர் தானே? அருச்சுனா! பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரா ளென்னப்பட்ட நான் குவர்ணமும், அவாளுடைய வர்ணங்களுக்குத்தகுந்த குணங்களும், அவாள் கடைத்தேறும்பொருட்டுக் கன்மங்களும், அவைகள்தெரிந்து நடக்கும்படியாக வேதங்கள் முதலானவைகளும் நா முண்டு பண்ணி வைத்தோம்; இவைகளுக் கெல்லாம் நான் கர்த்தாவாக உனக்குத் தோற்றினாலும் நா னொன்றுஞ்செய்யவேயில்லை யென்றும் அகர்த்தாவாகவே யெப்போது மொரேபடித்தாயிருக்கிறோமென்றும் நம்மை நீ யறியவேண்டும் (கங)

சுவாமி! எல்லாவற்றையு முண்டுபண்ணிவைத்த உங்களுக்கு அதனு லேற்றக்குறைவும் கன்மபந்தங்களும் எப்படி ஒட்டாமல் அகர்த்தாவாயிருக்கக்கூடும். சிருட்டி, திதி, சம்மாரம், திரோதானம், அநுக்கிரகம் ஆகிய பஞ்சகிர்த்தியங்களுந் தேவரீராலேயே யுண்டாயிருக்கிறதாக வேதங்களிலு சொல்லியிருக்கிறதே? அருச்சுனா! அப்படிச் சொன்னாலும் நா னொன்றுஞ் செய்யவேயில்லை; எல்லாம் செய்ததாகக்காணப்படுகிறதேயென்றால், சூரியனுடைய சந்நிதானத்தில் லோகமெல்லா மெப்படிச் சேட்டிக்கிறதோ அப்படி நம்முடைய சந்நிதானமகிமையைக்கொண்டு மாயையினாலே யிந்தச் சகமுதலான சகல கிருத்தியங்களு முண்டாய்ச்சேட்டிக்கிறது. இப்படி மாயையினாலுண்டான சமட்டிபூதங்களும் சூரிய சந்திர நட்சத்திரங்களுமே யெல்லாச்சீவாளுக்கும் சவுக்கியமாகவும் சமமாகவு மிடங்கொடுத்துக்கொண்டு சீவாளாலே செய்யப்பட்ட சற்கிருத்தியங்களினாலேயும் துற்கிருத்தியங்களினாலேயும் யாதொருவைசம்மியங்களும் பாவபுண்ணியங்களு மடையாமலிருக்கும்போது அந்தமாயைக்கு மதிட்டானமா யிருக்கிற நம்மை யெவ்விதமாயொட்டும். ஆகையால்; அந்தக்கருமங்களில் எனக்கு யாதோ ரிச்சையுமில்லை, யந்தக் கருமங்களும் நம்மை யெவ்வளவு மொட்டாது. இப்படி நம்மை யாரறிகிறார்களோ அவர்கள்கூடச் செய்யப்பட்ட கருமங்களாற் பந்தமடையாமல் மோட்சமே யடைந்திருக்கிறார்கள். அப்படியிருக்க நமக்கென்



பந்தம்வரப்போகிறது. (கச)

சுவாமி! இப்போது சொன்னபிரகாரம் யார்நடந்திருக்கிறார்கள்? அருச்சுனா! நானெப்படிச் சகல கருமமுஞ்செய்தாலும் செய்யாதவனும், அசங்கனுமிருக்கிறேனே அப்படியே பூர்வத்திலுண்டான சனகாதிமுதலிய மகாத்மாக்களும் கருமங்கள் செய்தே மோட்சமடைந்திருக்கிறார்கள். ஆகையால், பூர்விகமாயிருக்கிற கருமங்களையே நீ செய்யவேண்டுவது. ஆனால், பாமரான் ஒருவரைப்பார்த்தொருவர் செய்கிறதுபோல், அல்லது நமக்குத்தோற்றினபடி செய்கிறது போலச் செய்யாதே; நம்மை யதார்த்தமாய்த்தெரிந்து அநுபவிக்கப்பட்ட மகான்களைத்தேடி யவர்களுக்குவேண்டிய சிசுருஷை முதலானவையுஞ்செய்து பத்திபூர்வமாக அவாளாலே நீ தெரிந்துகொண்டு நீ பண்ணவேண்டுவது. (கரு)

சனார்த்தனா! தேவரீரைத்தவிர அடியேனுக்கு வேறேகதியில்லாததனாலு மிந்தச் சரணத்தையே நம்பியிருக்கிறவனானதாலும் அதன் விபரங்களையெல்லாம் தேவரீரே யநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்றுகேட்ட அருச்சுனனைப்பார்த்து மகா புசாகருமமாவது இது, அகன்மமாவது இது, எந்தக் கருமங்கள் செய்தாற் பந்தத்தைக் கொடுக்கும்; எந்தக்கருமங்கள் செய்தால் மோட்சத்தைக்கொடுக்கும்; இந்த விபரங்களைத்தெரிந்துகொள்ளுகிற விஷயத்தில் மகாமகா வித்வாம்சாள்கூட மோகத்தையுஞ் சமுசயத்தையு மடைந்திருக்கிறார்கள். அப்படியிருப்பதனால் எந்தக்கருமங்கள் செய்தால் அசுபமாகிய சனன மரண சமுசாரத்தினின்றும் விடுபடுவாயோ அந்தக் கருமங்களைச் சொல்லுகிறேன்கேள்- (கசு)

சுவாமி! தேகேந்திரியாதிகளினாலே செய்யப்பட்டவைகள் கன்மமென்றும், செய்யாமலிருப்பது அகன்மமென்றுஞ் சொல்லுகிற அர்த்தத்தில் வித்வாம்சாள்கூட மயங்குவானேன்? அருச்சுனா! அவாளவாளுடைய வருணத்துக்குத் தகுந்த விகிதமான கன்மங்க ளின்னதென்றும், பாபத்தைக்கொடுக்கும்படியான கருமங்களாகிய நிஷேத கருமங்களின்ன தென்றும், பலனைத் தருவதான கருமங்க ளின்னதென்றும், விகிதமான கருமங்க ளநுட்டிக்கும்போது தவிர்தலுண்டான பாபகருமங்களின்னதென்றும், இன்னகருமங்களாகவேயாகாதென்றும், எத்தனை கருமங்கள்செய்தாலும் அவைகள் கருமமேயல்லவென்று மின்னமும் பலவிதமாய்க் காடாய் வளர்ந்திருக்கப்பட்ட கருமங்களுடைய எல்லையை யொருவராலு மறியப்படாது, அறிகிறதானால் நிரம்பவும் அபூருபமாயுஞ் சூட்சுமமாயு மிருக்கும், ஆகையாலெல்லாருஞ் சகசமாயறியத்தகுந்ததல்ல. (கஎ)

அருச்சுனா! இவ்விதமா யிருக்கப்பட்ட கருமங்களி லுனக்கெவ்வளவுடபயோகமா அவ்வளவுமட்டுஞ் சொல்லுகிறேன்; கன்மமென்றும் விகன்மமென்றும், அகன்மமென்றும், நிர்ச்சனகன்மமென்றும் நான்கு விதம். அதிற் சுவர்க்காதிகளைக் குறித்துக் காமியமாகச் செய்யப்பட்ட கன்மங்களெவையோ அவைகளுக்குக் கன்மமென்றுபெயர். அதற்குப் பலம் சுவர்க்கசுகம். அந்தச்சுக மநுபவித்தவுடனே சனன மரணமுமுண்டு. ஆத்மா அசங்கர் தேகேந்திரியாதிகள் மித்தை யிவைகளினாலே கன்மங்களைச்செய்து அவைகளை யீசுவரார்ப்பணஞ் செய்வானேயென்று சில வித்வான்கள் வாக்கினாற் சொல்லிவிட்டு எவ்வளவேனு மவரவர்கள் வருணாச்சிரமத்துக்குத் தக்க புண்ணிய கருமங்கள் செய்யாமலே மனதுடனிந்திரியங்களையுந் தடக்கு வேண்டிய விஷயங்களி லிச்சையுடனே செலுத்திக்கொண்டிருக்கப்பட்ட புருஷாளரோ அவர்கள்தான் சகல பாபகருமங்களும் செய்தவர்களென்று சொல்லப்படும். இதற்கு நிஷேதமான விகன்மமென்றுபெயர். இதற்குப் பலம் நரகமும், சனன மரணங்களும் துக்கமுமே. சகலகருமங்களுந் தேகேந்திரியாதிகளினாலேயே செய்யப்படுகிறதென்றும், ஆத்மாவானவர் அசங்கரென்றும், அவர் யாதொரு கருமங்களுஞ்செய்கிறவருமல்ல செய்வித்தவருமல்லவென்றுங் குருமுகமாக நன்றாய்த் தெரிந்துகொண்டு திரிவித கரணங்களினாலே அவனவன் சாதிவருணத்துக்குத் தகுந்த நிஷேத காமிய கன்மங்களைவிட்டு நித்ய நைமித்ய பிராயச்சித்தமாகிய விகிதமான கன்மங்களைச்செய்து அவைகளின் பலத்துடனீசுவரார்ப்பணஞ் செய்து வரப்பட்ட முமுட்சுவுக்குச் சித்தசுத்தித்துவாரா ஞானம்வந்து மோட்சத்தைக்கொடுக்கிறபடியினாலிந்தக் கன்மங்களை மோட்சரூபமென்று சொல்லப்படும். ஆனதா லிவைகளைக் கன்மங்களென்று ஒருபோதுஞ் சொல்லக்கூடாது. இப்படிப்பட்ட கருமங்க ளெவ்வளவு செய்தாலும் ஒரு கன்மமுஞ் செய்யாதவனென்று இவனுக்கே சொல்லப்படும். இதற்குத்தான் அகன்மமென்றுபெயர். இதற்குப்பலம் துக்கநிவர்த்தியும், ஆநந்தமும் மோட்சமுமே. அருச்சுனா! இந்த மோட்சரூபமான கன்மங்களைக்கொண்டு ஜீவன்முத்தி பதத்தைப்பெற்று ஆரூடரா யிருக்கப்பட்ட மகா புருஷாள் மோட்சரூபமான கன்மங்கள் செய்தாலும் செய்யாவிட்டாலும் அவர்களுக்கு யாதொரு பிரயோசனமும் பாதகமுமில்லை எந்தெந்தவேளையிற் பிராரத்தாநுகுணமாய் வனுவில் வருகிற போகங்கள் விகிதமோ, நிஷேதமோ எதுவந்தாலும் அவைகளி லிச்சையும் துவேஷமுமில்லாமற் சூரியன் சகல ரசங்களையும் கிரகித்தாலும் அவ ரெப்படியொட்டாதிருக்கிறாரோ அப்படிச் சமமாகக்



கண்டநுபவிப்பன். இவனைத்தான் புருஷர்களுக்குள் புத்திமானென்றும் யோகியென்றும் கிருதகிருத்திய னென்றும் பண்டிதனென்றுஞ் சொல்லப்படும். சுவர்க்கம் நரகம் மோட்ச மிவைகளைக்கொடுக்கப்பட்ட திரிவிதமான கன்மங்கள் செய்தாலும் செய்தவனல்ல, இதற்குத்தான் நிர்ச்சனகன்மமென்றுபெயர். இந்த மகா புருஷனைத்தான் மோட்சரூபியென்றுஞ் சொல்லப்படும் இப்படியிருக்கப்பட்ட மகா புருஷனுக்கு விதிநிஷேதமுங் கன்மமுந்தேவை யில்லையென்று சொல்லியிருக்கிற அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளாமல் தேகமே தானென்றுஞ்செகத்துச் சத்தியமென்று மெண்ணிக்கொண்டிருக்கப்பட்ட ஜீவனானவனு மிந்தப்படி நடப்பானேயாகில் சகல பாபங்களுக்குஞ் சகல நரகங்களுக்கும் அவனையே பாத்தியஸ்தனென்று சொல்லப்படும். (௧அ)

சுவாமி! ஆரூடனுக்குமாத்திரம் விதிநிஷேதமுங் கன்மங்களும் ஏன் தேவையில்லை? அருச்சுனா! எவனுக்குச் சகலகன்மங்களுங் காமிய சங்கற்பமில்லாமலிருக்குமோ ஞானாக்கினியினால் விதிநிஷேத கருமங்கள் முதலான சகலத்தையுந் தகிக்கப் பண்ணிப்போட்டு யோகாரூடத்தை யுடைத்தான புருஷனா யெவனிருக்கிறானோ அவனுக்கு, அவனைத்தவிர அன்னியமொன்றுமில்லாததனாலும் அவனுக் கிந்தப்பதார்த்தம் விதியென்றும் இந்தப்பதார்த்தம் நிஷேதமென்றுஞ் சொல்ல இடமில்லாததாலவனைத்தான் விவேகிகளாகிய வித்வாமிசாளாலே பண்டிதனென்று சொல்லப்படும். (௧௯)

இன்னமும் கன்மபலத்தில் ஆசக்தியைவிட்டுச் சொரூபானந்தத்தில் திருப்தனாய் வேறொன்றையும் ஆசிரியாம லெவனிருக்கிறானோ அவன் சகல கருமங்களையும் பண்ணினாலும் பண்ணனேயில்லை. ஒரு பதார்த்தமாவது தனக் கன்னியமாயில்லையென்று நன்றாய்த் தெரிந்ததனால் அதி லாசையில்லாதவனும் நிரபுத்தியுண்டானவனும் சர்வசங்க பரித்தியாகியுமான அந்தப்புருஷன் தேகசம்ரக்ஷணைக்காக அவன் ஜாதிக்குத்தகுந்த விகிதமான கன்மங்களாவது அல்லது அவன் தேக பிராரத்தாநுகுணமாய் வேறே சுபாவத்தையுடைத்தான கன்மங்கள் செய்தாலும் பாபத்தையடையான். (௨௰)

இன்னமும் ஆசாரகிதனும் மனதிந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டு கிரியங்களில் மமதையில்லாதவனுமாயிருக்கப்பட்ட மகா புருஷன் கேவலமாகிய சரீரசம்ரக்ஷணைக்காகச் செய்யப்பட்ட கன்மங்களினால் பாபபலன்களை யடையான். (௨௧)

இன்னமும் கிடைத்ததுகொண்டு சந்தோஷத்தையடைந்து சுகதுக்க சீதோஷ்ணாதிகளைச் சமமாகப் பாவனைசெய்துகொண்

டொருவரிடத்திலும் வயிரமின்றி லாபாலாபங்களை யெதிரிச்சையாய் வரப்பட்ட விஷயங்களையும் சரியாகப்பார்க்கிறவன் தேகசம்பந்தத்துக்கு வேண்டிய கன்மங்கள்செய்தாலும் பந்தத்தையடையான். (௨௨)

சுவாமி! பந்தமடையாததற் கென்னகாரணம்? அருச்சுனா! யாதொருபலன்களிலு மிச்சையைவிட்டு மிராகாதிகளின்றி ஞானத்தினலொருமைப்பட்டிருக்கப்பட்ட மகா புருஷன் பண்ணப்பட்ட கன்மங்களும் அந்தக்கன்மபலனும் சொரூபத்தில் லயமாய்ப் போய்விடுமே தவிரப்பந்தத்தைக் கொடுக்கமாட்டாது. (௨௩)

சொரூபத்தில் லயமாகும்படியான கருமங்கள் எவை? அவைகளெப்படிச் செய்விக்கப்படுமென்று கேட்ட அருச்சுனனுக்கு முன் வாச்சியார்த்தங்களை நிவர்த்திசெய்வித்து லட்சியார்த்தத்தை யுபதேசஞ் செய்திருப்பதால் அந்த வாச்சியார்த்தங்களுந் தன்னைத்தவிர வேறேயில்லையென்று போதிக்கவேண்டுமென்கிறதாகப் பகவானவர் அபிப்பிராயங்கொண்டு அருச்சுனா! தேகமே தானென்றும், செகத்தைச் சத்தியமென்றும் எண்ணியிருக்கப்பட்ட புருஷனுக்கு மோட்சாபேட்சையிருந்தால் நிட்காமகருமங்களால் மோட்சத்தை யடையலாமென்று சொன்னோம். இப்போது அந்தக் கன்மங்களை பிரம சொரூபமென்றும் அவ்விதமாகவே மகாபுருஷாளாலே எக்கியஞ்செய்யப்படுமென்கிற விபரத்தையுஞ் சொல்லுகிறோங்கேள்? எக்கியங்களுக்குத் தகுந்த பதார்த்தங்கள் வைக்கப்பட்ட பாத்திரங்களும் பிரம சொரூபம்; அந்தப் பதார்த்தங்களும் பிரமசொரூபம்; அக்கினியும் பிரமசொரூபம்; எக்கியஞ் செய்யப்பட்டதாலும் பிரமசொரூபம். இப்படியாகச் செய்து வருவார்கள். அப்படிச்செய்யப்பட்ட மகா புருஷாள் பிரம சொரூபமாகவேயிருக்கிறார்களென்பதற்குக் கேட்கவேண்டுமோ, இதற்குத்தான் ஞானயெக்யமென்றும், மகாசிரேஷ்டமென்றுஞ் சொல்லப்படும். (௨௪)

சுவாமி! இந்த எக்யம் எல்லாரும் ஏன்செய்யவில்லை? அருச்சுனா! தன்னைத்தவிர அன்னியமில்லையென்று நித்ய சந்தோஷத்தையுடைய மகாபுருஷாளாலே லோகரட்சணார்த்தமாக இந்த எக்கியம் செய்யப்படுமேதவிர அந்தக்கரண சுத்தியில்லாத மற்றவர்களாற் செய்யக்கூடாது; ஆனால் அவாளெல்லாம் எவ்விதமாய்க் கரையேறுவார்களென்று கேட்பாயாகில் சித்தசுத்திக்காக அவாளவாளுடைய அதிகாரத்துக்குத்தகுந்த எக்யங்கள் வேதத்தில் அநேகவிதமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது; அவைகளிற் சிரேஷ்டமான ஞானஎக்யம் சித்திக்கிறதற்குச் சாதனமாகவும் முக்கியமாகவு மிருக்கிற பன்னிரண்டு எக்யங்களைச் சொல்லுகிறேன் கேள்; தனஞ்சயா, சில கன்மயோகிகள்



தேவேந்திராதிகளுக்குப் பிரியமுண்டாகும்படியாக நிட்காமமாய்ச் செய்யப்பட்ட எச்யங்களினாலுண்டான அக்கினியிற் கிரியைவிஷயங்களை யோமஞ்செய்வார்கள்-௧. இன்னஞ்சில ஞானிகள் யாதொரு காரியங்களும் நிட்காமமாய்ச்செய்துகொண்டு பிரமசொரூபமே யிருக்கிறதென்கிற நிச்சயத்தினாலேயுண்டாய் நோக்குகிற விஷயங்களைச் சொரூபத்திலேயே அபிஷேகஞ் செய்வித்துக்கொண்டு வரப்படுகின்ற நிச்சயமாகிற ஞானாக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். இன்னஞ்சிலர் திரிவிதகரணங்களினாலே நிஷ்காம கன்மங்கள் செய்து கொண்டு சிரவண மனனநிதித்தியாசனம் நிரந்தரஞ் செய்துவரப்பட்டதனாலுண்டான நிச்சயமாகிற அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். இன்னஞ் சிலர் துறவாச்சிரமத்தையடைந்து ஆகாரவேளைபோகச் சதா சமாதியிலுண்டான நிச்சயமாகிற அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்-௨. நைஷ்டிகப்பிரமசாரிகள் சுரோத்திராதி யிந்திரியங்களை நிக்கிரகஞ்செய்து அதனாலுண்டான நிச்சயமாகிற அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்-௩. இன்னஞ் சில கிரகஸ்தாள் நல்லது பொல்லாதது என்னப்பட்ட சப்தாதிவிஷயங்கள் யாவையும் இந்திரியங்களாகிய அக்கினியில் பிசாரற்பணமாக ஓமஞ்செய்வார்கள்-௪. (௨௫-௨௬)

இன்னஞ் சில தியானநிஷ்டாள் இந்திரியங்கள் பஞ்சப் பிராணனிவைகளினுடைய கன்மங்களெல்லாம் நிரோதஞ் செய்யும்போது அதனாலுண்டான நிச்சயமாகிய ஞானாக்கினியில் விஷயங்களை ஓமஞ் செய்வார்கள் ௫. (௨௭)

இன்னஞ் சில கிரகஸ்தாள் நாம் தானஞ்செய்தோமென்றும் இன்னார் வாங்கினார்களென்றும் யாதோரபிமானமுமில்லாமல் சகலமும் பகவானாலேயே நடக்கப்படுகிறதென்ற நிரபிமான விருத்தியினாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்—௬. இன்னஞ்சிலர் தபசென்கிற கிர்ச்சராசாந்திராயணாதி விரதங்கள் தீர்த்தங்கள் முதலானவை செய்யப்பட்டதனாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்-௭. இன்னஞ் சில அஷ்டாங்கயோகத்தினாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள். இன்னஞ்சிலர் பிராணாபானன்களை அசபாமந்திரரூபமாக மகாவாக்கிய அர்த்தத்தினால் அபிஷேகமான உசுவாச நிசுவாசரூபமா யெப்போதும் அநுசந்தானஞ் செய்யப்பட்டதனாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ் செய்வார்கள்-௮. இன்னஞ் சிலர் குருமுகமாக வேதங்கள் முதலானவைகளைச் சதா சிரவணஞ்செய்யப்பட்டதனாலுண்டான நிச்சயமாகிய

அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்-௯. இன்னஞ் சிலர் வேதம் உபநிடதமுதலானவைகளை வாசித்து அவைகளின் அர்த்தங்களை விசாரித்துக்கொண்டு வரப்பட்டதனாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்- இன்னஞ்சிலர் அந்த அர்த்தங்களை யாதொருபயனு மிச்சியாமல் பகவத்பிரீதியாகப் பிறருக்குச் சதா போதித்து வருவதனாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்-௰ (௨௮)

இன்னஞ் சிலர் ரேசக பூரக கும்பகமென்னப்பட்ட மூன்று மார்க்கங்களினாலே பிராணாபானனை அயிக்கியம் பண்ணப்பட்டதனாலுண்டான நிச்சயமாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்-௰௧. (௨௯)

இன்னஞ் சிலர் தினந்தோறும் ஆகாரங்களைக் குறைத்தும் விஷயங்களி லிச்சைகளைக் குறைத்தும் இரண்டுபங்கு அன்னமும் ஒரு பங்கு ஜலமும் ஒருபங்கு வாயுஸஞ்சாரத்துக்கிடமாகவும் வைத்துக்கொண்டு செய்யப்பட்டதனாலுண்டான நிஷ்டையாகிய அக்கினியில் விஷயங்களை ஓமஞ்செய்வார்கள்-௰௨. (௩௰)

அருச்சுனா! இத்தனைபேரும் எக்யங்களை யறிந்தவர்களே? இவர்கள் புசிக்கப்பட்ட எக்யசேஷ அன்னம் அமிர்தத்துக்குச் சமானமாகும். இவர்கள் சகல பாபங்களினுமிருந்தும் விடுபட்டு ஞானத்துவாரா புராதனமாயிருக்கிற பிரம சொரூபத்தையே யடைவார்கள். இவைகளிலொன்றையாவது அநுஷ்டித்துக் கடைபேறுமற் பாபமாயிருக்கிற அன்னங்களைப் புசித்துக்கொண்டு விஷயங்களி லிச்சையுடைத்தான புருஷனுக்கு இந்த லோகத்திலேயே சுகசம் பாத்தியம் துர்லபமானதாற் பரலோகத்தில் சுகமெப்படிவரப்போகிறது. (௩௧)

அருச்சுனா! இப்படி யநேகஎக்யங்கள் வேதங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது; அவைகளெல்லாம் பிரயாசையுடன் கூடினதாகவும் சித்த சுத்தியார்த்தமாகவு முடியுமேயல்லாமல் ஞான எக்யத்துக்குச் சமானமாகமாட்டாது ஆனதாற் பிரயாசையின்றியும் சுளுவாயுமிருக்கப்பட்ட ஞானஎக்யத்தை யப்பியாசித்தவர்கள் மோக்ஷமேயடைவார்கள். ஆனதால் ஞானஎக்யத்தைச் சிரேஷ்டமென் றுனக்குச்சொன்னேன். இந்த எக்யங்களெல்லாம் மனோவாக்குக் காயத்தாற் பண்ணப்பட்டதே யன்றி ஆத்துமாவுக்குச் சம்பந்தமில்லையென்று நீ யறிவாயேயாகில் முத்தனாவாய். (௩௨)

அருச்சுனா! ஞானத்தின் பொருட்டே சகலகன்மமுஞ் செய்கிறதானையாலும், சகலகன்மங்களுக்கும் ஞானமே யாதாரமாயிருப்பதனாலும் முன்சொன்ன எக்யங்களைப்பார்க்கிலும் ஞானஎக்யம் சிரேஷ்டம். (௩௩)



சுவாமி! அப்படிப்பட்ட ஞானம் எவ்விதமுயற்சியால்வரும்? அருச்சுனா! சாதனசதுஷ்டயங்களைப் பெற்றவனாய்ப் பெரியவாளிடத்திற்போய்ச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து சுவாமி! சமுசாரசமுத்திரத்தில் முழுகிக்கிடக்கிற அடியேனை கிருபையினால் ரக்ஷிக்கவேண்டுமென்று வணக்கத்துடன் தெரியப்படுத்தி அவாளிஷ்டப்படி சிசுருஷை செய்து கொண்டேவருங்காலத்தில் நீ நடக்கப்பட்ட நல்ல நடத்தைகளினாலே தயவுபிறந்து அவாளாலநுபவிக்கப்பட்ட அபரோக்ஷ ஞானத்தை யுனக்குபதேசஞ்செய்வார்கள். (௩௪)

சுவாமி! அப்படிப்பட்ட உபதேசமும் அதற்குப்பலமும் சுவாமிகளே யநுக்ரகஞ்செய்யவேண்டுமென்றுகேட்ட அருச்சுனனைப் பார்த்து மகாபுருஷா சகலஜீவாளும் பரமாத்மாவாகிய நம்மைத்தவிர வேறேயில்லை யென்றும், அப்படிப்பட்ட நம்மை யுன்னுடைய லட்சியார்த்தத்தைத் தவிர வேறே யில்லையென்றும் நீ தெரியத்தக்கதெதுவோ அதுவே ஞானமென்று சொல்லப்படும், அந்தஞானம் உனக்கு லப்தமானால் இப்போது பந்துக்களெல்லாம் மரிக்கப்பட்டுப் போவார்களென்று துக்கப்படுவதுபோலொருபோதும் துக்கப்படமாட்டாய். அப்படித் துக்கப்படுவதும் சுத்த மித்தையென்றும் தெரியவரும். அதனால் நீ யெல்லாஞ் செய்தாலும் ஒன்றுஞ் செய்யாமலிருந்ததாகவுந் தெரியவரும். ஆகையால் அந்த ஞானத்தைத் தெரிந்து கொண்டு நீ யப்பியாசஞ்செய்வாயாகில் இந்தச் சென்மத்திலேயே மோக்ஷத்தையடைவாய். (௩௫)

அருச்சுனா! இன்னமும் அந்த ஞானத்தினுடைய பெருமையையும் பலனையுஞ் சொல்லுகிறேன்கேள்; மகா பாதகங்கள் செய்யப்பட்டவனைக்காட்டிலும் நீ யதிகமான பாபியானாலும், அப்படிப்பட்ட பாபரூபமான சமுத்திரத்தை ஞான மென்கிற தெப்பத்தினால் எளிதிற் கடப்பாய். அதெப்படிப் போலென்றால் சொப்பனத்திற்கண்ட பாப புண்ணியங்களெல்லாம் விழித்தவுடன் எப்படி யில்லாமற்போகுமோ அப்படிப்போலென்று நீ யறியத்தக்கது. (௩௬)

சுவாமி! இந்த ஞானத்தைத்தவிரப்பாபங்கள் நசிக்கவேறே யுபாயங்களில்லையா? அருச்சுனா! எரிகிற அக்கினியானது காஷ்டங்களையெல்லாம் தன்னைப்போலெப்படித் தகனம்பண்ணிப் போடுகிறதோ அப்படி பிராரத்தம்தவிர மற்றகன்மங்களையெல்லாம் ஞானாக்கினியானது தகனப்படுத்தும். இதைப்போலே மற்றொன்றும் பரிசுத்தம் பண்ணிவைக்கமாட்டாது. (௩௭)

சுவாமி! இப்படியானால் எல்லோரு மிந்தஞானத்தையேன் அப்பியாசிக்கவில்லை? அருச்சுனா! சமுசாரசமுத்திரத்தைத் தாண்டுகிறதற்கு இந்த ஞானத்துக்குச்சமானம் வேறொன்றுங்கிடையாது. அப்படிப்பட்ட ஞானமானது இராகத்துவேஷமின்றிப் பகவத்பிரீதியாக வெகுகாலம் கன்மயோகங்கள் செய்து அதனால் சித்திக்கும்படியாயிருக்கிறது. (௩௮)

அருச்சுனா! இன்னமும் அந்தப்புருஷன் எவ்விதமாய் நடக்கவேண்டுமென்றால் குருவிடத்திற்போய்ச் சிசுருஷை முதலானவை செய்து அவர்களுக்கேற்க நடந்து பின்னவர்களாலே சொல்லப்பட்ட அர்த்தத்தி லெவ்வளவாகிலுந் தெரிந்துகொண்டு இந்திரியநிக்கிரகத்துடன் சிரத்தாபத்தியோடுங்கூட இடைவிடாமல் ஞானப்பியாசஞ் செய்யப்பட்ட புருஷனுக்கு ஞானத்துவாரா சீக்கிரத்தில் மோட்சமானது லப்தமாகலாம், அப்படிக் கன்னியி லிருக்கப்பட்ட எல்லாருக்கு மெப்படி அந்தஞானம் சித்திக்கும். (௩௯)

அருச்சுனா! இன்னமு மந்தஞானம் சித்திக்காமற்போவதற்குண்டான தடைகளையுஞ் சொல்லுகிறேன் கேள். முன் சொன்னபிரகாரம் நடக்கவேண்டுவதிருக்க அப்படி நடவாததுந்தவிரத் தேகமே தானென்றும், செகத்துச்சத்தியமென்றும் சகல இச்சைகளுடனுங்கூடிக்கொண்டிருக்கப்பட்ட அஞ்ஞானிக்கும், பெரியவாளிடத்திலும் தெய்வத்தினிடத்திலும் எவ்வளவேனும் சிரத்தையில்லாதவனுக்கும், இந்திரியங்கள் முதலானவை வசமில்லாதவனுக்கும், மந்தக்காரியங்களிலும் சமுசயத்துடன்கூடி யிருக்கிறவனுக்கும், அல்லது ஒருவேளை நல்ல வார்த்தை காதிற்பட்டாலும் அதிலும் சிரத்தையின்றியிருக்கிறவனுக்கும், ஏதாவது அற்பம் சிரத்தையுண்டானாலும் நடக்கும் இந்த ஞானத்துக்கும் வெகுதூரமென்றெண்ணியிருக்கிறவனும். இந்த ஞானம் ஒருபோதும் நமக்கு வரவேமாட்டாதெனகிற நிச்சயபுத்தி யுடையவனுக்கும், இந்த ஞானமான தெப்படிவரும், இதனால் எல்லாரும் அடையக்கூடும் படியானதல்ல, ஆனாலிப்படிப்பட்டவர்களுக்கு பலமேதென்றால் இகலோக பரலோகத்திலுஞ் சுகமில்லை, இதனை யிவர்களு மிவர்களுக்கு கனுகூலமாயிருக்கிறவர்களுங் கெட்டு நரகத்தையே யடைவார்கள். (௪௦)

அருச்சுனா! முன்சொன்ன சாங்கியயோகத்தையும் கன்மயோகத்தையும் இரண்டுசுலோகத்தினால் சங்க்ரகமாகச்சொல்லுகிறேன் கேள், பகவானாகிய நம்மிடத்திலே சகல கன்மங்களும் சமர்ப்பித்து அதனாலே ஞானத்தையடைந்து சகல சமயமும் போக்கடிக்கப்பட்டவனும், தேகாபிமானமுமின்றித் தானே தானாயிருக்கப்பட்ட மகா



புருஷர்களோ அவர்களுக்கு யாதொருகன்மங்களும் செய்யவேண்டுவதில்லை. அல்லது லோகாநுக்கிரகமித்தந் செய்தாலும் அந்தக் கன்மங்கள் பந்தத்தைக்கொடுக்காது. (௪௧)

ஆதலால் அருச்சுனா! சொரூபநிச்சயமறியாததால் அஞ்ஞானத்தினா லுன் னிருதயத்திலிருக்கிற சந்தேகத்தை ஞான மென்கிற வாளினாலே வெட்டிப்போட்டுச் சீக்கிரமாக எழுந்திருந்து கன்மயோகமென்னப்பட்ட உனக்குச்சுதன்மமாகிய யுத்தத்தைப்பண்ணக்கடவாயென்று பகவானானவ ரனுக்கிரகம் பண்ணினார். (௪௨)

நான்காவது ஞானயோக அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம், ௪ ஆகச்சுலோகம்-௨௦௪

ஸ்ரீகோகுலவாசப்பிரியாயநம:

௨

ஸ்ரீ வாசுதேவாயநம:

ஐந்தாவது

# சந்நியாசயோக அத்தியாயம்.

அவதாரிகை. ஞானமென்கிற வாளினால் அஞ்ஞானத்தினாலுண்டான சமுசயத்தை வெட்டிப்போடென்று உத்தரவானதைப் பார்த்தால் யாதொரு கன்மமுஞ்செய்யவேண்டுவதில்லை, அப்படியிருக்க மறுபடியும் யுத்தமே செய்யும்படியாக யேன்சொல்லுகிறாரென்கிற அபிப்பிராயங்கொண்டு அருச்சுனனானவன் சுவாமி! ஓரிடத்தில் கன்மங்களை விடச்சொல்லுகிறீர்கள், ஓரிடத்தில் பண்ணவுஞ்சொல்லுகிறீர்கள் இந்த இரண்டில் சிரேஷ்டமாயிருக்கப்பட்ட தொன்றை யெனக்குபதேசஞ்செய்யவேண்டும். (௧)

அருச்சுனா! சகலகன்மங்களும்விட்ட சந்யாசமும் கன்மயோகமுமான இந்த இரண்டும் மோக்ஷத்தைக் கொடுக்கப்பட்டதே? அப்படியானால் இரண்டுவிதமாய்ச் சொல்வானேனென்றால் சித்தசுத்தியில்லாதவர்களுக்குக் கன்மயோகமும், அது வந்தவர்களுக்கு ஞானயோகமும் அதிகாரபேதத்தினாற் சொன்னதேயல்லாமல் ஒன்றுக்கொன்று நிகையல்ல ஏதனாலென்றால், இரண்டுபேர்களு மடையப்பட்ட பலம் ஏதுவோ அது ஒன்றாயிருப்பதால் இரண்டுமார்க்கமுஞ் சரியானதேதவிர ஏற்றத்தாழ்ச்சிகிடையாது. ஆனால், உனக்குமாத்திரம் இன்னம் பேதபுத்திபோகாததால் நிட்காமமாய்க் கன்மங்கள் செய்தே தீரவேண்டும். (௨)

ஆனால், அருச்சுனா! எந்தப்புருடன் கன்மங்கள்செய்ய வேண்டுவதில்லையோ அவனுடைய லட்சணமுஞ்சொல்லுகிறேன்கேள். சுகதுக்கங்களினால்வரப்பட்ட பிரியமும், துவேஷமுமில்லாதவனும் சீதோஷ்ணாதி தொந்தரகிதனும், நிர்மலசித்தனும், பேதபுத்தியில்லாதவனுமிருக்கப்பட்ட மகாபுருஷனெவனோ அவனையே நித்தியசந்நியாசியென்று தெரியத்தக்கது. அந்தப்புருஷன் சம்சாரபந்தத்திலிருந்தும் சுகமாய் விடுபட்டவனென்றுஞ்சொல்லப்படும். அப்படிப்பட்டமகாபுருஷனுக்கு யாதொரு கன்மங்களுஞ் செய்ய வேண்டுவதில்லையென்று முன் நாம் சொன்னது சரியே, ஆனால் அவனும் முன்னாலே நிட்காமகன்மங்கள் செய்ததனாலேயே யிப்போ இந்த ஞானத்தை யடைந்திருக்கிறார்களே தவிரக் கன்மங்கள் செய்யாமலே யடையவில்லை ஆனதனாலேயும்; அந்த ஞானத்தையடைந்த மகாபுருஷன்கூட மறுபடியும் லோகோபகார நிமித்தமாகக் கருமங்கள் செய்துவருகிறதனாலேயும், உனக் கப்படிப்பட்ட ஞானம் இன்னுஞ் சித்திக்காததனாலேயும், பகவான் பிரீதியாகக் கன்மங்கள் செய்தால் சித்த சுத்தித்துவாரா ஞானம்வந்து எளிதாகச்சமுசாரத்தினின்றும் விடுபட்டு ஞானிகள் எந்தப்பதத்தை யடைவார்களோ அந்தப்பதத்தையே நீயுமடைவாயென்று சொன்னால் இரண்டிலொன்று நல்லதாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்டது சரியல்ல. (௩)

அருச்சுனா! சந்நியாசமுங் கன்மமும் வெவ்வேறே என்றும், இதிலொன்று நல்லதென்றும் சங்கிக்கிறவர்கள் அஞ்ஞானிகளே தவிர விவேகிகள் அப்படிச் சங்கிக்கமாட்டார்கள்; ஏதனாலென்றால், சாங்கிய விசாரத்தினாலே யெந்த ஞானஞ் சித்திக்கிறதோ அதையே நிட்காம கன்மங்கள் செய்ததனாலே யடையப்படுகிறபடியினாலேயும் இரண்டிலொன்றையநுட்டித்தவன் இரண்டினாலும் அடையப்பட்ட பலமெதுவோ அதையே யடைவதாயிருப்பதனாலேயும் இரண்டிலொன்று நல்லதாய்ச் சொல்லவேண்டுமென் றெப்படிச் சங்கிப்பார்கள். (௪)

அருச்சுனா! ஞானிகள் யாதொருபலத்தையடைவார்களோ அதையே கன்மயோகிகளு மடைவார்கள். இந்த இரண்டுமார்க்கத்தினாலுண்டானபலம் ஒன்றேயென்றும், அதுவே தானென்றும் எந்த மகாபுருஷனறிகிறானோ அவனே யறியவேண்டுவதை யறிந்தவனென்றும் அடையவேண்டுவதை அடைந்தவனென்றுஞ் சொல்லப்படும் (௫)

சுவாமி! இந்த இரண்டுமார்க்கத்தினாலும் பலமொன்றாயிருப்பதால் சகலகருமமும்விட்ட சந்நியாசமார்க்கமேயிருக்கலாமே? அருச்சுனா நிட்காமகன்மங்கள் அநுட்டித்துச் சித்தசுத்தித்துவாரா ஞானம் வந்து தேகாபிமானமும் போனபின் சதா சமாதியுக்தனானபுருட-



னுக்குச் சந்நியாசம் சித்திக்குமேதவிர, அதுவன்றி வேறே காரணங்களால் சந்நியாசம் பெற்றுக்கொள்வானேயானால் மூன்றுவித வாசனைகளு மவனை விட்டுப்போகாது. அதனால் விஷயங்களி லிச்சையுண்டாக்கிக்கொண்டேயிருக்கும். இந்திரியநிக்கிரகமில்லாததால் சதாப் பகிர் முகவிருத்திகளே யுண்டாக்கிக்கொண்டிருப்பதனால் அநந்த ஜென்மங்களுக் கேதுவுந் துக்கமும் பிராப்தியாகுமேதவிர, சுகமென்னப்பட்டது அவன்மனதில் லேசங்கூட இருக்கமாட்டாது, ஆனதா லிப்படிப்பட்ட சந்நியாசத்தைப் பெறுவதைப்பார்க்கிலும் நிட்காம கன்மங்கள் அநுட்டிக்கிறதே மிகவுஞ் சிரேஷ்டம். அப்படிப்பட்ட முனீசுரனானவன் சீக்கிரத்தில் சித்தசுத்தித்துவாரா ஞானாக்கினியா லநந்தசென்மங்களுக் கேதுவாயிருக்கிற சஞ்சிதத்தைத் தகிக்கப்பண்ணி மோக்ஷமடைய அதிகாரியாவன். (௬)

சுவாமி! ஞானத்துவாரா மோக்ஷத்துக் கதிகாரியாய் விட்டபின்பும் அந்த ஞானவந்தர்கள் கன்மங்கள்செய்து வருவார்களென்றுஞ் சொல்லுகிறீர்கள், அதனாற் பந்தமானது சம்பவிக்காதா? அருச்சுனா! நிட்காமகன்மங்கள் செய்தவனும், அதனால் நிர்மலசித்தனும் தேகேந்திரியங்களைத் தன் வசமா யுடைத்தானவனும், அணுமுதற் பிரமதேவர் பரியந்தமான சகல பூதங்களிடத்திலுமிருக்கப்பட்ட ஆன்மா ஏகமென்றும் அதுவே தானென்றும் அறிந்து அநுபவிக்கப்பட்டபுருஷன் லோகோபகாரமாக அவன் வருணாச்சிரமத்துக்குத்தகுந்த கன்மங்களைச்செய்தாலும், அல்லதவனுக்குச் சுபாவமான இதர கன்மங்கள் செய்தாலும் அவனொன்றுஞ் செய்தவனேயல்ல அதனாலொருபோதும் பந்தத்தையடையான். (௭)

சுவாமி! கன்மங்கள்செய்தால் எப்படிப் பந்தத்தைக் கொடாமற் போம்? அருச்சுனா! அந்த ஞானியானவன் நேத்திரேந்திரியங்களினாற் பார்த்தாலும், சுரோத்திரேந்திரியங்களினாற்கேட்டாலும் தொக்கிந்திரியத்தாற்பரிசித்தாலும், கிராணேந்திரியத்தால்வாசனைப்பார்த்தாலும், சிங்குவையிந்திரியத்தால் ரசங்களைக்கிரகித்தாலும், பாதேந்திரியத்தால் நடந்தாலும், பாணீந்திரியத்தாற் கொடுக்கல் வாங்கல் செய்தாலும், மனோலீனத்தாற் றூங்கினாலும், பிராணவாயுவால் மூச்சுவிட்டாலும்.— (௮)

வாக்கால் வசனித்தாலும், பாயுருபஸ்தத்தால் மூத்திரபுரீஷாதிகள் விசர்ச்சனம்பண்ணினாலும் கூர்மனென்கிறவாயுவாற் கண்மூடிவிழித்தாலும் இவைகளெல்லாம் அந்தந்த இந்திரியங்கள் அந்தந்த விஷயங்களிற் பிரவிர்த்திக்கிறதென்றுந் தானொன்றுஞ் செய்கிறவனல்லவென்றுந் தான் அசங்கனென்றுந் திடநிச்சயமா யறிந்திருக்-

லுண்டாகிய இச்சையானது போகவேமாட்டாது. அது எவ்வளவு வரையும் போகவில்லையோ அவ்வளவும் இந்திரியநிக்கிரக முண்டாகவே மாட்டாது. அது எவ்வளவுவரையு முண்டாகவில்லையோ அவனுடைய சித்தமானது ஆந்தரத்தில் அநேகவிதமான கற்பனைகளை யுண்டாக்கிக் கொண்டிருக்கிறதுந்தவிரப் பாகியவிஷயங்களும் இந்திரியங்கள் வழியாகச் சென்றுகொண்டேயிருக்கும்; அப்போதந்தப்படி யநுபவிக்கக்கூடாமற் போகிறதனாலும், அல்லது ஒருவேளை யநுபவிக்கும் பக்ஷத்திலுங் கிரகஸ்தாச்சிரமத்தி லிருக்கப்பட்டவர்களைப் போ லநுபவிக்கக் கூடாதாகையாலும், இப்படிப்பட்டபலவிதமான செய்கைகளினாலே யநந்த துக்கத்துக்கு மநந்தஜென்மங்களுக்கு மேதுவாகி ஐயோ இந்த ஆச்சிரமத்தைப் பெற்றுக்கொண்டோமென்று கவலை யடைகிறதைப்பார்க்க இல்லறத்தி லிருந்துகொண்டு சாஸ்திரியமாக விவகாரிகள் முதலானவையுஞ் செய்துகொண்டு நிட்காமனாகச் சற்கன்மங்களை நடத்துகிறதே மிகவும் சிரேஷ்டமாகும்; ஆனால் முன் நாம்சொன்ன மகாபுருஷன் மாத்திர மிப்படிப்பட்டவனல்ல, அந்தப்புருஷ னெவ்விதமா யிருப்பனென்றாலோ நவத்துவாரத்துடன்கூடி யிருக்கப்பட்ட தேகமென்கிற புரத்திலேயே சுகமாய் வாசஞ்செய்து கொண்டிருப்பன். (க௩)

சுவாமி! சகல சீவர்களுக்கு மாதாரமாகவும் பொதுவாயுமிருக்கிற ஈசுரன் ஒருவருக்கு ஞானம் ஒருவருக்கு அஞ்ஞானமுங் கொடுக்கிறதானாற்பட்சபாதமு மதனாற்புண்ணிய பாபகருமங்களு மவருக்குச் சம்பவியாதா? அருச்சுனா! மகாபிரபுவாகியஈசுரனானவர் நிர்விகாரி, யவருக்கிந்தச் சீவர்களைப்போ லொருகர்த்தத்துவமுங்கிடையாதாகையால், சீவர்களுக்குண்டானகர்த்தத்துவமும் அவர்கள் செய்யப்பட்ட கன்மங்களு மந்தச்சன்மங்களுக்குத் தகுந்த பலன்களை யவர்களநுபவிக்கிறது மந்தஈசுரன் கற்பிக்கவில்லை, இதனா லவருக்குப் பட்சபாதமுங் கிடையாது, யாதொரு பலன்களு மவரைப்பொட்டாது, அந்தச்சீவர்களுடைய கன்மங்களுக்குத்தகுந்த பலன்களை யவரவர்களையே யநுபவிக்கப்பண்ணுகிறது. இப்படிச் சீவர்கள் சனுகியாய் அஞ்ஞானத்திலே நடந்துவருகிறது; இதை நாம் செய்கிறோமென்று சொல்லப்பட்டவர்கள் சுத்த மூடர்கள், நம்முடையபிரகிருதியினாலுண்டான சிருட்டி முதலானவைகளையெல்லாம் ஈசுரனாகிய நாம் செய்ததாக நம்மிடத்தி லாரோபஞ் செய்துகொண்டு துக்ககரமாயிருக்கப்பட்ட சனன மரணத்தை யடைகிறார்கள். ஈசுரனானவர் கற்பக விருட்சம்போ லிருக்கப்பட்டவர் எவர்கள் எவர்கள் பாவனை யெப்படியெப்படியோ, அப்படியப்படிப் பலமு மடையப்படும். (கச)



அருச்சுனா! இன்னமும் அந்தப் பரமேசுரனானவர் வியாபகர், அவரைத்தவிர வேறே யந்நியமில்லாததனால் அவரொருவருக்கு ஞானமும், ஒருவருக்கு அஞ்ஞானமுங் கொடுக்கக்காரணமேயில்லை இப்படிப்பட்ட பகவானானவ ரெப்போது மெங்குஞ் சரியாயிருக்கிறவரென்கிற ஞானமானது அகந்தாமமதையினாலுண்டான அஞ்ஞானத்தினால் மறையப் பட்டதனாற் சீவர்கள் ஈசுரனிடத்தில் தோஷத்தைக் கற்பித்துக்கொண்டு வீணான மோகத்தினால் நரகத்தையடைகிறார்கள். விவேகிகளாயிருக்கிற பேர்கள்மட்டும் இந்தப்படி மோகத்தையடையார்கள். (க௫)

சுவாமி! விவேகிகள்மட்டு மெதனால் மோகத்தையடையார்கள்? அருச்சுனா! நிட்காமகன்மங்கள்செய்து சித்தசுத்தியடைந்தவர்கள் ஞானம் ஸப்தமானபுருஷனுக்குச் சூரிய பிரகாசமானது இருட்டைப் போக்கடித்ததுபோல் அந்த அஞ்ஞானமானது எடுபட்டுப்போய் எங்கும் பிரமசொரூபமே பிரகாசிக்கிறதென்றும், அதைத்தவிர வேறே யந்நிய மில்லையென்று முண்டான திடஞானத்தினால் அஞ்ஞானியைப்போ லொருபோதும் மோகத்தையடையான். (க௬)

அருச்சுனா! இன்னமுமந்த ஞானியானவ னெந்தப்பரமாத்மாவிலே யிருக்கிறானென்றும், அதுவே தானென்றும நிட்டபுத்தியினாலந்தப் பரமாத்மாவினிடத்தில் நிஷ்டையும் அதையே மனதினாலே நினைக்கிறதும் அதையே வாக்கினால் வசனிக்கிறதுமாக விசேடபுத்தியோடு கூடினவனுமிருப்பன். அப்படிப்பட்ட மகா புருஷனுக்கந்தப் பரமாத்மாவினுடைய பிரசாதத்தினாலே சகல பாபங்களும் நசிக்கப்பட்டு இனிச் சனனமில்லாம லிருக்கும்படியான கைவல்லியத்தையே யடைவன். (கஎ)

சுவாமி! லோகத்தில் நானாவிதபேதத்தோடேகூடிய சீவர்களை யந்தந்தப்படி தாரதம்மியமாய்த்தானே பார்க்கவேண்டும்; அப்படியிருக்கக் கைவல்லிய மெப்படிச் சித்திக்கும்? அருச்சுனா! வித்தையோடும் விநயத்தோடுங்கூடின பிராமணனிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும், நாய்க்குப்போடுகிற அன்னத்தைத் திருடிச் சாப்பிடப்பட்ட சுவசனிடத்திலுஞ் சமமாயிருக்கிற பிரமசொரூபத்தைத் தனது சொரூபமாகவே பார்ப்பார்கள். இதனாலேயவர்களிப்போதே மோக்ஷரூபமாகவே யிருக்கிறார்களென்றறி. (கஅ)

சுவாமி! ஜனிட்ட நிகிட்டங்களைச் சரியாய்ப்பார்க்கிறது தோஷமென்று சாத்திர புராணங்களிற் சொல்லியிருக்க மகான்களாயிருக்கப்பட்ட ஞானவான்கள் சமமாய்ப்பார்க்கிறதனாலே தோஷசம்பவி

யாதா? அருச்சுனா! எங்கும் பிரமசொரூபமேயிருக்கிறதென்றும் அதுவே தானென்றும் நிச்சயித்திருக்கிற யாருடைய மனதானது சமத்துவமாயிருக்கப்பட்ட சொரூபத்தில் திரமாயிருக்குமோ அவன் சனனமரண மென்னப்பட்ட சமுசாரத்தைச் செயிக்கப்பட்டுப் பிரம சொரூபமாத்திரமாயிருப்பதனாலேயே யொருதோஷமுமில்லாமலெங்கும் பிரகாசிக்கப்பட்ட சொரூபத்தை யதார்த்தமாய்ப்பார்க்கிறதனாலே யாதொருதோஷத்துக்கு மிடமில்லை. சாதிபேதங்களினாலுங் கன்மமை இந்திரியங்களினாலும் நானாவிதங்களாய்த் தோற்றினாலு மவைகளெல்லா மாயாகாரியமான குணங்களைச் சேர்ந்ததென்றும். அவைகள் அந்த மித்தை யென்றும் நிச்சயித்துக் குணங்களுக் கப்பாற்பட்ட வராயிருக்கிற சொரூபமே தானென்று மநுபவிக்கப்பட்ட மகான்களுக்கிந்தப் பேதங்களாலுந் தோஷம்வரக் காரணமேயில்லை, குணங்களுக்குட்பட்ட யாதொரு விபரமுந் தெரியாத சீவத்வத்தை யுடைத்தான புருஷர்கள் அவிவேகத்தையாய்ச் சேர்ந்தபடி நடந்து நரகங்களை யடையாமலிருக்கும்பொருட்டு, அவரைப்பற்றி யுண்டான நீதிசாஸ்திரங்களினுடைய தாற்பரியத்தை யதார்த்தமா யறிந்த மகான்களிடத்தில் ஆரோபணஞ்செய்வது எவ்வளவுங் கூடாது; ஆனால் அந்தச் சீவாள்மட்டும் அந்த நீதியாகவே தப்பாமல் நடக்க வேண்டுவது யுக்தமே. (௧௯)

சுவாமி! அந்தரத்தி லெப்படி யிருக்கப்பட்டவானென்றெப்படித் தெரியும்; பாகியல சனங்கள்சொன்னால் அறிந்துகொள்ளலாமென்று கேட்ட அருச்சுனனைப்பார்த்துப் பார்த்தா! அந்தப் பிரமசொரூபமே தனதுரூபமாய் அறிந் தநுபவிக்கப்பட்ட புருஷனானவனுக்குப் பிரியமான விஷயங்கள் சம்பவிக்கிறதனா லொருசந்தோஷமும் அப்பிரியமான விஷயங்கள் சம்பவிக்கிறதனா லொருவிசனமு மிருக்கமாட்டாது, ஏதனாலென்றால், தனது ரூபத்தைத்தவிர அன்னியமில்லாததனால் அந்த விஷயங்களி லெவ்வளவும் மோகத்தை யடையான். ஆனால் சகலவிஷயங்களும் மற்றையர்போலநுபவிக்கிறதாகக் காணுகிறதே யென்றால் தேகத்துக்குப் பிராரத்தநுகுணமாக எக்காலத்தில் எது எதுவருமோ அது அது வந்தேதீருமென்கிற நிச்சயபுத்தி யுடைத்தானவனானாலும், அவைகளை யுங்கூடச் சொப்பனம்போ லெண்ணி யிருக்கப்பட்டவனானாலும் அந்தவிஷயங்களிற் சமத்துவபுத்தி யாகவேயநுபவிப்பன். (௨௰)

சுவாமி! நானாவிதமாகத் தோற்றுகிற சகத்தில் சமபுத்தியா லெப்படியிருக்கக்கூடும்? அருச்சுனா! பாகிய விஷயங்களிலெவ்வளவும்



ஆசக்தியில்லாதவனுயும, இந்திரியநிக்கிரகஞ் செய்தவனுயு மிருக்கப்பட்ட மனதினாலே ஆத்மாவினிடத்திலாசையுடையவனு யிடைவிடாமற் சுகத்தைபடைந்துகொண்டிருப்பதனாலேயும், அப்படிப்பட்ட சுகமே தனது ரூபமாயநுபவமுண்டான யோகியானதனாலேயும், எப்போதும பரமசுகத்தையே யடைந்துகொண்டிருப்பதனாலே சதா சமபுத்தியாகவேயிருப்பான். (௨௧)

சுவாமி! விஷயங்களை யநுபவிக்கிறதனாலுண்டாகிற பிரத்தியட்சமான சுகத்தை விட்டுப்போட்டுமோட்சத்தி லேதோ விசேடசுகமிருக்கிறதுபோற் சொல்லுகிறீர்கள், அந்தமோட்சத்தி லெப்படிச் சுகமுண்டாகும்? அருச்சுனா! விஷயவாசனைகளினால்வந்தசுகமே ஆதியந்தமுடையதாயும், அநந்த துக்கத் துக்கமும, அநந்த சனன மரணங்களுக்கு மேதுவாயிருக்கும். அதைப்பற்றி யந்தச்சுகத்துக்காக விவேகியாயும் மோட்ச இச்சையுடையவனுயு மிருக்கப்பட்ட புருஷனெவ்வளவும் விரும்பான். மோட்ச சுகமான தொருக்காலும் நாசமடையமாட்டாது. இதுவே யதிதமான அட்சயசுகமென்றும், இதை யடைகிறதே பரம புருஷார்த்த மென்றும் விவேகிகளிவார்கள். (௨௨)

சுவாமி! இப்படிப்பட்ட மோட்சசுகத்துக்கு இச்சையுடைய புருஷனையிந்தப்படி நடக்கவொட்டாமற்செய்கிற பிரதிபந்தமெது? அருச்சுனா! கல்கிவக்க உதடுதுடிக்க முகங் கடுகடுக்க மயிர்க்குச்செறியத் தேகம்நடுங்க இந்த அடையாளங்களையுடைத்தாயிருக்கிற காமக்குரோதமுதலான வேகங்களைத் தேகவியோகமாகிற பரியந்தமும் யாதொரு புருஷன் வருவதற்கு முன்னடியே செயிக்கிறானோ அவனேதான் விவேகியென்றும் அதீதமான சுகத்தை யநுபவிக்கிறதற்கும் மோட்சத்திற்கும் அதிகாரியென்றுஞ் சொல்லப்படும். (௨௩)

அருச்சுனா! காமாதியைச் செயிக்கிறதனால் மோட்சம் வாராது, அதனுடன் ஞானமுமடைந்திருக்கவேண்டுமென்று சொன்ன பகவானைப்பார்த்து அருச்சுனனானவன் சுவாமி! அந்த ஞான மெப்படிப்பட்டது? அதையடைந்த மகாபுருஷனென்ன லட்சணமுடையவர்களாயிருப்பார்கள்? இவைகளை விபரமா யநுக்கிரகம் பண்ணவேண்டுமென்றதற்கு, அருச்சுனா! விஷயங்களாலுண்டாகப்பட்ட சுகங்களைத் துக்கமென்றெண்ணிச் சாதன சதுஷ்டய சம்பத்தைப்பெற்றுப் பஞ்சகோச விலட்சணமும் அவத்தாத்திரய சாட்சியுமான சுகசொரூபமே தானென்றும், அதுவே தற்பதலட்சியார்த்தமான பரமாத்மாவென்றும், இப்படிப்பட்ட ஞானத்தைக் குருமுகமாகச் சம்பாதித்துக்கொண்டு அந்த ஞானத்தினாலே சதா ஆன்மாவினிடத்திலேயே சுகித்துக்கொண்டு, அதிலேயே கிரீடையும், அதிலேயே திருஷ்டி

யுண்டானவனும், அந்தச் சொரூப சாயுட்சியத்தையே யடைந்து தேகாந்தத்தில் அந்தச் சொரூபத்திலேயே லயத்தை யடைவன். (உச)

அருச்சுனா! இன்னமும் அந்த ஞானவந்தனானவன் இராகாதி விருத்திகளென்னப்பட்ட பாபங்களைப் போக்கடித்திருக்கப்பட்டவனா யும் குருசொன்ன அர்த்தத்தி லெவ்வளவேனும் சமுசயமில்லாதவனா யும், சகல இந்திரியங்களையும் நிக்கிரகஞ்செய்தவனாகியும், சருவ பிராணிகளிடத்திலுந் தயவோடே கூடினவனாயு மிருந்துகொண்டு முடிவில் மோக்ஷமே யடைவன். (உரு)

அருச்சுனா! இந்தக் காமக் குரோதங்களிலும் நின்று சுத்தமாய் விடுபட்டவனாயும் பேதபுத்தியைவிட்ட மனோநிக்கிரகத்தினாலே தன்னைத்தவிர அன்னியமில்லையென்று தெரிந்தமாத்திரத்தில் காரணசரீர முஞ் சூட்சுமசரீரமும் நசிக்கப்பட்டுப் பிரமசொரூபமே தானென் றனு பவிக்கப்பட்ட சந்நியாசியானவன் சீவித்திருந்தாலுந் தேகம் வியோக மாய்ப்போனாலும் எப்போதும் பிரமசொரூபமாகவே யிருக்கிறா னென்று நீ யறியவேண்டும். (உசா)

அருச்சுனா! இந்தப்படி யெல்லாராலு மநுபவிக்கப்படாததுபோ லத் தோற்றுகிற தேதுவென்றால், யோகநிஷ்டையினாலும் மோக்ஷமடை யலாம், அதையுங்கேள். பாகியவிஷயங்களி லிச்சையைவிட்டு வைராக்கி யத்துடன் புருவமத்தியில் திட்டியைவைத்து நாசிகாக்கிரத்தில் வசிக் கப்பட்ட பிராணாபானன்களைக் கும்பகத்தி னிறுத்தும்போது மனது சமாதானத்தை யடையப்பட்டுச் சொரூபத்தைத் தியானிக்கிறதற்கு யோகமுமுண்டாகும். (உஎ)

இன்னும் அந்த யோகியானவன் இந்திரிய நிக்கிரகஞ்செய்துங் கொண்டு சொரூபத்தை வாக்கினால் சொனித்தும், மனதினால் நினைத் தும் அதைத்தவிர அன்னியமில்லையென்றும், அதுவே தானென்றும் புத்தியினாலே நிச்சயித்தும் ஏகத்தியானஞ் செய்துகொண்டு இச்சை, பயம், குரோதாதிகளாய் மோட்சத்தை யிச்சிக்கப்பட்ட முனீசுர னானவனுந் தேகமிருக்கையிலும் தேகம்போனகாலத்திலு முத்தனாக வேயிருக்கிறான். (உஅ)

அருச்சுனா! இன்னம் சகல தபசுகளும, எக்யங்களும் நம்மையுத் தேசித்து நம்முடைய பக்தராலே செய்யப்படுகிறதனாலே யவர்கள் நிட்டியாய் நம்மைப் போக்தாவென்றுஞ் சகல லோகத்துக்கு மயே ஸ்வரனையுஞ், சகல பூதங்களுக்குஞ் சுகிர்த்தாயும், புத்திசாட்சியும்,



அந்தரியாமியுமாகிய நம்மைத் தானென்றறிந்த மகா புருஷனான வனுக்கு மோட்சமே யுண்டாகும். (உகூ)

ஐந்தாவது

சந்நியாசயோக அத்தியாயம் முற்றிற்று.

அ. அத்தியாயம் ரு-க்குச் சுலோகம்-உகூகூ.

ஸ்ரீருக்குமணிப்பிரியனேநம:

உ

ஸ்ரீகோவிந்தாயநம:

ஆறாவது

# அப்பியாசயோக அத்தியாயம்.

அவதாரிகை. நிட்காமகன்மாநுஷ்டானங்களினாற் சித்த சுத்திவந் தாலும் தியானமின்றியிருக்கப்பட்ட புருஷன் சந்நியாசம்பெற்றுக் கொண்டதனால் மோட்சம் வாராதென்றும், அதனால் முந்தின அத் தியாயத்தின் முடிவிற்சொன்ன தியானயோகத்தை விஸ்தரித்துச் சொல்லவேண்டியும், அது சித்திக்கிறதற்குக் கன்மயோகமும், அது சித்தித்தபிறகு அந்த சித்தத்தினாற் தியான அப்பியாசமுஞ் செய்ய வேண்டுமென்றும் இந்த ஆறுமத்தியாயத்திற்சொல்லத் தொடங்கு கின்றார்.

அருச்சுனா! தியானஞ் சித்திக்கிறதற்கு முன்னே சித்தசுத்தி வரும்பொருட்டுக் கன்மங்கள்செய்து அதன் பலத்துடனே பகவானுக் கர்ப்பிக்கியஞ் செய்வதினாலே யோகியென்றும், அந்தக்கன்மங்கள் சங்கற்பபூர்வமாகச்செய்யாததனாற் சந்நியாசியென்றுஞ் சொல்லப் படும். விகிதமாயிருக்கிற அக்கினி ஹோத்திரங்கள் முதலானவை களைப் பண்ணாமலும் பகவானுடைய வேதவாக்கியங்களின்படிக்கு இஷ்டா பூர்த்தங்களான கிரியைகள் செய்யாமற் சந்நியாசம் பெற்றுக் கொள்வானேயானால் அவனைச் சந்நியாசி யென்றொருபோதுஞ் சொல்லக் கூடாது. ஏதனாலென்றால் அந்தப் புருஷன் கிரமமாய்ப் பெற்றுக்கொள்ளாதவனானதால் திரிவிதமானவாசனைகளில் இந்திரி யங்களும் மனதும் அழுந்தி துக்கத்தை யடைந்து அநேக ஜனன மரணங்களுக் கேதுவாகச் செய்து விடும். அதனால் மோக்ஷ இச்சை யுண்டான புருஷனுக்கு அதுமார்க்கமேயல்ல. (க)

அருச்சுனா! யோகியென்றும் சந்நியாசி யென்றும் எதற்குச் சொல்லுகிறதென்றால், விகிதமா யிருக்கப்பட்ட நித்திய, நைமித்திய, பிராயச்சித்த சர்வ கன்மங்களுஞ் செய்து அவைகளின் பலத்துடனே தியாகஞ்செய்யப்பட்டவனுக்குச் சொல்ல வேண்டுமேதவிரச்

சங்கற்ப பூர்வமாக நான் செய்கிறேனென்றதாக அபிமானத்துடன் கன்மங்கள் செய்யப்பட்டவன் யோகியுமல்ல சந்நியாசியுமல்ல. (௩)

அருச்சுனா! இன்னமுங்கேள் ராகத் துவேஷங்களின்றி நிட்காமகன்மங்கள் செய்வதனாலே சித்தசுத்திவரும் அந்தச் சித்தத்தைக் கொண்டு சொருபத்தியானஞ் செய்வதனாலே மனோநிக்கிரகமாகுமே தவிர ராகாதிவிருத்திகளுடன் கூடிக்கொண்டு பலன்களையபேட்சித்துச் செய்யப்பட்ட கன்மங்களுடன்கூடின் சித்தத்தினாற் சொருபத்தியானஞ்செய்ய எவ்வளவேனும் இடங்கொடுக்கமாட்டாது.

சுவாமி! சந்நியாசம் பெற்றுக்கொள்வோமென்றால் நிட்காமகன்மங்களாலே சித்தசுத்திவரவேண்டுமென்றும், அது வந்தாலுஞ் சொருபத்தியானமின்றியிற் கூடாதென்றும், அதுக்கிரகஞ்செய்கிறீர்கள். அதனாற் கன்மங்கள் செய்தேதீரும்படியாயிருப்பதால் எதுவரையுஞ் செய்யவேண்டும்? அருச்சுனா! சித்தசுத்திவந்து சர்வமுஞ் சுரூபாவனையாகத் தோற்றினபின்பு அந்தச் சித்தத்தினாற் சொருபத்தியானஞ் செய்துவரப்பட்ட அப்பியாசத்தினால் அந்தச் சொருபமே தானென்றிடைவிடாமல் அநுபவத் திடமாகிறவரையிலுங் கன்மங்கள்செய்யவேண்டும் அப்படி யநுபவம்வந்த திடமான புருஷனாலே விஷயங்களிலுங் கன்மங்களிலு மொரு பற்றில்லாமலும் சர்வ சங்கற்பங்களையுஞ் செயிக்கப்படும் இப்படிப்பட்ட மகாபுருஷனையே யோகியென்றுஞ் சந்நியாசியென்றுஞ் சொல்லப்படும். இப்படிவரப்பட்ட அநுபவந் தேகமே நானென்றும் சகத்துச் சத்தியமென்றும் பேதபுத்தியுடனே கூடியிருக்கப்பட்டவர்களுக்குக்கூடுமோ? அதனால் மோட்சத்தைக் கொடுக்கத்தக்க நிட்காமகன்மங்களை நீ செய்வாயாகில் அந்த மோட்சமே யடைவாய். (௪)

சுவாமி! இப்படிப்பட்ட ஞானம் எனக்கெப்படிவரப்போகிறது? அருச்சுனா! நல்நடத்தைகளில் வைத்திருக்கப்பட்ட தன்னுடைய விவேகசென்னிய மனதினாலே தன்னை யெப்போதும் மேன்மையாகவே பண்ணிக்கொண்டுவரவேண்டும். அப்படிக்கில்லாமற் சனன மரணமென்னப்பட்ட சமுசார வியாபாரங்களுக்கு அநுகுணமாயிருக்கப்பட்ட விஷயங்களில் அகப்பட்டுக்கொண்டு அந்த ஆயாசங்களினால் நான் பாபியென்றுந், துஷ்டனென்றும், நானொருக்காலு முன்னுக்கு வருகிறவனல்லவென்றும், இன்னமும் பலவிதமான அபாவஞானத்தையடைந்து தன்னைத் தாழ்வுபண்ணிக் கொள்ளக்கூடாது. எதனாலென்றால், தன்னுடைய மனதே தனக்குப் பந்துவாகவும் சத்துருவாகவுமிருப்பதாற்சொன்னேன். (௫)



சுவாமி! எப்படிப்பட்ட நடத்தைகளுடன் கூடினமனது பந்துவாகும்; எப்படிப்பட்ட நடத்தைகளுடன்கூடினமனது சத்துருவாகும்? அருச்சுனா! நிட்காம கன்மங்கள்செய்து சித்தசுத்திந்துவாரா தேகேந்திரியாதிகளைச் செயித்துச் சாதன சதுட்டயங்களைப்பெற்றுக் குருவினிடத்திற்போய் சிரவண முதலானவையும் செய்வித்து மோட்சத்துக்குச் சாதனமாகச் செய்துவரப்பட்ட விவேகசென்னியமனதானது பந்துவாகும் இப்படியின்றி மாயாகாரியமாக இருக்கப்பட்ட தேகமே நானென்றுஞ்சகத்துச் சத்தியமென்றும் திடப்புத்தியாயிராகாதிவிருத்திகளுடன்கூடினதாயும், அனந்த செனன மரணங்களுக்கும், அனந்ததுக்கங்களுக்கு மேதுவான பாபகன்மங்களைச் செய்வித்தும் நரகங்களையடையும்படியாயுஞ் செய்விக்கப்பட்ட அவிவேகத்துடன் கூடினமனதானது சத்துருவென்றறியவேண்டும். (௬)

சுவாமி! பந்துவான மனதையுடையவர்களின் லட்சணமெப்படியிருக்கும்? அருச்சுனா! சீதோஷ்ண சுகதுக்க மானவமானங்களுந் தேகத்துக்கேயல்லாமற் றனக்கில்லையென்றும், அவைகளு மாயாகாரியமானதாற் சுத்த மித்தையென்றும், யாதொருகலக்கமுமின்றிச் சமசித்தனாயும், யாதொரு சங்கற்பமுமில்லாமற் சாந்தனாயுமிருப்பன். இப்படிப்பட்ட மகாபுருஷனானவன் பரமான்மாவின் சாட்சாத்காரமேயடைவன். (௭)

அருச்சுனா! இன்னமும் அந்த நிட்காமகன்மங்களாற் சித்தசுத்தித்துவாரா சாதனங்களையடைந்து குருவினிடத்திற்போய்ச் சிசுருஷை பூர்வமாக உபதேசம்பெற்றுக்கொண்டு சிரவண முதலானதுஞ் செய்துவரப்பட்டதனா லுண்டான பரோட்சஞானத்தினாலும், அந்தப்படி யநுபவிக்கப்பட்டதனாலுண்டான அபரோட்ச ஞானத்தினாலுந் திருப்தியடைந்தவனாயும். நிர்விகாரனாயும். இந்திரிய நிக்கிரகமுண்டானவனாயும், மண்ணாங்கட்டியினிடத்திலுந் தங்கத்தினிடத்திலுங் கல்லினிடத்திலுஞ் சமபுத்தியுண்டானவனாயு மிருப்பன். இவனைத்தான் யோகாரூடனென்றுஞ் சந்நியாசியென்றும் சொல்லப்படும். (௮)

அருச்சுனா! இந்தச் சந்நியாசியானவன் தான்மட்டுங்கிருதார்த்தனாவனே தவிர அன்னியரையுங் கரையேற்றிவைக்கும்படியான ஏதுவில்லாததனாற் றானுங்கரையேறி யன்னியரையுங் கரையேற்றிவைக்கும்படியான மகாபுருஷனுடைய லட்சணத்தையுஞ் சொல்லுகிறேன் கேள்; முன்சொன்னபடி யபரோட்ச ஞானம்வரையிலுந் திடமாய்ச் சம்பாதித்துக்கொண்டு இல்லறத்துடன் கலந்திருக்கிறவனைப்போற் சகல கன்மங்களையுந் திரிவித கரணங்களினாற்செய்வித்துக்கொண்டு

தன்னிடத்துக்கு வசப்பட்டவர்களுடைய அதிகாரத்துக்குத்தக்கபடி யுபதேசமுதலானவைகளையும் அனுக்கிரகஞ்செய்துகொண்டு தானும் ஒருவிஷயத்திலும் பற்றில்லாமல் அசங்கனுயிருந்துகொண்டு சுகிர்த்தா யிருக்கிறவ னிடத்திலும், மித்திரனிடத்திலுஞ் சத்துருவினிடத்தி லும், விசத்தைக்கலப்பிடித்து ஞாயஞ் செய்யப்பட்ட மத்தியஸ்த னிடத்திலுந், தனக் கஹிதஞ்செய்யப்பட்ட த்வேஷனிடத்திலும், இதஞ்செய்யப்பட்ட பந்துக்களிடத்திலுஞ், சாதுக்களிடத்திலும், பாபிஷ்டாளிடத்திலும், பிரியாப்பிரியமில்லாமற் சமமாயும் பார்ப்பன். இவனையேபுருஷாளுக்கெல்லாஞ் சிரேஷ்டனென்று சொல்லப்படும்; ஏதனாலென்றால் தொய்தத்தைச் சிலபேர்களிச்சிப்பார்கள், அத் தொய்தத்தைச் சிலபே ரிச்சிப்பார்கள், தொய்தாத்தொய்த வர்ச்சித மான சமம்தத்துவத்தை யிச்சிக்கப்பட்ட மகா புருஷாள் நிரம்பவும் அபுரூபமானதால் அப்படிப்பட்ட மகாபுருஷனைச் சிரேஷ்டனென்று சொன்னோம். (கூ)

சுவாமி! இப்படிப்பட்டஞான மெவ்விதமாகச் சித்திக்கும்? அருச்சுனா! சஞ்சலப்படவேண்டாம்; அதற்குச் சாதகமாயிருக்கிற தியானயோகாப்பியாசத்தினாற் சித்திக்கலாம்; அதெப்படியெனில், யோகாப்பியாசஞ் செய்யப்பட்ட யோகியானவன் ஏகாந்தத்தில் சங்கமின்றி யேகாந்தமாயிருந்துகொண்டு சகல இச்சைகளையும் விட்டுப் பரிக்கிரகமின்றி யிந்திரியம் மனது முதலானவைகளை நிக்கிர கஞ்செய்திருக்கிற சித்தத்தினா லெப்போதும் ஆன்மாவினிடத்தில் மனதை லயப்படுத்திக்கொண்டே வரவேண்டும். (௰)

அருச்சுனா! இந்த அப்பியாசஞ்செய்கிறதற்குச் சாதனமான ஆசனங்கள் முதலானவைகளைச் சொல்லுகிறேன்கேள்: மேடுபள்ள மில்லாமற் பரிசுத்தமாயிருக்கிற இடத்திலே குசைப்புல்பரப்பி யதன் மேல் மான்றோல்விரித்து அதன்மேல் வஸ்திரத்தை மடித்துப்போட் டுக்கொண்டு அந்த ஆசனத்தில் உட்காரவேண்டும். (கக)

அருச்சுனா! இப்படி யுட்கார்ந்துகொண்டு சித்தமுதலான இந்திரி யங்கள் விஷயங்களிற்போய் விழாமலும், தாவணிசெய்யாமலும் நிக் கிரகஞ் செய்துகொண்டு மனது கலங்காமல் ஏகாக்கிரப்படுத்தித் தியானப்பியாசஞ் செய்வானேயாகில் சித்தத்திலிருக்கிற பேதபுத்தி யெடுபட்டுச் சித்தசுத்தமாகலாம். (கஉ)

அருச்சுனா! இந்தத் தியானப்பியாசத்துக்குச் சாதகமான தேக தாரணையையுஞ் சொல்லுகிறேன்கேள், மூலாதாரந்துவக்கிச் சிர சென்னப்பட்ட மூர்த்தாந்தபரியந்தங் கோணலின்றி யசையாமற்



சமானமாக நிறுத்தித் திக்குகளைப்பாராமல் நடத்தோடுங்கூட மூக்கு நுனியென்னப்பட்ட சுழுமுனையை யத்தியகாட்டமாக ஆன்மாவைத் தானாகப்பார்த்துக்கொண்டிருப்பன். (கங)

அருச்சுனா! இராகாதிகளோடுங்கூடின விருத்தி விட்டதனாற் சாந்த சுத்தத்தை யுடைத்தானவனும் தன்னைத் தவிர அன்னியமில் லாததனால் யாதொரு பயமுமில்லாதவனும் பிரமசரிதவிரதனையும் நிக் கிரகஞ்செய்த மனதினாலே யென்னிடத்தில் லயப்படுத்தி நானே பரம புருஷார்த்தமென்றெண்ணிச் சாவதானமாக யோகாப்பியாசம் பண் ணக்கடவன். (கச)

சுவாமி! இப்படியப்பியாசஞ் செய்யப்பட்டவனுக்குப் பலமெ ன்ன? அருச்சுனா எப்போதுமித்தப்படி மனதை யாத்மாகாரமாய்ச் செய்துவைத்த அப்பியாசத்தினாலே யத்தமனதானது அன்னியசங்கற் பஞ் செய்யாமல் எந்தப்புருஷனுக்கு வசப்பட்டிருக்கிறதோ அந்தப் புருஷனானவன் ஆக்காதிகமான என்னைத் தானாக அறிந்திருப்பத னாலே மோக்ஷமே யடைவன். (கரு)

சுவாமி! இந்தத் தியானத்தைப்பார்த்தால் ஒரு அவயவமும் அசைக்கக்கூடாது, ஒன்றும் நினைக்கவும்படாதுபோலல்லோ இருக் கிறது, அப்படியானா லெப்படிச் சாதிக்கக்கூடும்? அருச்சுனா! தேகமே நானென்றும், சகத்துச் சத்தியமென்று மிராகாதிகளுடன் கூடிக் கொண்டு தமோகுணத்துடனிரம்பப் பட்சிக்கிறவனுக்கும், அல்லது உபவாசமாயிருக்கிறவனுக்கும், எப்போதும் நித்திரைசெய்கிறவனுக் கும் அல்லது அந்த முழுவதும் விட்டிருக்கிறவனுக்கும் நீ சொன்ன படி சாதிக்கிறது துர்லபந்தான் (கசு)

அருச்சுனா! அப்படியின்றிச் சாதனங்களுடனே மோக்ஷா பேக்ஷையுண்டான புருஷன் குருமுகமாக வேண்டிய விபரங்களைக் கேட்டுக்கொண்டு யுக்தமான ஆகாரங்களை யுக்தமான காலங்களிற் புசித்தும், யுக்தமான கர்மங்களைச் செய்துகொண்டு, யுக்தமான நித்திரைவிழிப்புடன் காலங்களை நயிப்பித்து வரப்பட்டவனுக்கு இந்தத் துக்க ரகிதமான யோகஞ் சகசமாய் சித்திக்கும். (கஎ)

சுவாமி! இந்தயோகம் எதுவரையும் அநுட்டிக்கவேண்டும்? அருச்சுனா! எந்தக்காலத்திற் சித்தமானது யாதோ அன்னியசங்கற்பஞ் செய்யாமற் சுத்தசித்தமாகிறதோ அந்தச் சித்தமானது எப்போது ஆன்மாவினிடத்தில் சமுத்திரத்தில் உப்புக்கல் கரைந்தாற்போல் லயமடையப்படுகிறதோ எப்போது சகல கோரிக்கைகளிலும் ஆசை யின்றிச் சுத்தமாய் விடுபட்டுப்போகுமோ அதுவரையும் அநுட்டிக்க

வேண்டும்; அப்போதுதான் அவனை யோகியென்று சொல்லப்படும்.

அருச்சுனா! அப்படியனுட்டித்ததனால் காற்றில்லாதவிடத்தில் சலியாமலிருக்கிற தீபத்தைப்போல அந்த யோகியினுடைய சித்தமானது யாதொரு சலனமுமின்றி யெப்போது மான்மாவினிடத்திலேயே சமாதியென்னப்பட்ட லயத்தை யடைந்திருக்கும். அந்த யோகியானவன் எப்போதும் அந்த நிச்சயத்தில் திரபுத்தியுண்டானவனாகவேயிருப்பன். (௧௯)

சுவாமி! நிட்காமகன்மங்கள் செய்வதே யோகமென் றனுக்கிரகஞ்செய்தீர்கள், இப்போது சமாதிசெய்வதே யோகமென்கிறீர்கள் இதனாலென்புத்திக்குப் பிரமையுண்டாகிற தானதால் இரண்டிலெது சிரேஷ்டமோ அதை யனுக்கிரகஞ்செய்யவேண்டும்? அருச்சுனா! எந்தக்காலத்திலிந்த யோகாப்பியாசத்தினால் இதரவிஷயங்களாகவும் கோரிக்கைகளாகவும் சித்தமானது சொப்பனம்போலப் பரிணமிக்காமலெந்த அவஸ்தையிலொழிவையடைகிறதோ அந்தக் காலத்திலந்தநிர்மலமான மனதினாலே யான்மாவைத் தானாகப்பார்த்துக்கொண்டு சந்துஷ்டியுண்டானவனா யான்மசுகத்தையே யனுபவித்துக் கொண்டிருப்பன். இந்தப்புருஷன் கன்மஞ்செய்தாலும் விட்டாலும் யாதொரு பிரயோசனமும் பாதகமுமில்லை அப்படிச்செய்யச் சக்தியில்லாத புருஷனுக்குமோக்ஷத்தி லிச்சையிருக்குமேயானா லவனுக்குக் கன்மயோகத்தைச் சொன்னோம் அதனாலேயுஞ் சித்தசுத்தித்துவாரா ஞானம்வந்து முன்சொன்னபலத்தையே யடைப்படுகிறபடியா லிரண்டுக்கும் யோகமென்றே யதிகாரிகளைக்குறித்துச் சொல்லப்பட்டது. (௨௦)

சுவாமி! மனது இந்திரியங்களின் துவாரா விஷயங்களையனுபவிக்கிறதனால் சுகமுண்டாயிருக்க இவைகளெல்லா மொழிவையடைந்தவிடத்தி லெப்படிச் சுகமுண்டாகும்? அருச்சுனா! விஷயசுகங்கள் நித்தியத்துவமல்ல; அநித்தியத்துடனுந் துக்கத்தையுஞ் செனன மரணங்களையுங் கொடுக்கப்பட்டது இந்த யோகீஸ்வரனனுபவிக்கப்படுகிற சுக மப்படிப்பட்டதல்ல. பின்னை யெப்படிப்பட்டதென்றால், நித்தியமாயும் ஆனந்தகரமாயும் ஒருகாலத்திலும் நாசமின்றியிருக்கப்பட்டது ஆனால் அந்தச் சுகமெப்படி லப்தமாமென்றால் தானும், மற்றச்சீவாளு மெப்போதும் நித்தியானாயும் ஆனந்த சொருபானாயுமிருக்க அது தெரியாமல் மறைபட்டாற் போலிருந்ததென்கிறதனை லத்தியந்த அதிசயமும், இந்திரியங்கள், மனது, புத்தி யிவைகளுக்குக் கோசரமில்லாதவரா யிருக்கப்பட்ட பரமான்மாவே தானாக இருக்கிறோமென்கிற சந்தோஷமுந் தேகேந்திரி



யங்கள் முதலான சகல விஷயங்களு மித்தையென்று விசாரித்து அவைகளி லெவ்வளவேனு மிச்சையின்றி யிருக்கப்பட்ட மனது மெப்போதுண்டாகிறதோ அப்போதுதான் அந்த ஆத்மசுக முண்டாகும். அந்தப்புருஷன்தான் அந்தச் சுகத்தை யறிந்தவனென்னும், அவனாலேயே யனுபவிக்கப்பட்டுக்கொண் டிருக்குமென்றுஞ் சொல்லப்படும். (௨௧)

அருச்சுனா! இன்னமும் அந்தயோகி ஆத்மானந்தமே தானாக இருக்கிறோமென்கிற லாபத்தையடைந்திருப்பதனாலதைக்காட்டிலு மதிகமான வேறொரு லாபமுமில்லையென் றெண்ணப்பட்ட யோகி, புத்திமுத லிந்திரியங்களாய் விடாமற் சதா சமாதியையடைந்திருக்கிற புருஷனுக்குச் சஸ்திர அஸ்திரங்கள் முதலானவைகளால் அவன் தேகத்தை வெட்டினாலும், அடித்தாலும் அதனாலுண்டாகப்பட்ட சீதோஷ்ணாதி சுகதுக்கங்களால், சொருபாகாரமா யிருக்கப்பட்ட புத்தியானது ஒருபோதுஞ் சலிக்கமாட்டாது; இவனையே யோகியென்று சொல்லப்படும். (௨௨)

சுவாமி! இந்த யோகமானது எப்படிச்சித்திக்கும்? அருச்சுனா! சகல சுகதுக்கங்களினாலு மெவனுடைய புத்தியானது சலியாதிருக்கிறதோ அதற்குத்தான் யோகமென்றுஞ் சொல்லப்படும். அப்படிப்பட்ட யோகமானது மகா பலத்தைக் கொடுக்கத்தக்கதென்றும் சாஸ்திர ஆசிரியருபதேசத்தினாலுண்டாகிற நிச்சயபுத்தியினாலிதுவரைக்குஞ் செய்து என்ன பலத்தைக் கண்டோமென்கிற தமோகுணமான ஆலசியாதிகளையடையாமல் விடைவிடாமல் தினந்தோறு முபாயமாக அப்பியாசிக்கவேண்டும். (௨௩)

அருச்சுனா! இன்னம் இந்திரியங்களானவை விஷயங்களை யடையாதபடி நிரோதஞ்செய்தவனையும், மனதினுடைய சங்கற்பங்களினாலுண்டாகப்பட்ட சகல கோரிக்கைகளையும் ஆந்தரவாசனையுடன் நிசேஷமாய் விடப்பட்டவனையும், சாஸ்திர ஆசிரியருடைய உபதேசத்தினால் விசாரித்த விவேகசென்னியமான மனதினாலே யான்மாவை தியானஞ்செய்தால் அப்போது சித்திக்கும். (௨௪)

சுவாமி! தமோகுணகாரியத்தினால் மனது சலிக்கிறது, சுபாவமாயிருக்கிறபோது அதை யெப்படி நிரோதஞ்செய்யக்கூடும்? அருச்சுனா! நித்தியமாயும் பூரணமாயு மிருக்கப்பட்ட கூடஸ்தமே தானென்கிற தைரியத்தினால் சலியாமலிருக்கப்பட்ட நிச்சயமான புத்தியினால் மனதையான்மாவினிடத்தில் மெள்ள மெள்ள நிறுத்தி யிந்திரியங்களாகவும் விஷயங்களாகவும் போகாமல் ஒழிவையடையும்படி

மெய்ப்பொருளில் [illegible] அப்படிச் செய்வதனால் மனது உபசாந்தியடைந்து அனைத்தும் [illegible] அன்னியமாய் பாவித்து விஷயமுமில்லாததனால் அப்படிப்பட்டவனுக்கு வேறொன்றைச் சிந்திக்கிறதற்குக் காரணமே யில்லை. இதனால் மனதைச் செயித்தவனாகி விடுகிறாய். (௨௬)

சுவாமி! இப்போது உத்தரவானபடி நடக்கவேண்டுமென்று நிச்சயித்துக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கும்போது அதை விட்டுப்போட்டு மனதானது [illegible] மறுபடியும் விஷயங்களிலே போகுகிறதே? அருச்சுனா! முன்சொன்னபடி நடக்கிற பழக்கத்தில் விஷயங்களைச் சிந்திக்கிறதற்குக் காரணமேயில்லை; எப்படியானாலும் அனாதி தொடர்பாக [illegible] சஞ்சலமான [illegible] யாகவே [illegible] விஷயங்களைத் தொடர்ந்தாலும் அந்தந்த விஷயங்களிலிருந்தும் [illegible] விசாரணை [illegible] [illegible] பரமாத்மாவினிடத்தில் [illegible] யப்பியாசஞ்செய்து வருவாயாகில் தனக்குத்தானே [illegible] நிற்பிப்பாயாக. (௨௭)

சுவாமி! இவ்விதமாய் நடந்தாலும் அதனாலுண்டாகும் பலன் [illegible] அருச்சுனா! ராகாதி விருத்திகள் விட்ட தனால் மனதைத் தெளிவாகவும் [illegible] அஞ்ஞானமுதலான [illegible] [illegible] [illegible] பரப்பிரம்மத்தை [illegible] [illegible] சுகமாய் [illegible] (௨௮)

அருச்சுனா! இவ்விதமாய் யுக்த யோகியானவன் எப்போதும் [illegible] [illegible] முதலான [illegible] [illegible] [illegible] [illegible] (௨௯)

அருச்சுனா! இவ்வண்ணம் யோகாப்பியாச [illegible] [illegible] [illegible] யோகியானவன் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பார்த்துக்கொண் டிருப்பன். (௨௯)

சுவாமி! [illegible] [illegible] [illegible] [illegible]



னும் முன்சொன்னதுபோற் பார்க்க அசமர்த்தனாயிருக்கப்பட்ட புருஷனெவ்விதமாய் நடந்தால் இந்த நிச்சயம் வரலாமோ அதை யனுக்கிரகஞ்செய்யவேண்டும் என்று கேட்ட அருச்சுனனைப்பார்த்துப் பார்த்தா அந்தப் புருஷன் வாசுதேவனாயிருக்கிற நம்மைச் சகல பிராணிகளிடத்திலும், சகல பிராணிகளையும் நம்மிடத்திலும் பத்தி பூர்வமாகப் பார்த்துவருவானேயாகில் வைனுக்கு நாசமில்லாத இடமில்லை, அவனென்னைத்தவிரவுமில்லை. இப்படி ஆத்மாவில் நிச்சயமாக வைத்துக்கொண்டு திரிவிதகரணங்களையும் புண்ணியகன்மங்களில் நயிப்பித்துத் தற்பதவாச்சியார்த்தமான பஞ்சபூதமுதலிய சமஸ்தவிஷயங்களு மென்னுடைய பின்னப்பிரகிருதியென்றும், அதுவு மென்னுடைய அபின்னப் பிரகிருதியைத்தவிர வேறில்லையென்றும் அதுவு மென்னைத்தவிர இல்லையென்றும் பத்திசெய்துகொண்டு வருவானேயாகில் தினக்கிரமமே முன்சொன்ன நிஷ்டையுண்டாகிச் சொரூபத்தை யடைவன். (௩௦)

சுவாமி! இவ்விதமா யனுஷ்டிக்கும்போது திரிவிதகரணங்களினாற்செய்யப்பட்ட கன்மங்களினாற் புண்ணியபாபங்கள் வந்தடையாதா? அருச்சுனா! யாதொரு புருஷனானவன் ஸ்தாவரசங்கமரூபங்களாகிய சமஸ்த பூதங்களிடத்திலும் நானொருவனே யிருக்கிறேனென்றும், அது தானென்றும் அறிந்து பத்தி விசுவாசத்துடனிருக்கப்பட்டயோகி ஜனகாதிகளைப்போல நிட்காமமாய்க் கன்மங்களைச் செய்துகொண் டிருந்தாலும், அல்லது ஆசிரமத்தைக் கூடின வியாக்ய வர்க்காதிகளைப்போல விட்டிருந்தாலும், அல்லது தத்தாத்திரேயர் முதலானவர்களைப்போல விதிநிஷேதகன்மங்களைத் தள்ளி நடக்கப்பட்டவனானாலும் என்னிடத்திலேயேயிருப்பன். (௩௧)

அருச்சுனா! இப்படிப்பட்டவர்களைப் பார்க்கிலும் சிரேஷ்டமான ஞானவந்தனைச் சொல்லுகிறேன் கேள்; ஆத்மாவில் தற்பதலட்சியார்த்தமான பரமான்மாவே தானென்கிற நிச்சயம்வைத்துக்கொண்டு பாகியத்திற் றிரிவித கரணங்களையும் புண்ணியகன்மங்களில் நயிப்பித்துவரப்பட்ட மகாபுருஷனானவன் பிறருக்குவந்த சுகதுக்கத்தைத் தனக்குவந்ததாக எண்ணித் தயவோடே சகல சீவனையும் சமமாகப் பார்க்கிறானே அவனே சிரேஷ்டன். அவனே யோகி. இந்தப்படி நடக்கிறதே நம்முடைய சித்தாந்தம். அதுதான் நமக்குச்சம்மதி. ஏனென்றால், மற்றவர்களால் லோகத்துக் குபகாரமில்லாததனாலேயும், இந்த மகாபுருஷனால் உபகாரமிருப்பதனாலேயும் சிரேஷ்டனென்றுசொன்னோம். (௩௨)

அவதாரிகை.—ஞானம் சித்திக்கிறதற்கு யோகசித்தியாக வேண்டுமென்றும், அந்தயோகம் சித்திக்கிறதற்கு இந்திரியம் மனது முதலானவைகளை நிக்ரகஞ் செய்யவேண்டுமென்றும், அவைகளை நிக்ரகஞ்செய்வதற்குச் சாதனங்களுடன் ஆகாரம், நித்திரை, ஆசன முதலான நியமங்களிருக்கவேண்டுமென்றும் சொன்ன விபரத்தைப் பார்த்தால், மனதைச் சமமாய் நிக்கிரகஞ் செய்யப்படுவது துர்லபமென்கிறதாக அபிப்பிராயங்கொண்டு அருச்சுனனானவன் சுவாமியைப்பார்த்து மதுசூதனா! மனதைச் சமமாய் நிறுத்தவேண்டுமென்றும் அதுவே யோகமென்றுஞ் சொல்லப்பட்டது; அதற்கந்த மனது சஞ்சலசுபாவத்தை யுடைத்தானதாகையாற் சமமாயுந் திரமாயும் நிறுத்துகிறதற்கு அசக்கியமாய்த் தோற்றப்படுகிறது. (௩௩)

சுவாமி! இன்னமு மெப்படிப்பட்டதென்றால் அந்த மனதானது ரசோகுணத்துடன் கூடினதாயும், சஞ்சலமாயும், விஷயங்களைக் கோரப்பட்டதாயும், இராகாதி விருத்திகளுடன் கூடினதாயுந், தேகேந்திரியங்களைச் சோஷிக்கப்பண்ணத்தக்கதாயு மிந்தக்காரியஞ் செய்யவேகூடாதென்று நிச்சயித்திருக்கும்போது அதையே மறுபடி செய்யும்படியாகப் பலவந்தஞ் செய்யப்பட்டதாயும், ஒருகிரியை யனுசரித்தால் அதைவிட்டு நீங்காமலிருக்கும்படியான திடத்தையுடையதாயும் லய விட்சேப கஷாயங்களையுடையதாயு மிருக்கப்பட்ட இந்த மனதைச் சமமாக நிக்ரகஞ்செய்கிறது வாயுவைக் கையினாற்பிடித்துக் குடத்திலடைப்பதுபோல துஷ்கரமென் றெண்ணுகிறேனென்று சொன்ன அருச்சுனனைப்பார்த்து. (௩௪)

பகவானானவர் அந்த வார்த்தைகளையெல்லாம் அங்கீகாரஞ் செய்து கொண்டு என்னசொல்லுகிறாரென்றால், அருச்சுனா! மனது சஞ்சலத்தை யுடைத்தானதாகையால் அதை நிக்ரகஞ் செய்யக்கூடாதென்கிறதாக நீ சொன்ன அர்த்தத்திற் சமுசயமில்லை, ஆனாலும் விஷயங்களிலுண்டா யிருக்கிற வைராக்ய பெலத்தினாலும் யோகாப்பியாச திடத்தினாலும் நிக்ரகஞ்செய்யக்கூடும். (௩௫)

ஆனாலருச்சுனா! இந்த அதிகாரியினாலே கூடாது இந்த அதிகாரியினாற் கூடு மென்கிற விபரமும் சொல்லுகிறோங்கேள் தேகமே நானென்றுஞ் செகத்துச் சத்தியமென்று மிராகாதி விருத்திகளுடன் கூடினவனும் இந்திரியம் சித்த முதலானவைகள் தனக்கு வசமில்லாமலு மிருக்கப்பட்ட அதிகாரியானவன் பூர்வம்சொன்ன யோகஞ் செய்யவேண்டுமென்றிச்சித்தாலு மந்தவிஷயத்தில் நீ சொன்னபடி சக்திவந்தனல்லவென்பது சரியே, இதன்றிச் சாதன சதுட்டய சம்



பத்தியுண்டானவனும், மோட்சத்தி லிச்சையு மிந்திரியங்கள் சித்த முதலானவைகளும் வசமானவன் வைராக்ய பெலத்தினாலும் யோகாப்பியாச வுபாயங்களினாலே சதாமுயற்சி யுடையவனுக்கு எளிதாகச் சமமாய்ச் சொரூபாகாரமாக மனதை நிக்ரகஞ்செய்யக்கூடும்; அதனால் லய, விட்சேப, கஷாய மென்னப்பட்ட பிரதிபந்தங்கள் நிவிர்த்தியாய்ப்பரிபூரண ஞானமுண்டாய்க் கைவல்லியமே யடைவன். ()

அவதாரிகை:—இப்படியப்பியாசஞ் செய்துகொண்டிருக்கும்போது தேகவியோகமானால் அவனுக்கென்ன பலமுண்டாகுமோவென்கிறவிபரந்தெரிந்துகொள்ள அருச்சுனன் இச்சையுடையவனாய்ப் பகவானைப் பார்த்து சுவாமி! துவக்கத்திற் சாதன சதுட்டயங்களையடைந்து குருமுகமாக உபதேசமும் பெற்றுக்கொண்டு யோகத்திலிச்சையுண்டானவனா யோகாப்பியாசமுஞ் செய்துகொண்டிருக்கும்போது கொஞ்ச காலத்துக்குப் பிறகு பூர்வகன்மங்களினாலே யதை விட்டு நழுவிப் பகிர்முகமான மனதினாலே நிஷேத காமிய கன்மங்களைச்செய்யாமல் நிட்காமமாய்ப் புண்ணிய கன்மங்களையுஞ் செய்துகொண்டு யோகத்தினிடமா யிச்சையுமுண்டா யிருக்கப்பட்ட புருஷன் யோகஞ் சித்தியடைகிறதற்கு முன்பாகவே யவன் தேகம்வியோகமாய்விட்டால் அவன் நல்லகதியடையான் என்றுநானெண்ணுகிறேன்.

சுவாமி! இந்த விஷயத்தில் இப்படிச் சமுசயம் என்வந்ததென்றால் சொர்க்காதிபலனைக்குறித்துக் காமியகன்மங்கள் செய்யாததாற் சுவர்க்கபலமுமில்லை, நிட்காமமாய்ப் புண்ணியகன்மங்கள்செய்து யோகாப்பியாசத்தினாலுண்டான சித்தநிக்கிரகம் முதலிற் பூரணமாகப் பண்ணாததால் மோக்ஷமடைய ஏதுவையுங் காணோம்; இந்த இரண்டினாலும் உபயப்பிரஷ்டனாய் விஸ்தாரமான மேகத்திலிருந்து விடுபட்ட ஒரு துண்டானமேகம் மற்றொரு விஸ்தாரமானமேகத்திற்போயடையு முன்னே நடுவில் வாயுவானது அதையடித்துச் சின்னபின்னமாகச் செய்துவிட்டதுபோ லிந்தப்புருஷன் ஆதாரமில்லாதவனாய் நாசத்தையடையானோ? (௩௮)

சுவாமி! இந்தச் சமுசயம் நிசேஷமாய்ப் போக்கடிக்கிறதற்குத் தேவரீரே யோக்கியர், இப்படிப்பட்டசமுசயம்நிவிர்த்திசெய்கிறதற்கு உங்களைத்தவிர வேறே யொருவரு மில்லை, எல்லாவற்றையுமறிந்த தேவரீரேயிதை நீக்கவேண்டும்? அருச்சுனா! யோகத்திற் பிரஷ்டனான அந்த யோகியானவனுக்கு இகலோகத்திலும் பரலோகத்திலுஞ் சுகமேயல்லாமற் றுன்பமொருக்காலுமில்லை. சுகத்தைக் குறித்துக் கங்கணங்கட்டினவன்போல் மோக்ஷபலத்தை யிச்சித்துப்

புண்ணிய கன்மங்களை யாரம்பித்து விட்டவனொருக்காலுந் துற்கதி யடையான். (௩௯)

ஆனாலும்! சுவாமி! அந்தயோகி யெந்தப்பலத்தை யடைவன்? அருச்சுனா! யோகத்திற் பிரஷ்டனானவன் அநேக திரவியங்களைக் கொண்டு அநேக பிராமணருடன்கூடி அசுவமேத முதலான எக்யங்கள் செய்தவர்களுக் கெந்தலோகமுண்டாகுமோ அந்தலோகத்தையடைந்து வெகு காலஞ் சுகமனுபவித்துத் திரும்பி நல்லகுலத்தோடு மப்பியாசத்துக்குத் தகுந்த நிட்காமகன்மங்களைச் செய்தவரப்பட்ட நல்ல ஆசாரகிதமான ஐஸ்வரியத்தோடுங் கூடியிருக்கப்பட்டவர்களுடைய கிரகத்தில் அவதரிப்பன். (௪௰)

அருச்சுனா! கொஞ்சநாள் அப்பியாசஞ்செய்தவனுக் கிந்தப் பலனைச்சொன்னேம், அநேகநாள் அப்பியாசஞ்செய்து கொஞ்சநாளடைய வேண்டிய பாக்கியிருந்தாற் கைவல்லியத்தை யடையும்படியா யிருக்கப்பட்ட யோகிக்குப் பலனைச்சொல்லுகிறேன்கேள், மகா புத்திவந்தாளாயும், மகாகுலத்திற்பிறந்திருக்கப்பட்டவளாயு மிருக்கிற ஆருடாளாகிய பிரமநிஷ்டனுடைய குலத்தில்வந் தவதரிப்பன். இப்படிப்பட்ட ஜனன முண்டாகிறது லோகத்தில் மிகப்பவும் அபுருபம்,

சுவாமி! அவ்விடத்திற் சனித்தபின் என்னசெய்வான்? அருச்சுனா! பூர்வசென்ம சமஸ்காரத்தினால் விட்டகுறையைத் தொட்டுக் கொண்டு திரும்பவும் அந்த யோகத்தையே யப்பியாசித்து மோட்சமார்க்கத்துக்கு வேண்டிய பிரயத்தினஞ் செய்துகொண்டேயிருந்து அந்தச் சென்மத்திலேயே மோக்ஷமடைவன். சுவாமி! ஐஸ்வரியந்தானுடைய கிரகத்தில் அவதரித்தா லதனால் விக்கினங்கள் வாராதா? அருச்சுனா! அந்த யோகியானவன் திரும்பவும் யோகாப்பியாசஞ் செய்யும்போது அந்த விஷயங்களினாலொருபோதும் விக்கினங்கள் வரவே மாட்டாது அல்லது வந்தாலும் அதில் அழுந்திப்போகாமல் வைராக்யபெலத்தினால் நிராகரித்துவிட்டுத் தான் செய்திருக்கிற பூர்வாப்பியாச பெலத்தினால் திரும்பவுமந்த யோகத்துக்கு விக்கினங்கள் வாராமலிருக்கிறமார்க்கத்துக்கே அந்த விஷயங்களை உபயோகப்படும்படியாகச் செய்வித்துக்கொண்டேவருவன். அதனா லந்தவிஷயங்களானவை அந்த யோகாப்பியாசந் திடமாகிறதற்கே பலாத்காரஞ் செய்விக்கும்படியான எதுவையுண்டாக்கித் தேகாந்தத்திற் கைவல்லியத்தைக்கொடுக் குமேயல்லாமல் அவனுக்குமட்டும் பிரதிபந்தங்களொருபோதுஞ் செய்யவேமாட்டாது; இப்படியிருக்க அனந்த சென்மங்களிற்செய்தபுண்ணியத்தினாற் சித்த சுத்தித்துவாரா ஞானம்வந்த



புருஷனுக்கும் அந்தச் சென்மத்திலேயே மோக்ஷமுண்டென்பதற்கு நாம் சொல்லவாவேண்டும். (௪௨)

அருச்சுனா! இன்னம் அந்த யோகத்தினுடைய பெருமையும், அதனாலுண்டாகிற பலனையுஞ் சொல்லுகிறேன்கேள். யோகஞ்செய்ய அதை யறியவேண்டுமென்று யதார்த்தமா யிச்சையுண்டான மாத்திரத்தில் அவன் சகல பாபங்களினுமிருந்து விடுபட்டவனும் யாதொருதிரிகுணாத்மகமான வேதங்களுக்குட்பட்ட காமிய கன்மபலன்களுந்தொடாமல் அதீதமாயிருக்கிற மோக்ஷபலத்துக்கே யதிகாரியாய்விடுவன். (௪௩)

அருச்சுனா! இப்படியிருக்க யோகியானவன் அநந்தசென்மங்களிற் செய்த புண்ணியபரிபாகத்தினால் விடாமல்யாத்திரம் பிரயத்தனஞ்செய்துவருவானேயாகில் அதனால் அஞ்ஞானமுதலிய சகல சமுசயாதிகளும் விடுபட்டுச் சித்தசுத்தனாகி யந்தச் சென்மத்திலேயே மோக்ஷமடைவானென்பதற்கொருவரைக் கேட்கவாவேண்டும்." (௪௪)

அருச்சுனா! கிர்ச்சரசாந்திராயணாதி விரதங்கள் தபசுமுதலானவைகள் செய்யப்பட்டவர்களைப்பார்க்கிலும், வேதாந்தசாஸ்திரங்களினுடைய அர்த்தங்களைத் தெரிந்து பிறருக்குப் போதிக்கும்படியான பரோக்ஷஞானவந்தரை பார்க்கிலும், சுவர்க்காதிகள் முதலான இஷ்டாபூர்த்தங்களைக்குறித்துக் காமியகன்மங்கள் செய்யப்பட்டவர்களைப் பார்க்கிலும், சீவாத்மா பரமாத்மா அயிக்கியஞ்செய்துவருகின்ற இந்த யோகியென்னப்பட்ட ஞானிமிகவும் சிரேஷ்டனானதால் அந்த ஞானியாக நீயுமாகி விடவேண்டும். (௪௫)

அருச்சுனா! இந்த ஞானியைத்தவிரச் சித்திகளுக்காகவும் சித்த நிரோதத்துக்காகவும், இயம நியமாதி யஷ்டாங்கயோக முதலானவைகள் செய்யப்பட்ட யோகிகளைப்பார்க்கிலும் என்னுடைய பக்தன் சிரேஷ்டனென்றுஞ் சொல்லுகிறேன்கேள். யாதொருவன் என்னை யதார்த்தமாயறிந்து நம்மிடத்தில் மனதைவைத்துப் பகவானாயிருக்கிற நம்மை, யேகதேசமாகப் பாராமற் சர்வபூதங்களிடத்திலும் நாமிருக்கிறோமென்றும் சர்வபூதங்களும் நம்மைத்தவிர இல்லையென்றும் உபாசிக்கிறானோ, அவனே யிந்த யோகிகளுக்கும் பெரியவனென்றும் அவனே யெனக்குப் பிரியனென்றும் நம்முடைய நிச்சயமானதால் நீயுந் தொம்பதலட்சியார்த்தமானவரே தற்பத லட்சியார்த்த மென்னப்பட்ட நிச்சயத்தை யாந்தரத்தில் வைத்துக்கொண்டு பாகியத்தில் இப்போது நாம்சொன்ன விதமாகத் திரிகரணங்களாலே பத்திசெய்துகொண்டு வருவாயாகில் மோக்ஷமேயடைவாய். (௪௬)

பரமானந்தரூபமாயும் பக்தாளுக் கபீஷ்டத்தைக் கொடுக்கிறவரு மாகிய பகவானான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை நமஸ்காரஞ்செய்கிறேன்.

ஆறுவது
அப்பியாசயோக அத்தியாயம் முற்றிற்று.
ஆ அத்தியாயம் ௬-க்குச் சுலோகம்-௪௭.
ஸ்ரீபாண்டவசகாயனே துணை.

---

உ
ஸ்ரீபக்தஜனப்பிரியாயநம:

# ஏழாவது
## விக்ஞானயோகமென்னப்பட்ட
# பத்தியோக அத்தியாயம்.

---

அவதாரிகை.—முந்தின ஆறாமத்தியாயத்தில் தொம்பதசோதனை செய்து லட்சியார்த்தம் போதித்தபின்பு அதைத்தவிர அன்னியமில்லாமலிருக்கிற தற்பத லட்சியார்த்தமாகிய பரமாத்மாவே யிருக்கிறாரென்கிற திடப்படாததனாலே யதற்குப் பிரதிபந்தமாகத் தோற்றுகிற தற்பதவாச்சியார்த்தங்களும் அதைத்தவிர அன்னியமில்லையென்று உத்தமமாயிருக்கப்பட்ட பத்திசெய்தால் அந்தத்திடம் வராதோவென்கிற அபிப்பிராயங்கொண்டு முந்தின அத்தியாயத்தின்முடிவில் அட யோகிகளைப் பார்க்கிலும் பத்தன் சிரேஷ்டனென்றுசொன்ன அர்த்தத்தை விஸ்தாரமா யிந்த யேழாம் அத்தியாயத்திற் சொல்லத் தொடங்குகின்றார். (௧)

சுவாமி! முந்தின அத்தியாயத்தின்முடிவி தேவரீரை யுபாசிக்கிறவர்களே சிரேஷ்டமானவர்களென்று அனுக்கிரகஞ் செய்தீர்கள், அதற்குத் தேவரீருடைய நிசசொரூபத்தையறிந்தல்லோ உபாசிக்க வேண்டும். அது தெரியும்படி யனுக்கிரகம் பண்ணவேண்டும். நாமே பிரத்தியக்ஷமாயிருக்கும்போது உனக்குச் சமுசயம்வருவானேனென்றால், தேவரீரை வைகுண்டத்திலிருக்கிறதாகச் சில புராணங்களிலும் திருப்பாற்கடலி லிருக்கிறதாகச் சில புராணங்களிலும், மச்ச கூர்ம வராகாதிமுதலான ரூபங்களாக இருக்கிறதாகச் சிலபுராணங்களிலுஞ் சொல்லுகிறபடியினாலும், தேவரீ ரிதற்குமுன் அனுக்கிரகஞ் செய்திருக்கிறதில் அவ்வியக்தரென்றும், பரிபூரணரென்றும், நித்தியரென்றும், நின்மலரென்றும், நிர்க்குணரென்றும் தெரிவித்திருப்பதனாலே இதி லெதுநிசமோ அதையறிய விரும்புகிறேன்? அனுக்கிரகம்பண்ண



வேண்டுமென்றுகேட்ட அருச்சுனனைப்பார்த்துக் கிருபையுடனே பகவானவர் என்ன உத்தரவு சொல்லுகிறாரென்றால், அருச்சுனா! பரமேஸ்வரனாகிய நாமே யெல்லாவற்றிற்கு மாதாரமாயிருக்கிறவரென்றும் அவ்வியக்தரென்றும், பரிபூரணரென்றும், நித்தியரென்றும, நின்மலரென்றும், நிர்க்குணரென்றும் முன் நாம் சொன்னது நிசமே, அப்படியே நீயறிந்து பத்திசெய்யவேண்டுவது. அதற்கு மாயைக்குட்பட்ட திரிகுணங்களையடைந்த சீவனாலே யிந்தப்பத்திசெய்யக் கூடாதாகையா லிடைவிடாத ஞானம், வைராக்கியம், கீர்த்தி, அஷ்டைஸ்வரியம், பெலம், லட்சுமீகரம் இந்த ஆறுகுணங்களுடன்கூடிச் சகுணமூர்த்தியாக நாமேயவதாரஞ் செய்ததுபோலவும், மகாமாயையென்னப்பட்டது தோற்றுவித்துக் கொண்டிருப்பதை நாமேயிவ்விதமாகப் பிரகாசிக்கிறோமென்கிற ஞானத்தினாலேபத்திசெய்துகொண்டுவந்தால் தினக்கிரமேண முன்சொன்ன நிர்க்குணபத்தி சகசமாய் வந்தபாவம் வைகுண்டந்திருப்பாற் கடலாதியிலிருக்கிறதாகச் சொல்லப்பட்ட புராணங்களினுடைய நிச்சயமு மாயைக்குட்பட்ட சீவனைப் பற்றிச்சொன்னதேதவிர மாயையைக்கடந்திருக்கிற புருஷனைப்பற்றிச் சொன்னதல்ல. ஆனதாற் சீவபாவமுள்ளவரையிற் பரிபூரணமாயிருக்கிற பரமான்மாவே, அவ்விடங்களிலும் சகுணமூர்த்தியாக யிருக்கிறாரென்றும், மவர சமஸ்த மூர்த்திகளாகவுந் தோற்றப்படுகிறாரென்றும் உத்தமமான பத்திசெய்யவேண்டும்; அதன் விபரங்களையுஞ் சொல்லுகிறேன் கேள், அதெப்படிப்பட்டதென்றால், எதை யறிந்ததனாலே யதைவிட வேறொன்றும் அறியவேண்டுவதில்லையோ, எதைப் பார்த்த மாத்திரத்தி லதைவிட வேறே யாதொன்றையும் பார்க்கவேண்டுவதில்லையோ, எதையடைந்ததனா லதைவிட வேறொன்றையு மடையவேண்டுவதில்லையோ, அப்படிப்பட்ட ஞானத்தையும் விக்ஞானத்தையுஞ் சொல்லுகிறோம். (௨)

ஆனால், அருச்சுனா! இதை யெல்லாரு மறிந்தனுபவிக்கலாமேயென்று கேட்பாயாகில், நம்முடைய கிருபையன்றிவாராது, அதுவுமன்றி யெல்லாவற்றிற்கு மிகவும் சிரேஷ்டமுள்ளதாகையால் எல்லாருக்குஞ் சக்கியமுமாகாது. ஏதனாலென்றால், இந்தப் பிரபஞ்சத்திலிருக்கிற தாபரசங்கமமாகிய எண்பத்துநான்குலட்சஞ் சீவராசிகளுக்குள் மனிதர்களைத் தவிர மற்ற சீவர்களுக்குப் பகவானொருவனுண்டென்கிற ஞானமே கிடையாது; அப்படி நினைக்கத்தக்க ஞானத்துடன் கூடியிருக்கப்பட்ட மனிதர்களிலேயும் அநேகம்பேர்களுக்கு ஒருவன் தான் உண்டென்று நினைப்பன், அப்படி நினைக்கப்பட்ட ஆயிரம்பேர்களிலொருவன் பல்விதகாமிய கன்மங்கள் செய்தவரு

வான்; அப்படிக் கருமங்கள் செய்துவரப்பட்ட ஆயிரம்பேர்களி லொருவன் தேவதைகளைக்குறித்து யாகாதி முதலான கருமங்கள் செய்துவருவான். அப்படிச்செய்யப்பட்ட ஆயிரம்பேர்களி லொருவன் நிட்காமியகருமங்கள் செய்வான் அப்படிச்செய்யப்பட்ட ஆயிரம்பேர் களிலொருவன் என்னை யறியவேண்டுமென் றிச்சிப்பன், அப்படி யிச்சிக்கப்பட்ட ஆயிரம்பேர்களிலொருவன் என்னை யதார்த்தமா யறியவேண்டுமென்று இவாத்துடன் எத்தனப்படுவன்; அப்படி யெத்தனப்பட்ட ஆயிரம்பேர்களிலொருவன் என்னைப் பரோக்ஷமா யறிவன்; அப்படியறிந்த ஆயிரம்பேர்களிலொருவன் என்னைத் தானே கக்கண்டு அபரோக்ஷமாயனுபவிப்பன், இப்படி யபூருவமாயிருக்கப் பட்ட ஞானத்தை யெல்லாராலேயு மெப்படித்தெரிந் தனுபவிக்கக் கூடும்; அதனாலே யருச்சுனா! நீ நமக் கெங்கே வரப்போகிறதென்கிற அபாவ ஞானத்தை யடைந்துவிடாதே அந்த ஞானத்துக்குண்டாகிய சிரேஷ்டத்துவத்தைச் சொன்னேம்; ஆனால் உன்னைப்போலொத்த புண்ணிய புருஷர்களுக்குமாத்திரம் வெகுசுலபமாயடையத்தக்கதாக விருக்குமாகையால் அந்தவிஷயத்தில் நீ சமுசயப்படவேண்டுவதில்லை.

அவதாரிகை:—பரிமுகத்தினால் ஏகாக்கிரதையாய்த் தோற்றுகிற தையத்தர் முகத்தினால் தன்னைத்தவிர அன்னியமில்லையென்று தெரியத் தக்கதாக எந்தஞானமுண்டோ அந்தஞானத்தைப் போதிக்கிறகீதாந் தம் பலவிதங்களா யுண்டாயிருக்கிற சிருஷ்டிக்கிரமத்தைச் சொல்லத் தொடங்கி யதுவுந் தன்னுடைய சொரூபபிரகிருதியான மாயையினா லுண்டானதென்றும் சொல்லத்தொடங்குகிறார். அருச்சுனா! பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம் இந்த எட்டும் நம்முடைய பின்னப்பிரகிருதியினா லுண்டானது. அதுவே சுத்த சடம். (௪)

அருச்சுனா! இவைக்காட்டிலுஞ் சிரேஷ்டமாய் நம்முடைய அபின்னப்பிரகிருதி யொன்றுண்டென் றறியவேண்டும், அதனால் சகல சகத்துகளுந் தரிக்கப்பட்டிருக்கிறதாயும் சீவனென்று பேருடைத் தானதாயும் முன்சொன்ன எட்டுவிதமான சடங்களையும் இன்ன தின்னதென் றறியத்தக்கதாயுமிருக்கும். (௫)

அருச்சுனா! சர்வபூதங்களு முண்டாகிறதற்குக் காரணமாயிருக் கப்பட்ட இரண்டு பிரகிருதிகளுண்டு. அவைகளிடத்திலிருந்து சமஸ்தமுமுண்டாம். அதெப்படியென்னில் பின்னப்பிரகிருதி சமஸ்த தாவர முதலான தேகங்களாம். அபின்னப்பிரகிருதி சமஸ்தசீவர் களாம். இந்த இரண்டுக்கும் நம்முடைய சந்நிதானமில்லாவிடில் வேறே சக்தியில்லாதகனால் இந்த ரீதியாகச் சமஸ்த பிரபஞ்சங்களுமுண்டாகிற



தற்கும் லயமாகிறதற்கும் நாமே காரணமென்று சொல்லுவார்கள் அதுவே தவிர யதார்த்தமாய் நம்முடைய திட்டியாக நாமொன்றுஞ் செய்யவேயில்லை, அதெப்படி யென்றால் பின்னப்பிரகிருதியைப் பிரவிலாபனக்கிரமமாய் விசாரித்தால் அபின்னப்பிரகிருதியைத்தவிர வேறில்லாததனாலும் அந்த அபின்னப்பிரகிருதியை விசாரித்தால் நம்மைத்தவிர வேறில்லையென்றுந் தெரியவருமானதால் இந்த விதமாகச் சமுசயமின்றி விசாரித்து நாமே எங்கு மிருக்கிறோமென்கிற நிச்சயத்தினாலே உத்தமமாயிருக்கிற பத்தியை நீ செய்யவேண்டுவது.

சுவாமி! உற்பத்தி லயவிபரந் தெரியப்பட்டது, திதி காலத்தில் தேவரீ ரெப்படியிருக்கிறீர்கள்? அருச்சுனா! நம்மைவிட அன்னியமா யொருவஸ்துவுங் கிடையாது. அதெப்படி யென்றால், தங்கக்கயிற்றிற் சுவர்ணமணிகள் கோக்கப்பட்டாப்போலவும், தங்கத்தினிடமாய் ஆபரணங்களுண்டானதுபோலவும், இந்தச் சமஸ்தலோகங்களும் நம்மிடத்திலேயே கோக்கப்பட்டிருக்கிறது. இதனாலே சமஸ்த லோகங்களுந் நம்மைத்தவிர வேறில்லையென்றறிக (௭)

சுவாமி! தேவரீரே யெங்குமிருந்தாலும் பசுவின் தேகமெல்லாம் பாலிருந்தாலும் ஸ்தன்னியத்திலிருந்து வெளிப்படுவதுபோலத் தேவரீ ரிருக்கிற முக்கியமான *விபூதிகளைச் சொன்னால் அதையறிந்து நான் பத்திசெய்யலாம். (௮)

அருச்சுனா! சலத்தினிடத்தில் ரசகுணம் நாமே, சூரியசந்திராதி களிடத்திலுண்டாகிய தேசசுகுணம் நாமே, சகல வேதங்களிடத் திலும் பிரணவமந்திரம் நாமே, ஆகாயத்திலுண்டானசப்தகுணம் நாமே, மனிதர்களிடத்திலுண்டான புண்ணியமாயிருக்கப்பட்ட புரு ஷப்பிரயத்தனம் நாமே, பூமியினிடத்திலுண்டான சுகந்தகுணம் நாமே, அக்கினிடத்திலுண்டான பிரகாசகுணம் நாமே, சகல சீவாளிடத் திலுண்டான பிராணவாயுவாகிய ஆயுசு நாமே, தபசுகளிடத்திலுண் டான சீதோஷ்ணாதி ०சகனமுள்ள சாந்திகுணம் நாமே. (௯)

அருச்சுனா! இன்னமுஞ் சிருஷ்டியிலுண்டான சமஸ்த சீவராசி களும் அந்தந்தச்சாதி யந்தப்படி யுண்டாகிறதற்கு பீஜசத்தி நாமே, அப்படிப்பட்ட சத்தியுள்ள நம்மை விசாரித்து அடைகிறதற்கு அனு கூலமான நல்லசெய்கைகளைப்பற்றி நிச்சயிக்கப்பட்ட புத்திமான்களு டைய புத்தி நாமே, தேவாலயமுதலான நல்ல தருமங்கள் செய்யப் பட்டவர்களுடைய சாமார்த்தியமுள்ள கீர்த்தியான தேயசு நாமே (௰)

அருச்சுனா! இன்னம் வாராதசுவர்க்காதிசுசங்கள் முதலானவை களில் ரசோகுணமான காமனாலுண்டாகிய கோரிக்கைகளும் வந்ததில்

---

* விபூதி=செல்வம். ० சகனம்=பொறுமை.

திருப்தியடையாமல் தமோகுணமான இச்சையுமின்றி நிட்காமகன்மங்கள் செய்துவரப்படாநின்ற சத்துவகுணவந்தாலுடைய பலமும் நாமே சாஸ்திரியமாய் விவாகஞ்செய்துகொண்டு குலவுத்தாரணநிமித்தம் புத்திரோற்பத்திக்காகச் சையோகஞ்செய்யும்போது எந்தச்சையோகத்தினாற் புத்திரோற்பத்தியுண்டாகிறதோ அந்தக் காமமு நாமே.

அருச்சுனா! இத்தியாதிவிதங்களாக நாமேயிருந்தாலும் பற்றுதல்மட்டும் அடையமாட்டோம். அது எப்படியென்றால் மாயையினாலுண்டான மூன்று குணங்களுக்கு முட்பட்ட சீவேசுரஜகத்தைச் சத்தியமாயெடுப்புக்கொண்டு அவைகளிற் சமையோடுங்கூடப் புண்ணியகருமங்களைச் செய்துகொண்டிருக்கப்பட்ட சத்துவகுணத்தை யுடையவனும் யாகாதிகள் முதலான தானதன்மங்கள் செய்வதனாலுண்டான பலவித விட்சேபங்களை யடையப்பட்ட ரசோகுணத்தை யுடையவனும் சார்வதாதேகமே நானென்கிற திடபுத்தியினாற் சோக மோகதுக்காதியடையப்பட்ட தமோகுணத்தை யுடையவனுமான இந்த மூன்று குணங்களுக்குட்பட்ட வாளிடத்தில் சீவனைப்போல நாம் வசமாகமாட்டோம்; அவைகளெல்லாம் நம்முடைய பின்னைப் பிரகிருதி அபின்னைப்பிரகிருதியைச்சேர்ந்த புருஷாவென்றறி. (௧௨)

சுவாமி! இப்படிப்பட்டவும்மை யெல்லாரும் ஏனறியவில்லை? அருச்சுனா! . . குணத்துக்குட்பட்ட காமக் குரோத லோபாதிகளினாலே செகத்திலுள்ள சகல சீவாளும் மறையப்பட்டுத் தேகமே நானென்றுஞ் செகத்தைச் சத்தியமென்றும் மோகத்தையடைந்திருப்பதால் அந்தப் புருஷாளாலே யிந்தக் குணங்களுக்கும் . அதீதனையும், பரனையும், யெல்லாவற்றிலுங் கலந்திருந்தும் ஒன்றினும் பற்றில்லாமலும் நாசமின்றியுமிருக்கிற நம்மையறியார்கள். (௧௩)

சுவாமி! இப்படிப்பட்ட வும்மை யார்தானறிவார்கள்? அருச்சுனா! சத்துவாதி மூன்றுகுணங்களுக்குங் காரணமாயும், அதிக அற்புதமாயும், ஆச்சரியத்தோடுங் கூடினவனுமிருக்கிற நமக் கன்னியமின்றியிருக்கிற சுத்தசத்துவரூபியும், சுத்த சங்கற்பமுமான நம்முடைய மாயையை யிதரயெத்தனங்களினாலே கடக்கச் சக்கியமாகாது; ஆனால் நிட்காமகன்மங்கள்செய்து சித்தசுத்திதுவாரா குருவினிடத்தி லுபதேசம் பெற்றுக்கொண்டு நம்மையே சரணமடைந்து இடைவிடாமல் நம்மையே அவிபசாரபத்தியாக ஆருபாசிக்கிறார்களோ அவர்கள் ஒருவராலேயுங் கடக்கப்போகாத நம்முடைய மாயையைக் கடந்து நம்முடைய சொரூபத்தையே யடைவார்கள்.



சுவாமி! இப்படியே யெல்லாரும் என் உபாசிக்கவில்லை? அருச்சுனா! மாயாகாரியமான திரிசியவிஷயங்களினாலே தன்னை மறந்து விவேகங்கெட்டு அசுரசம்பத்தையடைந்து மூடமனதினாலே பாபசீலத்தை யுடைத்தான புருஷ அதமர்கள் நம்மையொருக்காலு முபாசிக்கமாட்டார்கள். (௧௫)

அருச்சுனா! இப்படியானால் யார்தா னுபாசிப்பார்களென்று கேட்பாயேயாகில் நம்மை யுபாசிக்கப்பட்டவாள் அநேகருண்டு அவர்களில் முக்கியமாயிருக்கப்பட்ட புண்ணிய புருஷாள் நான்குபேருண்டு; அவர்கள் யாரென்றால், தன்னுடைய தேசமுதற் புத்திரதாராதி விஷயங்களுக்கு விபாதிமுதலான சங்கடங்கள் சம்பவிக்குங் காலத்தில் அவைகள் நிவிர்த்தியாகும்பொருட்டு இதரதெய்வங்களைக் கோராமல் என்னையே கோருகிற புருஷனோ அவனும், இகத்திலும் பரத்திலும் போகங்களனுபவிக்கவேண்டுமென் றிச்சையுண்டாகி யன்னிய தேவதைகளைக்கோராமல் என்னையே கோருகிற புருஷனோ அவனும், நம்மை யதார்த்தமாயறிந்து நம்மை யடையவேண்டுமென்றும், அதற்குத் தகுந்த சாதனங்களுடனே எத்தனப்பட்ட முமூட்சுத்துவத்தை யுடைத்தான புருஷனோ அவனும், என்னைத் தானாக அறிந்திருக்கப்பட்ட ஞானியாகிய மகாபுருஷனுமாக இந்த நான்குபேர்களும் நம்மையே யுபாசிப்பார்கள். (௧௬)

அருச்சுனா! இந்த நான்குபேர்களுக்குள் ஞானிமாத்திரம் எப்போதும் நம்மிடத்தி லொருமைப்பாடாக மனதைவைத்து வேறே சிந்தையில்லாம லிருக்கிறவனானதால் அவனென்றும் நானென்றும் பேதமில்லாததனால் அவனே சிரேஷ்டன். அந்த ஞானிக்கு நான் அத்யந்த பிரியனாயிருப்பேன் அவனெனக்கும் அத்யந்த பிரியனாயிருப்பன். (௧௭)

சுவாமி! இப்படியானால் மற்ற மூவருக்கு மென்னகதியுண்டாகும்? அருச்சுனா! நான்குபேரும் உத்தமரேயானாலும் தேகவாசனை லோகவாசனை சாத்திரவாசனையாகிய மூன்றுவாசனைகளுஞ் சுத்தமாய் விடப்பட்டவனாய் நம்மையே ஏகாந்தமாரப் பத்திசெய்துகொண்டிருக்கப்பட்ட அந்த ஞானியானவன் நாமேயென்றும், நாமேயவனென்றும் நம்முடைய சித்தாந்தம். இப்படிப்பட்ட உத்தமோத்தமனாகிய ஆத்மஞானி என்னிடத்திற் சித்தத்தைநிறுத்தி யென்னைத் தானாக அடைந்திருப்பதனாலே யவனே மகாசிரேஷ்டன்; மற்றமூவருந் திரிவித வாசனைகளிற் சம்பந்தப்பட்டிருந்தாலும் எவ்விதமான சுகதுக்காதிகள் வந்தாலும் நம்மையே நினைத்துச் சகலசந்துக்கும் நம்முடைய சத்தையைத்தவிர வேறே சத்தையில்லை யென்றும், யெங்கும் வியாபகமாயிருக்கிற பரமாத்மாவே லோகாட்சணார்த்தமாகச் சகுணமூர்த்தியாய்

அவதாரங்கள் செய்திருக்கிறார் என்னும் நிச்சயபுத்தியினால் நம்மிடத்திற் பக்திசெய்துகொண்டு வருவதால் அவனையும் உத்தமபுருஷனென்று சொன்னோம். (௧௮)

அருச்சுனா! இந்த மூன்றுபேர்களும் இப்படி யனேகஜென்மங்களிற் செய்துவரப்பட்ட சுகிர்தவிசேஷத்தினாலே ராகத்துவேஷாதிகள் முழுதும் விடுபட்டுச் சித்தத்திலிருக்கிற மலினமெல்லாம் போனபின்பு ஞானமானது லப்தமாகும். அந்த ஞானத்தினாலே யிந்தச் சராசராத்மகமான பிரபஞ்சமெல்லாம் வாசுதேவனாகிய நம்மைத்தவிர வேறேயன்னியமில்லையென்று சமுசயமின்றித் தெரிந்து சதா நம்மையே யுபாசிப்பார்கள். அப்படி யுபாசிக்கப்பட்ட மகாத்மாக்கள் நம்முடைய பதத்தையே ப்ராபமடைவார்கள், ஆனவிப்படிப்பட்ட உத்தமபுருஷர்கள் லோகத்தில் மிகவுந் துர்லபமாயிருக்கும். (௧௯)

சுவாமி! மூன்றுபேர்களில் இரண்டுபேர்கள் உம்முடைய பதத்தையடைந்தாலுமடையலாம் போகங்களை யிச்சிக்கப்பட்டவனுந் தினக்கிரமேண வெப்படி யடைவன்; சுவர்க்காதிகளை யிச்சிக்கப்பட்டவாள் கூடச் சனன மரணத்தைவிட்டு நீங்கமாட்டார்களென்று முன் அநுக்கிரகஞ் செய்திருக்கிறீர்களே யென்றுகேட்ட அருச்சுனனைப் பார்த்து நான்கு சுலோகத்தால் உத்தரஞ்சொல்லுகிறார். அருச்சுனா! சுவர்க்காதிபோகங்களைக்குறித்து நமக்குக் கீழ்ப்பட்ட தேவதைகளையும் புத்திரனுண்டாக வேண்டுமென்றும், கீர்த்திகள் பெறவேண்டுமென்றும், சத்துருக்களைச் செயம்பண்ண வேண்டுமென்றும் இன்னம் பலவிதமான கோரிக்கைகளினாலே விவேகங்கெட்டுத் தேவதைகளுக்குத் தாழ்வாயிருக்கப்பட்ட பூதப்பிரேத பசாச முதலானவைகளையும் அவனவனுடைய பூர்வசென்மங்களின் வாசனைகளினாலே யந்தந்தத் தெய்வங்களுக்குத் தகுந்த அந்தந்த நியமங்களோடேகூட உபாசிக்கிறவர்களைக்காட்டிலும் எல்லாத்தேவதைகளுக்கும் நம்மையே பெரிய தெய்வமென்று தெரிந்து இதரதெய்வங்களை நினையாமல் நம்மாலேயே போகங்களடைய இச்சித்து நம்மையே நினைத்துப் பத்திசெய்யப்பட்டவன் மிகவும் சிரேஷ்டனானதால் அவனுக்கு நான் வேண்டியபோகங்களையுஞ்சொரிந்து அந்தப் போகங்களை யநுபவித்துத் திருப்தியடைந்தபின் நம்மையே யடையும்படியாகவுஞ் செய்விப்போம். (௨௰)

அருச்சுனா! இன்னமும் எந்தெந்தத் தேவதாபத்தன் எந்தெந்தத் தேவதைகளை யுபாசிக்க இச்சிப்பானோ அந்தந்தப் பத்தனுக்கு அந்தந்தத் தேவதைகளிடத்திற் பத்தியுண்டாகும்படிப் பண்ணுவோம். (௨௧)



அருச்சுனா! இன்னம் அந்தந்தத் தேவதைகளிடத்திற் சிரத்தாபத்திகளுடனே யவைகளையே யாராதிக்கிறதற்குஇச்சிப்பார்கள். எந்தெந்த தேவதைகளைக்குறித்து எந்தெந்த ஆராதனை செய்வார்களோ அவாளவாளுக்குத்தகுந்த பலன்களும் நம்மாலேயே நேமகப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட பலன்களை யந்தந்தத் தேவதைகளாலேயே யவாளவாளுக்கு லபிக்கும்படியாகவும் பண்ணிவைப்பேன். (௨௨)

அருச்சுனா! இன்னமிவ்விதமா யந்தந்த தேவதைகளுக்கும் நாமே யாதாரமாயிருந்து பலத்தைக்கொடுத்து வந்தாலும் அந்தந்த தேவதைகளை யுபாசிக்கிற புருஷாளுக்கும், நம்மை யுபாசிக்கிற பத்தாளுக்கும் பேதமுண்டு. அதெதென்றால் அற்பபுத்தியுடைத்தானவாளெக்கண்ணியமாயிருக்கிற தேவதைகளை யுபாசித்து அவர்களாற் கொடுக்கப்பட்ட பலன்களையுமடைவார்கள். அந்தத் தேவதைகளெல்லாம் மத்தியிலுண்டானதானையால் காலாந்தரத்தில் நாசத்தை யடையும்போது அவைகளாற் கொடுக்கப்பட்ட பலன்களும் நாசமடையுமென்று நாம் சொல்லவேண்டும். எப்போதும் நாசமில்லாதவனும் நித்தியனுமாயிருக்கப்பட்ட நம்மையுபாசித்து ஆராதனை செய்யப்பட்ட நம்முடைய பத்தாள் நம்மைப்போல் நித்தியமாயும் சாஸ்வதமாயுமிருக்கப்பட்ட பதத்தையே யடைவார்களானதால், நீயும் நம்மையே பத்திசெய்து நம்முடைய பதத்தையே யடைவாய். எல்லாத்தேவதைகளுக்குந் தாங்களே யாதாரமாயிருந்து பலனைக் கொடுக்கிற பக்ஷத்தில் அந்தந்தத் தேவதைகளை யுபாசித்தாலும் தேவரீர்தானே யந்தந்தத் தேவதைகளுக்குள்ளாகவும் எங்குமிருக்கிறீர், அந்தப்பக்ஷத்தில் தேவரீரையே யுபாசிக்கிறதுபோலேதானே யாச்சுது; அப்படியிருக்க அவர்களுக்கும் நல்லபலத்தையே கொடுக்கலாகாதாவென்று கேட்பாயேயாகில் கற்பகவிருக்ஷம்போலிருக்கிற நம்மிடத்தில் எவாளெவாள் எந்தெந்தத் தேவதாபாவனை செய்கிறார்களோ, எந்தெந்தக்கோரிக்கைகள் கோருகிறார்களோ அந்தப்படி யந்தந்தப் பலன்களையுமடைகிறார்களே யல்லாமல் நாம்கொடுக்கிறதென்கிறதும் வாங்குகிறதென்கிறதுங்கிடையாது தேவரீரே பலன்கள் முதலானவையும் கொடுக்கிறதாகச் சொன்னீரே யென்றால் நம்முடைய அபின்னசத்தினாலே சமஸ்தமு முண்டாயிருக்கிறதென்றறி. (௨௩)

சுவாமி! மிகவுஞ் சிரத்தாபத்தியுடனே நாசத்தையடையப்பட்ட தேவதைகளைக்கோரி நாசமடையப்பட்ட பலன்களைப் பெறுவதைப் பார்க்க அந்தச் சிரத்தாபத்தியுடனே தேவரீரைத்தானே யுபாசித்துச் சாஸ்வதமா யிருக்கப்பட்ட தேவரீருடைய சொரூபத்தையே அடையலாகாதா? அருச்சுனா! சகத்துக் கதிகனா யிருக்கப்பட்ட நம்மை மச்ச

கூர்ம வராகாதிரூபங்களை யடைந்தவனென்றும், தேவதைகளுக்குச் சமானமானவனென்றும் சீவாளைப்போலப்பிறந்து நானாவித செய்கைகள் செய்யப்பட்டவனென்று மெண்ணப்பட்ட கேவலமாகிய அற்ப புத்தியை யுடைத்தானவர்களாலே யுத்தமோத்தமமும் நாசமின்றி யெப்போதும் நித்தியமாயும் அவ்யக்தமாயு மிருக்கப்பட்ட பிரமசொரூபமாகிய நம்முடைய நிசசொரூபத்தை யறிந்துபாசிக்கமாட்டார்கள். (௨௪)

சுவாமி! இப்படி யறியாமற்போவதற் கென்னகாரணம்? அருச்சுனா! சர்வலோகத்திலுள்ள அஞ்ஞானத்தை யுடைத்தான சீவாள் நம்முடைய நிசரூபத்தைக் காணமாட்டார்கள் எதனாலென்றால் ரச்சு சர்ப்பம்போலத்தோற்றப்பட்ட தேகத்தை நானென்றுந் தேகத்தைச் சத்தியமென்றுங் கானற் சலத்துக்குச் சமானமாகிய திரிசியவிஷயங்களிலிச்சையு முண்டாக்கப்பட்ட வென்னுடைய யோகமாயையினுடைய சாமர்த்தியத்தினாலே அவாளுடைய ஞானமானது மூடப்பட்டு விவேகஈனராயும் சுத்தமூடராயு மிருக்கப்பட்ட அந்தச் சீவாள் சென்மாதிரகிதனையும் நாசமில்லாதவனையும், எப்போதும் நித்தியனாயு மிருக்கப்பட்ட நம்மையறியவேமாட்டார்கள். (௨௫)

அருச்சுனா! இந்தச் சகத்துற்பத்தி, திதி, லய மிவைகளுக்குக் காரணமாயிருக்கப்பட்ட மாயையானது எனக்குச்சுவாதீனமாயிருப்பதால் எல்லாவற்றிலும் நான் கலந்திருந்தும் ஆகாயம்போலொன்றிலும் பற்றில்லாமலிருப்பதால் பூத பவுஷ்ய வர்த்தமானகாலங்களும் அந்தக் காலங்களிலுள்ள சீவாளையும் அவாளுடைய செய்கைகளையும் நானறிவேன்: அவித்தைக்குவசமாகி யேகதேசமான ஒருதேகத்தை நானென்றும் திரிசியத்திற் சத்தியத்துவ புத்தியையுமுடைய சீவாள் எங்கும்பரிபூரணனும் சகல சீவாளுடைய புத்திக்குச் சாட்சியாகவுமிருக்கிற நம்மை யறியவேமாட்டார்கள். (௨௬)

சுவாமி! இப்படியெங்குமிருக்கிறவராயும் அந்தந்தச் சீவாளுடைய புத்திக்குச் சாட்சியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற வும்மைச் சகசமாய்த் தெரிந்துகொள்ளும்படியாயிருக்க ஒருவரு மறியவேமாட்டார்களென்று சொல்லும்படியான பிரதிபந்தமெது? அருச்சுனா! நம்முடைய பின்னுபிரகிருதியாகிய கானற்சலம்போற் றோற்றுகிற பஞ்சவிஷயங்களைச் சத்தியமாகவும் முன்னும்பின்னுமில்லாமல் மத்தியில் ரச்சு சர்ப்பம்போலத் தோற்றப்பட்ட தேகத்தை நானென்று மெய்யாக்கொண்டு இந்தக்காலத்தி லுண்டானவனென்றும், இந்தக்காலத்தில் மரணமடையப்பட்டவனென்றும் இவ்விதமான நிச்சயபுத்தியுடனேயிருந்துகொண்டு அந்தத் தேகத்துக் கனுகூலமாய்வரப்பட்ட விஷ



யங்களி லிராகமும், பிரதிகூலமாய் வரப்பட்ட விஷயங்களில் துவேஷமும் அவைகளினாலுண்டான சுகதுக்கதொந்த மோகத்தைச் சார்வதா அடைந்து அதுவே பரமபுருஷார்த்தமென்றெண்ணி மூழ்கியிருக்கப்பட்ட சீவாள் அந்த மோகத்தைவிட்டு நம்மை விசாரித் தெங்கேயறியப்போகிறார்கள். (௨௭)

சுவாமி! இப்படியானால் உம்மை யார்தானறிந்து உபாசிப்பார்கள் அருச்சுனா! அனந்தசென்மங்களில் நிட்காமமாய்ச் செய்த புண்ணிய கருமங்களாற் சித்தசுத்தித்துவாரா சுகதுக்கம், சனனமரணம், சுவர்க்கநரகமென்னப்பட்ட தொந்தமாகிய சகல பாபங்களும் விடுபட்ட சுகிர்தபுருடாள் தேகமே நானென்றுஞ் செகத்துச் சத்தியமென்கிற மோகத்தைவிட்டவர்களாகி நானே தானென்று குருமுகமாகச் சந்தேகமற அறிந்து அந்தப்படி யேகாந்தமாக ஆந்தரத்தி லனுபவித்துக்கொண்டு பிராரத்தமிருக்கிறவரையிலும் லோகோபகாரமாகத் தன்னுடைய திரிவித காரணங்களைக்கொண்டு சமஸ்தவிஷயங்களு மென்னைத்தவிர அன்னியமில்லையென்கிறதாகப் பாவித்துச் சுகதுக்கங்களையுஞ் சமமாக வெண்ணி யென்னையே சார்வதா பத்திசெய்துகொண்டு யார்வருவார்களோ அவர்கள்தா னென்னையறிந் துபாசிக்கப்பட்டவர்கள். (௨௮)

அருச்சுனா! இவ்விதமா யனுஷ்டிக்கும்போது தேகமானது மத்தியில் நழுவிவிட்டாற் பலனென்னவென்று முன்போலச் சங்கியாதே, யவர்களைப்போ லிவர்களை யெண்ணாதே; இவாள் சமஸ்தமு மறிந்தவாளென்றும் நம்முடைய ரூபமாகவே யெப்போது மிருக்கிறதே யவர்களுக்குப் பலனென்கிற பரமார்த்தத்தையுஞ் சொல்லுகிறேன்கேள். சனனமரணத்திலிருந்து விடுபட்டு என்னை யடையவேண்டுமென்று அதற்குத் தகுந்த புண்ணிய கருமங்களுடனே என்னை யாசிரித்து இடைவிடாமற் பிரயத்தனஞ்செய்த மகாபுருஷர்களாரோ அவர்கள் தான் சகல கன்மங்களினுடைய விபரமும் நன்றாய்த் தெரிந்தவர்களென்றும் அத்தியாத்மமென்னப்பட்ட பரப்பிரமத்தைத் தானாக அறிந்து சதா சந்துஷ்டியை யடைந்து கொண்டிருக்கப்பட்டவாளென்றும் சனனமென்றெடுத்ததற்கு எதை யடையவேண்டுமோ அதை யடைந்தவாளென்றுஞ் சொல்லப்படும். (௨௯)

இப்படிப்பட்ட மகாபுருஷாளுக்கு நடுவி லேதாவது பிரதிபந்தங்கள் சம்பவித்தாலும் அதனா லந்தஞானத்துக்கு விக்கினம் வாராமல் அந்தியகாலத்தி லென்னையே யடைவார்களென்கிறதையுஞ் சொல்லுகிறேன்கேள். அதி பூதத்தோடும், அதி தெய்வத்தோடும், அதி யஞ்ஞத்தோடுங் கூடியிருக்கிற நம்மையா தொருவ ரறிந்து நம்மிடத்திலே தானே மனதை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்குப் பிராரத்தானு

குணமாய் பத்தியில் ஏதாவது விட்சேபங்கள் சம்பவித்துக்கொண்டி ருந்தாலும் மரணசமயத்தில் நம்மைத்தானே நினைந்து நம்முடைய ரூபத்தையே யடைவார்கள். (௩௰)

தொம்பதலட்சியார்த்தமானவரே தற்பதலட்சியார்த்தரென்னப் பட்ட ஞானம் சித்திக்கிறதற்குப் பிரதிபந்தமாயிருக்கப்பட்ட தற்பத வாச்சியார்த்தங்களையும் தன்னைத்தவிர இல்லையென்று இந்த ஏழாம் அத்தியாயத்தில் அனுபவயோகமென்னப்பட்ட பத்தியோகத்தைப் பத் தனுகிய அருச்சுனனுக்குப் போதித்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாகிய பக வானுக்கு நமஸ்காரஞ்செய்கிறேன்.

ஏழாவது விக்ஞானயோகமென்னப்பட்ட
பத்தியோக அத்தியாயம் முற்றிற்று.
ஆக அத்தியாயம் ௭ - க்குச் சுலோகம் - ௩௱௰.
ஸ்ரீ ஆநந்தாயநம:

---

உ
ஸ்ரீஇரங்கராஜாயநம:

## எட்டாவது

# அக்ஷரப்பிரமயோக அத்தியாயம்.

சுவாமி! தேவரீருடைய பக்தராயிருக்கிறபேர்கள் பிரமசொரூப முதலானவைகளையும் அறிவார்களென் றநுக்கிரகஞ் செய்தீர்களே, அந் தப் பிரமசொரூபமென்பது தெது, அத்தியாத்மமென்பது தெது, கன்ம மெது, அதிபூதமெது, அதிதெய்வமெது? (௧)

சுவாமி! அதியெக்ஞமெது, நிரியாணகாலத்தில் மனதைச் செயித் தவர்களால் எவ்விதமாயுன்மையறிந் தடையப்படும்? (௨)

அருச்சுனா! நாசரகிதமாயும் சகத்துக்குக் காரணமாயு மிருக்கப் பட்ட பரமான்மாவையே பிரமசொரூபமென்று சொல்லப்படும். தேக த்தினிடத்திலிருந்து கர்த்தத்துவ போக்தத்துவத்தை யடையாததற்கு முன்பாக உண்டான ஆதிசங்கற்பமான சாட்சியெதுவோ அதற்கு அத் தியாத்மமென்று சொல்லப்படும். தேவதைகளைக் குறித்துச் செய்யப் பட்ட ஓமத்திரவிய தியாகங்களினாலே சகல பூதங்களுமுண்டாகி விருத் தியு மெப்படி யடையப்படுகிறதோ, அப்படிப்போலந்தச் சீவானு டைய கன்மானுகுணமா யவாளவர்கள் நடத்தவேண்டிய கன்மங்களை



விருத்திபண்ணப்பட்ட தெதுவோ அதற்குக் கன்மமென்று சொல்லப் படும். (௩)

அருச்சுனா! நாசத்தை யடையப்பட்ட தேகமுதலான தெதுவோ, அதை யதிபூதமென்று சொல்லப்படும். என்னுடைய அம்சமாகிய கர் த்தத்துவம் போக்தத்துவங்களை யடைந்த சீவாத்மாவுக்கு அதிதெய்வ மென்று சொல்லப்படும். சர்வதேகங்களிடத்திலும் சீவனுக்கும் அந் தரியாமியாகவு மிருந்துகொண்டு சமஸ்தகர்மங்களும் பண்ணும்படியா கப் பிரோகம் பண்ணிவைத்து அவைகளுக்குத் தகுந்த பலத்தையுங் கொடுக்கப்பட்டதெதுவோ அதற்கு அதியெக்ஞமென்று சொல்லப் படும். இந்த ஆறுவித லக்ஷணத்துடனேயும் நாமே யிருக்கிறோம் நம் முடைய சத்தையன்னியில் ஒன்றும் நடவாதென் றறிந்து நம்மையே பக்திசெய்துகொண்டுவருவார்கள். (௪)

அருச்சுனா! மரணகாலத்தில் எப்படி நம்மை யடைவார்களென்று கேட்டாயல்லவா? யாதொரு புருஷனாவனே அந்தியகாலத்தில் நம்மை யே நினைந்துகொண்டு சரீரத்தை விடுவானோ அவன் நம்முடைய சொ ரூபத்தையேயடைவன். (௫)

அருச்சுனா! மரணதிசையில் நம்மைநினைத்துத் தேகத்தை விட்டு விடலாமென்றெண்ணி யிப்போது நேர்ந்தபடி நடக்கலாமென்பாயா கில் அதனாலுண்டாகப்பட்ட பாதகத்தைச் சொல்லுகிறோங்கேள். எதை நினைத்துத் தேகத்தை விடுவானோ அதையேயடைவன். தேவ திரியக் மனிதாதி பாவங்களுக்குள் அவனவன் கன்மானுகுணமாய் எதை நினைந்துகொண்டு சரீரத்தைவிடுவானோ அப்பேர்ப்பட்ட சரீரத் தை யடையும்படியா யிருப்பதனாலே அந்தவேளைக் கப்படியே நடப் போமென் றெண்ணுவாயாகில் அது சித்திக்கமாட்டாது; ஏதனாலென் றால், எவனென்பதத்தை யடையவேண்டுமென்று யதார்த்தமா யிச் சித்துச் சாதனங்களையுஞ் சம்பாதித்துக்கொண்டு சமஸ்தமும் நம்மைத் தவிர இல்லையென்றும், அப்படிப்பட்ட நம்மைத் தன்னுடைய லட்சி யார்த்தத்தைத் தவிர இல்லையென்றும் ஆந்தரத்தி லெவ்வளவுஞ் சமு சயமின்றி யிடைவிடாத அப்பியாசமுஞ் செய்துவரப்பட்ட மகாபுருஷ னுக்குக்கூடப் பூர்வசென்மத்திலாவது, அல்லது அந்தச் சென்மத்தி லாவது வாசனாசேஷமிருந்து தேகமெடுக்கும்படியாகச் சம்பவிக்கிற தாம், அதற்கனுகுணமாய்ச் சக்கிரத்தி லெந்தவாசனை யதிகமாய் மேலி ட்டிருந்ததோ அதையே சொப்பனங்காண்பதுபோல் அந்த மகாபுரு ஷனுடைய தேசம் வியோகமாகும்போது நம்மை நினைக்கவொட்டா மல் மோசஞ்செய்து வேறொன்றை நினைக்கும்படிப் பலாத்காரஞ் செய் கிறதுந் தவிர நினைத்தபோதிலும் அதைவிட இதரவாசனைடாந்தரத்

தில் ஏதாவது பெலத்திருக்குமேயானால் சுழுத்தியடையும்போதெனதை நினைத் தடைந்தேதோ அனாதிய சொப்பனங்காணமல் அதை லட்சிய மன்னியில் நிராகரித்துப்போட்டு அதற்குமுன் னெனைப் பெமெய் நினைத்து ஆந்தரத்தில் வைத்துக்கொண்டிருந்ததோ அதுவே மேலிட்டுச் சொப்பனங்காண்பதுபோல அப்போது நினைத்ததை விட்டுப் போட்டுப் பெலத்திருக்கப்பட்டதைப் பிடித்துக்கொள்வதுஞ் சுபாவமாயிருக்கிறதனாலேயும், அப்படியிருக்க முன்சொன்ன நடவடிக்கைகளேயில்லாமல் அந்தியகாலத்திற் சாதித்துக்கொள்வோமென்று நேர்ந்தபடி நடக்கப்பட்டவாளுடைய புத்தியைக்குறித்தும் அவா ளடையப்பட்ட பலன்களைக்குறித்தும் நானுஞ்சொல்லவேண்டுமா; ஆனதால் அருச்சுனா! இந்தவிஷயத்தில் இதரவாசனைகள் யாதொன்றுமில்லாமல் சுத்தமாயிருக்கப்பட்ட: புத்திமான்களாயிருக்கானின்ற உன்னைபொத்தவாள் தேகம் வியோகமாகிறபரியந்தமுஞ் சாக்கிரதையாக இருந்துகொண்டு முன் நாஞ்சொன்னபடி நடந்துவருவார்களேயாகில் அவர்களுக்குமட்டும் அந்திபத்திலும் நம்முடைய நினைப்பாகவே யிருப்பதனாலே நம்முடைய சொரூபத்தையே யடைவார்கள். (௬)

அருச்சுனா! ஆகையாற் சர்வகாலமும் அன்னியசிந்தனை யில்லாமல் எதைப்பார்த்தபோதிலும் அவைகளெல்லாம் நாமேயென்றும், அந்த நாமே யுளது நிசரூபமென்றும் நினைத்துக்கொண்டு இதனால் மனப்புத்திகளை நம்மிடத்திற் சமர்ப்பித்தவனாகி யிராகத்துவேஷமின்றி யுத்தத்தைப் பண்ணுவாயாகில் நீ நம்மையேயடைவாய் இதற்குச் சமுசயமில்லை. (௭)

அருச்சுனா! இந்தப் பதத்தை யடைகிறதற்குச் சக்கியமாகாதுபோலத் தோற்றுகிறதேயென்றால், முன்சொன்ன யோகாப்பியாசஞ் செய்யவேண்டும்; அதெப்படியென்றால் முன்சொன்ன ஆசனநியமங்களுடன் இந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டு யோகத்தை யப்பியாசஞ்செய்து வருகிறதுமல்லாமல் யாதொரு அன்னியசிந்தனையுமில்லாமல் பிரகாசங்களுக்கும் பிரகாசரூபமான பரமபுருஷனாகிய நம்மை யிடைவிடாமல் நினைந்துகொண்டிருப்பாயாகில் நம்மையே நீயுமடையலாம். (௮)

அருச்சுனா! நீ நினைக்கப்பட்ட அந்தப் பரமபுருஷனுடைய லட்சணத்தைச் சொல்லுகிறோம். சர்வஞ்ஞராயும், ஆதிமத்தியாந்தமு மில்லாதவராயும் புராணராயும், சமஸ்தத்தையும் பிரேரணைசெய்யப்பட்டவராயும், அணுவுக் கணுவாயும், மகத்துக்கு மகத்தாயும், சகல்செகங்களையுஞ் சம்ரட்சணை செய்யப்பட்டவராயும், சிந்திக்கத்தகாத ரூபமுள்ளவராயும், ஆதித்தனைப்போலத் தானுஞ் சுயம்பிரகாசரூபராயிருந்துகொண்டு தன்னுடைய சந்நிதானத்திலுண்டான சகங்களையும் விளங்



கும்படிசெய்திருக்கிறவராயும், பிரகிருதிக்குப்பரனாயும், இருக்கப்பட்ட புருஷோத்தமனானவர் எவரோ அப்படிப்பட்டவரையே, தியானஞ் செய்யவேண்டும். (௯)

சுவாமி! இப்படிச்செய்தாற் பலமென்ன? அருச்சுனா! மரணகாலத்திற் பூர்வம் அப்பியாசஞ்செய்துவந்த யோகபலத்தினால் அசஞ்சலமான மனதைக்கொண்டு புருவமத்தியத்திற் பிராணவாயுவை நிரோதிக்கப்பட்டவன் பிரமரந்தரத்தைப் பேதித்துக்கொண்டு சுயம்பிரகாசரூபனாகிய பரமபுருஷனையே யடைவன். (௧௦)

அருச்சுனா! பிரமநிஷ்டா ளெதையறிந் தனுபவிக்கிறார்களோ, காமக்குரோத முதலானவைகளை விட்டிருக்கப்பட்ட எதீசுரா ளெதைமக்குரோத முதலானவைகளை விட்டிருக்கப்பட்ட எதீசுரா ளெதை யடைய நிச்சயித்துப் பிரமசரிய விரதத்தை யனுட்டிப்பார்களோ, அப்படிப்பட்ட அட்சரமாயிருக்கப்படாநின்ற திவ்வியபதத்தையடைகிறதற்குச் சுருவாயிருக்கப்பட்ட மார்க்கத்தை யுனக்கு இரண்டுசுலோகத்தினாற் சொல்லுகிறேன்கேள்.

அருச்சுனா! சர்வேந்திரியங்களையும் நிக்கிரகஞ்செய்து மனதை யிருதயத்தில் நிறுத்தி பிராணபானனைத் தடைசெய்து பிரமரந்தரத்தில் நிறுத்தி யோகதாரணையை யாசரிக்கக்கடவன். (௧௨)

அருச்சுனா! பிரமசொரூபத்துக்கு வாச்சியார்த்தமான பிரணவமாந்திரமாகிய ஏகாட்சரத்தை யுச்சரித்து நம்மையே நினைத்துக்கொண்டெந்தப்புருஷன் தேகத்தைவிடுவானோ அவன் பரமகதியடைவன். (௧௩)

அருச்சுனா! நம்மையடைய யிச்சித்தவர்கள் வைராக்கியத்துடனே யிந்திரியங்களை நிக்கிரகஞ்செய்துகொண்டு வேறொன்றையும் நினையாமல் எப்போது நம்மிடத்திலேயே யேகாந்த பக்தியோடுங்கூட நமஸ்கார வந்தனங்கள்செய்கிற யோகிக்கு நா மெளிதாக உடன்பட்டிருப்போம்.

சுவாமி! எளிதாக உடன்பட்டாற் பலனென்ன? அருச்சுனா! இப்படி நம்மை யுபாசிக்கப்பட்டவர்கள், அநித்தியமாயும் அனந்த துக்கங்களுக்கெல்லா மிருப்பிடமாயு மிருக்கப்பட்ட சென்மத்தையுடைத்தான தேகத்தையடையார்கள். மோட்சரூபமாயும் சாஸ்வதமாயும் நிரதிசயானந்தமாயு மிருக்கிற நம்மையே யடைவார்கள். (௧௫)

அருச்சுனா! பிரமலோகபரியந்தம் போனாலுந் திரும்பவும் பிறக்கவேண்டும் நாசரகிதனாயும் நித்யனாயும் பூரணனாயும் மிருக்கப்பட்ட நம்மையடைந்தால்மட்டுந் திரும்பச் செனனமுண்டாகமாட்டாது. ஆனால் தபசு தானம் யாகமுதலான புண்ணிய கன்மங்கள்செய்தால் இந்தலோகத்துக்கு மேலான லோகங்களை யடைவார்களென்று சாஸ்திர புராணங்களிற் சொல்லியிருக்க இப்போது லோகங்களுக்கெல்லாஞ் சிரேஷ்ட

மான பிரமலோகம்போனலுந் திரும்பவும் பிறப்பார்களென்று எப்படிச்சொல்லலாமென்று கேட்கிறாயோ, அருச்சுனா! அந்தப் புண்ணியங்களுக்குத் தகுந்தபடி யெவ்வளவு காலம்வரையில் அந்தந்த லோகங்களை யடைந்தனுபவிக்கவேண்டுமோ, அவ்வளவுகால மனுபவித்துத் திரும்பவும் இந்தலோகத்துக்கு வந்துவிடுவார்கள். அந்த லோகங்களே சாஸ்வதமில்லாமற் போகும்போது அதையடையப் போனவாள்மட்டும் எப்படிச் சாஸ்வதமாயிருப்பார்கள். இந்தலோகத்திலிருக்கும்போது மோட்சமடையவேண்டுமென்றிச்சித்துச் சமஸ்தமும் நம்மைத்தவிர இல்லையென்று கன்மங்கள் செய்துவரப்பட்ட எதிசுராள்மட்டும் பிரமலோகமார்க்கமாக முத்தியடைகிறதென்று சொல்லப்பட்டிருக்கிற சுருதிவாக்கியப்படிக்குப் பிரமலோகத்தையடைந்து அந்தப் பிரமதேவருடனே சொரூப விசாரஞ்செய்துகொண்டிருந்து அந்தப் பிரமதேவர் என்னுடைய சொரூபத்தையடையும்போது இந்த எதீசுரானும் அடைவார்களே தவிர அந்தப் பிரமலோகத்தை யடையவேண்டுமென்று நமக்கன்னியமாக இருக்கிறதாக இச்சித்துப் புண்ணிய கருமங்களினு லடைந்த எல்லாபுருஷாளுந் திரும்பவும் வருகிறதில் எவ்வளவுஞ் சமுசயந் தேவயில்லை. (௧௬)

அந்தப் பிரமதேவர் வாசஞ்செய்யப்பட்டசத்தியலோகமுதலாய் அநித்யமென்கிற விபரத்தைத் தெரிந்து அதில் வைராக்கியம்வருகிற நிமித்தமாகச் சிருஷ்டிக் கிரமத்தைத் தெரியப்படுத்துகிறார். அருச்சுனா கிரேதா, திரேதா, துவாபர, கலி யிந்த நான்குயுகங்களுங்கூடினது ஒரு சதுர்யுகமென்று சொல்லப்படும் இப்படிப்பட்ட சதுர்யுகம் ஆயிரமானாற் பிரமாவுக்கொரு பகலென்று சொல்லப்படும். இப்படியே இரவும் இப்படிப்பட்ட காலநிர்ணயத்தை யாருடைய சங்கற்பத்தைத் தவிர இல்லையென் றறிவார்களோ அவர்கள் தான் இந்தப் பகலுமிரவுமெல்லாவற்றையுமறிந்த மகான்களென்று சொல்லப்படும். (௧௭)

அருச்சுனா! அவ்வியக்தமான பிரமாவினுடைய பகலிற் சமஸ்த பிரபஞ்சங்களு முண்டாகிச் சமஸ்த கன்மங்களும் நடந்துகொண்டிருக்கும். இராத்திரியில் அந்த அவ்வியக்தத்திற் சமஸ்த பிரபஞ்சங்களுங்கன்மங்களுமடங்கியிருக்கும். (௧௮)

அருச்சுனா! அந்தந்தச் சீவாளுடைய சன்மவசங்களினாற் பிரமதேவருடைய பகலிலுண்டாவார்கள். இராத்திரியில் அவ்வியக்தத்திலடங்குவார்கள். இந்தப்படி பிரபஞ்சங்கள் பிரவாக ரூபமாய்ப் பிரவிர்த்தித்துக் கொண்டிருக்கும். இவ்விதமா யந்தப் பிரமதேவருக்கு நூறுவயதான வுடனே அவர் வாசஞ்செய்யப்பட்ட சத்தியலோகமும் அதற்குக் கீழ்ப்பட்ட லோகங்களும் அதிலுள்ள சகல சீவகோடிகளும் மற்றுமுள்ளனயாவும் நசிக்கப்பட்டு அவர்மாத்திரம் எப்போது என்னுடைய சொரூபத்தையேதியானித்துக்கொண்டிருந்தா ரந்தச்சொரூபத்திலேயே தப்பாமல் ஐக்கியமாய்விடுவார். (௧௯)



சுவாமி! இந்தப் பிரமலோகமுதலாய் அநித்தியமாய்ப் போகும்போது பின்னையெதுதான் நசியாமல் சாஸ்வதமாயிருக்கும். அருச்சுனா! சத்தியலோகமுதலான சமஸ்தலோகங்களும் நசித்துப்போனாலும் நசியாமலும் நித்தியமாயும் எப்போதுஞ் சாஸ்வதமாயுமிருக்கிற பிரமசொரூபத்தையுஞ் சொல்லுகிறேன்கேளும் சராசராத்மகமான பிரபஞ்சங்களுக்கும் அவைகளிலிருக்கிற லோகங்களுக்கும் அந்தலோகங்களும் அதிலுள்ளசீவர்களும் விளங்கும்படி யுண்டாயிருக்கிற வேதங்களுக்குங் காரணமானது மாயை. அந்த மாயைக்குங் காரணமாயு மிந்திரியங்களுக்கும் மனதுக்கும் அகோசரமாகியும் புராதனமான பரப்பிரம சொரூபமானது சமஸ்த பிரபஞ்சங்களும் நசித்துப்போனாலும் நசியாமலிருக்கும். (௨௦)

சுவாமி! அந்தச் சொரூபம் நசியாதென்பதற் கென்ன பிரமாணம்? அருச்சுனா! இந்திரியங்களினாலே கிரகிக்கப்படாதவராயும், மனதினாலே நினைக்கப்படாதவராயும், அவ்யக்தமாயும், அட்சரமாயு மிருக்கப்பட்டது எதோ அதையே பரம புருஷார்த்தமென்று சொல்லப்படும். அதையடைந்தாற் றிரும்பிச் சனனத்தை யடையார்களோ அப்படிப்பட்ட பரமானந்த சொரூபமே யென துசொரூபம். (௨௧)

சுவாமி! இந்தச் சொரூபத்தையடைவதற் கென்ன வுபாயம்? அருச்சுனா! சமஸ்த பிரபஞ்சங்களும் எதனிடத்திலுண்டாயிருக்குமோ இந்தச் சமஸ்த பிரபஞ்சங்களையும் எது வியாபித்திருக்கிறதோ அப்படிப்பட்ட பரம புருஷனாகிய என்னை யன்னிய சிந்தனையில்லாமலெவன் அந்தரங்க விசுவாசத்துடன் அநிசிய பத்திசெய்துவருவானோ அவனுலேயே யடையப்படும். அவனுக்கே நானு படையத்தகுந்தவன். இப்படி யல்லாமல் வேறே மார்க்கங்களினாற் போனபேர்கள் திரும்பவும் சனனத்துக்கு வந்துவிடுவார்கள். (௨௨)

சுவாமி! எந்தவிதமாய்ப்போனவர்கள் திரும்புவார்கள்? எந்தவிதமாய்ப்போனவர்கள் திரும்பார்கள்? அருச்சுனா! எந்தக்காலத்திற் சரீரத்தைவிட்டெந்தமார்க்கத்திற்போன யோகீசுரான் திரும்பியும்பிறக்கமாட்டார்களோ, எந்தக்காலத்தில் மரணமடைந்து எந்தமார்க்கத்திற் போன சன்மியாகிகள் திரும்பவும் பிறப்பார்களோ அப்படிப்பட்டகாலத்தையும் மார்க்கத்தையுஞ் சொல்லுகிறேன்கேள். (௨௩)

அருச்சுனா! அக்கினிதேவதையையும், திவா வென்னப்பட்ட சூரிய அபிமான தேவதையையும், சுக்கிலபட்சாபிமான தேவதையையும், உத்தராயணாபிமான தேவதையையும், என்னைத்தவிர இல்லையென் றுபாசனைசெய்துகொண்டு விசாரமுள்ள ஞானவந்தான். அப்பேர்ப் பட்ட தேவதைகளுடைய மார்க்கத்தின்வழியாக அந்தந்தக் காலங்களி லேயே தேகத்தை விட்டென்பதத்தையே யடைவார்கள். இவர்கள் தான் திரும்பவும் பிறவார்கள். (௨௪)

அருச்சுனா! தூமாபிமான தேவதையையும், இராத்திரி யென்னப் பட்ட சந்திராபிமான தேவதையையும், கிருஷ்ண பட்சாபிமான தேவதையையும், தெட்சணாபிமான தேவதையையும், காமியமாக வுபாசனை செய்துயாகாதிமுதலான தபசு, தானம் விரதங்கள்செய்யப்பட்ட கன்ம யோகிகள் சுவர்க்காதி லோகங்களிற் போகங்களை யனுபவித்துச் சந் திரமண்டல மார்க்கமாகத் திரும்பியும் பிறப்பார்கள். (௨௫)

அருச்சுனா! அர்ச்சிராதிமார்க்கமென்றுந் தூமாதிமார்க்கமென் றுமிரண்டுமார்க்கம் லோகத்தி லெப்போதுஞ் சாஸ்வதமா யிருக்கும். அதில் ஞானயோகிகள் அர்ச்சிராதி மார்க்கமாகப்போய் மோட்சத்தை யடைவார்கள். கன்மயோகிகள் தூமாதிமார்க்கமாகப்போய்த் திரும்ப வும் பிறப்பார்கள். (௨௬)

அருச்சுனா! இந்த இரண்டுமார்க்கமுமறிந்த அருச்சுனனிய யோ கிக்குப் பலத்தைச் சொல்லுகிறேன்கேள். அருச்சுனா! இந்த இரண்டு மார்க்கங்களையும் அறிந்த யோகீந்திரன் மோகத்தை யடையானானத னால் நீ யெப்போது மென்னைத்தவிர அன்னியமில்லையென்கிற திட நிச்சயத்தினாலே பரமேசுரனாகிய வென்னுடைய தியானத்தைச் செய் துகொண்டு வருவாயாகில் சமஸ்த மோகங்களினு மிருந்தும் விடுபட்டு நம்மையே யடைவாய். (௨௭)

அருச்சுனா! இந்த அத்தியாயத்திற்சொன்ன எட்டுப் பிரச்சன் னத்தினுடைய அர்த்தத்தினால் என்னைத்தவிர அன்னிய மில்லையென் கிற அர்த்தந்தெரிந்த யோகிவேதங்களைப் படித்து அவைகளினுடைய அர்த்தங்கள் தெரிந்ததனாலேயும் எக்யங்கள் செய்ததனாலேயுந் தபசு கள் பண்ணினதனாலேயுந் தானங்கள் கொடுத்ததனாலேயும் எந்தப் புண்ணியங்களுண்டாமோ அந்தப் புண்ணியங்களுடனே சிரேஷ் டமுஞ் சகத்துக்கு மூலபூதமும் சர்வோத்கிருட்டமுமாகிய நம்முடைய சொரூபத்தையே யடைவன். (௨௮)

எட்டாவது
அக்ஷரப்பிரமயோக அத்தியாயம் முற்றிற்று.
ஆ. அத்தியாயம் அ-க்குச் சுலோகம்-௩௱௨௮.
ஸ்ரீவாசுதேவாயநம;

ஸ்ரீபக்தஜனப்பிரியாயநம:

ஒன்பதாவது

# இராசகுய்யயோக அத்தியாயம்.

அவதாரிகை:—தற்பதலட்சியார்த்தமான பரமாத்மாவைத் தரி சிக்கிறதற்குப் பிரதிபந்தமாயிருக்கிற தற்பத வாச்சியார்த்தங்களையும் அந்தப்பரமாத்மாவைத் தவிர அன்னியமில்லை யென்று பத்திசெய்தால் அந்தப் பத்தியினாற் பரமாத்மாவை யடையலாமென்று ஏழாவது, எட் டாவது இந்த அத்தியாயங்களிற் சொல்லியிருக்கிறதற்கு விசேடமாயி ருக்கப்பட்ட தம்முடைய விபூதி மகத்துவத்தையும் தம்மைப் பத்தி செய்யவேண்டிய விபரங்களையும் நம்மையறியவேண்டிய ஞானமுதலிய யவைகளையும் இந்த ஒன்பதாம் அத்தியாயத்திற் சொல்லத் தொடங்கு கிறார்.

அருச்சுனா! என்னுடைய விசேஷங்களையும் பத்திஞான முதலிய வைகளையும் அடிக்கடி நான் சொல்லிவருவதில் அசூயையின்றிக் கேட் கப்பட்ட வுனக்குத் தொம்பதலட்சியார்த்தமான ரகசியமாயிருக்கிற ஞானத்தையும் அந்தத் தொம்பத லட்சியார்த்தமானவரே தற்பதலட்சி யார்த்தமென் றனுபவமாயும் அதிரகசியமாயு மிருக்கப்பட்ட விஞ்ஞா னத்தையும் உனக்குச்சொல்லுகிறோம்; அதை நீ யறிந்தாற் சம்சார பந் தத்திலிருந்தும் விடுபட்டு மோட்சமேயடைவாய். (௧)

அருச்சுனா! அந்த ஞானமானதெப்படிப்பட்டதென்றால், சமஸ்த வித்தைகளுக்கெல்லாம் இராசாவாகவும், தொம்பத லட்சியார்த்தமான கூடஸ்தரே தானென்னப்பட்ட ரகசியத்தை யுடைத்தானதாயும், அந் தக்கூடஸ்தரே தற்பத லட்சியார்த்தமான பரமாத்மாவென்றும், அவ ரைத்தவிர அன்னியமில்லையென்றும், தெரியத்தக்கதான அதிரகசியத் துடனும், அதிக சிரேஷ்டத்தை யுடைத்தானதாயும், சகலவிதமான சமுசயங்களையும், சனன மரணமென்னப்பட்ட சம்சாரத்திலிருந்து விடுபடுத்திப் பரிசுத்தத்தைப் பண்ணிவைக்கப்பட்டதாயும், உத்தமங் களுக்கெல்லாம் உத்தமமானதாயும், பிரத்தியட்சமாயனுபவத்திற் கா ணப்படுவதாயும், சத்பலத்தைக் கொடுக்கப்பட்டதாயு மிருக்கப்பட்டது இதனால், அருச்சுனா! அதையறிகிற விஷயத்தில் அதிகப்பிரயாசையுங்

டாயிருக்கலாமென்று ஒருவேளை யெண்ணுவாயாகில் அப்படிச்சுமில்லை ஆனால் அதைத் தெரியவேண்டுமென்று மனப்பூர்வமாய் மாத்திரம் எத்தனப்பட்டு அதை யறிகிறவிஷயத்திற் சொல்லப்பட்டிருக்கிற தகுந்த கன்மங்களைமாத்திரம் விடாமலாசரித்தால் எளிதாக ஸாக்ஷாத்கிதமாயிருக்கப்பட்டசொரூபத்தையறிந் தடையப்படுகிறதாயுமிருக்கும் இப்படிப்பட்ட ஞானத்தை நீ நம்மிடத்தில் வைத்திருக்கிற பத்திவிசுவாசத்தினால் உனக்கு நான் சொல்ல மனதுண்டானவனாயிருக்கிறேன்.

சுவாமி! மோக்ஷமடைய எளிதாக இந்த ஞானமிருக்க, எல்லாருமேன் சம்சாரிகளாகித் துக்கத்தையடைகிறார்கள்? அருச்சுனா! என்னையறிந் தடையத்தக்கதான ஞானத்தினிடத்திலும்; அதற்குச் சாதகமான தன்மங்களிடத்திலும் பத்தி விசுவாசமில்லாமல்; அசிரத்தையோடுங்கூடினவா னென்னையடையாமல் மிருத்துவினால் விழுங்கப்பட்டுச் சனனமரணமென்கிற சம்சாரத்திலேயே பிரமித்துக்கொண்டு அதற்குத் தகுந்த எத்தனங்களையே செய்துகொண்டிருப்பதனாலிந்த ஞானமவர்களுக் கெப்படி லப்தமாகும்; அதனால் துக்கத்தை யடைந்துகொண்டிருக்கிறார்கள். (௩)

அருச்சுனா! நீயோ அப்பேர்ப்பட்டவனல்லாததனா லுனக்குச் சொல்லுகிறேன்கேள். அருச்சுனா! இந்திரியங்களாற் காணப்படாததாயும், மனதினாலே நினைக்கப்படாததாயுமிருக்கப்பட்ட சொரூபத்தையுடைத்தாயிருக்கிற நாம் சமஸ்த பிரபஞ்சங்களிலும் வியாபித்திருப்போம்; நம்மிடத்திலேயே சமஸ்த பிரபஞ்சங்களுமிருக்கிறதாம், அப்படியிருந்தாலும் அவைகளிடத்தில் நாம். அசங்கமாகவே யிருப்போம். (௪)

சுவாமி! தங்களிடத்திற் சகல பிரபஞ்சங்களுமிருக்கிறபோது அவைகளிற் சம்பந்தமில்லாம லெப்படியிருக்கக்கூடும்? அருச்சுனா! நம்மிடத்திற் சகல பூதங்களுந் தரிக்கப்பட்டிருந்தாலும் அவைகளைப் பாலனஞ் செய்துகொண்டிருந்தாலுங் கூடாததைக் கூட்டிவைக்கப்பட்டதுங் கூடவேண்டியதைக் கூடாமலுஞ் செய்துவைக்கப்பட்ட சாமார்த்தியமுள்ள என்னுடைய யோகமாயையினுடைய மகத்துவத்தினாலே சீவனைப்போற் சங்கத்தை யடையாமல் அசங்கமாவே யிருப்போம். (௫)

அருச்சுனா! இதற்குத் திட்டாந்தஞ் சொல்லுகிறேன்கேள், ஆகாயமெவ்வளவோ அவ்வளவும் வாயுவானது நிறைந்திருந்தாலும் அதை ஆகாயமானது எவ்விதமா யொட்டாமலிருக்கிறதோ அப்படிச் சமஸ்த சகங்களும் நம்மிடத்தி லிருந்தாலும் அவைகளில் நாம் கூடாதிருக்கிறோம். (௬)



சுவாமி! இந்தச் சகங்களெல்லாம் மாராலே சிருஷ்டி செய்யப்படுமோ? அருச்சுனா! பிரளயகாலத்திற் சகலபூதங்களு மென்னுடைய பிரகிருதியினிடத்தில் லயத்தையடைந்திருக்கும். சிருட்டிகாலத்தில் அந்தந்தப் பூதங்களுடைய கன்மானுகுணமாகத் திரும்பவுஞ்சிருஷ்டிக்கப்பண்ணுவேன். ஆனால் அந்தப் பிரகிருதிக்கும் பரனும் அசங்கனும் நிர்விகாரனும் நாமிருப்போம். (௭)

அருச்சுனா! அசங்கமாயும் நிர்விகாரமாயுமிருக்கப்பட்ட நம்மால் எவ்விதமாய்ச் சிருஷ்டிக்கப்படுகிறதென்று கேட்பாயோயாகில் பூர்வ ஜென்ம சன்மங்களினாலே பரவசங்களாகிய சமஸ்தபூதங்களையும் என்னுடையசொப்பிரகிருதியை அவலம்பித்து அந்தந்தப் பூதங்களுடைய கன்மானுகுணமாய்ச் சிருட்டிப்பேன். (௮)

சுவாமி! நாநாவிதமான கன்மங்களை யாசரிக்கப்படுவதினாலே சீவனைப்போல பந்தங்கள் வந்து சம்பவிக்காதா? அருச்சுனா! சிருஷ்டியாதி கன்மங்களிடத்தில் ஆசக்தியில்லாதவனும் உதாசினனுமிருக்கப்பட்ட என்னை அந்தக் கன்மங்கள் ஒருபோதும் பந்திக்கமாட்டாது. (௯)

அருச்சுனா! இன்னம் அந்த மகாமாயைக் கதிட்டானமாயிருக்கிற நம்முடைய சந்நிதியில் நம்முடையபிரகிருதியினாலுண்டான முக்குணங்களை சராசரங்களோடுங்கூடிய சிவேசுர செகத்தாகிய விசுவத்தைச் சிருஷ்டிசெய்துகொண் டிருக்கும். இத்தன்மையகாரணத்தினாலே சகங்களானது திரும்பித் திரும்பி யுண்டாகிறதும் நிதி யடைகிறதும் லயமடைகிறதாயுமிருக்கும். (௰)

சுவாமி! இப்படிப்பட்ட பகவானாயிருக்கிற தேவரீரை யெல்லாரும் ஏனறிந் துபாசிக்கவில்லை? அருச்சுனா! சகல பூதங்களுக்கு மயேசுரனாகிய என்னுடைய எதார்த்தமான சொரூபத்தையும், பக்தாளுடைய கோரிக்கைகளினாலே மனிதஅவதாரஞ்செய்ததுபோலத் தோற்றுகிற தேகத்தில் சீவனாய் நடக்குஞ் ஜெனன மரணமில்லாதவனென்கிற யதார்த்த ஞானத்தையு மறியாத மூடாள் என்னைச் சாமானிய மனிதனாகவும் பாவித்துச் சீவனைப்போலே நாநாவித கிரியைகள் செய்கிறவன்போல் அவாளவாளுக்குத் தோற்றின பிரகாரம் வசனித்துக்கொண்டிருக்கப்பட்டவாள் என்னை யதார்த்தமாயறிந்து எப்படி யுபாசிப்பார்கள். (௧௧)

அருச்சுனா! இன்னம் எனக் கன்னியமாயும் கண்டமாயுமிருக்கப்பட்ட தேவதைகளை யுபாசித்தால் சீக்கிரமாய்ப் பலத்தையடையலாமென்றெண்ணி அதற்குத்தகுந்த வெய்யமாதி கன்மங்கள் செய்கிற வியர்த்தமான ஆசையை யுடையவாளாயும், இன்னஞ் சிலர் பலவித

கோரிக்கைகளினால் விரதங்களையே செய்யப்பட்டவர்களாயும் இன்னஞ் சிலர் அஞ்ஞானத்தை யுடையவர்களாய்ப் பலவிதமான கேவலமாகிய தெய்வங்களை யாராதிக்கப்பட்டவர்களாயும், இன்னஞ்சிலர் பலவிதமான நிஷேத கன்மங்களை செய்யப்பட்டவர்களாயும், இன்னஞ் சிலர் சத்துவகுணத்தையுடைய மோகினி பிரகிருதியையடைந்து வேதசாஸ்திர முதலான வைகளைவாசித்து அர்த்தங்கள் தெரிந்துகொண்டு சாமான்யமாகப் பத்திசருமங்கள் செய்யப்பட்டவர்களுடைய புத்தியைக் குதர்க்க யுத்திகளினாற் பிரமையை யுண்டாக்கப்பட்டவர்களாயும், இன்னஞ் சிலர் ரசோகுணத்தையுடைய அசுரப்பிரதியையடைந்து டம்பம் தர்ப்பம் அகங்கார முதலானவைகளை அவலம்பித்து எப்போதும் பிறருக் கிடஞ்சல்களை செய்யப்பட்டவர்களாயும், இன்னஞ்சிலர் தமோகுணத்தையுடைய இராட்சதப் பிரகிருதியையடைந்து எப்போதும் பிறரை யிம்சாகன்மங்களை செய்யப்பட்டவர்களா யிருக்கப்பட்ட அவிவேகிகளாகிய இவர்களென்னையறிந் தேங்கே யுபாசிக்கப் போகிறார்கள். (கஉ)

ஆனால்; ஆர்தானறிந் துபாசிப்பார்கள்? அருச்சுனா! காமாதியின்றி யிருக்கப்பட்ட மகாத்மாக்கள் தெய்வப் பிரகிருதியை யுடைத்தான குணங்களை யாசரித்த மனசினாலே பூதங்களுக்கெல்லாம் ஆதிபூதமாயும் அவ்வியனுயுமிருக்கப்பட்ட என்னைத் தானாக அறிந்த சந்தோஷத்தை ஆந்தரத்தில் அனுபவித்துக்கொண்டு பாகியத்திற்காணப்பட்ட சகல விஷயங்களையு மென்னைத்தவிர அன்னியமில்லையென்று திரிவிதகரணங்களினால் அநன்னியபத்திசெய்துகொண்டு வருவார்கள்.

அருச்சுனா! இன்னம் எப்போது என்னுடைய கீர்த்தனங்களை பண்ணிக்கொண்டு, என்னைத்தவிர அன்னியபத்தி செய்கிறதில்லையென்கிற விஷயத்தில் திடவிரதாளாகி யென்னுடைய அனுக்கிரகமுண்டாகவேண்டுமென் றதற்குத்தகுந்த யெத்தனமுஞ் செய்துகொண்டு என்னையே யுத்தேசித்து நமஸ்காரஞ்செய்துகொண்டு நானொருவனே விசுவரூபமா யிருக்கப்பட்டவனென்று மென்னைத்தவிர அன்னியமேயில்லையென்னு மனசோடுக்கூடினவர்களா யென்னையே பத்திசெய்துகொண்டும் வருவார்கள். (கச)

அருச்சுனா! இன்னஞ் சிலர் ஞான எக்கியத்தினாலே யென்னையேயுபாசிப்பார்கள். இன்னஞ் சிலர் சகல பிரபஞ்சங்களும் வாசுதேவரென்றும், அந்த வாசுதேவரே தாமென்றும் உபாசித்துவருவார்கள். இன்னஞ்சிலர் சகல பிரபஞ்சமும் வாசுதேவரைத் தவிர அன்னியமில்லை யென்று முபாசிப்பார்கள் இன்னஞ் சிலர் அந்த வாசுதேவரே லோகரட்சணார்த்தமாக இப்பேர்ப்பட்ட அவதாரஞ் செய்திருக்



கிறாரென் றம்மையுபாசிப்பார்கள். இன்னஞ் சிலர் அந்த வாசுதேவருக்குத் தாசானுதாசரென் றுபாசிப்பார்கள். இன்னஞ் சிலர் அந்த வாசுதேவரே பிரமா விஷ்ணு ருத்திராதிரூபமென் றுபாசிப்பார்கள். இப்படிப்பட்டவர்களெல்லாமென்னையறிந் துபாசிக்கப்பட்ட பக்தாளே

சுவாமி! இப்போது இத்தரவானவிரத்தாகத்தவிர இன்னமும் திதிகாலத்தில் எவ்விதமாயிருக்கிறீர்கள், அருச்சுனா! எல்லாமாய் நாமேயிருக்கிறோம், நம்மைத் தவிர அன்னியமேயில்லை. அப்படியிருக்க நீ இன்னமும் கேட்பதால் முக்கியமாயிருக்கிற வியரங்களைச் சொல்லுகிறோங்கேள், வேதங்களிற் சொல்லப்பட்ட பஞ்சயெச்யங்களும் மிகுந்த வேள்விகளும் மந்திரங்களும் தேவதைகளை யுத்தேசித்து ஆகுதிகொடுக்கப்பட்ட பதார்த்தங்களும் எது எது புசிக்கப்படுகிறதோ அது அதுகளும், ஓமத்திரவியங்களும், அக்கினியும், ஓமமும் கிருதமும் இவைகளெல்லா நாமேயாயிருக்கிறோமென் றுபாசிப்பார்கள்

அருச்சுனா! இன்னஞ் செகத்துக்குமாதாவும் பிதாவும் நாமே பிரமதேவரும் நாமே. அவரவர் பூர்வஜென்மங்களிற் செய்யப்பட்டிருக்கிற கன்மங்களுக்குத் தக்கதாகக் காலாந்தரங்களிற் பலனைக் கொடுக்கப்பட்டவனும்நாமே. சகல திரிகியவிஷயங்களும் நாமே. பரிசுத்தம்பண்ணத்தக்க பிரணவமும் நாமே. இருக்கு வேதம் எசுர் வேதம், சாமவேதம் நாமே யென் றுபாசிப்பார்கள். (கஎ)

அருச்சுனா! எல்லாருமடையத்தக்க பதத்தை யுடைத்தான ஸ்தானமும் நாமே சமஸ்தையு மிரட்சிக்கிறதும் நாமே. எல்லாவற்றிற்கும் பிரபுஸ்தானமும் நாமே சுகதுக்கங்களுக்கும் சாக்ஷியாக இருக்கிறதும் நாமே. போகங்களை யனுபவிக்கப்பட்ட ஸ்தானமும் நாமே. சரணமடைகிறதும், எல்லாவற்றிற்கும் இதஞ்செய்கிறதும் நாமே. எல்லாவற்றிற்கும் கர்த்தாவும் நாமே. சமஸ்தமுமுண்டாய்த் திதி யடைந்து லயப்படுவதற்கு ஸ்தானமாகிய பிரகிருதிக்காதாரமு மெல்லாவற்றையுமுண்டு பண்ணுகிறதற்கு நாசமன்னியி லிருக்கப்பட்ட பீஜமும் நாமே யென் றுபாசிப்பார்கள். (கஅ)

அருச்சுனா! ஆதித்தனாயிருந்து சகத்தை யுஷ்ணப்பிரகாசத்தோடுங்கூடி விளங்கப்பண்ணுகிறதும் நாமே. காலங்களறிந்து மழைகள் பெய்யும்படியாயும், பெய்யாமலிருக்கும்படியாயுஞ் செய்யப்பட்டதும் நாமே, அசத்தான தூல பூதங்களும் அதற்குப் பரனாயிருக்கிற சத்தாகிய சூட்சமும்நாமே. எல்லாவற்றையுஞ் சலிக்கும்படியாகப் பண்ணப்பட்ட சத்தியும் நாமே. யித்தனைவிதங்களாயும் நாமேயிருக்கிறோமென் றுபாசிப்பார்கள். அப்படியே நீயுமுபாசிக்கவேண்டும். (ககூ)

சுவாமி! இத்தனை விதங்களாயுந் தேவரீரேயிருக்க எல்லாரும் ஏன் அந்தப்படியறிந் துபாசிக்கவில்லை? அருச்சுனா! லோகங்களிற் சிரேஷ்டமென்று சொல்லப்பட்ட யாகாதிகள் செய்து இந்திராதி தேவதைகளை யுபாசித்தால் தேவபோகங்களை யனுபவிக்கலாமென்று சந்தோஷத்தை யுடைத்தானவர்களாகி, அதனாலந்த இந்திரன் முதலாகிய தேவதைகளுக்கும் நாமே யந்தரியாமியாயிருக்கிறோமென்கிற ஞானத்தைப் போக்கடித்துக்கொண்டவர்களாகியும், நம்மைத்தவிர அவாள் வேறே யிருக்கிறதாகச் சத்தியத்துவ புத்தியுடனேயு மிருந்து கொண்டு அவாளைக்குறித்து மூன்று வேதங்களினாற் சொல்லப்பட்ட காமியபலன்களை யபேக்ஷித்து அந்தவேதோக்த யக்யாதி கன்மங்கள் செய்து சோமபானத்தைப் புசித்துச் சமஸ்த பாபங்களும் போக்கடித்துக் கொண்டவர்களாகிச் சுவர்க்கத்தைப் பிரார்த்தித்துப் புண்ணிய சொரூபமாகிய தேவேந்திர லோகத்தையடைந்து, திவ்வியமாயிருக்கப்பட்ட தேவபோகங்களையனுபவிக்கிறதே சிரேஷ்டமென்று நினைத் தனுபவிக்கிறபடியினாலே யென்னையறிந் தெங்கே யுபாசிக்கப் போகிறார்கள். (௨௦)

அருச்சுனா! புண்ணியத்துக்குத் தகுந்தகாலம் வரையில் அந்த விசாலமாகிய சுவர்க்கலோக சுகங்களை யனுபவித்து, அந்தப் புண்ணியந் தீர்ந்தவுடனே மனுஷலோகத்தில் வந்து பிறந்து திரும்பவும் அந்த சத் கருமங்களையே பண்ணிக்கொண்டிருப்பார்கள். இப்படிப் பட்டவாளெக்கடி போக்குவரத்தா யிருக்கப்பட்ட ஜனன மரணங்களையே யடைந்துகொண்டிருப்பார்கள். ஆனால் நம்மையுபாசிக்கிற நம்முடைய பக்தாள்மட்டும் நம்மையே யடைவார்கள். அவாளுக்கு மட்டும் எப்போதும் புனராவிர்த்திகிடையாது. (௨௧)

சுவாமி! இவர்களுக்குமட்டு மெதனாற்கிடையாது? அருச்சுனா! எனக் கன்னியமா யொரு தேவதையிருக்கிறதென்றும் அதையும் பக்தி செய்யவேண்டுமென்கிற எண்ணஞ் சொப்பனத்திற்கூட எவ்வளவு மில்லாமல் நானொருவனே யெல்லாமா யிருக்கிறேனென்றும் அதுவே தானென்றும் நிச்சயித்து என்னையே தியானித்துக்கொண்டு எதைப்பார்த்தாலும் அவைகளெல்லாம் நானேயென்றும் பக்திசெய்து கொண்டிருப்பதால் அவர்களுக்குப் புனராவிர்த்திகிடையாது. எப்போது மென்னையே யடைந்திருப்பார்கள் எதைப்பார்த்தாலுந் தாமாகவே பார்க்கிறதும் வேறொன்றையும் நினையாமல் தம்மையே நினைத்துக்கொண்டிருக்கிறபடி சுத்திற் சூட்சும சரீரமுங் காரண சரீரமும் நசித்துப்போய் விட்டாலுந்தூலதேக மிருக்கிற பரியந்தம் அதற்குச் சம்ரட்சணை யெப்படி நடக்குமென்றால், என்னைத் தானாக அடைகிற



தேயோகம், அதற்குப் பிரதிபக்தங்கள் சம்பவியாமற் சமாக்ஷணை செய்கிறதே க்ஷேமம்; இப்படி யிருக்கப்பட்டவர்களுடைய யோகக்ஷேமத்தை நாம் வகிக்கிறது மல்லாமல் அவர்களுடைய தேகசம்ரட்சணை முதலானவைகளுக்கு வேண்டியவைகளையும் பலவந்தத்திற்கொடுத்து நாமே யிரட்சிப்போம். (௨௨)

சுவாமி! தேவேந்திராதிகளை யுபாசிக்கிறபேர்களுந் தேவரீரைத் தானே யுபாசிக்கிறார்கள், அவர்கள்மட்டுந் திரும்புவானேன்? அருச்சுனா! எல்லாருக்கும் அந்தரியாமியாய்நாமே யிருப்பதால் தேவதைகளையுத்தேசித்து உபாசிக்கிறவர்களும் நம்மையே யுபாசிக்கிறதானாலும், எங்கும் பரிபூரணனாயும் நாசரகிதமாயு மிருக்கப்பட்டவனாகிய நம்மை யெதார்த்தமாயறிந்து மோட்சம்வேண்டுமென்று விதிபூர்வமாக வுபாசியாமற் காமியமாக அந்தத் தேவதைகளே சிரேஷ்டமென்று பக்தியோடே யுபாசித்தால் அந்தத் போகங்களை யனுபவித்துத் திரும்பவும் வந்துவிடுகிறார்கள். (௨௩)

அருச்சுனா! இன்னம் நன்றாகச் சொல்லுகிறேன்கேள். சகல எக்யங்களுக்கும் போக்தாவென்றும், அந்தந்த எக்யங்களுக்குத்தகுந்த பலன்களைக் கொடுக்கப்பட்டவனென்றும் எல்லாத்தேவதைகளுக்கும் அந்தரியாமியாகவும் எல்லாவற்றிற்கும் பிரபுவாகவு மிருக்கப்பட்டவனென்றும், என்னையறிந்து விதிபூர்வமாக வுபாசியாமல் ஏகதேசமாயிருக்கப்பட்ட தேவதைகளை யுபாசித்தால் அவர்களாற் பலன்களை யடையலாமென்றெண்ணி அதற்குத்தகுந்த எக்யாதிகளைச் செய்வதனாலே யந்தலோகத்தையடைந்து புண்ணியத்துக்குத்தகுந்த பலனனுபவித்தவுடனே திரும்பி வந்துவிடுகிறார்கள். அந்த லோகமே காலாந்தத்தில் நாசமடையும்போது அவர்களுந் திரும்புவார்களென்று நான் சொல்லவா வேண்டும். (௨௪)

அருச்சுனா! தேவதைகளை யுபாசிக்கிறவர்கள் அந்தந்தத் தேவதைகளுடைய லோகத்தையடைவார்கள். பிதுர்க்களை யுபாசிக்கிறபேர்கள் பிதுர்க்களுடைய லோகத்தையடைவார்கள். விநாயகர் முதலான பூதகணங்களை யுபாசிக்கிறபேர்கள் அந்தலோகத்தையடைவார்கள். நம்மையுபாசிக்கிறவர்கள் சாஸ்வதமாயிருக்கப்பட்ட பரமானந்தசொரூபமாகிய நம்மையேயடைவார்கள். (௨௫)

சுவாமி! அநேக திரவியங்கள்சம்பாதித்து அதனால் நானாவிதமான வஸ்துக்களையுஞ் சேகரித்து மிகுந்த பிரயாசைகளுடனே பக்தி சிரத்தையோடுங் கூடினவர்களாகி எக்யமுதலான ஆராதனைசெய்யப் பட்டவர்களுக்கே யடையப்பட்டலோகமும் பலனும் அநித்தியமாய்ப்

போகும்போது சாஸ்வதமாயும் நித்தியமாயும் பரமானந்த சொரூபமாயுமிருக்கப்பட்ட உம்முடைய பதத்தை யடையவேண்டுமானால் மிகுந்த திரவியங்களும் மிகுந்த வஸ்துக்களும் மிகுந்த பிரயாசைகளுமுண்டாகும்போலத் தோற்றுவதா லும்முடைய பதத்தையடைவது லெகுவாயிருக்கமாட்டாதென்று சொன்ன அருச்சுனனுக்குப் பகவான் உத்தரவுசொல்லுகிறார். அருச்சுனா! வெகு திரவியசாதனங்களுடனே யிதரதேவதைகளை யாராதனை செய்வதைப்பார்க்கிலு மென்னை யாராதனைசெய்கிற விஷயத்தில் அவ்வளவு சிரமங் கிடையாது வெகு சுலுவாயும் அதிகப் பிரயாசை யின்றியு மிருக்கிறது பலமோ மகத் பலத்தையடையதக்கதாயும் நித்தியமாயு மிருக்கிறது. அஃதெப்படி யென்றால், அவாளவாளுடைய சத்திக் கதிகமாய் அனேக வஸ்துக்களைக் கொண்டு என்னைக் கண்டமாய்ப் பாவித்துக் காமியமாக சிரத்தாபத்தி யுடனே யாராதனை செய்பவர்களைப் பார்க்கிலும் அவாளவாளுடையசத்தியனுசாரமாய்ப்பத்திரமானாலும் புஸ்பமானாலும் பழமானாலுஞ் சலமானாலும் என்னைத்தவிர அன்னியமில்லை யென்று அகண்டமா யிடைவிடாத திடபத்தியோடே சுத்தாந்தக்கரணனா யிருந்துகொண்டு நிட்காமனாக யாதொருவன் எனக்குச் சமர்ப்பிப்பானோ அவைகளை நான் வெகு பிரியத்தோடேங் கிரகித்துக் கொள்ளுவேன். அதற்கென்ன பலமென்றால் சாஸ்வதமாயும் நித்தியமாயும் பூரணமாயு மிருக்கப்பட்ட என்னுடைய சொரூபத்தை யடையும்படிச் செய்வேன். (உ௬)

அருச்சுனா! என்னிமித்த மாகப் பத்திர புஷ்பாதி சம்பாத்தியஞ் செய்வதுங்கூடப் பிரயாசையா யிருக்கிறதென்று ஒருவேளை யெண்ணுவாயானால் அதைவிடச் சுலுவா யிருக்கப்பட்ட மார்க்கத்தையுஞ் சொல்லுகிறேன்கேள். தேகத்தினா லெந்தெந்தக் கருமங்கள் செய்கிறாயோ, எந்தெந்தவஸ்துக்களைப் பட்சிக்கிறாயோ எந்தெந்தத் திரவியங்களைக்கொண்டு ஓமஞ்செய்கிறாயோ, எந்தெந்தப் பதார்த்தங்களைத்தானங்கொடுக்கிறாயோ, எந்தெந்தத் தபங்கள் செய்கிறாயோ, அவைகளை யெல்லாஞ் சிரத்தாபத்தியுடனே யெனக்கே யற்பணஞ் செய்வாயாகில் அதனாலும் நான் முன்போலவே திருப்தி யடைந்தவனாய்விடுவேன். (உ௭)

சுவாமி! இப்படிச்செய்தா லென்னபலம்? அருச்சுனா! இந்தப்படி சகல கன்மங்களும் எனக் கற்பணஞ் செய்வாயாகில் இந்த அனிட்டம் எப்போ தென்னைவிட்டு நீங்கும். இந்த இஷ்டமெப்போதென்னாலடையப்படுமென் றெண்ணப்பட்ட கோரிக்கைகளினாலே யுண்டான



ஜனன மரணமாகிய சன்மபந்தங்களிலிருந்தும் விடுபட்டு என்னைத் தவிர அன்னியமில்லையென்றும் அதுவே நானென்றும் அநுபவமான சையோகயுத்தனாயிருந்து தேகமுள்ளவரையிலும் நிட்காமனாகத் திரிவிதகரணங்களினாலும் புண்ணியகன்மங்களை செய்துவந்து தேகாந்தத்திற் பரிபூரணமாயிருக்கிற என்பதத்தை யப்பிரதிபந்த சாட்சாத்காரமாயடைவாய். (உ௮)

சுவாமி! உம்மைப் பத்திச்செய்யப்பட்டவர்களுக்கு மோட்சமும், அது செய்யாதவர்களுக்குப் பந்தமுந்தருகிறபோது நிவாளைப்போல ராகத்துவேஷமுண்டாகுமே? அருச்சுனா! சமஸ்தபூதங்களுக்கும் நான் சமமாயிருக்கப்பட்டவனானதால் எனக்குப் பிரியமுள்ளவனுந் துவேஷமுள்ளவனுங் கிடையாது; அப்படியிருக்க இருட்டையுங் குளிரையும் போக்கிக்கொள்ளவேண்டுமென்று அக்கினியையுந், தரித்திரமுதலானவைகளைப் போக்கிக்கொள்ளவேண்டுமென்று கற்பக விருட்சத்தையும் அனுசரிக்கப்பட்டவர்களைப்போல வென்னை யடைந்து நித்தியசுகமாயிருக்கப்பட்டதை யனுபவிக்கவேண்டுமென்கிறவர்களென்னையேயாராதனை செய்து என்னையே தியானிக்கப் பட்டவர்களாயிருப்பதா லென்னையே யடைகிறார்கள். அப்படிப் பட்டவாள் தேகமிருக்கும்போது மென்னிடத்திலேயே யிருக்கிறார்கள் நானும் அவர்களிடத்திலேயே யிருப்பேன் எனக்கும் அவாளுக்கும் எப்போதும் பேதமே கிடையாது. இதன்றித் தேவலோகத்தை யடையவேண்டு மென்றிச்சித்து ஆராதனை செய்யப்பட்டவாள் அந்த லோகத்தையடைந்து திரும்பவுஞ் சனனத்துக்குவந்துவிடுகிறார்கள். இந்தவிதங்களாய் அந்தந்தப்பக்தாளுடைய பாவனைகளைப்படியோ அந்தந்தப்படிபலன்களுமடையப்படுகிறார்களேதவிரக் கற்பகவிருட்சம்போலிருக்கப்பட்ட என்னிடத்திற் பட்சபாதம்வரக்காரணமேயில்லை. (உ௯)

சுவாமி! நல்ல ஆசாரத்தோடே யிருக்கப்பட்டவர்களால் இந்தப் பத்திசெய்யவேண்டுமேயல்லாமல் அப்படி யில்லாதவர்களு மிந்தப் பத்திசெய்தால் மோட்சமடைவார்களா? அருச்சுனா! சிரேஷ்டமான ஆசாரத்தோடுங்கூடினவனாக இருந்துகொண்டென்னைக் கண்டங் கண்டமாய்ப் பாவித்துப் பத்திசெய்யப்பட்டவர்களைப் பார்க்கிலும் பாபகட்த்தைகளின்றி மிகவுந் துராசாரகட்த்தை யுள்ளவனானாலு மன்னிய தேவதைகளுடைய பக்தனாகாமலெங்கும் நானேயிருக்கிறேனென்றும் எனக்குஞ் சகத்துக்கும் பேதமில்லையென்றும், அகண்ட

ஸ்ரீ வாசுதேவாயநம:

பத்தாவது

# விபூதி அத்தியாயம்.

அவதாரிகை :—முன்சொன்ன ஏழு எட்டு ஒன்பது இந்த அத்தியாயங்களிற் பகவானானவர் தன்னுடைய விபூதிகளைச் சங்க்ரகமாகச்சொல்லி அவைகளையெல்லாம் தானேயென்று பக்திபண்ணும்படியாகச் சொன்னதுந்தவிர இப்போது விஸ்தாரமாயும் ரகசியமாயுமிருக்கப்பட்ட தன்னுடைய விபூதிகளைத்தெரிந்து அவைகளையும் தானேயென்று பக்திசெய்யவேண்டுமென்கிற அபிப்பிராயத்தினாலே யந்த விபூதிகளை யிந்தப் பத்தாம் அத்தியாயத்தில் விஸ்தாரமாகச் சொல்லத்தொடங்குகின்றார். 'அருச்சுனா! ஏழு எட்டு ஒன்பது இந்த அத்தியாயங்களில் நாம்சொன்ன நம்முடைய விபூதிகளைக்கேட்டுச் சந்தோஷத்தை யடைந்திருக்கிற உனக்கு இதஞ் செய்யவேண்டுமென்று நினைந்துப் பரமமாயிருக்கிற விஸ்தாரமான நம்முடைய விபூதிகளையறிந்து பக்திசெய்யும்படியாகத் திரும்பவும் உனக்குபதேசம் பண்ணுகிறோம். (க)

அருச்சுனா! இப்போது நாம் சொல்லப்போகிற நம்முடைய மகிமையை யுடைத்தான விபூதிகளை யொருவரும் அறியமாட்டார்கள்; முப்பத்து முக்கோடிதேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முதலிய இவர்களாலேயும் அறிகிறதற்குத் துர்லபமாயிருக்கும். நம்முடைய அநுக்கிரகமுண்டானால் மாத்திரம் அறியலாமேயல்லாமல் வேறே யெந்த எத்தனங்களினாலும் அறியத்தக்கதல்ல. (உ)

சுவாமி! இதையறிந்ததனாலே பலமென்ன? அருச்சுனா! சனனமில்லாதவனாயும் அநாதியாயும் லோகங்களுக்கெல்லாம் மகேசுரனாயுமிருக்கிற நம்மை யெதார்த்தமா யார் அறிகிறார்களோ அவாள் மனுஷாளுக்குள் சிரேஷ்டாள்; அல்லாமலும் சமஸ்த மோகங்களிலும் சமஸ்த பாபங்களிலுமிருந்து விடுபட்டு நம்முடைய பதத்தையே யடைவார்கள். (ங)



அருச்சுனா! சகலலோகங்களும் நம்முடைய விபூதியினால் விளங்குகின்றதென்கிற விபரத்தைச் சொல்லுகிறோங் கேள். நல்லது பொல்லாதது என்று நிச்சயிக்கிற புத்தியும் எல்லாமாய் நாமே இருக்கிறோமென் றறியப்பட்ட ஞானமும் நம்மைத்தவிர அன்னியமில்லையென்கிறதே மோகமன்றியிலிருக்கிறதும் ஒருவரால்வரப்பட்ட இடஞ்சல்களைச் சகிக்கிறதே பொறுமையும் எது நடந்தாலும் எது வசனித்தாலும் சரியாக நடக்கிறதும், சரியாக வசனிக்கிறதும் சத்தியமும், துர்விஷயங்களிற் போகாமல் தடைசெய்யப்பட்டதே பாகியேந்திரியங்கள் நிக்ரகமும் அன்னியசிந்தனைகள் செய்யாமற் பகவானையே நினைக்கும்படி செய்யப்பட்டதே ஆந்தரிந்திரிய நிக்ரகமும் சீதோஷ்ணாதிகளினால் வரப்பட்ட சுகமுந் துக்கமும் சனனமும் சனனமில்லாமையும் பயமும் பயமில்லாமையும். (ச)

இராகத்துவேஷமின்றி யிருக்கிறதே சமத்துவமும் அஹிம்சையும், சந்தோஷமும், தபசும், தானமும், கீர்த்தியும், அபகீர்த்தியும் இவை முதலான இன்னம் நாநாவிதமான பாபங்களெல்லாம் சமஸ்த பிராணிகளுக்கும் நம்மிடத்தி லிருந்துண்டாம். நிராகாரசொருபமாயிருக்கிற நம்மிடத்தில் இவைகளெல்லாம் எப்படி யுண்டாகலாமென்றால் அவாளவாளுடையகன்மாநுகுணமாக அவாளவாள்பாவனைப்படி நம்முடைய பிரகிருதியினா லுண்டாகப்பட்டதை நம்மாலே யுண்டானதாகச் சொல்லுகிறதேதவிர நாமொன்றுஞ் செய்யவேயில்லை.

அருச்சுனா! பிருகுரிஷி முதலான சப்தரிஷிகளும், சனக, சனந்தரர் முதலான ஞானவந்தாளாகிய நான்குபேர்களும், பதினான்கு மனுக்களுஞ் சமஸ்த தூலதேக அபிமானியாகிய இரணியகர்ப்பனென்னப்பட்ட என்னுடைய பிரகிருதியான மனோசங்கற்பத்தினாலுண்டானார்கள். அவர்களெல்லா மென்னுடைய அம்சரூபானேயவாளாலேசகல பிரபஞ்சமு முண்டாச்சுது, பிரமதேவனாலே சிருட்டியுண்டானதாகச் சாத்திரபுராணங்களிற் சொல்லப்படுகிறதேயென்றால் அந்தப் பிரமதேவரும் என் சங்கற்பத்தினாலேயே யுண்டானவரே அப்பாலவர் மனோசங்கற்பத்தினாலே சிருஷ்டியுண்டானதென்கிறதும் சரியே, இனி யுன்மனதினாலே யந்தச் சிருட்டியுண்டானதென்றும் நாமே நீ யாகும்போது உனக்கே அதனுடைய நிசந்தெரியவரலாம்.

சுவாமி! இவ்விதமாய்ச் சகலமும் உம்முடைய விபூதியென் றறிந்ததனா லென்னபலன்? அருச்சுனா! என்னுடைய விபூதியையும் யோகமகத்துவத்தையும் யதார்த்தமா யாதொருவ னறிவானோ

அவன் நம்மிடத்தில் அசஞ்சலமாயிருக்கப்படாநின்ற தியானயோகத்தையடைவன், இதற்குச் சமுசயமில்லை. (எ)

சுவாமி! உம்முடைய விபூதியையறிந்ததனாலே தியானயோகத்தையெப்படியடைவார்கள்? அருச்சுனா! சொரூபமாயிருக்கப்படாநின்ற சகல பிரபஞ்சங்களும் உற்பத்தியாகிறதற்கும், அவைகள் விருத்தியடைந்து விவகரிக்கப்படுகிறதற்கும் நாமே காரணமென்றும் நம்மைத்தவிர அணுமாத்திரங்கூடச் சலிக்காதென்றும் நம்முடைய விபூதிமகிமையையறிந்த விவேகமுள்ள நம்முடைய பக்தாள் பிரீதிபூர்வமாகவும் அநந்யமாக நம்மையே யுபாசிப்பார்கள். (அ)

அருச்சுனா! இன்னம் அந்தப் பக்தாளானவாள் என்னிடத்திலே யொழிவிடாத சித்தமும் பிராணனு முண்டானவர்களாய் நம்மையே பாவித்துப் பூசைபண்ணுவார்கள். நம்முடைய மகத்துவங்களையும் நம்முடைய திவ்யமான சரித்திரங்களையும் நம்முடைய கீர்த்திகளையும் தனியேயிருக்கும்போது வசனித்துக்கொண்டிருக்கிறதுமல்லாமல் தான்போதிக்கத் தக்கவர்களுக்குப் போதித்துக் கொண்டும் இருக்கிறதனாலேயும் அவைகளிடத்தில் எதார்த்தமாய்ச் சந்தோஷத்துடன் ஆனந்தத்தையு மடைந்துகொண்டிருப்பார்கள். அப்பேர்ப்பட்ட புருஷாளுக்கு நம்முடைய யெதார்த்தமான ஞானத்தை யனுக்கிரகஞ் செய்வித்துச் சனன மரண துக்கத்துடன் கூடியிருக்கிற சம்சாரபந்தத்திலிருந்தும் நிவிர்த்திசெய்து மோக்ஷத்தை யடையும்படியாகவும் பண்ணிவைப்போம். (௯)

சுவாமி! நிராகாரஸ்வரூபமாயிருக்கிற தேவரீர் எவ்விதமாக ஞானத்தை யநுக்ரகஞ்செய்வீர்? அருச்சுனா! எப்போதும் நம்மிடத்திலேயே தியானபரர்களாயும் பிரீதிபூர்வமாகவும் நம்மைப் பக்திபண்ணப்பட்டவர்களுக்கு எந்த புத்தியினாலே நம்மை யடைவார்களோ அப்பேர்ப்பட்ட புத்தியோகத்தை நாம் கொடுப்போம். (௰)

சுவாமி! அப்படிப்பட்ட புத்தியோகத்தைத் தேவரீர் எங்கேயிருந்தெவ்விதமாய்க்கொடுப்பீர்? அருச்சுனா! நம்முடைய பக்தாளை யநுக்கிரகஞ்செய்யவேண்டி அவர்களுடைய புத்திக்குச் சாக்ஷியாகவும் அந்தரியாமியாகவும் நாமிருப்பதனாலே அவ்விடத்திலிருந்து அந்தப்புத்திக்கு நாம் சோதகம் பண்ணிவைத்துக் கொண்டிருப்போம். அந்தச் சோதகத்தினாலே பிரகாசரூபமாகிய ஞானமென்கிற தீபமுண்டாகி அஞ்ஞானத்தினாலுண்டான சமுசாராந்தகாரத்தை



விலகும்படி பண்ணிவைத்து நம்முடைய சொரூபத்தை யடையும்படியாகவும் செய்விப்போம். (௧௧)

அவதாரிகை:—ஏழு எட்டு ஒன்பது இந்த அத்தியாயங்களிற் சொன்ன முக்கியமான விபூதிகளை யெல்லாம் பார்க்கும்போது பகவானைத்தவிர அன்னியமில்லையென்றும், அப்பேர்ப்பட்ட விபூதியையுடைத்தான பகவானை யேகதேசமாய் ஒரு விசேஷமாகிய புருஷனைப்போல நாமிதுவரைக்கும் எண்ணிக்கொண்டிருந்தது மிகவுஞ் சேவலமான புத்தியென்றும், பகவானுடைய ஸ்வரூபத்துக்கு ஆதியும் அந்தமுமிருக்க மாட்டாதென்றும் புத்திக்குச் சமுசயமின்றி நிச்சயப்பட்ட படியினாலே அருச்சுனனானவன் பகவானைப்பார்த்துத் துதி செய்யத்தொடங்குகின்றான். சுவாமி! பரப்பிரமஸ்வரூபராயும் சமஸ்தபாபங்களிலுமிருந்து பாவனஞ் செய்யத்தக்கவராயும் எல்லோரும் அடைகிறதற்கு ஸ்தானமாயும், மிகவும் அத்யந்தம் சிரேஷ்டமுள்ளவராயும், சுயம்பிரகாசஸ்வரூபராயும், சாஸ்வதராயும், நித்தியராயும், திவ்விய புருஷராயும், எல்லாத் தேவதைகளுக்கும் ஆதிதேவராயும்! ஜனன மரணரகிதராயும், எங்கும் வியாபகராயும் தேவரீர் இருக்கப்பட்டவரென்றும், இப்போது அடியேனுக்குத் தெரியவந்தது.

அருச்சுனா! இதுவரையும் நம்மை நானாவிதமாகப் பாவித்திருந்த நீ இப்போதொருவிதமா யெப்படிச்சொல்லுகிறாய்? சுவாமி! சப்தரிஷிகளும் தேவரிஷியான நாரதரும், அசிதனும் தேவலனும் வியாசமுனீந்திரனும் இன்னமிருக்கப்பட்ட மகான்கள் முதலானவர்களும் இப்போது நானிச்சயித்துச்சொன்னபடிக்கே சொல்லிக்கொண்டிருப்பார்கள். தேவரீரும் அப்படியே பலதடவைகளிலும் அநுக்ரகஞ் செய்திருக்கிறீர்கள் அதனாலேயுந்தேவரீருடைய விபூதிமகிமைகளையிப்போது பார்க்கிறதனாலேயும் என் புத்திக்கு இப்போது சரியாய் நிச்சயப்பட்டு நானுஞ்சொன்னேன். (௧௩)

சுவாமி! தேவரீர் எனக்குபதேசிக்கப்படாநின்ற எல்லா அர்த்தங்களும் நிசமென்றெண்ணுகிறேன். சட்குண ஐஸ்வரிய சம்பன்னா! தேவாதிகளாலேயும் அசுரர்களாலேயும் உம்முடைய நிசரூபத்தை யறியக்கூடாது. (௧௪)

சுவாமி! பின்னை யார்தானறிவார்களென்று கேட்பீர்களேயாகில் சமஸ்தபூதங்களையுமுண்டாக்கி அவைகளைச் சித்தி யடையும்படியாகவுஞ்செய்வித்து அந்தப் பூதங்களுக்கெல்லா மீசானாக இருந்து

கொண்டு அவரவராருடைய கன்மானு குணமாகப் பலன்களையுங் கொடுத்துக்கொண்டு ஆதித்தனதிப் பிரகாசங்களுக்கெல்லாம் பிரகாச ரூபமாயிருந்து பிரகாசித்துக்கொண்டு, செகத்தியாவும் புருஷோத் தமராயுமிருக்கப்படாநின்ற தேவரீருடைய ஸ்வரூபத்தை தேவரீரே யறியவேண்டுமேயல்லாமல் வேறே யொருவருமறியமாட்டார்கள்

சுவாமி! தேவரீர் எந்தவிபூதி விசேஷத்தினாலே யிந்தச் சகங் களெல்லாம் வியாபித்திருக்கிறீர்களோ அப்படிப்பட்ட ஆச்சரியகர மாயும் திவ்யமாயு மிருக்கப்படாநின்ற உம்முடைய விபூதிகளைச் சிருட்டியுண்டான பிறகு உண்டானவர்களாலே விபரமாகத்தெரியக் காரணமில்லாததனாலே அவைகளையெல்லா சொல்லுகிறதற்குத் தேவரீரே தகுந்தவர் சமஸ்தமும் அவிடத்துக்கே தெரியவரலாம்.(கசு)

சுவாமி! யோகீசுரர்களுக்கெல்லாம் யோகீசுரரே யெப்போதும் நானும்மை யெவ்விதமாகச் சிந்திக்கவேண்டுமோ எவ்விதமாத் துதி பண்ணவேண்டுமோ எந்தெந்த விபூதிபாவங்களைத் தாமாக நான் சிந்திக்கிறதற்குத் தகுந்ததாயிருக்குமோ அவைகளை நான் தெரியாத வனாயிருக்கிறேன். (கஎ)

ஆகையாற் சனார்த்தனா! தேவரீருடைய யோகமகத்துவத்துவத் தையும் விபூதிவிசேஷங்களையும் எந்தெந்த வஸ்துக்களில் தேவரீரை யெப்படி யெப்படிச் சிந்திக்கவேண்டுமோ அவைகளையெல்லாம் சவிஸ்தாரமாகத்திரும்பவும் அநுக்ரகம் பண்ணவேண்டும். தேவரீ ருடைய வாக்கியங்களாகிற அமிர்தத்தை யெவ்வளவு கேட்டாலுந் திருப்தியடையாதவனா யிருக்கிறேன். (கஅ)

அருச்சுனா! நம்முடைய விபூதிகளெல்லா வற்றையும் வசனிக்கிற தற்குச் சக்கியமாகாது; ஆனதாற்றெய்வசம்பந்தமான திவ்யரூபங்களா கிய என்னுடைய விபூதிகளிற் பிரதானமாயிருக்கிற விபூதிகளைமட்டும் விபரமாய்ச் சொல்லுகிறேன். இவைகளை யறியும்போது மற்ற விபூதிக ளெல்லா மதற்கு அந்தர்ப் பூதமாய் விடுகிறதுந்தவிர எல்லாவிபூதிகளையு மறிந்தா லெந்தப்பலனுண்டோ அந்தப்பலனே யிவைகளினா லுண்டா கும். நாம் சொல்லப்பட்ட விபூதிகளிற் சில என்னுடைய சொரூபமாக வே பாவனை செய்யவேண்டும்; சிலவற்றில் மாயாகாரியமான சடாம்ச மாகிய நாமரூபத்தைத்தள்ளி நம்மைச் சைதன்யமாத்திரமாகப் பாவனை பண்ணவேண்டும். (க௯)

அருச்சுனா! சகலபூதங்களுடைய இருதயத்தில் அந்தரியாமியாக வசிக்கப்படாநின்ற பரமாத்மா யாரோ அவரே நாம், சர்வசராசரமான



பிரபஞ்சமுண்டாகிற தற்கும் அவைகள் திதி யடைகிறதற்கும் அவை கள் லயமடைகிறதற்குங் காரணமா யிருக்கப்பட்ட தெதுவோ அது வும் நாமே. இவைகளினாலேயே சமஸ்த விபூதிகளு மறிந்துகொண்ட வனானாலும் அந்த நிச்சயத்தை யாந்தரத்தில் வைத்துக்கொண்டு பாகி யத்திற் பத்திசெய்யவேண்டி. நீ கேட்டபடிக்கு முக்கியமான விபூதி களையும் சொல்லுகிறேன் கேள். (உ0)

அருச்சுனா! துவாதசாதித்தர்களுக்குள் விஷ்ணு நாமத்தை யுடைத் தான ஆதித்தன் நாம், பிரகாசங்களிலே சூரியப்பிரகாசம் நாம். சப்த வாயுவுக்களில் மரீசியென்னப்பட்ட வாயுவு நாம், நட்சத்திரங்களிற் சந் திரன் நாம். (உக)

வேதங்களுக்குள்ளே உபதேசவாக்கியங்களைச் சொல்லப்பட்ட சாமவேதம் நான்; தேவதைகளுக்குள்ளே தேவேந்திரன் நாம்; இந்திரி யங்களுக்குள்ளே மனசு நாம்; சமஸ்த பூதங்களிலு மிருக்கப்பட்ட ஞானம் நான். (உஉ)

ஏகாதசருத்திரர்களுக்குள்ளே சுகத்தைக் கொடுக்கப்பட்ட சங்கரன் நான்; எட்சராக்ஷசர்களுக்குள்ளே குபேரன் நான்; அஷ்ட வசுக்களுக் குள்ளே பாவகன் நான்; மலைகளுக்குள்ளே மேருபருவதம் நான். (உங)

புரோகிதர்களுக்குள்ளே முக்கியமான பிரகஸ்பதி நான். சேனாதி பதிகளுக்குள்ளே சுப்பிரமணியர் நான்; நதிகளுக்குள்ளே சமுத்திரம் நான். (உச)

அருச்சுனா! மகாரிஷிகளுக்குள்ளே பிருகுமகாரிஷிநான்; மந்திரங் களிற் பிரணவமந்திரம் நான்; யக்ஞங்களுக்குள்ளே செப யக்ஞம் நான்; அசைவில்லாதவைகளுக்குள்ளே யிமயபருவதம் நான். (உரு)

அருச்சுனா! விருட்சங்களுக்குள்ளே அசுவத்தவிருட்சம் நான்; தேவரிஷிகளிலே நாரதனான்; கெந்தருவர்களுக்குள்ளே சித்திரத்ரேரவ னன்; சித்தர்களுக்குள்ளே கபிலமுனிநான். (உசு)

அசுவங்களுக்குள்ளே உச்சைசிரவம்நான்; கெஜங்களுக்குள்ளே ஐயிராவதம் நான்; புருஷர்களுக்குள்ளே யிராஜாக்கள் நான். (உஎ)

அருச்சுனா! ஆயுதங்களுக்குள்ளே வச்சிராயுதம் நான்; பசுக்களுக் குள்ளே காமதேனு நான், பிரஜைகளுற்பத்தியாகிற மன்மதம் நான், சர்ப்பங்களுக்குள்ளே வாசுகி நான். (உஅ)

அருச்சுனா! விஷமின்றியிருக்கிற நாகங்களில் ஆதிசேடன் நான், ஜலத்திற் சஞ்சாரம்பண்ணப்பட்ட சகல சீவர்களுக்கும் ராஜாவாகிய வரு

னன் நான்; பிதிர்க்களுக்குள்ளே யரியமன் நான்; தப்பாமற் றண்டிக்கிறவர்களுக்குள்ளே யியமதன்மராஜனன். (௨௯)

அசுரர்களுக்குள்ளே பிரகலாதன் நான்; நிமிஷமுதற் கணக்கு செய்யப்படா நின்ற காலம் நான்; மிருகங்களுக்குள்ளே சிங்கம் நான்; பட்சிகளுக்குள்ளே கருடன் நான். (௩௦)

அருச்சுனா! வேகங்களுக்குள்ளேவாயுவேகம் நான்; வில்வித்தையுடைத்தானவர்களுக்குள்ளே ரெகுபதிநான்; மச்சங்களுக்குள்ளே ராஜாவாகிய மகரமச்சம் நான், நதிகளுக்குள்ளே கெங்காபவானிநான் (௩௧)

அருச்சுனா! சகல பிரபஞ்சங்களுக்கு மாதியாகிய சிருஷ்டியும் மத்தியாகிய திதியும் அந்தமாகிய சம்மாரமும் இந்தமூன்றும் நான்; சமஸ்த வித்தைகளுக்குள்ளேயும் அத்யாத்ம மென்னப்பட்ட பிரமவித்தை நான்; வாதங்களுக்குள்ளே தான் பிடித்தகாரியம் செயிக்க வேண்டுமென்று அதற்கநுசரணையாக நியாயமோ அநியாயமோ ஒருவருக்கொருவர் செய்யப்பட்ட வாதங்களுக்குச் செற்பமென்று சொல்லப்படும். தனக்கொன்றும் பிரயோசனமில்லாமல் எதிரிக்குமட்டுங் குறைவுசெய்ய வேண்டுமென்று நினைத்தவனுக் கெந்த இடங்களிற் பூஷணமு முபகாரமு முண்டாயிருக்குமோ அவைகளைக் கெடுத்துப் போடும்படியாக அவனிடத்திற்போய்ப் பேசப்பட்ட வாதமுதலானவைகளுக்கு விதண்டமென்றுசொல்லப்படும். ஆத்ம ஞானத்தைப்பற்றிச் சமானஸ்தானாவது அல்லது அதற்குக் கீழ்ப்பட்ட முமுட்சுக்களாவது இவர் ஒருவருக்கொருவர் செய்யப்பட்ட வாதங்களெதுவோ அதற்கு வாதமென்று சொல்லப்படும் இந்த மூன்றுவாதங்களிலும் முன்சொன்ன ரசோகுண தமோகுணமாகிய இரண்டுவாதங்களும் நாமல்ல; சத்துவகுணமாகிய மூன்றாவதுசொன்ன வாதமேநான். (௩௨)

அருச்சுனா! அட்சரங்களுக்குள்ளே யெந்த அட்சரங்களுக்குஞ் சேர்ந்து பிரகாசிக்காநின்ற அகார அட்சரம் நான், சமமென்று சொல்லப்பட்டவைகளுக்குள் ராமனென்றுங் கிருஷ்ணனென்றுஞ்சொன்னால் அவைக ளெப்படிச்சமமோ அப்படிப்போலேயிருக்கப்பட்ட சமங்களெல்லாம் நான்; காலங்களுக்குட் சிருஷ்டியுண்டானபோதும் ஸ்திதியானபோதும் அவைகள் லயமடைந்தபோதும் அட்சயமாயிருக்கப்படாநின்ற காலமெதுவோ அந்தக்காலம் நான்; கன்மங்களுக்குள் அந்தந்தச் சீவர்களுடைய கன்மாநுகுணத்துக்குத் தகுந்த பலன்களைக்கொடுக்கப்பட்ட தெதுவோ அந்தக்கன்மங்கள் நான். (௩௩)



சர்வமுஞ் சங்கரிக்கிறதில் மிருத்திவுநான்; சமஸ்த பூதங்களையும் அந்தந்தப்படி யுண்டாகப் பண்ணப்பட்ட சத்தியெதுவோ அது நாம்; ஸ்திரீகளில் நல்லகீர்த்தியும் லட்சுமீகரமும் நல்லதர்மமும் வரப்போகிற காரியத்தில் யூகிக்கிற ஸ்மிருதியும் முன் நடந்திருக்கிற விஷயங்களைத் தாரணைசெய்யப்பட்ட சித்தமும் தைரியமும் சமையும் இவைகளெல்லாம் நாமே. (௩௪)

அருச்சுனா! யாகாதிகளைக்குறித்து வசனிக்கப்பட்ட மந்திரங்களிற் தேவேந்திரனைக் குறித்துச் சருவதேவ தாத்பகமாய்ச் சொல்லப்பட்ட சாமவேதமந்திரமெதுவோ அது நான்; சந்தஸ்களுக்குள் காயத்திரி சந்தஸ்நான்; மாசங்களுக்குள்ளே சமஸ்த தேவாலயங்களிலும் விசேஷகரமாகப் பூசைமுதலானவைகளுஞ் செய்வித்துக் கொண்டாடப்பட்ட மார்கழிமாதம் நான், இருதுக்களுக்குள்ளே தேவாலயங்களி லுச்சவாதிகளும் பிரசைகளுக்கு விவாகாதி முதலான சுபங்களும் நடக்கப்பட்ட சித்திரை வைகாசிமாதமாகிய வசந்தருது நான். (௩௫)

அருச்சுனா! வஞ்சனைக்குட் சொக்கட்டாடட்டத்தில் அவனவனிஷ்டப்படிக்குப் பகடைகள் விழும்படியாகப் பண்ணப்பட்ட சக்தியெதுவோ அது நான்; தேயிசுகளுக்குள்ளே தேவாலயங்கள் பிரமாலயங்கள் முதலானவையுஞ் செய்யப்பட்டதனாலுண்டான கீர்த்தியாகிய தேயிசெதுவோ அது நான், எந்தெந்தப் புருஷராலே யெந்தெந்தச் செயமடைகிறார்களோ அந்தந்தச் செயமெல்லாம் நான்; எந்தெந்த விஷயங்களைப்பற்றி யெந்தெந்தப் புருஷர்முயற்சிசெய்வார்களோ அந்தந்த முயற்சியெல்லாம் நான், சாத்துவீகவந்தர்களுக்குள் அன்னிய சங்கற்பமின்றியிருக்கப்பட்ட சாந்தமெதுவோ அது நான். (௩௬)

அருச்சுனா! யாதவ வம்சர்களுக்குள் வசுதேவ புத்திரனாகிய இப்போது பிரத்தியட்சமா யுனக்குபதேசஞ் செய்யப்பட்ட வாசுதேவனும் நானே; பாண்டவர்களுக்குள்ளே தனஞ்சயனென்னப்பட்ட நீயும் நாமே; முனீசுரர்களுக்குள் வியாசமுனிநாமே; திரிகாலங்களும், அறிகிறவர்களுக்குட் சுக்கிரபகவானுமே. (௩௭)

அருச்சுனா! தண்டனைகளில் யாவரையும் வசப்படுத்தும்படியான தண்டனை யெதுவோ அதுநாம்; நீதிகளி லெவர்களைச் செயிக்கவேண்டுமோ அவர்களுக்குப் போதிக்கப்பட்டதனாலே யவர்களொப்புக் கொண்டென்பட்ட நீதி யெதுவோ அது நாம்; இரகசியங்களுக்குள்ளே அன்னிய சங்கற்பமின்றித்தானே தானாயிருக்கப்பட்ட மவுனரகசியமெதோ அது நாம்; சகல சீவர்களுடைய ஞானங்களுக்குள் தத்துவந் தெரிந்த ஞானவந்தர்களுடைய ஞானம் நான். (௩௮)

அருச்சுனா! சகலபூதங்களுக்கு முற்பத்தியென்ன திதியென்ன லய மென்ன இந்தமூன்றுக்குங் காரணமான பீஜமும் நாமே; இந்தச் சராசராத்மகமான பிரபஞ்சங்களெல்லாம் நம்மைக்காட்டிலும் அணுமாத்திரங்கூட அன்னியமே கிடையாது; இதனாலே யெல்லாம் நாமேயாயிருக்கிறோம். (௩௯)

அருச்சுனா! நம்முடைய திவ்வியமான விபூதிக்குப் பிரமாணஞ் சொல்ல முடியாது; அப்படிக்கு விஸ்தாரமாயிருக்கப்பட்ட விபூதிகளின் முடிவை நிச்சயிக்கும்படியான தெய்வமேது? அவ்வளவுமாத்திரம் விசேஷமாயிருக்கிற விபூதிகளைமட்டுஞ் சங்க்ஷேபமாகச் சொன்னோம்.

அருச்சுனா! இவ்விதமாய் நாஞ் சொல்லியிருக்கையிலும் பின்னுமுமெல்லா விபூதிகளும் விஸ்தாரமாய்க் கேட்க வேண்டுமென்று உனக்குப் பிரியமுண்டாயிருப்பதனாலே அவைகளெல்லாம் நாம் சொன்னாலும் நீ யறியச் சக்திவந்தனல்லாததனாலேயெல்லா வற்றையு மறியத்தக்கதான சுலுவாகிய ஒரு மார்க்கத்தைச் சொல்லுகிறோம் கேள் அருச்சுனா! சகல லோகங்களிலும் ஐஸ்வரியங்களோடும் பிரகாசத்தோடும் மகிமையோடும் அதிக சிரேஷ்டத்தோடும் பலன்களோடுங்கூடி யெந்தெந்தஸ்தலங்களிடத்திலும் எந்தெந்தவஸ்துக்களிடத்திலும் விளங்குகின்றனவோ அவைகளெல்லாம் நம்முடைய முக்கியமான விபூதிகளென்றும் நம்முடைய அம்சத்தினாலுண்டானதென்று மறி. (௪௧)

அருச்சுனா! உன்னுடையசித்தம் பகிர் முகமாகும்போது நீபக்தி செய்ய நம்முடைய விபூதிகளைத்தெரியவேண்டுமென்று கேட்டதற்குப் பரிச்சின்னத்தோடும்வெகு பிரகாரமாக முக்கியமாயிருக்கப்படாநின்ற விபூதிகளை மட்டுஞ் சங்க்ஷேபமாக நாம் சொன்னோம். அப்படிப் பட்ட விபூதிகளைமட்டுந் தனித்தனியே நீ பக்தி செய்வதனாலே பூரணமான ஞானத்தையும், பிரயோசனத்தையு மடைய மாட்டாய். ஏதனாலென்றால் நாமெப்போதும் சகல பிரபஞ்சங்களிடத்திலும் நம்முடைய ஏகாம்சத்தினால் வியாபிக்கப்பட்டு விளங்குகிறபடியினாலே தனித்தனியே நீ பக்தி செய்தால் விபசாரபத்தியாக முடியுமே யல்லாமல் அவ்விபசாரபத்தியாக மாட்டாது. ஆகையால், சகல பிரபஞ்சமாகிய சமஸ்த வஸ்துக்களிடத்திலும் நாமே யிருக்கிறோ மென்றும், நம்மைத் தவிர அன்னியமில்லை யென்றும் திட பத்தியுடனே அவ்விபசார பத்தி செய்யவேண்டும்; அப்போதுதான் பூரணப் பிரயோசன மாகிய கைவல்ய பதத்தைத் தப்பாமல் நீ யடைய அதிகாரியாவாய். (௪௨)



இந்திரியங்கள் வழியாகச் சித்தம் பகிர் முகமானால் எந்த வஸ்துக்களைப் பார்த்தாலும் பகவத்பாவனையே பண்ணவேண்டுமென்கிற அபிப்பிராயங்கொண்டு தன்னுடைய விபூதிகளைப் பத்தா மத்தியாயத்தினாலே அநுக்ரகஞ் செய்த யாதொரு பகவானுண்டோ அவருக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

பத்தாவது

விபூதி அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௧௦-க்குச் ச்லோகம் - ௪௧௪.

பரமகுருவே துணை.

---

உ

ஸ்ரீ சீதாராமானுஜவிக்கிரஹாய நம:

பதினொருவது

# விசுவரூப அத்தியாயம்.

அவதாரிகை:-பகவானானவர் விபூதிமகிமையை அநுக்ரகஞ்செய்ததனாலே அந்த விபூதிஸ்வரூபமாகிய விசுவரூபத்தைக் காணவேண்டுமென்று அருச்சுனன் அபேட்சிக்க, அந்தப் பிரகாரமே தன்னுடைய விசுவரூபத்தைக் காண்பித்த விபரங்களை யிந்த அத்தியாயத்திற் சொல்லப்படுகிறது.

அவதாரிகை:—முந்தின அத்தியாயத்தின் முடிவிலே சகல பிரபஞ்சங்களையும் ஏகாம்சத்தினால் வியாபித்துக் கொண்டிருக்கிறோமென்றனுக்ரகஞ்செய்த பகவானைப்பார்த்து அப்படி வியாபித்திருக்கிற ஸ்வரூபத்தைத் தான் பிரத்தியட்சமாய்க் காணவேண்டு மென்று ஆந்தரத்தி லிச்சையுடையவனாய் அருச்சுனனானவன் பகவானைப்பார்த்துப் பிரார்த்திக்கிறான். சுவாமி! அடியேனை யநுக்ரகஞ் செய்து இரட்சிக்கிற நிமித்தமாக இரகசியமாயிருக்கப்படாநின்ற அத்யாத்மமாகிய ஸ்வரூப ஞானத்தை யுபதேசித்ததனாலே யென்னுடைய மோகமென்னப்பட்ட அஞ்ஞான முழுதும் நஷ்டமாய்ப் போய்விட்டது. (௧)

தாமரையிதழுக்குச் சமானமான நேத்திரத்தை யுடைத்தான பகவானே! தேவரீரிடத்திலேயே சமஸ்தபூதங்களு முண்டாகி ஸ்திதியான பின் லயமுமடைகிறதென்கிறதையும் அவ்வியயமான உம்முடைய

மகத்துவமும் விஸ்தாரமாக அநுக்ரகஞ் செய்ததனாலே தெரிந்து கொண்டு அதனாலே அத்தியந்த சந்தோஷத்தையு மடைந்தேன். (௨)

ஆனாலும் பரமேஸ்பரா! உம்முடைய விசுவரூபத்தை யெவ்வித மாக அநுக்ரகஞ்செய்தீரோ அவைக ளெல்லாம் சத்தியமே, அவைக ளில் எனக்கு யாதொரு சமுசயமுமில்லை. ஆனாலும் புருஷோத்தமா! ஞானம், ஐஸ்வரியம், சக்தியம், பெலம், தைரியம், தேஜசு இவைகளு டன் கூடியிருக்கிற தேவரீருடைய ஈஸ்வர சொரூபத்தைப் பார்க்க வேண்டுமென்று மிகவு மிச்சையுண்டானவனா யிருக்கிறேன். (௩)

அருச்சுனனானவன் இன்னமும் எவ்விதமாய்ச் சொல்லுகிறு னென்றால், யோகீசுவரருக் கெல்லாம் ஆதாரமா யிருக்கப்பட்ட பர மேஸ்பரரே! உம்முடைய ஸ்வரூபத்தைப் பார்க்கிறதற்கு நான் யோக் யனே அல்லவோ, அது தேவரீரே யறியவேண்டும். தரிசனஞ்செய்ய நான் யோக்யனாயிருந்தால் அவ்வியயனும் வியாபகனு மிருக்கப்படா நின்ற உம்முடைய விசுவரூபத்தை யெனக்குத் தரிசனம் பண்ணி வைக்கவேண்டுமென்று அருச்சுனன் பிரார்த்திக்கப் பகவானுந்தய வோடே அந்த விசுவரூபத்தைக் காண்பிக்கிறநிமித்தம் சஞ்சயன் சாவதானமாக இருந்து பார்க்கவேண்டுமென்று என்ன உத்தரவு சொல்லுகிறுரென்றால். (௪)

அருச்சுனா! அநேக நூறு நூறாயும் அநேகம் ஆயிர மாயிரமாயும் நானாவிதபேதாபேதங்களாயும் நானாவிதமான திவ்யங்களாயும் பிரகா சிக்கிற நானா வர்ணங்களோடும் நானாவிதமான ஆகிர்தி விசேஷங்களோ டுங்கூடி யிருக்கப்படாநின்ற நம்முடைய ஸ்வரூபத்தைப் பாரென்று சொல்லி. (௫)

இன்னம் துவாதசாதித்தாளையும், அஷ்டவசுக்களையும், ஏகாதசரு த்திரர்களையும், அசுவினிதேவதைகளையும், மருத்துதேவதைகளையும், சப்தவாயுக்களையும் நம்முடைய இடத்திலேயேபாரும். அருச்சுனா! நீ முன்காணாமலும் கேட்காமலும் இருக்கிற இன்ன மநேக ஆச்சரி யங்களுடனே யிருக்கிறவைகளையெல்லாம் நம்மிடத்திலேபார்ப்பாயாக.

பார்த்தா! நம்மிடத்தி லிருக்கப்படாநின்ற சராசராத்மகமான சகல பிரபஞ்சங்களும் இப்போது பாரும் அருச்சுனா! நீயென்ன என்ன பார்க்கவேண்டுமென்று இச்சையுடனே நிச்சயித்திருப்பாயோ அவைக ளெல்லாம் நம்முடைய இடத்திலேயே பார். (௭)

அருச்சுனா! நம்முடைய விசுவரூபத்தையுன்னுடைய சருமசட்சு வினாலேபார்க்கச் சக்தனாகமாட்டாய்; ஆனதினாலே யுனக்குத் திவ்யமா



யிருக்கப்படாநின்ற ஞான நேத்திரந் தருகிறேன். ஆனால் ஈசுரசம்பந்த மான நம்முடைய யோகமாயை யினுடைய பிரபாவத்தை யுடைத் தான நம்முடைய ஸ்வரூபத்தைப் பாரென்று பகவானானவ ரநுக்ர கஞ் செய்தாரென்று திரிதராட்டிரருக்குச் சஞ்சயர் ஆறுசுலோகங் களினாற் சொல்லுகிறார். (௮)

வாருமையா திரிதராட்டிரரே! மகா யோகிகளுக் கெல்லாம் யோகீஸ்பரரா யிருக்கப்படாநின்ற பகவானானவர், அருச்சுனனைப் பார்த்து அநுக்ரகத்துடனே தம்முடைய சிரேஷ்டமா யிருக்கிற விசு வரூபத்தைக் காண்பித்தார். (௯)

அதெப்பேர்ப்பட்டரூபமென்று கேட்பீரேயாகில், அதன் விபர முஞ் சொல்லுகிறேன் கேளும். அநேக முகமும், அநேகங் கண்களும், அநேக ஆச்சரியங்களும், அநேக ஆபரணங்களும், அநேக ஆயுதங் களும்,— (௧௦)

அநேக திவ்யமாயிருக்கிற பூமாலைகளும், அநேக திவ்யமாயிருக் கிற பீதாம்பர முதலான வஸ்திரங்களும், அநேக திவ்யமா யிருக் கிற கந்தங்கள் தரித்துக்கொண்டிருக்கிறதாயும், அளவற்ற சர்வ ஆச் சரியகரமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற முகத்தோடே தரிசனங் கொடுத்தார். (௧௧)

மகாராசாவே! நானாவிதமான அனந்த ரூபங்களோடுங் கூடின விசுவரூபமாகப்பட்டது ஆகாயத்தில் அநேக சூரிய பிம்பங்களுடைய காந்தியானது ஏககாலத்திற் பிரகாசித்ததே யாமாகில் அதுகூட அந்த மகாத்மாவினுடைய பிரகாசத்துக்குச் சரியென்று சொல்லக்கூடாது. அப்பேர்ப்பட்ட ரூபத்தை அருச்சுனனுக்குத் தரிசனமாகும்படிக் காண்பித்தார். (௧௨)

மகாராசாவே! அப்பேர்ப்பட்டவிசுவரூபத்தில் அநேக விதம்விதங் களா யிருக்கப்படாநின்ற சர்வ பிரபஞ்சங்களும் தேவாதிதேவனாயிருக் கிற ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய சரீரமாகிய ஆகாயத்திலிருக்க, அருச்சுனனானவன்பார்த்து மிகவும்ஆச்சரியகரத்தையடைந்தான்(௧௩)

மகாராசாவே! அருச்சுனனானவன் இப்பேர்ப்பட்ட ரூபத்தைக் கண்டமாத்திரத்திலே சந்தோஷத்தை யுடைத்தானவனாய்த் தேகமெல் லாம் மயிர்க்கூச்செரியப் புளகாங்கிதமாகி, ஆச்சரியத்தோடே கூடின வனாய்ப் பகவானைப்பார்த்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து

அஞ்சலிபந்தனஞ்செய்துகொண்டு பதினோரு ஸ்லோகத்தினால் ஸ்தோத்திரஞ் செய்கிறான். (௧௪)

சுவாமி! உம்முடைய திவ்யஸ்வரூபத்தி லாதித்தனாதி தேவதை களையும் ரிஷிகளையும் நான்குவிதமான ஜீவாளையும் பேருவிலிருக்கிற பிரமாவையும ருத்திரரையும் வசிட்டாதி மகான்களையும் தட்சாதி சர்ப்பங்களையுங் கண்டேன். (௧௫)

சனார்த்தனா! அனேகங் கைகளோடும், புந்திகளோடும் வதனங்க ளோடும், நேத்திரங்களோடுங் கூடினதாய் அளவற்ற நானாவிதமான ரூபத்தையுடைத்தாயிருக்கிற தேவரீரை தரிசனஞ்செய்தேன். விசு வமே ரூபத்தையுடைத்தாயிருக்கிற பகவானே! உம்முடைய ஆதிமத்தி யாந்தமாகிய மூன்றையுங் காண்கிறதற்கு ஒருவராலுங் கூடாது. (௧௬)

அப்பேர்ப்பட்ட ஸ்வரூபத்தை யுடைத்தான வராயும் அநேக கிரீடங்கள் கதைகள் சக்கரங்களைத் தரித்துக்கொண்டிருக்கிறவரா யும், தேவசகளுக்கெல்லா மிருப்பிடமாயும், எங்கும் பிரகாசிக்கிறவரா யும், ஒருவராலும் பார்க்கப்படாதவராயும், பிரகாசிக்கின்ற அக்கினி ஆதித்தனிவர்கள் பிரகாசத்துக்கும் பிரகாசங் கொடுக்கிறவராயும், இன்னபடியென்று நிச்சயிக்கக்கூடாத தேவரீருடைய சொரூபத்தைத் தரிசித்தேன். (௧௭)

மகாராசாவே! இன்னமு மெவ்விதமாய்த் தோத்திரஞ் செய்கிறு னென்றால், நாசமின்றியிருக்கப்பட்ட பரப்பிரமஸ்வரூபராயும், தேவரீ ருடைய பதத்தை யடையவேண்டுமென்றெகார்த்தமா யிருக்கப்பட்ட முமூட்சுக்களாலே யறியப்படுகிறவராயும், விசுவத்துக்கெல்லாம் ஆதாரராயும், சிரேஷ்டமான காரணராயும், அவ்வியராயும், சாஸ்வத மான தன்மங்களை ரட்சிக்கிறவராயும் நித்யராயும், புராதனராயும் மோட்சம் வேண்டுமென்கிறபேருக்கு மோட்சரூபமாகவு மிருக்கிறவர் தேவரீர் தாமேயென்று நானறிந்தேன. (௧௮)

இன்னம் ஆதிமத்தியாந்த ரகிதராயும், அனந்த மகிமையை யுடைத் தானவராயும், அனேக சூரிய சந்திராகிய நேத்திரங்களை யுடைத்தா னவராயும், அனேக அஸ்தங்களை யுடைத்தானவராயும், பிரகாசித்துக் கொண்டிருக்கப்பட்ட அக்கினி முதலான தேவசகளுக்கெல்லாம் சிரேஷ்டமான தேவசு ரூபமாயிருக்கப்பட்ட அனேக வதனங்களை யுடைத்தானவராயு மிருக்கப்பட்ட தேரீருடைய சுயம்பிரகாசத்தி



னாலே சமஸ்த பிரபஞ்சங்களும் தாபப்படும்படியாக விருக்கிற தேவரீ ரைத் தரிசனம் பண்ணினேன். (௧௯)

இன்னம் பூமி ஆகாயம் திக்குகள் விதிக்குகள் முதலாகிய எங் கும் வியாபித்திருக்கிற மகாத்மாவாகிய தேவரீர் அதிக ஆச்சரியகரமா யும் உக்ரமாயுமிருக்கப்படாநின்ற சொரூபத்தைப்பார்த்து லோகத் திரயங்களிலுள்ள சகல ஜீவாளும் மகாபயத்தை யடைந்துகொண் டிருக்கிறார்கள். (௨௦)

இன்னமும் சகலதேவதைகளும் பயப்பட்டுத் தேவரீரைச்சரண மடைகிறார்கள். இன்னம் சிலபேர்கள் பயப்பட்டவர்களாகி அஞ்சலி பந்தனஞ்செய்துகொண்டு இரட்சிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார் கள். மகாரிஷிகளும் சித்தாள் முதலானவர்களும் சுபங்களைவேண்டி அனேகவிதமாய்த் தேவரீரைத் தோத்திரஞ் செய்கிறார்கள். (௨௧)

இன்னம் ஏகாதசருத்திராள், துவாதசாதித்தாள், அஷ்டவசுக்கள், சாத்தியாள், விசுவதேவதைகள், அசுவனிதேவதைகள், மருத்துதேவ தைகள், பிதிர்தேவதைகள், கெந்தருவாள், எட்ச ராட்சச அசுராள், சித்தாள் இவர்களெல்லாரும் ஆச்சரியத்துடனே திகைத்திருக்கிறார்கள்.

இன்னம், மகாபுஜா! அநேக வதனங்களோடேயும் அநேக நேத் திரங்களோடேயும் அநேக அஸ்தங்களோடேயும் அனேக தொடைக ளோடேயும் அனேக பாதங்களோடேயும் அனேக உதரங்களோடே யும் அனேக வாய்களோடேயும் அனேக தந்தங்களோடேயுங் கூடின தாய் அதிக ஆச்சரியகரமாயிருக்கிற தேவரீருடைய ரூபத்தைக்கண்டு நானும் பயப்படுகிறேன். லோகங்களிலேயுண்டாகிய சமஸ்தபேரும் பயப்படுகிறார்கள். (௨௩)

இன்னம் விஷ்ணுமூர்த்தியே! ஆகாயத்தையளாவிப் பிரகாசமாய் அனேக வர்ணபேதங்களும் பயங்கரமான வதனங்களும் விசாலமாய்ச் சொலித்துக்கொண் டிருக்கப்படாநின்ற அனேக நேத்திரங்களை யுடைத்தாயிருக்கப்பட்ட உங்களைப் பார்த்துப் பயமும் பிரமையை யுங்கூடின சித்தத்தையுடைத்தானவனா யொன்றுந் தெரியாதவனா யிருக்கிறேன். (௨௪)

இன்னம் கோரதந்தங்களுடனே பிரளயகாலாக்கினிக்குச் சமான மான பயங்கரத்தோடுங்கூடிய தேவரீருடைய முகத்தைப்பார்த்துத் திக்குத்திசையொன்றும் அறியக்கூடாமலும் சுகமென்னப்பட்டது லேசங்கூட இல்லாமலுமிருக்கப்பட்ட என்னுடையபயத்தைப்போக்கு

இற நிமித்தம் ஜெகந்நிவாசா! தேவேசா! சீக்கிரத்திற் பூர்வம் போலப் பிரசன்னமாய்விடும். (௨௫)

இன்னம் திரிதராட்டிரர் முதலானவர்களுடைய புத்திரர்களாகிய துரியோதனாதியானபேர்களும் அவர்களுடனே கூடின இராசாக்கள் முதலான சேனைகளும் வீஷ்டுமர், துரோணர், கன்னன்முதலான பேரும் நம்முடையசேனையில் திருஷ்டத்துய்மன் முதலான இராஜாக்களும் அதைச்சேர்ந்த சேனைகளும் பிரவேசிக்கிறார்கள். (௨௬)

சுவாமி! அதிக வேகத்தோடுங்கூடினவர்களாகிக் கோரதந்தங்களுடனே பயங்கரமாயிருக்கப்படாநின்ற உம்முடையவாக்கிற் சில பேர்கள் பிரவேசிக்கிறார்கள். இன்னம் சிலபேர்கள் பல்லுகளுடைய நுனியில் அகப்பட்டுத் தேகங்களெல்லாம் பொடிப் பொடியாய்ப் போகிறாப்போலக் காணப்படுகிறார்கள். (௨௭)

சுவாமி! அநேகவிதமான நதிகளெல்லாஞ் சமுத்திரத்திலே வந்து விழுகிறாப்போலத் தேவரீருடைய முகத்திற் பதினெட்டு அக்ரோணி சேனையும் பிரவேசிக்கிறார்கள். (௨௮)

இன்னம் சுவாமி! உம்முடைய மகிமைதெரியாமல் எரிந்துகொண்டிருக்கப்பட்ட தீபத்திலே விழுந்தால் சாவோமென்று தெரியாமல் விளக்குவெட்டிப் பூச்சியானது வேகத்தோடேபோய் விழுகிறாப்போல இந்த யுத்தத்திலேநிற்கிற சேனைகளெல்லாம் சாவோமென்றறியாமல் உம்முடைய முகத்திலே பிரவேசிக்கிறார்கள். (௨௯)

விஷ்ணுமூர்த்தியே! இந்தச் சமஸ்தராஜாக்களும் அவர்களைச் சேர்ந்த சேனைகளும் சொலிக்கப்படாநின்ற காலாக்கினிக்குச் சமானமான உம்முடையவாயில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற எல்லாரையுந் தேவரீர் பட்சிக்கிறீர். அதிக உக்ரமான தேவரீருடைய தேயசானது சகல சனங்களையுந் தபிக்கும்படியாகப் பண்ணிவைக்கிறது. (௩௦)

இன்னம் தேவதைகளுக்கெல்லாம் சிரேஷ்டமாயிருக்கிறவரே! உக்ரசொரூபமாயிருக்கப்படாநின்ற தேவரீர் ஆர்? எனக்குத் தெரியும்படி அநுக்ரகஞ்செய்யவேண்டும்; நான் உமக்கு நமஸ்காரஞ்செய்கிறேன் மிகவும் அற்புதமாயும் ஆச்சரியகரமாயு மிருக்கப்படாநின்ற உம்மை யின்னாரென் றறியவேண்டுமென் றிச்சையுடைத்தான எனக்குத் தேவரீர் பூர்வம்போலப் பிரசன்னமாகவேண்டும்; எதற்காக இந்தச் சொரூபமெடுத்தீர், அந்த ரகசியமு மெனக்குத்தெரியும்படி அநுக்ரகஞ் செய்யவேண்டும். (௩௧)



இந்தவிதமாகக்கேட்ட அருச்சுனனைப்பார்த்துப் பகவானானவர் என்ன உத்தரவு சொல்லுகிறாரென்றால், அருச்சுனா! லோகத்தையெல்லாம் சங்கரிக்கிற காலன் நான், உன்னைத்தவிர இந்த இரண்டுவகைச் சேனையிலே யுண்டானபேர்களையெல்லாம் சங்காரஞ்செய்யவேண்டி யிந்த அவதாரஞ்செய்திருக்கிறோம். இவாளையெல்லாம் நீ சங்கரிக்காமற் போனாலும் நம்மாலே நாசத்தையடைகிறது நிசமென்றெண்ணு. (௩௨)

அருச்சுனா! ஆனதால், நீ தானே யெழுந்திருந்து யுத்தத்தைப் பண்ணிச் சத்துருக்களையெல்லாஞ் செயித்து வீஷ்டுமாதியானபேர்களையெல்லாம் அருச்சுனன் செயித்தானென்று கீர்த்தியையடைந்து குறைவில்லாத இராச்சியத்தையும் ஆண்டுகொள். இத்தனைசேனைகளும் நம்மாலே முதலிலேதானே கொல்லப்பட்டுப் போய்விட்டார்கள். ஆகையால் நான் செயிப்பேனோ செயிக்கமாட்டேனோவென்று சந்தேகப்படாதே, அருச்சுனா! நீ நிமித்தமாத்திரமாகும். (௩௩)

அருச்சுனா! துரோணாசாரியார், வீஷ்டுமர், கர்னன், முதலான நான்கு திக்குகளிலுமிருக்கப்பட்ட ராஜாக்கள் முதலானவர்களெல்லாம் நம்மாலே முன்னமே கொல்லப்பட்டுப் போய்விட்டார்கள். அவர்களையெல்லாம் நீயும நிமித்தமாத்திரமாயிருந்து கொல்லு. இதனாலே பயப்படாமல் யுத்தத்தைப் பண்ணுவாயானாற் சத்துருக்களையெல்லாஞ் செயிக்கப்போகிறாயென்று பகவான்சொல்ல. (௩௪)

திரிதராட்டிர மகாராஜாவே! அந்த வார்த்தைகளைக்கேட்ட அருச்சுனனுக்குத் தேகமெல்லாம் மயிர்க்கூச்சலுண்டாகி நடுநடுங்கி, வாய் குளறி, அத்யந்த சந்தோஷத்தையும் பயத்தையும் அடைந்தவனாயிரண்டு கையுஞ் சேர்த்துக்கொண்டு பகவானுடைய மகிமையைப்பார்த்து அடிக்கடி நமஸ்காரஞ்செய்து தோத்திரஞ்செய்கிறான். (௩௫)

மகாராஜாவே! எவ்விதமாகத் தோத்திரஞ் செய்கிறானென்று கேட்கிறீர்களோ, ரிஷிகேசா! உம்முடைய மகத்துவத்தைப் பார்த்துத் தோத்திரங்களைச்செய்துகொண்டு தேவரிஷிகளெல்லாரும் சந்தோஷத்தை யடைந்து திரும்பித் திரும்பி உம்முடைய சொரூபத்தைப் பார்க்கிறதற்குப் பிரியத்தையுடைத்தானவர்களாய் இருக்கிறார்கள். இராட்சச கணங்களெல்லோரும் பயத்தையடைந்து திக்குகள் தோறும் ஓடுகிறார்கள், சித்தர் கணங்களெல்லோரும் பத்தி விசுவாசத்துடனே நமஸ்காரஞ் செய்கிறார்கள். (௩௬)

இன்னம் செகத்துக்கெல்லா மாதாபிதாவுங் காரணமாயு மிருக்கிறவரே! பரமான்மாவாகவு மனந்தரூபத்தையுமுடைத்தானவரே! தேவ

தைகளுக்கெல்லாம் தேவனுயு மோட்சரூபமாயு மிருக்கிறவரே! ஜெக
நிவாசா! இன்னமும் பிரமதேவருக்கும் ஆதிகாரணமாயும் சிரேஷ்ட
மாயு மிருக்கிறவரே! சத்து சொரூபமான சீவனுக்கும் அசத்துசொரூ
பமான பிரகிருதிக்கும் பரனும் அட்சரமான பரப்பிரமசொரூபராயு
மிருக்கிற வுமக்கு யார்தான் நமஸ்காரஞ் செய்யாமலிருப்பார்கள். (௩௭)

இன்னம் ஆதிதேவனுயும், புராணனுயும், புருஷனுயும், விசுவத்
துக்குப் பரமமான காரணமாயு மிருக்கிறவரே! சமஸ்தத்தையு மறி
கிறவராயும், சமஸ்தரூபங்களாயுஞ், சிரேஷ்டமான மோட்சவீடாகவு
மிருக்கப்பட்ட தேவரீரே அனந்த ரூபராயும் விசுவமெல்லாம் வியா
பிக்கப்பட்டிருக்கிறீர். (௩௮)

இன்னம் வாயுவு, அக்கினி, இயமன், வருணன், சூரியன், சந்திரன்
பிரமாவுக்குப் பிதாவாகிய விஷ்ணுவுந் தேவரீர்தாமே, அப்பேர்ப்பட்ட
தேவரீருக்கு அனேகந்தரம் முன்னும் பின்னும் நமஸ்காரமென்று
அடிக்கடி நமஸ்கரித்து. (௩௯)

தேவரீர் சமஸ்த பிரபஞ்சத்தையும் வியாபித்துக்கொண்டிருக்
கிறபடியினுலே சருவமுந் தாமே ஆதியந்தமில்லாத வீரியத்தை
யுடைத்தானவரே! அபரிமிதமாய்ப் பராக்கிரமத்தை யுடைத்தானவரே!
உமக்கு முன்பாகவும் பின்பாகவும் நமஸ்காரம் எங்கும் நமஸ்காரம்.

அருச்சுனனுனவன் மிகவுஞ் சிரத்தாபத்தியுடனே அபிமுகம் பண்
ணிக்கொள்ளுகிறுன். சுவாமி! உம்மைச் சினேகிதனென்கிற பிரிய
பெலத்தினுலே ஏ கிருஷ்ணு! ஏ யாதவா! ஏ மைத்துனு! ஏ சினே
கிதாவென்றும் இன்னமும் பலவிதமாயும் முடைய மகிமையையும் ஸ்வரூ
பத்தையும் அறியாமல் நான் மோகவசத்தினுலேயும் சினேகத்தினுலே
யும் என்ன என்ன பேசியிருக்கிறேனே அத்தனையும். (௪௧)

இன்னம் விவகார காலங்களிலுங்கூடப் படுத்துக்கொண்டிருக்
கிறபோதும் விளையாடுகிறபோதுங் கூடவிருக்கும்போதும் போசனஞ்
செய்கிறபோதும் சபைகளி லிருக்கும்போதும் மனுவாக்குக் காய
கன்மங்களினு லென்னென்ன அபசாரஞ்செய்தேனே அச்சுதா! அவை
களையெல்லாம் அப்பிரமேயமா யிருக்காநின்றதேவரீர் சகித்துக்கொள்ள
வேண்டுமென்று சாஷ்டாங்கமாகத் தெண்டம்பண்ணி அவர்
மகிமையை யின்னமுந் தோத்திரஞ் செய்கிறுன். (௪௨)

ஓய் மகாராசாவே! ஒருவராலு மறியக்கூடாத பிரபாவத்தை
யுடைத்தானவரே! சராசராத்மகமான இந்த லோகத்துக்குப் பிதா



வும் பூச்சியருங் குருக்களுக்கெல்லாங் குருவுந் திரிலோகத்திலு முமக்
குச் சமானமா யொருவரு மில்லையென்றுஞ் சிரேஷ்டமுண்டென்று
எங்கே சொல்லுகிறது. (௪௩)

ஆனதால் லோகத்துக்கெல்லாம் பகவானுயிருக்கிறவரே! தேவ
ரீரை நமஸ்கரிக்கிறேன். செகதீசுரனுகியுந் தோத்திரங் களுக்குரிய
ராயு மிருக்கப்படாநின்ற தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறேன். புத்
திரர்களுடைய அபராதங்களைப் பிதாக்களும், சினேகிதன் செய்த அப
சாரத்தைச் சினேகிதனும், பிரியமா யிருக்கப்பட்ட ஸ்திரீசெய்த அப
சாரத்தை அன்புடைய பர்த்தாவும் எப்படிச் சகிப்பார்களோ அப்ப
டிப்போல அஞ்ஞான திசையினு லென்னுல் நடந்த சகல அபராதங்களை
யும் தேவரீர் தயாளுவானதனுலே க்ஷமைசெய்து கொள்ள
வேண்டும். (௪௪)

இன்னம் முன் எப்போதும் பார்க்காமலிருக்கப்படாநின்ற உம்
முடைய ரூபத்தைப்பார்த்துக் கிருதார்த்தனுனேன். ஆனுலும் என்
னுடைய மனதானது பயத்தினுல் மிகவும் வியாகுலத்தையடைந்திருக்
கிறது. ஆகையா லும்முடைய பூர்வரூபத்தைப்பார்த்தா லெனக்குச்
சந்தோஷமுண்டாகும் அதனுல் தேவேசா! ஜெகநிவாசா! இப்போது
பூர்வரூபமாகத் தரிசனஞ் செய்துவைக்கவேண்டும். (௪௫)

இன்னம் அனேகம் புஜங்களுடன் கூடினவரே! விசுவமே ஆகிர்
தியாக உடைத்தானவரே! கெதாயுதசகிதமாய்க் கிரீட குண்டலங்கள்
தரித்துச் சதுர்ப்புயங்களோடே சவுமியமான தேவரீருடைய பூர்வ
சொரூபத்தைக் காண்பிக்கவேண்டும். (௪௬)

அவதாரிகை:—தற்பத வாச்சியார்த்த முழுமையும் தன்னைத்
தவிர அன்னியமில்லையென்கிற போதம் அருச்சுனனுக்கு உண்டாக
வேண்டுமென்று இந்த விசுவரூபதரிசனஞ் செய்துவைத்தபடியால்
அதனுடைய பெருமையைப் பகவானுனவர் மூன்று சுலோகத்தினுற்
சொல்லுகிருர். அருச்சுனு! என்னுடைய யோகமகத்துவத்தினுலே
யிப்போது பிரசன்னமாயிருக்கிற உத்தமமான ரூபத்தை யுன்னிடத்தி
லிருக்கிற கடாக்ஷத்தினுலே நீ காணும்படியாகச் செய்வித்தேன்.
தேசோமயமாயும் விசுவாத்மகமாயும் ஆதியந்தமில்லாமலிருக்காநின்ற
ரூபத்தை நீ யொருவன் கண்டாயே தவிரப் பூர்வத்தி லாருங்காண
வில்லை. அதனுலே அருச்சுனு! நீ கிர்தார்த்தனுனுய். (௪௭)

இன்னம் வேதசாஸ்திரங்கள் வாசித்து அர்த்தங்களைத் தெரிந்
ததினுலும், எக்யாதிகள் செய்ததினுலும், அக்கினி ஹோத்திராதி

கிரியைகளாலும், சிரேஷ்டமான தானங்களினாலும், உக்ரமான தபசுகளினாலும், இன்னமும் பலவிதமான கன்மங்களினாலு மறியக் கூடாத அனேகவிதமான ரூபங்களை யுடைத்தான விசுவரூபமாகிய நம்மை யிந்த மனுஷ லோகத்தி லுன்னைத் தவிர வேறொருவரும் பார்க்க நாம் சக்கியமாகமாட்டோம். (சஅ)

அருச்சுனா! ஆனதால் இப்படிப்பட்ட ரூபத்தை நீ தியானஞ் செய்ய வேண்டி யுனக்குக் காண்பித்தோம். அதைப்பார்க்க உனக்குப் பயங்கரமாயும் வியாகுலமாயும் மூடபாவமு முண்டாயிருப்பதாக நீ சொல்லுகிறபடியால் அவைகளெல்லாம் நீ இனிமேலடையாமல் சந்தோஷசித்தனாய்ச் சவுமியமான நம்முடைய பூர்வரூபத்தைப் பாரென்று பகவானானவர் விசுவரூபத்தை மறைத்துக் கிருஷ்ணமூர்த்திரூபமாய்க் காண்பிவித்தார். (சகூ)

மகாராஜாவே! கேளும், இவ்விதமாய் வாசுதேவரானவர், பயத்தையடைந்திருந்த அருச்சுனனைப்பார்த்து மிருதுவான மதுரவாக்கியங்களினாற் சமாதானஞ்செய்து மறுபடியுஞ் சவுமியமான தன்னுடைய பூர்வரூபத்தைக் காண்பிவித்தார். (ருo)

இப்படிப்பட்ட சவுமியரூபத்தைப்பார்த்து அருச்சுனனானவன் எவ்விதமாய்ச் சொல்லுகிறானென்றால், சனார்த்தனா! உம்முடைய சவுமியமாகிய மனுஷரூபத்தைப் பார்த்து இப்போதல்லவா பூர்வம் போல பிரசாந்த சித்தத்தை யடைந்தவனானேனென்று சொல்ல. (ருக)

பகவானானவர் அருச்சுனா! யாராலுங் காணுகிறதற்குச் சக்கியமாகாத நம்முடைய ஈஸ்வரஸ்வரூபமாகிய விசுவரூபத்தை நீ பார்த்தாய். தேவதைகள் முதலானவர்களு மிதுவரைக்கும் பார்த்தவர்களல்ல. ஆனால் எப்போது மிந்த விசுவரூபதரிசனத்தைப் பார்க்க வேண்டுமென்று கோரிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ரூபத்தை யுனக்குத்தியானஞ் செய்யவேண்டி நாம் காண்பித்தோம்.

அருச்சுனா! இவ்விதமாய்க் காணுகிறதற் கபுரூபமாய்ப்போவானேனென்று கேட்பாயேயாகில், இப்போது நீ பார்த்த விசுவரூபமாகிய நம்மை யெதார்த்தமாயறிந்து பிரீதி பூர்வமாகப் பத்தி செய்யாமல் வேதாத்தியயனங்கள் செய்கிறதனாலேயுந் தவங்களாசரிக்கிறதனாலேயுந் தானங்கள் கொடுக்கிறதனாலேயும் எக்யங்கள்செய்வதனாலேயும் நம்மையொருபோதுங் காணமாட்டார்கள். (ருங)

சத்துரு சம்மாரனாகிய அருச்சுனா! பின்னை யாருக்குத்தான் இந்த ரூபங் காணப்படுமென்று கேட்பாயேயாகில் இதர தேவதைகளை யுபாசியாம லென்னைத்தவிர அன்னியமில்லையென் றென்னையே யார் பத்தி செய்கிறார்களோ அவர்களுக்குச் சாத்திரங்களினாலேயு மறியப்படுவேன் சுத்தமாயிருக்கப்பட்ட சித்தத்துக்குங் காணப்படுவேன். இப்பேர்ப்பட்ட நானே யவர்களென்று தெரிந்தனுபவிக்கும்படியாக நான் சுலுவாயுமுடன்பட்டிருப்பேன். (ருச)



அருச்சுனா! சகல சாஸ்திரங்களினுடைய சாராம்சமாகியும் பரமரகசியமாயு மிருக்கப்பட்ட தெதுவோ அதைச் சங்க்ரகமாக உனக்குச் சொல்லுகிறேன் கேள். யாதொருவர் நம்மை யுத்தேசித்துப் பிரியத்தோடுங்கூடி நிட்காம கன்மங்கள் செய்கிறார்களோ, நம்மைத்தானே பரம புருஷார்த்தமாக எண்ணுகிறார்களோ நம்மைத்தானே யாசரித்தவனா யிஷ்டாத்திரயங்களைவிட்டு நம்மையே அநனியமாகப் பத்திசெய்கிறார்களோ, ஒருவரிடத்திலும் வயிரமின்றி யாரிருக்கிறார்களோ, இத்தியாதி குணங்களுடன்கூடின யாதொரு புருஷாளுண்டோ அவர்கள்தான் நம்முடைய சொரூபத்தையடைவார்கள்.

தேவதைகள் முதலாய்க் காணப்படாத விசுவரூபத்தைக் காண்பித்ததைப் பார்க்கவேண்டுமென்றால் பத்தியின்றிக் கூடாதென்று போதித்த யாதொரு பகவானுண்டோ அவருக்கு நமஸ்காரம்.

பதினோராவது
விசுவரூப அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் கக-க்குச் சுலோகம்-சசுகூ.
பரமகுருவே துணை.

---

உ

ஸ்ரீ நவநீதகவாகாராயநம:

பன்னிரண்டாவது

# பத்தியோக அத்தியாயம்.

அவதாரிகை:—நிர்க்குணோபாஸ்தி சகுணோபாஸ்தி இந்த இரண்டில் தேகாபிமானத்தோடுங்கூடின புருஷனிருந்துகொண்டு நிர்க்குணோபாஸ்தி செய்கிறதைக்காட்டிலுஞ் சகுணோபாஸ்தி சிரேஷ்டமென்பதை யிந்த அத்தியாயத்திற் சொல்லத்தொடங்குகிறார்.

சுவாமி! சகுணரூபமாகிய விசுவரூபத்தை யுடைத்தானவனாய்ச் சர்வஞ்ஞாதி குணங்களுண்டானவனாகிய உம்மை யறிந்து உம்மிடத்

திலேயே மனதைநிறுத்தி உம்மை யுபாசிக்கப்பட்ட பக்தா ளும்மை யடைவார்களென்று பீதிநெறாமத்தியாயத்தின் முடிவில் அநுக்ரகஞ் செய்தீர்கள், அட்சரமாயும் அவ்யக்தமாயு மிருக்கப்படாநின்ற நிர்க் குணமாகிய பரப்பிரமசொரூபத்தையும் சிலபேர்க ளுபாசிப்பார்க ளென்றும் அநுக்ரகஞ் செய்திருக்கிறீர்கள். இவர்களிலே சிரேஷ்டா ளாரோ அவர்களைத் தெரியும்படி யநுக்ரகஞ்செய்யவேண்டும். (க)

அருச்சுனா! சர்வஞ்ஞாதி குணங்களுண்டாகிய பகவானா யிருக் கிற நம்மிடத்திலே யாதொருவர் மனதைவைத்து நித்யமுந் தியானவந் தாளாய் நம்முடைய நிமித்தமாக நிட்காமகன்மங்களைச் செய்து கொண்டு எதார்த்தமான சிரத்தையுடனே நம்மையே யுபாசிக்கிறார் களோ அவர்களே சிரேஷ்டாள். (உ)

சுவாமி! நிர்க்குணோபாஸ்தி செய்யப்பட்டவாள் சிரேஷ்டமல் லவா? அருச்சுனா! அப்படி நினைக்கவேண்டாம் எதனாலென்றால், அட்சரமா யின்னபடியென்று சொல்லப்படாததாயும், நாமரூபங்க ளில்லாததாயும், சாஸ்வதமாயும், எங்கும் பரிபூரணமாயும், சிந்திக்கக் கூடாததாயும், மாயைக்கதிட்டானமாயும் யாதொரு விகாரங்களுஞ் சலனமுமின்றிக் கூடஸ்தராயுமிருக்கப்பட்ட நம்முடைய ஸ்வரூபத்தை யிந்திரியங்களெல்லாம் நிக்ரகஞ்செய்து எங்கும் சமபுத்தியாய்ச் சர்வ பூதங்களுக்கும் இதஞ்செய்கிறபேரா யாதொருவ ருபாசிக்கிறார்களோ அவர்களுஞ் சிரேஷ்டாளே, அவர்களும் நம்மையே யடைவார்கள்.

என்றசொன்னது அவனேகாலென்று நீ யறியவேண்டும். அருச்சுனா! யாரதா நிர்க்குணோபாஸ்திசெய்கிறது மிகவு மருமை யென்பதைச் சொல்லுகிறேன்கேள். அவ்யக்தராயும் பரப்பிரமமாயும் நிர்க்குணமாயும் இருக்கப்படாநின்ற ஸ்வரூபத்தை யுபாஸ்திசெய்யப் பட்ட ஞானம் மிகவுஞ் சிரேஷ்டமே, அதற்குச் சமஸ்த பூதங்களிடத் திலேயுந் துவேஷங்களில்லாமல் மைத்திரியாதியுடன் தயாவந்தனாய்த் தேகத்தைத் தானென்கிற அகந்தையும் விஷயங்களிற் றன்னதென்கிற மமதையு மில்லாமற் சுகதுக்கங்களிடத்திற் சமமான புத்தியுண்டான வனாயிருந்துகொண்டு அவ்யக்தமான பரப்பிரமசொரூபத்தினிடத்தில் ஆசக்தியான சித்தத்தையுடைத்தானவனாய் நிர்க்குணோபாஸ்தி செய்ய வேண்டும். அப்படிக்கில்லாமல் தேகாபிமானத்துடன் கூடினவர்க ளெத்தனப்படுவார்களேயாகில் அதிக கிலேசமுண்டாயிருக்கும். அத னால் நிர்க்குணோபாஸ்தி செய்கிறது பிரயாசமானதால் அதைவிட விசுவரூபமாகிய சகுணத்தியானஞ் சிரேஷ்டம்- அந்தச் சகுணத்



தியானத்தைக்காட்டிலும் சனன மரணத்தைக் கொடுக்கத்தக்கதான சங்கற்ப விகற்பங்களைச் செய்யப்பட்ட மனமுதலான இந்திரியங்க ளெல்லாஞ் சாந்தியடையும்படியாகச் செய்யப்பட்ட கன்மபலத் தியாகம் சிரேஷ்டமாகும். (ச-ரு)

அருச்சுனா! ஆகையால் நம்முடைய பக்தாள் எளிதாக மோக்ஷ மடைகிறதற்குச் சாதகமான கன்மபலத் தியாகத்தினுடைய சிரேஷ் டத்தைச் சொல்லுகிறேன்கேள். எவர்களாகிலுஞ் சமஸ்த கன்மங் களையும் விதிபூர்வமாக நம்மிடத்திற் சமர்ப்பித்து வேறே தேவாந்தரங் களையுபாசியாமல் நம்மையே பரமபுருஷார்த்தமென்றெண்ணி யிதர சிந்தையில்லாத பத்தியோகத்தினாலே நம்மையே தியானஞ்செய்து கொண் டிருப்பார்களாகில் அவர்களும் நம்முடைய சொரூபத்தையே யடைவார்கள். (சு)

சுவாமி! இந்தக் கன்மங்களினாலேயுந் தியானத்தினாலேயும் அதை யெப்படியடைவார்கள்? அருச்சுனா! நம்மிடத்தில் நிறுத்தப் பட்ட சித்தத்தையுடைத்தான பக்தாளுக்கு நாம் சீக்கிரமாக மிருத்தி யோடுங்கூடிய சம்சாரசாகரத்தி லிருந்துங் கரையேற்றிவைக்கப் பட்டவனாவோம். (எ)

அருச்சுனா! நீயும் நம்மிடத்திலேயே மனதைநிறுத்தி நம்மிடத்தி லேயே புத்தியுண்டானவனாய் விசுவரூபமாகிய நம்மையே தியானிப் பாயாகில் நம்முடைய அநுக்ரகத்தினாலே ஞானம் லப்தமாகித் தேகாந் தத்திற் சாயுச்சியமாகிய நம்முடைய சொரூபத்தையே யடைவாய். இதற்குச் சமுசயமில்லை. (அ)

அருச்சுனா! இவ்விதமாய்ச் சித்தத்தை ஸ்திரமாய் நம்மிடத்தில் நிறுத்த அசக்தனாயிருப்பாயேயாகில் நம்மை யெவ்விதமும் அடைய வேண்டுமென்று நிச்சயித்தபுத்தியினாற் பாகியத்தில் நமக்குப் பிரீதிகர மாகிய நிட்காமகன்மங்களைச் செய்துகொண்டு பூர்வஞ்சொன்னபடி யோகாப்பியாசத்தினாலே நம்மைத்தியானஞ்செய்துகொண்டு வருவா யாகில் அப்போது மனதிலுண்டான விட்சேபங்களெல்லாஞ் சாந்தமாய் விடுபட்டு நம்மையே யடையலாம். (கூ)

அருச்சுனா! இந்த யோகாப்பியாசஞ்செய்யச் சமர்த்தில்லாத வனாயிருந்தால் எனக்குப் பிரியகரமாயிருக்கப்படாநின்ற ஏகாதசியுப வாச முதலான விரதங்களுடன் நாமகீர்த்தனங்கள் முதலாகிய சற்கரு மங்களைச் செய்துவருவாயாகில் அதனாலு மோக்ஷத்தையேயடைவாய்.

அருச்சுனா ! இதற்குஞ் சக்தியில்லாதவனா யிருந்தாயாகில் நாமே யெல்லாவற்றிற்குங் கதியென்று நம்மைத்தானே சரணமடைந்து மனோநிக்கிரகத்துடனேகூட நீ செய்யப்பட்ட சகல கன்மங்களையும் அவைகளின் பலன்களையும் எனக்கே யற்பணஞ்செய்துகொண்டு எல்லாப்பாரத்தையும் நம்மிடத்திலேயேபொறுப்பாய் வைப்பாயேயானால் அதனாலே நம்முடைய அநுக்ரகமுண்டாய்க் கிருதார்த்தனாய்விடுவாய்.

அருச்சுனா ! நம்மை ஞானமின்றி யேகதேசமா யுபாசிக்கிறதைக் காட்டிலும் பரோட்சஞானஞ் சிரேஷ்டம். அந்தப் பரோட்சஞானத்தைக்காட்டிலும் விசுவரூபத்தியானஞ் சிரேஷ்டம். அந்த விசுவரூபத்தியானத்தைப் பார்க்கிலுஞ் சற்கருமங்கள்செய்து அந்தப் பலன்களைத் தியாகஞ்செய்யப்பட்டது மிகவுஞ் சிரேஷ்டம். அந்தக் கன்மபலத்தியாகத்தினாற் சனன மரணமென்னப்பட்ட சங்கற்ப விகற்பங்கள் முதலான சுகதுக்கங்கள் யாவுஞ் சாந்தியடைந்து நம்முடைய சொரூபமாகிய மோக்ஷத்தையே யடைவார்கள். (௧௨)

சுவாமி ! தேவரீருடைய பக்திசெய்யப்பட்ட பக்தாளானவர்கள் தேகாந்தத்தில்மோக்ஷமடைகிறது நிச்சயமாயிருந்தபோதிலும் அவர்களை நான் தெரிந்துகொள்ளும்பொருட்டுத் தேகத்துடனவர்களிருக்கும்போது எவ்விதமான குணங்களுடன் கூடியிருப்பார்கள் ? அருச்சுனா ! எட்டுச்சுலோகத்தினாற் சொல்லுகிறோங் கேள். லோகத்திலிருக்கப்பட்ட சமஸ்த பூதங்களிடத்திலேயுந் துவேஷமின்றியிருப்பன் ; தனக்குச் சமானமாகிய பேர்களிடத்தில் மைத்திரியமென்னப்பட்ட சிநேகஞ் செய்வான் ; தீனரா யிருக்கிறபேர்களிடத்திற் கருணை செய்வான் ; பெண்சாதி பிள்ளைகளிடத்தில் மமத்துவமில்லாமலுந் தேகத்தை நானென்கிற அகங்காரமின்றியு மிருப்பன் ? துக்கங்களிடத்திலுஞ் சுகங்களிடத்திலுஞ் சமானபுத்தி யுடைத்தானவனாகவும் பூமாதேவியைப்போற் பொறுமையுடையவனாகவுமிருப்பன். இவன்தான் நம்முடைய பக்தன். (௧௩)

இன்னமு மெப்போதுஞ் சந்தோஷமுள்ளவனாகவும் என்னைத் தவிர அன்னியமில்லையென்கிறதில் திடநிச்சயமும் ஆத்மஞானம் பிரதானமாக மனதும் புத்தியும் நம்மிடத்திலேயே சமர்ப்பித்தவனாயுமுண்டானவனெவனோ அவனே நம்முடைய பக்தன், நமக்குப் பிரியனுமாவன். (௧௪)

அருச்சுனா ! இன்னமும் லோகத்திலுள்ள சகல சீவர்களுக்கு மெவனாலே பயமில்லையோ எவனுக்குச் சகல சீவர்களாலும் பயமில்லையோ,



நல்லது சம்பவிந்தாற் சந்தோஷமும் பிறர்க்கு நன்மைவந்தாற் பொறாமையுங் குரோதமு மனச்சோபமு மெவனுக்கில்லையோ அவன்தான் நம்முடைய பக்தன். (௧௫)

அருச்சுனா ! இன்னமும் எந்தவஸ்துவையுந் தான் அபேட்சியாமலும் பலவந்தமாய்வந்த விஷயங்களி லாசையின்றியும் சோம்பலும் பீடையுமின்றிப் பாகியத்திலு மாந்தரத்திலுஞ் சுசியுண்டானவனாயும் விணயபுத்தியோடும் பட்சபாதமில்லாமலும் மனோவியாதியில்லாதவனாயும் நம்மை யடைவதற்கான சாதனத்தைத்தவிர மற்ற சர்வமுயற்சிகளையும் விட்டவனாயு மிருக்கப்பட்டவ னெவனோ அவனேநம்முடைய பக்தன். (௧௬)

அருச்சுனா ! இன்னமும் பிரியத்தைக்கொடுக்கத்தக்க நல்ல விஷயங்கள்வந்தா லதனாற் சந்தோஷியாமலும் அப்பிரியத்தைக் கொடுக்கத்தக்க பொல்லாதவிஷயங்கள் வந்தால் அதனால் துக்கப்படாமலும் பிரியமான வஸ்துக்கள் வியோகமானாலதனாற் சோகத்தையடையாமலும் சுவர்க்காதிமுதலாய் வாராதவஸ்துக்களைக் கோராமலும் சுபாசுபரூபங்களான புண்ணிய பாபங்களைவிட்டென்னிடத்திற் பக்திசெய்யப்பட்டவ னெவனோ அவனே நம்முடைய பக்தனும் பிரியனுமாவன்.

அருச்சுனா ! இன்னமுஞ் சத்துருவினிடத்திலும் மித்துருவினிடத்திலும் மானத்தினிடத்திலும் அவமானத்தினிடத்திலுஞ் சீதோஷ்ண சுகதுக்கங்களிடத்திலுஞ் சொப்பனம்போ லெண்ணிச் சமபுத்தியுண்டானவனாயும் நம்முடைய பக்தியில்லாத சங்கத்தைச் சேராமல் விவர்ச்சிதனாயிருக்கப்பட்டவனெவனோ அவனே நம்முடைய பக்தன். (௧௮)

அருச்சுனா ! இன்னமு மொருவர்செய்யப்பட்ட நிந்தையிலும் துதியிலுஞ் சமசித்தத்தை யுடையவனாயும் எப்போது மோனத்தை யிச்சித்துக்கொண் டிருக்கப்பட்டவனாயுந் தானிச்சியாமலிருக்கத் தெய்வாதீனமாய் வந்த பொருளைத் தள்ளாமலும் அதனாலே திருப்தியடைந்தவனாயும் வாராதபொருளிலேயபேட்சையின்றியும் இன்னவிடமிருக்கிறது இன்னவிட மிருக்கக்கூடாதென்கிற நிலவரமின்றி ஸ்திரபுத்தியுடன் நம்மிடத்திற் பக்தியுண்டானவனெவனோ அவனே யெனக்குப் பக்தனும் பிரியனுமாவன். (௧௯)

அருச்சுனா ! எவர்களாகிலுஞ் சிரத்தாபக்தியோடுங் கூடினவர்களாகி நாமே பரமபுருஷார்த்தமென்றெண்ணியிப்போது நாம்சொன்ன மோக்ஷசாதகமான கருமங்களை யெதோர்த்தமா யாசரிப்பார்களேயாகில் அப்படிப்பட்ட பக்தாள் நமக் கத்யந்த பிரியமுண்டானவர்களாவார்

கள்; அதனாலவர்களுக்குப் பிரகிருதிபுருஷனையும் க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞனையும் ஞானம் ஞேயத்தையும் பிரித்தறியும்படியான ஞானத்தை நான்கொடுத்து எல்லாவற்றிற்குஞ் சிரேஷ்டமாயிருக்கிற நம்முடைய சொரூபத்தை யடையும்படியாகவுஞ் செய்விப்போம். இந்தப்பிரகாரம் நிர்க்குணோபாஸ்திசெய்கிறது பிரயாசமாகையால் எளிதாக மோக்ஷம் வரவேண்டிச் சகுணோபாஸ்தி நல்லதென்று பகவானனவர் அநுக்கிரகஞ்செய்த விபாகத்தைத் திரிதராட்டிரருக்குச் சஞ்சயர்சொன்னார்.

தேகாபிமானத்தோடுங்கூடிய புருஷாள் சகுணோபாஸ்திசெய்தால் மோக்ஷத்தையடையலாமென் றெந்தப்பகவானாலே சொல்லப்பட்டதோ அவருக்கு நமஸ்காரம்.

பன்னிரண்டாவது

பத்தியோக அத்தியாயம் முற்றிற்று.

ஆ அத்தியாயம் கஉ - க்குச் சுலோகம் - ௬அக.

ஸ்ரீபிருந்தாவனவாசப்பிரியாயநம:

---

உ

ஸ்ரீகோடிசூரியசப்பிரபாயநம:

## பதின்மூன்றாவது

## பிரகிருதிபுருஷவிபாகயோக அத்தியாயம்.

அவதாரிகை:—பக்தாளை சம்சாரத்தில் நின்று வெளிதாகக் கடைத்தேறப் பண்ணிவைப்போமென்று பன்னிரண்டா மத்தியாயத்திற் சொன்ன பத்தி சித்தியாகவேண்டி யிந்த அத்தியாயத்திலே தத்துவ ஞானத்தை யுபதேசஞ்செய்கிறார். கேசவா! பன்னிரண்டா மத்தியாயத்தின் முடிவிற் பிரகிருதி புருஷன் முதலானவைகளையும் பிரித்தறியும்படியான ஞானத்தைக்கொடுத்து மோக்ஷமடையும்படியாகவுஞ் செய்விப்போமென் றநுக்கிரகஞ்செய்தீர்கள், அப்படிப்பட்ட பிரகிருதியையும் புருஷனையும் க்ஷேத்திரத்தையும் க்ஷேத்திரக்ஞனையும் ஞானத்தையும் ஞேயத்தையும் விபரமாயடியேனுக்குத் தெரியும்படியநுக்கிரகம் பண்ணவேண்டும். (௧)

அருச்சுனா! சீவனனவனுக்குப் பாவபுண்ணியங்களின்மேலே சம்பவித்த போகங்களை யநுபவிக்கச் சாதனமாயிருக்கப்பட்டது எதுவோ அதற்குச் சேத்திரமென்றும் அந்தச்சேத்திரத்தைத் தன்னதென் றறியப்பட்டவ னெவனோ அவனுக்குச் சேத்திரக்ஞனென்றுஞ் சொல்லப்படும். (௨)



அருச்சுனா! சர்வசேத்திரங்களிலு மிருக்கப்பட்ட சேத்திரக்ஞனனவர் நாமென்று நீ யறியவேண்டும். இப்பேர்ப்பட்ட சேத்திரக்ஞன் சேத்திரமிவர்களின் சொரூபத்தை இப்பேர்ப்பட்டதென்று பிரித்தறியப்பட்ட ஞானமெதுவோ அதுவே மோக்ஷத்தைக்கொடுக்கும். மற்ற ஞானமெல்லாம் வியர்த்தமாய் முடிகிறதுமல்லாமற் பந்தங்களையுங் கொடுக்கும் இவ்விதமாகப் பிரித்தறிபவர்களாரோ அவர்களைத்தான் ஞானிகளென்றுஞ்சொல்வார்கள். அருச்சுனா! இப்பேர்ப்பட்ட ஞானத்துடன் கூடியிருக்கிறதே நமக்குச் சம்மதம். (௩)

அருச்சுனா! இதனாலே முன்சொன்ன சேத்திரமாவது இப்பேர்ப்பட்டதென்றும், இப்பேர்ப்பட்டதற்கு ஆசிரயமானதென்றும், இவ்விதமான விகாரங்களுடன் கூடினதென்றும், இதனாலே யுண்டானதென்றும், இன்னவித பேதத்தோடுங் கூடினதென்றும், சேத்திரக்ஞனென்றவின்னானென்றும், இப்பேர்ப்பட்ட பாவத்தை யுடைத்தானவனென்றும் நீ யறியவேண்டி யிந்த அர்த்தங்களெல்லாம் சங்கிரகமாக விவரித்துனக்குச் சொல்லுகிறோம். (௪)

அருச்சுனா இவைகளையே நாநாவிதமாகிய தருமங்கள் முதலானவையுஞ் சொல்லாநின்ற வேதங்களிலேயும் அநேகயேதுக்களைப்பற்றிப் பிரத்தியேகம் பிரத்தியேகமாயுஞ் சொல்லப்பட்டிருக்கிறதுமல்லாமல், அவைகளை யநுசரித்து வசிஷ்டாதி ரிஷீஸ்வரராலேயுஞ் வெகுவிதங்களாயுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தாலும் விசேஷமாயும் உறுதியாயுஞ் சொல்லப்பட்ட பிரமசூத்திரபதங்களென்னப்பட்ட வேதாந்தசூத்திரங்களினாலே விசேஷமாய் நிச்சயித்துச் சொல்லப் பட்டிருக்கிற விவரப்படி யுனக்குச் சொல்லுகிறோம். (௫)

அருச்சுனா! பிருதிவியாதி மகாபூதங்கள்ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, சப்தாதிவிஷயங்கள் ஐந்து, அவ்வியக்தமாகிய மூலப்பிரகிருதி மனம் புத்தி அகங்காரம் நாலு,ஆக இருபத்து நாலு தத்துவத்துடன். (௬)

இன்னமும் மனோவிருத்திகளாகிய இச்சை துவேஷம் சுகம் துக்கம் விஷயஞானம் தைரியமுதலாய் நான்பிறந்தேன்வளர்ந்தேன் சாகிறேனென்கிற இவைமுதலான விகாரங்களோடுங் கூடினதாயும் களேபரமாயும் சுகதுக்கமென்னப்பட்ட போகங்களை யநுபவிக்கிறதற்கு ஆசிரயமாயுஞ்சடமாயுஞ்சுத்தமித்தையாயு மிருக்கப்பட்டதெதுவோ அதற்கேசரீரமென்றும், அப்பேர்ப்பட்ட சரீரத்துக்கே சேத்திர

மென்றுஞ் சொல்லப்படும். இந்தச்சேத்திர தருமங்களின்னதென்றும் அவைகளை யபிமானித்து நடக்கப்பட்டவ னின்னனென்றும் அறியப்பட்டவனோ அவனுக்குச் சேத்திரக்ஞனென்று சொல்லப்படும்.

அருச்சுனா! இனி ஞானத்தையும் ஞேயத்தையுஞ் சொல்லுகிறோம் அதற்கு ஞானத்தினாலேயே ஞேயத்தை யறியவேண்டியிருப்பதனாலே முன்பு ஞானத்தைச் சொல்லுகிறோம். சேத்திர தருமமின்னதென்றும் சேத்திரக்ஞனுடைய தருமமின்னதென்றும் பிரித்தறியப்பட்ட விவேகமெதுவோ அதற்கே ஞானமென்றுஞ் சொல்லப்படும். அந்த ஞானமெவ்விதமாக லப்தமாகுமென்றால் அதற்குத்தகுந்த ஞானசாதனங்களினாலேயே லப்தமாகவேண்டும். அப்பேர்ப்பட்ட ஞான சாதனங்களாலேயே நம்முடைய பக்தாளானவாள் நம்முடைய சொரூபமாகிய கைவல்லியத்தை யடைந்திருக்கிறார்கள். அதனாலே நீயும் அந்த ஞானசாதனங்களைத் தெரிந்து அந்த ஞானத்துவாரா ஞேயத்தையறிந்து நம்முடைய சொரூபத்தையடையவேண்டும். அதனால் அருச்சுனா! சாவதானமா யிருந்துகொண்டு ஞானசாதனங்களைக் கேள். முதலாவது தன்னை பொருவரால் தோத்திரமும் பூசிதையுஞ் செய்யவேண்டுமென்று மனதில் லேசங்கூடயிருக்காமலிருக்கப்பட்ட குணமெதுவோ அதற்கு அமானித்துவமென்று சொல்லப்படும். அதவா அவைகள் வலுவிற் சம்பவித்தாலும் அவைகளிலெவ்வளவும் அபிமானமும் பற்றுதலுஞ் சந்தோஷமுமில்லாம லிருக்கவேண்டும். டம்பமும், இம்சையுஞ், சுத்தமாய் விட்டிருக்கவேண்டும். கபடமின்றிச் சத்தியமான வசனங்கள் வசனிக்கவேண்டும். ஆசிரியருடைய சதுர்விதமான சிசுருஷை முதலான உபாசனையுஞ் செய்யவேண்டும். ஆந்தரத்திலும் பாகியத்திலுஞ் சுசித்துவ முண்டாயிருக்கவேண்டும். பொறுமையிற் பூமதேவிக்குச் சமானமான க்ஷமையோடுங்கூடினவனா யிருக்கவேண்டும். குருசொன்ன அர்த்தத்தில் ஸ்திரமானபுத்தியுண்டானவனா யிருக்கவேண்டும். சரீரத்தை நானென்கிறதை நிக்ரகஞ் செய்திருக்கவேண்டும். (௮)

அருச்சுனா! இன்னமும் விஷயங்களிடத்தில் எப்போதும் விராகையுடனே யிருக்கவேண்டும்; அப்படியிருக்கிறதிலும் நாமானதினாலேயிவ்விதமாய் விட்டிருக்கிறோமென்கிற அகங்காரமுதலியவையுமில்லாமலிருக்கவேண்டும். சன்மம், மிருத்து, சரை வியாதி யிவைகளினாலுண்டான துக்கதோஷங்களை யடிக்கடி விசாரித்து மனனம் பண்ணவேண்டும். சகல பூதங்களிடத்திலேயுந் தயவுங் கருணையுமிருக்கவேண்டும். (௯)



அருச்சுனா! இன்னமும் புத்திர தாராதி, கிரக முதலானவைகளில் ஆசக்தியும் பிரியமு மில்லாமலிருக்கவேண்டும். நன்மை தீமைகள் சம்பவிக்குங் காலங்களில் அவைகளினாலுண்டான பிரியாப்பிரியங்களிற் சமசித்தனா யிருக்கவேண்டும். (௧௦)

அருச்சுனா! இன்னமும் அந்நியதேவதா பக்தனாகாமல் நம்மையே யெல்லாவற்றிற்கும் சிரேஷ்டமாக எண்ணி நம்மைத்தவிர அந்நியமில்லையென்று நம்மிடத்திலேயே அவிபசாரமாகிய பக்தியும் யேகாந்தவாசமுஞ்செய்யவேண்டும். பிராகிர்த சனங்களிடத்திற் பிரியமும் அவாள் சங்கமும் விட்டிருக்கவேண்டும. (௧௧)

அருச்சுனா! இப்போது நாம்சொன்ன ஞானசாதனங்களுக்கெல்லாம் விபரீதமாகிய அஞ்ஞானத்துடன்கூடிய டம்பம், அபிமான முதலியவைகளைச் சுத்தமாய்விட்டு ஆத்மஞான நிஷ்டனாயிருந்துகொண்டு தத்துவஞானம் விருத்தியாகி மோக்ஷமடைகிறதற்குச் சாதனமாகிய விசாரமுஞ்செய்து வரவேண்டும். இவ்வளவும் ஞேயத்தையறியவேண்டிய ஞானத்துக்குச் சாதனமென்று சொல்லப்படும் இப்படியே வசிஷ்டாதி ரிஷீஸ்வராளுஞ் சொல்லுகிறார்கள். (௧௨)

அருச்சுனா! இந்தச் சாதனங்களினாலடைந்த ஞானத்தைக்கொண்டு தெரியத்தக்க தெதுவோ அதைச் சொல்லுகிறோங் கேள். எதை யறிந்ததனாலே சனன மரணமென்னப்பட்ட பந்தத்திலிருந்து மோக்ஷத்தையடைந்தார்களோ அப்பேர்ப்பட்ட தத்துவஸ்வரூபத்துக்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை. அதற்குச் சத்தென்றும் அசத்தென்றும் நித்யமென்றும் அநித்யமென்றும் அஞ்ஞானமென்றும் ஞானமென்றும் சொல்லக்கூடாத விதத்தையுடைத்தானதாயு மிருக்கும். இதற்கே குருசிஷ்ய, போத்தியபோதக நிமித்தியமாக, அனாதியென்றும் அகண்டமென்றும் பூரணமென்றும் ஏகமென்றும் வாக்குமனதுக்கு அகோசரமென்றும் அனுபவவேத்தியமென்றும் பரப்பிரமசொரூபமென்றுஞ் சொல்வார்கள். அருச்சுனா! இப்பேர்ப்பட்ட ஸ்வரூபத்தை முன்சொன்ன ஞானவைபோகத்தினால் றெரிந்துகொள்ளவேண்டுமே யல்லாமல் மற்றெந்த விதத்தினாலுந் தெரிந்துகொள்ளச் சக்கியமாகாது. இதற்கே ஞேயமென்றுஞ் சொல்லப்படும். (௧௩)

அருச்சுனா! இன்னமும் அந்த ஆத்மதத்துவமானது எப்படிப்பட்டதென்றால் சருவபிராணிகளுடைய கை, கால், கண், சிரசு, காதுகளுமுடைத்தாகிய ரூபங்களுடன்கூடின சர்வசரீரங்களையுஞ் சகலலோக

களையும் அன்னுவய யுக்தியினாலே சொர்னத்தைத்தவிர ஆபரண
மில்லாததுபோலவிபாவிக்கப்பட்டிருக்கும். (கச)

அருச்சுனா! இன்னமும் சகல சரீரங்களிலுமுள்ள இந்திரியங்
கள் முதலாகிய சத்துவாதிகுணங்களையும் பிரகாசிக்கும்படிச் செய்
விக்கப்பட்டதாயுஞ் சருவத்துக்கு மாதாரமாய் வகிக்கப்பட்டதாயு
மிருந்தும் அவைகளுக்கெல்லாம் அர்கியமாயும் அசங்கமாயும் ஒன்றி
லும் பற்றில்லாமலுந் தானொன்றிலும் அகப்படாமலும் விதிரேகயுக்தி
யினாலே ஆதாரமாவதெங்கும் வியாபகமாயிருந்தும் ஒன்றிலும்பற்றில்
லாமலிருக்கிறதுபோல இருக்கப்பட்டதாயு மிருக்கும். இதற்கேஞேய
மென்றுஞ் சொல்லப்படும். (கரு)

சுவாமி! இப்பேர்ப்பட்ட சொரூபமெங்குமிருக்கும்போது எல்
லாரேயும் ஏனறியக்கூடவில்லை? அருச்சுனா! சமஸ்தபூதங்களு
பவைகளுடைய உள்ளும் புறப்புமெங்கும் நிறைந்து சராசராத்மக
மான பிரபஞ்சரூபமாயுந் தானாகவேயிருக்கப்பட்ட இந்த ஆன்மதத்
துவமானது மிகவுஞ் சூட்சுமத்தோடுங் கூடினதாகையா லெல்லாரா
லேயுந் தெரிந்துகொள்ளுகிறதற்குச் சக்கியமாகாது. ஏதனாலென்றால்,
அஞ்ஞான சம்பந்தத்துடன்கூடிய ஜீவாள் எவ்வளவு பிரயத்தனங்கள்
செய்தபோதிலுந் தெரிந்துகொள்ளவேமாட்டார்கள். அப்பேர்ப்பட்ட
வர்களுக்கு இந்த ஆன்மதத்துவமானது வெகுதூரமாயிருக்கும். ஆனா
லாருக்குத்தான் சமீபமாய்த் தோன்றுமென்றால் முன்சொன்ன ஞான
சாதனங்களையடைந்த ஞானவந்தாளாரோ அவர்களுக்கு மாத்திரம்
இதைவிடச் சமீபமாய் வேறொன்றையுஞ் சொல்லக்கூடாது. (கசா)

அருச்சுனா! இன்னமும் அந்த ஆத்மதத்துவமானது சரா சராத்
மகமான பூதங்களிடத்திற் காரணத்திலேயே அபின்னமாயுங் காரிய
ரூபத்தினாற் பின்னமானாற்போலவுமிருக்கும். இன்னமும் திதிகாலத்
திலே யெல்லாவற்றையு மிரட்சிக்கிறதாயு மிருக்கிறதுந்தவிரப் பிரளய
காலத்திற் சங்கரிக்கிறதாயுஞ் சிருட்டிகாலத்திற் காரியரூபங்களாகச்
சிருட்டித்துக்கொண்டிருக்கும். (கஎ)

அருச்சுனா! இன்னமுஞ் சூரியசந்திராதிகளுடைய பிரகாசங்
களுக்கும் பிரகாசரூபமாயிருந்துகொண்டும் அவைகளையும் பிரகாசிக்
கும்படிச் செய்விக்கிறதாயுமிருக்கும். அஞ்ஞானிகளுக்கு அந்தகார
ரூபமாகவும், அறியப்படாததாகவும், ஞானிகளுக்கு ஞானரூபமாயும்,
அறியப்படுகிறதாயுமிருக்கும். இன்னமும்பிரகிருதிக்குப்பரமாயும்முன்
சொன்ன சாதனங்களையடைந்திருக்கானின்ற ஞானனுபவத்தினாலடை



யப்படுகிறதாயும் ஞானமாயும் ஞேயமாயுமிருக்கிறதுந்தவிரத் தேகாதி
திரிசியப் பிரபஞ்சமுதலாகிய சமஸ்தமுந்தானேயாகி அவைகளுக்குஞ்
சகல பிராணிகளுடைய புத்திக்குச் சாட்சியாயுமிருக்கும். இதற்கே
பரப்பிரமசொரூபமென்றுஞ் ஞேயமென்றுஞ் சொல்லப்படும். (கஅ)

அருச்சுனா! இந்தவிதமா யிருபத்தாறு தத்துவத்தோடுங்கூடிய
சேத்திரத்தையும் அதற்கு விலட்சணமான சேத்ரக்ஞனையும் இவை
களைப் பிரித்தறியப்பட்ட ஞானஞ் சித்திக்கிறதற்குச் சாதனமான
அமானித்துவமுதலாகிய குணங்களையும், இந்தக் குணங்களினா
லடைந்த ஞானத்தைக்கொண்டு அறியப்பட்ட ஞேயத்தையும், வசிஷ்
டாதி ரிஷீஸ்வரனாலே விஸ்தரித்துச் சொல்லப்பட்டிருக்கிறதை
நாம் சங்க்ரகமாகச் சொன்னோம். இவைகளையெல்லாம் நம்முடைய
பக்தனானவன் விபரமாய் நன்றாயறிந்து நம்முடைய ஸ்வரூபமாகிய
மோக்ஷத்தையே யடைவன். (ககூ)

சுவாமி! இப்படியிருந்தா லெல்லோருந் துக்ககரமாகிய ஜனனமா
ணத்தை யடைவானேன்? அருச்சுனா! முன்னாலே நீ கேட்ட ஆறுசங்
கைக்கு நாலுசங்கை யுத்தரவுகொடுத்து விட்டதாற் பாக்கியிருக்கப்
பட்ட பிரகிருதி புருஷனுடைய விபரங்களை யிப்போது சொல்வத
னாலே யவைகளுடைய விபரமுஞ் சனன மரண முண்டாகிறதற் கேது
வும் உனக்கே தெரியலாம். அருச்சுனா! பிரகிருதி புருஷ னிவர்களிரு
வரும் அனாதியென்று நீ யறியவேண்டும். அந்தப் பிரகிருதியினிடத்தி
லிருந்துண்டான சத்துவாதி குணங்களினாலே தேகேந்திரியாதி விகா
ரங்களு முண்டாச்சுதென்றும், புருஷனானவனுக் கிவைகளைப்பற்றி
யாதொரு சம்பந்தமு மில்லையென்றும், அவன் நிர்விகாரியென்றும்,
சாட்சியென்று மறியவேண்டும். (உ0)

அருச்சுனா! இப்படிக் கிருக்கிறதென்பதையறியாமற் பிரகிருதி
சம்பந்தமான சத்துவாதிகுணங்களைச்சேர்ந்த கர்த்ருத்துவ போக்த்ருத்
துவ முதலாகிய தேகேந்திரிய விகாரங்களை நிர்விகாரியாயிருக்கப்பட்ட
புருஷனானவன் தனக்குவந்தாற்போலப் பிரமையினால் ஒப்புக்கொண்டு
அனுபவிக்கிறதனாலே ஜீவபாவத்தை யடைந்தவனாகிச் சனன மரண
மாகிய துக்கத்தை யடைந்தவனாகிறான். (உக)

சுவாமி! நிர்விகாரியாயிருக்கப்பட்ட புருஷன் சத்துவாதிகுண
காரியங்களினால் எவ்விதமாய்ச் ஜீவபாவத்தை யடைவன்? அருச்சுனா!
பிரகிருதிசம்பந்தமான சத்துவாதிகுணங்களோடுங் கூடிய சுகதுக்க
முதலானவைகளிலே புருஷனானவன் அபிமானம்வைத்து அதனா

னுண்டாகிய ராகத் துவேஷங்களை யடைந்தவனாகி அதுவே சத்திய மென்று திடபுத்தியினாற்றானே யநுபவிக்கிறோமென் றனுபவிக்கிற படியினாலே அந்தப் புருஷனானவன் சிவபாவத்தையடைந்து தேவ திரியக் மனுஷாதி சனனங்களுக்குக் காரணமாகிச் சம்சாரத்தை யடைகிறான். இவ்விதமா யதார்த்தஞானம் வருகிறவரைக்கும் அந்தப்புருஷனுக் கிந்தப் பிரமையானது நீங்கவேமாட்டாது. புருஷனாகப்பட்டவனின்னானென்றும் அவனுடைய லட்சண மின்னதென்றும், யதார்த்த ஞானம் லப்தமாய்விட்டால் அவனொருபோதும் விகாரியாகவே யில்லையென்றும் அப்போது தெரியவரும். (உஉ)

அருச்சுனா! புருஷனானவன் பிரகிருதிசம்பந்தமான சத்துவாதி குண காரியமாயிருக்கிற தேகத்திற் கூடியிருக்கிறவனா யிருந்தாலும் அவைகளைப்பார்க்கிலும் அசங்கனாகவும் சாட்சியாகவும் அந்தச் சத்துவாதி குணங்கள்முதலான இந்திரியங்களையும் பிரேரகஞ்செய்யப் பட்டவனாயும், அவைகளுக் கெல்லாம் பர்த்தாவாயும், விசுவரூபத்தைத் தரித்துக்கொண்டிருக்கப்பட்டவனா யிருப்பதுந்தவிர, அவனுக்கே தேகேந்திரியாதிகளுக்கெல்லாம் ஈஸ்வரனா யிருக்கும்போது மகேஸ்வரனென்றும், இருபத்துநாலு தத்துவங்களுக்கும் பரனாயிருக்கும் போது பரமாத்மாவென்றுஞ் சொல்லப்படும். (உங)

அருச்சுனா! எந்தப் புருஷனாலே யிந்தப் பிரகிருதிசம்பந்தமான சத்துவாதி குணங்கள் முதலான தேகேந்திரிய சுகதுக்கங்களுங்காகிலும் புருஷனாகப்பட்டவர் பரமாயுஞ் சிரேஷ்டமாயு மிருக்கிறவரென்றும், அவரே பரமாத்மாவென்றும், எப்போது தெரிந்துகொள்வானோ அப்போது பிரகிருதிமுதலான குணகாரியங்கள் முழுவதும் பிரமமென்று சந்தேகமற வெளிப்படுமேயல்லாமல் அப்படிக் கன்னியி லிருக்கிறவரைக்கும் அந்தப் பிரமை போகவேமாட்டாது. அதனாலே பிரகிருதி சம்பந்தமான சத்துவாதி குணசகிதமான தேகேந்திரியங்களும் அதற்கு விலட்சணமா யிருக்காநின்ற புருஷனையும் நன்றாகப் பிரித்தறியப்பட்ட புருஷனானவன் வர்த்தமானகாலத்தில் விதிநிடேதங்களை யதிக்கிரமித்து நடந்தாலும் அதனாற் பாபத்தையடையாமலுந் திரும்பிப் பிறக்காமலும் மோக்ஷமே யடைவன். (உச)

சுவாமி! இத்தன்மைத்தான ஆன்மாவைப் பிரித்தறிகிறதைவிட இன்னமும் வேறுவிதமா யறிகிறதற்குச் சாதனாந்திரங்க ளுண்டா இல்லையா? அருச்சுனா! சிலபேர்கள் தன்னுடைய மனதினாலே தியானஞ்செய்து தன்னுடைய தேகத்துக்குள்ளாக அந்த ஆன்மாவை யறி



வார்கள். இன்னஞ் சிலபேர்கள் பிரகிருதிபுருஷ விபாகமாகிய விசாரஞ் செய்யப்பட்ட ஞானத்தினாலேயு மறிவார்கள். இன்னஞ்சிலபேர்கள் சீவாத்மா பரமாத்மா அயிக்யஞ்செய்யப்பட்ட யோகத்தினாலேயு மறிவார்கள். இன்னஞ்சிலபேர்கள் நிட்காமகரும யோகத்தினாலேயு மறிவார்கள். இவர்களெல்லாரு முடிவி லென்சொரூபத்தையே யடைவார்கள். (உரு)

சுவாமி! இவ்விதங்களாயறியச் சக்தியில்லாத புருஷனுக்கு மோக்ஷத்தி லிச்சைமாத்திர முண்டாயிருக்குமாகில் அதற்குத்தகுந்த வேறு விதமான உபாயங்களுண்டா இல்லையாவென்றுகேட்ட அருச்சுனனைப் பார்த்து மகாபுஜா! முன்சொன்ன சாங்கிய யோகாதி கிரமங்கள் தெரியமாட்டாத அதிமந்த அதிகாரிகள் குருமுகமாக உபதேச மாத்திரங்கேட்டுக்கொண்டு அந்தப்பிரகாரஞ் சிரத்தாபத்தியுடனே சார்வதா வுபாசிப்பார்களேயாகில் அந்தக் குருவாக்கிய சிரவணாதி யுபாசனைகளினாலே அவர்களுமிருத்துவை யதிக்கிரமித்து என்சொரூபத்தையே யடைவார்கள். (உசா)

அருச்சுனா! இப்போது நாம்சொன்ன பிரகிருதி சம்பந்தமான சத்துவாதிகுணங்களோடுங்கூடிய சேத்ரதருமத்தையு மதற்கு விலட்சணமாயிருக்கிற சேத்ரக்ஞனாகிய புருஷனுடைய தருமத்தையும் விவரமாய்ப் பிரித் தெதுவரைக்கு மறியாமற் போவார்களோ அதுபரியந்த மிந்த இருவர்களுடைய தாதான்மியக் கூட்டுறவினாலே தாபரசங்கமாத்மகமாகிய பூதங்களுண்டாகிறதுஞ் சம்சாரத்தை யடைகிறதுமாயு மிருக்கும். இதனால் எந்த ஆத்மஞானத்தினாலே சம்சாரத்தைத் தாண்டப்படுமோ அப்பேர்ப்பட்ட ஞானத்தைச் சொல்லுகிறேன் கேள்.

அருச்சுனா! தாபரசங்கமாத்மகமாகிய பூதங்களிடத்திலேயும் சமமாயிருக்கப்பட்ட பரமேஸ்பரனொருவரே யிருக்கிறாரென்றும், அப்பேர்ப்பட்டவர் சகல பூதங்களும் நாசமடைந்தாலும் நாசமடையாதவரென்றும், அப்பேர்ப்பட்டவரே தானென்றுஞ் சமுசயமன்னியில் திடமா யெவனறிகிறானோ அவனே நன்றாயறிந்தவன். அவனே ஆத்மஞானியுமாவன். (உஅ)

அருச்சுனா! சகல பூதங்களிடத்திலேயுஞ் சமமாக இருக்கப்பட்ட பரமாத்மாவைத் தானாக அறியப்பட்டவன், அப்பேர்ப்பட்ட தன்னையெப்படி யிம்சைசெய்துகொள்ளுவான். அவன்றான் மற்றொருவரை யெவ்விதமா யிம்சைசெய்தேனென்றுஞ் சொல்லப்போகிறான். இதனாலேதான் எப்போதும் அசங்கனாகவே யிருக்கிறேனென்றுந் தி

புத்தியாய்த் திரிவித கரணங்களைக்கொண்டு அவனவனுடைய சுதன்மத்துக்குத் தகுந்த கன்மங்களை நிட்காமமாகச் செய்துவருவானேயாகில் மோக்ஷமேயடைவன். (உ௯)

சுவாமி! விதம்விதமாய்க் கன்மங்கள் செய்யும்போது ஆத்மாவையெப்படிச் சமமென்று சொல்லலாம்? அருச்சுனா! பிரகிருதியினாற் பரிணமித்த சத்துவாதிகுணங்கள் முதலான தேகேந்திரியாதிகளினாலேயே சகல கன்மங்களையும் பண்ணப்படுகிறதென்றும், ஆன்மாவானவ னெப்போதும் சமமாயிருக்கிறவனென்றும், அவ னொருகன்மமுஞ் செய்கிறவருமல்ல செய்யச்சொல்லுகிறவருமல்லவென்றும், பிரகிருதி சம்பந்தமாகிய சத்துவாதிகுணமுதலாகிய தேகேந்திரியாதிகளை யபிமானித்ததனாலே ஆன்மாவுக்குக் கர்த்தத்துவமும் போக்தத்துவமும் வந்ததே யல்லாமல் வாஸ்தவமா யெப்போதுங் கிடையாதென்றும் எவனறிகிறானோ அவன்தான் நன்றாயறிந்தவனென்றும், அவனைத்தான் புருஷனென்றுஞ் சொல்லப்படும். (௩௦)

சுவாமி! தேகேந்திரியாதிகளை அபிமானித்து நாநாவிதமான கிரியைகள் செய்யும்போது ஆத்மாவை யெப்படிச் சமமென்று சொல்லலாம்? அருச்சுனா! தாபரசங்கமமாகிய நாநாவித ரூபங்களாகக் காணப்படுகிற பிரபஞ்சமெல்லாம் பிரளயகாலத்தில் நம்முடைய மாயையினிடத்தில் லீனமாயிருக்கும். சிருட்டிகாலத்தி லந்த மாயையினிடத்திலிருந்தும் உண்டாகும் அப்பேர்ப்பட்ட மாயைக்கும் அதிட்டானமாயிருக்கா நின்ற நம்மைச் சமமென்று ஏன்சொல்லக்கூடாது? இதனாலே மாயாகாரியமா யிருக்காநின்ற தேகேந்திரியாதிகளினாலே செய்யப்பட்ட கன்மங்களுக்கும் பரிபூரணமாயிருக்காநின்றஸ்வரூபத்திற்கும் யாதொரு சம்பந்தமு மில்லையென்றும் எவனறிவானோ அவன் பிரமசொரூபத்தையே யடைவன். (௩க)

சுவாமி! சகல பிராணிகளுடைய உள்ளும் புறம்பும் எங்குஞ் சமமாயும் பூரணமாயும் பரமான்மா நிறைந்திருக்கும்போது சீவாளாலே செய்யப்பட்ட கன்மங்களினாலே பேதப்படாமலும் பலன்களை யடையாமலு மெப்படிக்கிருப்பார்? அருச்சுனா! யாதொன்றுண்டாச்சுதோ அது நாசத்தையடையும். மாயையினிடத்திலிருந்து சீவர்களுண்டானார்களென்றுவது, அல்லது பிரமதேவரா லுண்டானார்களென்றுவது எப்போதுசொல்லப்படுகிறதோ அப்போதே யவர்களும் நாசத்தையடைவார்களல்லவா; அப்படி நாசத்தையடையப்பட்ட சீவாளாலே செய்யப்பட்ட பிரகிருதிசம்பந்தமான சத்துவாதி குணமுதலான நாநாவிதமாகிய கன்மங்கள்மட்டும் எப்படிச் சத்தியமாயிருக்கும். ஆனதா லந்தச் சீவாளும் அவாளாலே செய்யப்பட்டகன்மங்களுஞ் சத்தியமாயிருந்தல்லோ ஒருவரை ஒட்டுமென்று சொல்லவேண்டும். ஆனா லவர்கள் நாசத்தையடைந்தாலும் அவர்கள்செய்த கன்மங்கள்மாத்திரம்சத்தியமாயிருக்கட்டுமேயென்றால் எந்தவஸ்துவுக்கு எந்தக்குணமுண்டோ அந்தவஸ்துமட்டும் நாசத்தையடைந்தால் அந்தக்குணமும் அதோடே நாசமடைவதுபோல் அவைகள்செய்த [illegible] நிசமில்லாமற்போகும் போது அவர்களாற்செய்யப்பட்ட கன்மங்கள்மாத்திர மெவ்விதமாய் நிசமாகும். அப்படிக்கு நிசமல்லாமல் அசத்தியத்தைக்கூடினகருமங்களானது சத்தியமாயும் நித்தியமாயும் அனாதியாயும் அவ்வியயனாயும் நிர்க்குணனாயும் நிர்விகாரனாயும் நிரஞ்சனனாயு மிருக்காநின்ற பரமான்மாவானவரை யெவ்விதமா யொட்டுமோ, அதனாலவ ரெவ்விதமாய்ப் பேதப்படுவாரோ, இவைகளை அருச்சுனா! நீயேசொல்லவேண்டும். [illegible]னாலே அந்தப்பரமாத்மாவானவர் சரீரங்களுடன் கூடியிருந்தாலும் அவருக்கொரு கன்ம பலன்களும் ஒட்டக்காரணமேயில்லை. (௩உ)

அருச்சுனா! இதற்கே ஒரு திட்டாந்தஞ்சொல்லுகிறோம். ஆகாயமானது சமஸ்த பூதங்களுடைய உள்ளும் புறம்புஞ் சர்வ வியாபகமாயிருந்தாலும் சூட்சுமமானதா லொருவஸ்துவினிடத்திலு மெவ்விதமாயொட்டாமலிருக்கிறதோ அப்படிப் பரமாத்மாவானவர் உத்தமமாகமாகிய சர்வ தேகங்களிடத்திலேயும் வியாபித்திருந்துந் தேககருமங்களுடன் பற்றுத லடையார். (௩௩)

அருச்சுனா! ஆகாய திட்டாந்தத்தினாலே ஆத்மாவுக்குப் பற்றுதலில்லையென்று சொன்னோம்; இப்போது தேகாதி திரிவிதப் பிரபஞ்சமெல்லாம் விளங்கிக்கொண் டிருக்கிறதனாலேயும் அவருக்குப் பற்றுதல் கிடையாதென்பதற்குந் திட்டாந்தஞ்சொல்லுகிறோங் கேள். ஆதித்தனொருவரே தானும் பிரகாசரூபமா யிருந்துகொண்டு தன்னுடைய சந்நிதானத்திலுண்டான லோகங்களெல்லாம் பிரகாசித்து விளங்கும்படிச் செய்வித்தாலு மவைகளிலே யவ ரெப்படிப் பற்றுதலடையவில்லையோ அப்படி ஞேயமாகிய பரமாத்மாவானவரொருவராயிருந்துஞ் சமஸ்த தேகேந்திரியாதிகளை விளங்கும்படிச் செய்வித்தாலும் அவைகளினாலே யவரொருபோதும் பற்றுதலடையமாட்டார்.

அருச்சுனா! இந்தப் பிரகாரம் க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞன், பிரகிருதி, புருஷன், ஞானம், ஞேய மிவைகளுடைய தருமங்களைச் சுருக்கமாக ஞானநேத்திரத்தினால் க்ஷேத்ர[illegible]

கள் முழுவதும் பிரகிருதிசம்பந்தமாயிருக்கப்பட்ட சத்துவாதி குணங்களே செய்கிறதென்றும், புருஷனானவ னொருகன்மமுஞ் செய்கிறவரல்லவென்றும், அவர் நிர்விகாரியென்றும், சாட்சியென்றும் விபரமாகப்பிரித்து எந்தப்புருஷனறிவானோ அவன் சகல பூதங்களுக்குங் காரணமா யிருக்கிற மாயையைக்கடந்து நம்முடைய சொரூபமாகிய மோட்சபதத்தையே யடைவன். (௩௫)

பிரகிருதிபுருஷன் முதலானவைகளினுடைய தருமங்களை யாதொரு பகவானாலே விபரமாகப் பிரித்துச் சொல்லப்பட்டதோ அப்பேர்ப்பட்ட பகவானுக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

பதின்மூன்றாவது

பிரகிருதிபுருஷவிபாகயோக அத்தியாயம் முற்றிற்று.

ஆ அத்தியாயம் ௧௩-க்குச் சுலோகம் - ௫௨௪.

ஸ்ரீ தாமோதரனே துணை.

---

உ

ஸ்ரீயோகிநாம்பதயேநம:

## பதினான்காவது

## குணத்திரயவிபாகயோக அத்தியாயம்.

அவதாரிகை:—முந்தின அத்தியாயத்தின் முடிவில் க்ஷேத்ரதருமமாயிருக்கப்பட்ட விகாரங்கள் முழுவதும் பிரகிருதிசம்பந்தமான சத்துவாதி குணத்திரயங்களினாலேயே செய்யப்படுகிறதென்றும், புருஷனானவர் நிர்விகாரியானதால் அவரொருகருமங்களுஞ் செய்கிறவரல்லவென்றும் சொல்லியிருப்பதினால், அவைகள் வெளிப்படும்படியாக அந்தச்சத்துவாதி குணத்திரயங்களு மவைகளினுடைய லட்சணங்களுமிந்த அத்தியாயத்திற் சொல்லத்தொடங்குகின்றார். சுவாமி! பூருவ அத்தியாயத்திற் பிரகிருதிசம்பந்தமாயிருக்கப்பட்டசத்துவாதி குணங்களாலேயே சமஸ்தவிகாரங்களும் நடக்கப்படுகிறதென்றும், புருஷனானவர் நிர்விகாரியானதலால் அவரொரு விகாரமுஞ் செய்கிறவரல்லவென்றும் அப்படி யிருக்கச்குணத்திரயங்களினாலே செய்யப்படுகிற காரியங்கள் முழுவதும் பிரமையினாற் புருஷனானவன் அன்னியோன்னிய அத்தியாசம்போலொப்புக்கொண்டு சனன மரணமாகிய துக்கங்களை யடைகிறானென்றும் அநுக்ரகஞ் செய்தீர்கள். அந்த விஷயத்தில் தேவரீருடைய உத்தாரவை நான் நம்பவேண்டுவது விகிதமாயிருந்தபோதிலும் புருஷனானவரே சமஸ்தமுஞ் செய்விக்கிறதாக



அநந்தஜென்மப்பழக்கத்தினால் இந்தச் சனனத்திலு முறுதியாகத் தோன்றுகிற கிரந்தியானது எவ்விதமாய் நிவிர்த்தியாகி மோட்சத்தை யடையப்போகிறே னென்கிறதில் மிகவுங் கவலையுண்டானவனா யிருக்கிறேன். ஆகையா லந்தக் கிரந்தியானது சேதிக்கும்படியாக எவ்விதமா யநுக்ரகஞ் செய்யவேண்டுமோ அவ்விதமா யநுக்ரகம்பண்ண வேண்டுமென்று கேட்ட அருச்சுனனைப்பார்த்துப் பாரதா! குணத்திரயங்களினாலேயே சமஸ்தமும் நடக்கப்படுகிறதென்றும், புருஷனாலே யொன்றும் நடக்கப்படவில்லையென்றும் அப்படியிருக்க, அகங்காரகிரந்தியினாற் புருஷனானவன் சமஸ்தமுஞ் செய்கிறதுபோலத் தோற்றுகிறதென்று தெரியத்தக்கதா யெந்தஞானமுண்டோ அந்த ஞானத்தினாலே அந்தக்கிரந்தியைச் சேதிக்கவேண்டுமே யல்லாமல்மற்றொன்றாலு மாகமாட்டாது. அதனால் அருச்சுனா! எந்த ஞானத்தை யறிந்ததனாலே சகல முனீந்திரர்களுங் கிரந்தியைச் சேதித்துச் சனன மரணமாகிய சம்சாரபந்தத்திலிருந்தும் விடுபட்டு முத்தராகிச் சிரேஷ்டமாகிய சித்தியை யடைந்தார்களோ அப்பேர்ப்பட்ட உத்தமமாயுஞ் சிரேஷ்டமாயு மிருக்கின்ற ஞானத்தை யின்னமும் உனக்குச் சொல்லுகிறேன் கேள். (க)

அருச்சுனா! இன்னமு மந்தஞான மெப்பேர்ப்பட்டதென்றால் அந்த ஞானத்தையறிந்து அந்தப்படி யநுஷ்டிப்பார்களேயாகில் நம்முடைய சொரூபமாகிய கைவல்யபதத்தை யடைவார்களோ தவிரத் திரும்பச் சிருட்டிகாலத்திற் சனனமும் பிரளயகாலத்தில் நாசமுமடைய மாட்டார்கள். ஆனாலந்தஞானமானது எந்தவிதமென்று கேட்பாயேயாகில் நிட்காமகன்மங்களினாலே சித்தசுத்தித்துவாரா குருவினுடைய சந்நிதானத்துக்குப்போய்ச் சிசுருஷை பூர்வகமாக உபதேசம் பெற்றுக்கொண்டு சிரவண மனன நிதித்தியாசன முதலானவையுஞ் செய்துவருகிறபோது தேகாதி திரிசியப் பிரபஞ்சங்களுக்கெல்லாந் தான் அசங்கனென்றும் சாட்சியென்றும் நிர்விகாரியென்றும், அப்பேர்ப்பட்ட தன்னைத்தவிர அன்னியமே கிடையாதென்று தெரிந்துகொள்ளப்பட்ட ஞானமெதுவோ அதற்கே ஞானமென்று சொல்லப்படும். அந்தஞானத்தைக்கொண்டு அகங்கார கிரந்தியைச் சேதித்துச் சுகமா யிருக்கக்கடவாயென்று சொன்ன பகவானைப் பார்த்து. (உ)

சுவாமி! தேவரீ ரநுக்ரகஞ் செய்கிறபோது சத்தியமாகவே யென் புத்திக்குத் தோன்றினபோதிலும் அதைவிட்டுச் சித்தந்திரும்

பினமாத்திரத்தில் நாநாவித ரூபங்களாகவுஞ் சத்தியமாகவுந் தோற்று கிறதே? அருச்சுனா! தோற்றுகிறதுங்கூட நம்மைத்தவிர அன்னியமில்லை யென்கிறதைச் சொல்லுகிறேன் கேள். பகவானாயிருக்கிற நம்மிடத்திற் சங்கற்பமாகிய மாயையுண்டாம். அந்தமாயை பிரளயகாலத்திற் சகல சீவாளுடைய கருமவாசனைகளோடேகூடி நம்மிடத்திலேயே யடங்கியிருக்கும். சிருஷ்டிகாலத்தி லந்தமாயையிடத்திலிருந்தே பிரமதேவர் முதலாகிய சகல பூதங்களுடன் கூடியிருக்கிற பிரபஞ்சமுண்டாகும். (௩)

அருச்சுனா! இவ்விதமாய்த் தேவதைகள் முதலாய்த் தாவர சங்கமாத்மகமா யாதொரு பூதங்களுண்டாகிறதோ அத்தனைக்கும் அந்த மாயைதாயார். அந்த மாயையினிடத்திலே நாம் வியாபித்திருப்பதனாலேயும் அந்த மாயைக்கு நம்முடைய சத்தையேயன்றி வேறே சத்தையில்லாததனாலும் நாமேபிதா இப்படிப் பகவானுதீனமாயிருக்கிற மாயையினாலே சகலபூதங்களுமுண்டாகி லயமாகிறபடியினாலே அவைகளும் நம்மைத்தவிர அன்னியமில்லையென்று பார்ப்பாயேயானால் அப்போது நாநாவிதமாகத் தோன்றக் காரணமேயில்லை. அந்தப்படி பாராமல் அந்த மாயாவசத்தனாகி அதனாலுண்டான திரிவித குண காரியங்களினாற் பற்றுதலையடைவானாகில் அதனால் விசாரித்தால் வாஸ்தவமா யில்லாமலிருக்கிற அகங்காரகிரந்தி நீங்காமற் பிரமையினாலே சனன மரணமாகிய சம்சாரத்தை யடைந்துகொண்டேயிருப்பன். (௪)

சுவாமி! இப்படி வாஸ்தவமா யில்லாமலிருக்கிற சம்சாரங் குண காரியங்களினாலே யெவ்விதமாய்ச் சம்பவிக்கிறதோ அவைகளின் விபரங்களை யடியேனுக்கு அநுக்ரகம்பண்ணவேண்டுமென்று கேட்ட அருச்சுனனைப் பார்த்துப் பரமாத்மா! பிரகிருதியினிடத்திலிருந்து சாத்துவீக, ராசத, தாமதமென்று மூன்று குணங்களுண்டாயின. அந்தக் குணங்களானவை அவ்விபனா யிருக்கப்பட்ட தேகியைப் பந்தனாகச் செய்து வைத்துக்கொண்டிருக்கிறது எதனாலென்றால், மாயாகாரியமாயிருக்கிற தேக கருமங்களை நானென்று அபிமானிக்குங் காலத்தில் அந்தத் தேகியானவனைத் திரிவிதகுணங்களானவை சுகதுக்க மோகாதிகளிலே கூட்டிவைத்துப் பந்தத்தையுடையவனாகச் செய்துவைக்கும். இதுவே தவிர வாஸ்தவமா யவருக்குப் பந்தமோட்சங் கிடையாது. (௫)

சுவாமி! இவ்வாறு வல்லமையுடைத்தான திரிவிதகுணங்களும் அதன் லட்சணங்களுந் தெரியும்படி யனுக்ரகம்பண்ணவேண்டும்? அருச்சுனா! சத்துவகுணமானது நிர்மலமானபடியினாலே சீவனானவனுக்கு ஆன்மா சுயம்பிரகாசரென்றும் நிர்மலரென்றும் பரிசுத்தரென்றும் ஒன்றிலும் பற்றின்றி யிருக்கப்பட்டவரென்று மிப்படிப்பட்ட ஞானத்தை விளங்கும்படி யாகச் செய்வித்துச் சார்வதா சுகத்திலேயே கூட்டிவைத்துக்கொண்டிருக்கிறதுந்தவிர மோட்சத்துக்குச் சாதனமான கிரியைகளையே செய்வித்துக்கொண்டிருக்கும். (௬)

அருச்சுனா! ரசோகுணமானது இச்சையினாலேயுண்டான தாகையால் அது சீவனானவனை யிராகாதிகளைவிட்டு நீங்காம லிருக்கும்படியாகவும் பிரவிர்த்தியான கன்மங்களிலே யிச்சையும் வாராதபொருளில் ஆசிக்கும்படிக்கும் வந்தபொருளிற் றிருப்தியடையாமலுஞ் செய்வித்துப் பந்தங்களைப் பண்ணிவைத்துக்கொண்டிருக்கும். (௭)

அருச்சுனா! தமோகுணமானது அஞ்ஞானத்திலே பிறந்த தாகையாற் சீவனானவனை மோகத்தினாலே பிரமாதமாயிருக்கப்படாநின்ற காரியங்களிலும் ஆலசியம், நித்திரைமுதலானவைகளிற் கூட்டிவைத்துத் தீராமலிருக்கும்படியான துக்கத்தையும், பந்தத்தையும், பண்ணிவைத்துக் கொண்டிருக்கும். (௮)

அருச்சுனா! இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சகலசீவாளு மிந்தத் திரிவிதகுணங்களினாலேயே பூரிக்கப்பட்டிருப்பார்களென்கிற விபரத்தைச் சொல்லுகிறேன் கேள். சத்துவகுணத்தை யாசரித்தவனாயிருந்தால் துக்கநிவிர்த்தியாகும்படியான விகிதமாயிருக்கப்பட்ட புண்ணிய கருமங்களோடுங்கூடச் சுகத்திலேயே பற்றுதல் பண்ணிவைத்துக்கொண்டிருக்கும். இராசதகுணத்தை யாசரித்தவனாயிருந்தால்பிரவிர்த்தியான கன்மங்களைச் செய்துகொண்டு சுகதுக்கத்தில் அபிமானிக்கும் படியாகப்பண்ணிவைத்துக்கொண்டிருக்கும். தாமதகுணத்தை யாசரித்தவனாயிருந்தால் அஞ்ஞானகாரியங்களை யடையும்படியாகச் செய்வித்துச் சற்சாத்திரங்களினாலே யுண்டாகிற ஞானத்தையுமறைத்துப் பெரியவாள் வார்த்தையுங் கேளாமலே பிரமாதமாயிருக்காநின்ற காரியங்களை யுண்டாக்கிக்கொண்டு அவைகளால் வரப்பட்ட துக்கங்களை யனுபவிக்கும்படியாகப் பண்ணிக்கொண்டிருக்கும் (௯)

அருச்சுனா! இப்படியே நிரந்தரமா யொருகுணமேயுண்டாயிருக்கு மென்னும் எண்ணவேண்டாம். ஒரு காலத்தில் ரசோகுண தமோகுணங்களை நிராகரித்துச் சத்துவகுணமானது விர்த்தியடையும், ஒருவேளை சத்துவ தமோகுணங்களை நிராகரித்து ரசோகுணமா

னது அதிகமாயிருக்கும், ஒருவேளை சத்துவ ரசோகுணங்களை நிராகரித்துத் தமோகுணமானது அதிகமாய் மேலிட்டிருக்கும். (௧௦)

அருச்சுனா! இந்த மூன்றுகுணங்களுஞ் சீவாளுக்குண்டாயிருப்பதனாலே யிந்தவேளையி லிந்தக்குணம் மேலிட்டிருக்குமென்கிற விபரமுனக்குத் தெரியவேண்டுமென்று கேட்பாயேயாகில் அதையுஞ் சொல்லுகிறேன் கேள். விஷயங்களி லிச்சையில்லாமலுந் தேகமுதலான சுரோத்திராதி சகல இந்திரியங்களையும் பகவானுடைய கைங்கரியத்தில் வைத்து அவருடைய குணானுவாதங்கள் முதலானவைகளையுஞ் சிரவணாதிகள் செய்யும்படியான ஞானம் எப்போது மேலிடுகிறதோ அந்தவேளைக்குச் சத்துவகுணமானது விருத்தியடைந்ததென் றறியவேண்டும். (௧௧)

அருச்சுனா! லோபகுணமும் பிரவிர்த்தியான கன்மங்களி லிச்சையும் பொறுமையில்லாமையும் விஷயங்களி லிச்சையும் எப்போதுண்டாகிறதோ அப்போது ரசோகுணமானது விருத்தியடைந்ததென் றறியவேண்டும். (௧௨)

அருச்சுனா! பரலோகசாதகமாயிருக்கப்பட்ட விவேகத்தோடுங் கூடின காரியங்களி லெவ்வளவேனும் பிரவிர்த்தியின்றிப் பிரயாதமுடமாயும் இகலோக சாதகமா யிருக்கப்பட்ட விகிதமான காரியங்களிலும் பிரவேசமின்றி போகத்தினாலே அஞ்ஞான காரியங்களிற் பிரவேசமும் அதனாலுச்சாகமும் இத்தியாதி குணங்கள் விருத்தியடையும்போது தமோகுணமானது மேலிட்டிருக்கிறதென் றெண்ணவேண்டும். (௧௩)

அருச்சுனா! இந்த மூன்றுகுணங்களிலும் மரித்தவர்களுக்குப் பலத்தைச் சொல்லுகிறேன் கேள். சத்துவகுணமானது விருத்தியடைந்திருக்கும்போது சரீரத்தைவிட்டவன் உத்தமபுருஷாளுக்குண்டாகப்பட்ட பிரமலோகமுதலாகிய புண்ணிய லோகங்களையடைவன். (௧௪)

அருச்சுனா! ரசோகுணமானது விருத்தியடைந்திருக்கும்போது மரித்தவர்கள் பிரவிர்த்திகன்மங்களிற் பிரியத்தை யுடைத்தான மனிதர்களிடமாய்ப் பிறப்பார்கள். தமோகுண மேலிட் டிருக்கும்போது மரித்தவர்கள் பசுவாதி மிருகயோனிகளினிடமாய்ப் பிறப்பார்கள்.

அருச்சுனா! இவ்விடத்திலிருக்கும்போது இந்த மூன்று குணங்களுக்கு முண்டாகிய பலன்களையுஞ் சொல்லுகிறேன் கேள்; சாத்வித குணத்துக்குச் சுகிர்தமாயிருக்கப்பட்ட புண்யகன்மங்களும் ஞானமுஞ் சந்தோஷமும் பிராப்தி. இராசத குணத்துக்கு லோபகுணமுஞ் சுக



துக்கமும் பிராப்தி. தாமத குணத்துக்குப்பலம் அஞ்ஞானமுந் துக்கமும் பிராப்தியென்று மகான்கள் முதலானவர்களுஞ் சொல்லுவார்கள்.

அருச்சுனா! சத்துவகுணத்தினாலே ஞானமுஞ் சந்தோஷமும், ரசோகுணத்தினாலே லோபமுஞ் சுகதுக்கமும், தமோகுணத்தினாலே பிரமாதமோகமுந் துக்கமும் பிறக்கிறதினாலே. (௧௭)

சத்துவகுணவந்தாள் மேல்லோகங்களையும், ரசோகுணவந்தாள் மத்தியமாகிய மனிதலோகத்தையும், நிகிருஷ்டமான தமோகுணவந்தாள் அதோகதியான நரகத்தையு மடைவார்கள். அருச்சுனா! இந்த மூன்றுகுணங்களினுடைய பற்றுதலினாலே சீவாளுக்குச் சம்சாரம்வந்திருக்கிறது. (௧௮)

ஆனதால் அருச்சுனா! தேகேந்திரியாதி ரூபங்களாகப் பரிணமித்த திரிவிதகுணங்களாலேயே சகல கருமங்களும் பண்ணப்படுகிறதென்றும், அவைகளுக்கெல்லாந் தான் அசங்கனென்றும், சாட்சியென்றும், அப்பேர்ப்பட்ட சுரூபத்தை யாவனறிவானோ அவனே நம்முடைய சொரூபத்தை யடைவான்; அந்த மகாபுருஷனைத்தான் மூன்றுகுணங்களையுங் கடந்தவனென்று சொல்லப்படும் ஆதலால் அவாளவாளுடைய சுதன்மங்களைச் செய்துவருவார்களேயாகில் அதனாற் சித்த சுத்தி வந்து அச்சித்தசுத்தியினாலே இப்போது நாம் சொன்ன ஞானமுண்டாகி மோக்ஷத்தை யடையும்படியா யிருப்பதனாலே நீயு முனக்குச் சுதன்மமாயிருக்கிற யுத்தத்தைப் பண்ணவேண்டுமென்றுசொன்ன பகவானைப்பார்த்து. (௧௯)

சுவாமி! சமஸ்த கன்மங்களுந் திரிவிதகுணங்களாலேயே செய்யப்படுகிறதென்றும், அதற்குத் தான் சாக்ஷியென்றுஞ் சொன்னமாத்திரத்தில் உம்முடைய சொரூபத்தை யெப்படியடையலாம் அருச்சுனா! சீவனானவன் தேகத்துக்குக் காரணமாயிருக்கிற மூன்றுகுணங்களையு மதன் காரியங்களான சன்ம,மிருத்து,சரை,துக்க மிவைமுதலானவைகளிலும் நின்று விடுபட்டு அவைகளுக்கெல்லாந் தான் சாக்ஷியென்றுந் தன்னைத்தவிர அவைகள் கிடையாதென்றும் நிடநிச்சயமான புத்தியினாலே சீவித்துக்கொண்டிருப்பதா லிந்தத் தேகமிருக்கும்போதே சீவன்முத்தனாகவே யிருக்கிறானென்றுஞ் சொன்ன பகவானைப் பார்த்து,— (௨௦)

அருச்சுனனானவன் விண்ணப்பஞ்செய்து சர்வலோகேஸ்வரா! திரிவித குணங்களையும் அதிக்கிரமித்த தேகியானவனுக்குச் சூட்சும சரீரமாகிய ஆகாமியமும், காரணசரீரமாகிய சஞ்சிதமும் நசித்துப்

போனாலும் பிராரப்தமாகிய தூலசரீரமிருக்குமளவுந் திரிவிதகுண காரியங்களில் எவ்விதமாகச்சம்பந்தமன்னியில் எந்த ஆசாரத்தோடுங் கூடியிருப்பார்கள்? எவ்விதமான நடவடிக்கைகள் நடப்பார்கள்? அந்த லட்சணங்களையெல்லாங் கேட்கவேண்டுமென்று ஆசையுடைத்தான வனாயிருக்கிறேனென்று சொன்ன. (௨௧)

அருச்சுனனைப்பார்த்துத் திரிகுணாதீதனை மகாபுருஷனானவன் சத்துவகுணத்தினாலுண்டாகிய புண்ணியகன்மங்களுஞ் சுகமும், ரசோ குணத்தினாலுண்டான பிரவிர்த்திகன்மங்களுஞ் சுகதுக்கமும், தமோ குணத்தினாலுண்டான மோகமுந், துக்கமும், இத்தியாதிகளெல்லாம் பிராப்தமானபட்சத்தில் துக்கத்தையடையான்; இவைகளெல்லாம் நிவிர்த்தியான பக்ஷத்தில் சந்தோஷத்தையுமடையான். எதனாலென் றால்,இவைகளெல்லா மாயாகாரியமாகிய திரிவிதகுணங்களுடைய சம் பந்தமென்றும்; அவைகளுக்கெல்லாந் நான் சாக்ஷியென்றுந் நிட்சிச் சமா யிருந்துகொண்டு எல்லாவற்றையுஞ் சமமாகப் பார்த்துக்கொண் டிருப்பன். (௨௨)

அருச்சுனா! இன்னமு மெப்படியிருப்பார்களென்றால், ஆத்மாநு பவத்திலேயே சதா சந்தோஷத்தை யடைந்தவனாயும் அதைத்தவிர மற்றையகாரியங்க ளெல்லாவற்றிலும் உதாசீனமான புத்தியுண்டான வனாயுங் குணகாரியங்களாகிய சுகதுக்காதிகளில் மனஞ்சென்றாலும் சலிக்கப்படாதவனாயுமிருப்பன். எதனாலென்றால்,திரிவிதகுணங்களே பிரவிர்த்தித்துக்கொண்டிருக்கின்றன. நான் நிர்விகாரி தனக்கிந்தக் குணதோஷங்கள் ஒன்றுமில்லையென்றும் இவைகளுக்கெல்லாந் நான் சாக்ஷியென்றும் இந்தந் நிட்சிச்சயத்தினாலே யாதொரு சஞ்சலமு மடையாமலிருப்பன். (௨௩)

அருச்சுனா! இன்னமுஞ் சுகத்தினிடத்திலுந், துக்கத்தினிடத்தி லும், ஓடுங் கல்லும் பொன்னு மிவைகளிடத்திலும்,பிரியாப் பிரியம் நிந்தை துதியிவைகளிடத்திலுஞ், சமமாயுஞ் சொஸ்தனாயும் இருக்கிற துந்தவிர இந்தவிஷயங்களி லெப்போதுந் தீரனாயுமிருப்பன். (௨௪)

அருச்சுனா! இன்னமும் மானவமானங்களிடத்திலுஞ் சத்துரு மித்துருவினிடத்திலுஞ் சமானனுமாயுஞ் சமஸ்த பிரயத்தினங்களை யும் விட்டவனாயுமிருப்பன். அவனையே குணாதீதனென்று சொல்லப் படும். (௨௫)

சுவாமி! இந்த லட்சணங்களைப் பார்க்கும்போது குணங்களைக் கடப்பது மிகவும் அருமையாகக் காணப்படுகிறதினாலே அதற்கேதா



வது உபாயமுண்டானால் அநுக்ரகஞ் செய்ய வேண்டுமென்று கேட்ட அருச்சுனனைப்பார்த்து தனஞ்சயா! பகவானாயிருக்கிற நம்மைத்தவிர அன்னியமில்லையென்கிற அவ்விபசாரமாகிய பக்தியோகத்தினாலே ஞானம் லப்தமாகி நம்மையே யிடைவிடாமற் பத்திசெய்கிறவனெ வனோ அவனிந்தக் குணத்திரயங்களை யதிக்கிரமித்து மோக்ஷத்தை யடைகிறதற்கு யோக்கியனாவான். (௨௬)

அருச்சுனா! இதனாலே நம்மை யெப்படி யடையலாமென்று கேட் பாயாகில், சகலலோகங்கள் முதலாகிய சமஸ்தத்துக்கும் அவ்வியமான மோக்ஷத்துக்கும் அதை யடைகிறதற்குச்சாதகமாயிருக்கப்பட்ட சாஸ் வதமான தன்மத்துக்கும் அகண்டிதமாகிய சுகத்துக்கும் நாமே யாதார மும், இருப்பிடமுமானையால் நம்மையே யடைவன். (௨௭)

யாதொரு காரணத்தினாலே பிரமசொரூபத்தை வெளிப்படுத்திக் குணத்திரயங்களை நிவர்த்திபண்ணி விஸ்தாரமாக அருச்சுனனுக்குப் போதித்த யாதொரு பகவானுண்டோ அப்பேர்ப்பட்ட ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியாகிய பரப்பிரம சொரூபத்துக்கு நமஸ்காரஞ்செய்கிறேன்.

பதினான்காவது

குணத்திரயவிபாகயோக அத்தியாயம்முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௧௪ - க்குச் சுலோகம் - ௫௱௧.

ஸ்ரீராமசந்திரவைரிணேநம:

---

உ

ஸ்ரீ அநாதிப்பிரமசாரிணேநம:

பதினைந்தாவது

# புருஷோத்தம அத்தியாயம்.

அவதாரிகை:—முந்தின அத்தியாயத்தின் முடிவில் தம்முடைய பத்தியினாலே ஞானம் லப்தமாகி, அதனால் மோக்ஷத்தை யடையலா மென்று சொல்லியிருப்பதினாலே அந்தப் பத்தியானது ஞானமும், வைராக்கியமும் வாராமற் சித்திக்கமாட்டாதென்றும், அது வாராமற் போகிறதற்குச் சகத்தைச் சத்தியமாய்நம்பிச் சகல வியவகாரங்களுஞ் செய்துகொண்டுவருகிறதே தடையாயிருப்பதனாலே அப்பேர்ப்பட்ட சகத்தானது அசத்தியமென்றும் விசாரிக்காதவரையி லிருக்கிறது போலத் தோற்றிக்கொண்டிருக்குமென்றும், அப்பேர்ப்பட்டமித்தை யான சகத்தினுடைய லட்சணங்களை நானா புதையமாகிய பரியந்தமுந்

சாஸ்வதமில்லாம லிருக்கப்பட்ட தெதுவோ அதற்கு அசுவத்த மென்று சொல்லப்படுகிறபடியால் அப்படிப்பட்ட அசுவத்த விருக்ஷத்துக்குச் சமானமாகச் சொல்லுகிறதுந்தவிர, எப்போதும் நித்திய மாயுஞ் சாஸ்வதமாயும் வியாபகமாயு மிருக்கப்பட்ட பரமான்மாவாகிய புருஷோத்தமனுடைய லக்ஷணத்தையும் இந்த அத்தியாயத்திற் சொல்லத்தொடங்குகிறார்.

சுவாமி! பத்தியினாலே ஞானம் லப்தமாகி யெல்லாரும் மோக்ஷத்தை யடையலாமே? அருச்சுனா! இந்தச் சகத்திற் சத்தியத்துவபுத்தியுண்டானவரா லொருபோது மடையவேகூடாது. ஏனென்றால் மித்தையாகக் காணப்பட்ட சகத்தினுடைய் லக்ஷணங்களை நாம் சொல்லுகிறோ மதனாலேயே நீ யறிந்துகொள்ளலாம் மேல் வேரும் கீழ்க் கொம்புகளுமாயிருக்கிற இந்தச் சகத்தாகிய சம்சாரமென்னப் படாநின்ற விருக்ஷமானது பிரமாதி தம்பம்வரையில் எங்கும் வியாபித்திருக்கிறது; இதற்கே அசுவத்தமென்றுஞ் சொல்வார்கள். அது மிகவும் பிரபலமாயும் பிரவாக ரூபத்தோடுங்கூடிச் சத்தியம்போலவிளங்கினாலும் அநித்யமென்று சுருதிமுதலிய மகான்களாற்சொல்லப்படுகிறபடியால் அப்படிப்பட்ட இந்த சம்சாரவிருக்ஷத்துக்குக் கருமபலங்கள் சொல்லுகிற வேதங்களெல்லாம் இலைகளென்றும், அப்படிப்பட்ட அசுவத்த விருக்ஷத்தை யாரொருவன்விபரமா யறிவானோ அவனே வேதங்களினுடைய முடிவான அர்த்தத்தை யறிந்தவனென்றும், சம்சார சமுத்திரத்தைத் தாண்டினவனென்றுஞ் சொல்லப்படும். (௧)

அருச்சுனா! அந்த விருக்ஷத்துக்குச் சத்துவாதி குணங்களென்னப்பட்ட சலத்தினால் விருத்தியடைந்து பிரமதேவர் முதலான சமஸ்த பூதங்களாகிய கொம்புகள் மேலுங் கீழுமாக வியாபித்திருக்கிறது. விஷயங்களென்னுங் கொழுந்துகளை யிந்த மானுடலோகத்திலுள்ள சீவாளிச்சித் தாம் புண்ணியம் பண்ணினபேர்களும் பாவம்பண்ணின பேர்களுமாகவுங் கருமானு பந்தங்களை யடைந்திருக்கிறார்கள். அப்படியடைந்த கன்மங்களுக்குக் காரணமான வாசனைகளாகிய அவாந்தர வேர்களானவை மேலுலகங்களிலும் கீழ்லோகங்களிலும் வியாபித்தெங்கும் நிரம்பியிருக்கிறது. (௨)

அருச்சுனா! இந்த வுலகத்திலுள்ள சீவர்களுக்கிந்த விருட்சரூப மிப்பேர்ப்பட்ட தென்று தெரியவேமாட்டாது. இந்த விருட்சத்துக் கிவ்வளவு பிரமாணமென்று ஆதியும் அந்தமுந் தெரியப்பட்டதல்ல. ஒருவராலும் போக்கடிக்கப்படாததாயும் அனர்த்தத்தைக் கொடுக்கிற



தாயும் ஆதியந்தஞ் சொல்லக் கூடாததாயு மிருக்கிற இந்தச் சம்சார விருட்சமாகிய அசுவத்த விருக்ஷத்தையடையாம லிருக்கிறதற்குக் காரணமான வைராக்யத்தோடுங்கூடித் தான் அசங்கமென்கிற ஆயுதத்தினாலே சேதித்துத் தத்துவஞானத்தையடைய எத்தனம் பண்ணக்கடவாயென்று அனுக்ரகஞ்செய்த பகவானைப்பார்த்து. (௩)

அருச்சுனனானவன் லோகேஸ்வரா! இதை யெவ்விதமாகச் சேதிக்கிறதோ அந்தவுபாயத்தையும் அதற்குப் பலமு மனுக்ரகம்பண்ணவேண்டும்? அருச்சுனா! சத்தியமாகவும் நன்றாகவுந் தோன்றி வியாபித்திருக்கிற சம்சாரவிருட்சத்தைத் தேகமே நானென்கிற அகந்தையும், புத்திர தாராதிகளிடத்தில் எனதென்கிற மமதையும், பருத்தறிகிற ஞானமென்னப்படாநின்ற ஆயுதத்தினாலே சேஷமன்னியிற் சேதித்துத் தள்ளியதன்பின் யாதொன்றை யடைகிறதனாலே திரும்பிவாரார்களோ அப்பேர்ப்பட்ட பிரமபதத்தைத் தேடவேண்டும். எப்படித் தேடுகிறதென்றால் யாதொருத்தரிடத்திலே நின்றும் அனாதியாயிருக்கிற இந்தச் சகத்தாகிய சம்சாரம் விருத்தியடைந்திருக்கிறதோ அப்பேர்ப்பட்ட ஆதியான புருஷனைத் தீவிர இச்சையுடனறிந்து அவனைச் சரணமாக அடைந்து தேடவேண்டும். அந்தப்படியே அஞ்ஞான மில்லாத ஆத்மஞானமிட்டவர்களோ அவர் எந்தப்படி. நம்மைச் சரணமாக அடைந்து நம்முடைய சொரூபத்தை யடைவார்கள். (௪)

அருச்சுனா! இன்னமும் அவர்களெப்படிப்பட்டவர்களென்றால், தேகமே ஆன்மாவென்றுஞ் சகத்துச் சத்தியமென்றும் நினைக்கப்படுகிற அஞ்ஞானத்தைச் சுத்தமாக விட்டவர்களாயும், புத்திர தாராதிகளிடத்தில் மமதையு மிந்தப் போகங்களை யனுபவிக்கவேண்டுமென்கிற இச்சையை விட்டவர்களாயும், பிரகிருதி சங்கதோஷத்தைச் செயித்தவர்களாயும், ஆத்மஞானமென்னும் வித்தையை யுடையவர்களாயும், சமஸ்த கோரிக்கைகளையுஞ் சுத்தமாய்விட்டு சுகதுக்கங்களென்னும் தொந்தங்களிலே யிருந்தும் விடுபட்டவர்களாயும், ஆத்மஞானத்தை மறவாமலிருக்கப்பட்டவர்கள் கேடில்லாத ஆத்ம ஸ்வரூபத்தை யடைவார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் திரும்பவே மாட்டார்கள். (௫)

சுவாமி! இவர்கள்மாத்திரந் திரும்பாமற்போவதற் கென்ன நிமித்தம்? அருச்சுனா! சூரியன், சந்திரன், அக்கினி யிவைகளைவிடச் சகத்திற் பிரகாசவஸ்துக்கள் ஒன்றுங்கிடையாது. அவ்வித வஸ்துக்களாலே யந்தச் சொரூபத்தைப் பிரகாசிக்கும்படிச் செய்துவைக்கமாட்

டாது; எதனாலென்றால், அந்தச் சொரூபத்தினுடைய சத்தையினா லும் பிரகாசத்தினாலும் அந்தச் சூரியாதிமூன்றும் பிரகாசிக்க வேண்டும். அந்தன்மையான ஸ்வரூபத்தைபடைந்தவர்கள் எப்படித் திரும்புவார்கள்? அதுவே நம்முடைய சிரேஷ்டமான ஸ்வரூபமென் றும் அதுவே மோட்சவீடென்று மறியவேண்டும். (௬)

தேவரீ ரநுக்ரகஞ்செய்ததைப் பார்த்தால் எப்போது மிருக்கிறது பரமாத்மாவென்றும் அவரைத்தவிரத் தோற்றப்பட்ட சகத்து மித்தையென்றும் நிச்சயமாச்சுது; இப்படியிருக்கிறபட்சத்தில் ஆன்மாவாகிய சீவனுக்குச் சம்சாரஞ் சம்பவித்து ஏற்றத்தாழ்ச்சி வருவானேன்? அருச்சுனா! அந்த ஆன்மாவாகிய சீவனானவன் நம்முடைய அம்சமாயும் அசங்கனாயும் புராதனனாயும் நித்தியனாயு மிருக்கிறவனென்கிறதில் யாதொரு சமுசயமுமில்லை. அப்பேர்ப்பட்ட சீவனானவன் அஞ்ஞானத்தோடுங்கூடிய பிரகிருதிசம்பந்தமான சூட்சும சரீரமாகிய மனமுதலாகிய பதினேழு தத்துவங்களுடன்கூடிச் சுகதுக்கமாகிற பிரியாப்பிரியங்களிற் சத்தியத்துவ புத்தியுடனே கலந்து விவகாரஞ் செய்கிறபடியால் சுழுத்திகாலத்திற் சமஸ்தமும் லயமாகிச் சாக்கிரகாலத்திற் பகிர்முகப்படுகிறதைப்போற் சனன மரணமென்னப்பட்ட சம்சாரத்தையடைந்து ஏற்றத்தாழ்ச்சியாய்ப் போகிறான். ()

சுவாமி! இந்தச் சீவனானவன் இந்தச் சூட்சும இந்திரியங்களுடன் கூடினதனாலே யெவ்விதமாகச் சம்சாரத்தையடைகிறான்? அருச்சுனா! மனமுதலிய சூட்சும இந்திரியங்களுக்கும் ஆதாரமாயிருக்கப்பட்டவின்றசீவனானவன்சரீரத்தை விட்டுப்போகும்போது வாயுவானது புஷ்பங்களுடைய வாசனைகளைக் கிரகித்துக்கொண்டு போகிறதுபோல அவனவன் செய்த கன்ம வாசனைகளுடனே சூட்சும இந்திரியங்களானவை மற்றொரு சரீரத்தைக் கிரகித்து அனுபவிக்கும்படியாகச் செய்விக்கும். (௮)

- சுவாமி! எந்தக் காரணத்தினாலே மற்றொரு சரீரத்தைக் கிரகிக்கும்படிச் சம்பவித்தது? அருச்சுனா! விஷயங்களைக் கிரகிக்கப்பட்ட சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களுடன் சங்கற்பவிகற்பாத்மகமான மனமுதலானவைகளுடனேயும் அசங்கனாயிருக்கப்பட்ட சீவனானவன் அபிமானித்து விஷயங்களை யனுபவித்துக்கொண்டு சமஸ்த சுகதுக்கங்களுந் தனக்குவந்ததுபோ லனுபவிக்கிறபடியினாலே தப்பாமற் சம்சாரத்தை யடைகிறதற்குக் காரணமாச்சுது. (௯)



சுவாமி! இந்தவிதமா யிருக்கிறதென்பதைச் சிலராலேயே னறியப்படவில்லை? அருச்சுனா! அஞ்ஞானத்தையுடைத்தான மூடராயிருக்கப்பட்டவர்கள் தேகத்தைவிட்டுப் பிரிந்துபோகும்போது இவ்விதமாய்ப் போகிறதென்றும், மற்றொரு சரீரத்தை யிவ்விதமாய்க் கிரகிக்கிற தென்றுந் தேக மிருக்கும்போது சூட்சும இந்திரியங்களுடைய வசத்தை யடைந்தவனாய் விஷயங்களை யனுபவிக்கப்படுகிறதென்றும் அந்த விபரங்களைத் தெரியவேமாட்டார்கள். ஆனால் விவேகிகளாகிய ஞானநேத்திரத்தையுடைத்தான மகாபுருஷாளாரோ அவர்களாலேயே யறியப்படும். அவர்களே சமுசார சமுத்திரத்தினின்றுந் தாண்டினவர்களென்றுஞ் சொல்லப்படும். (௰)

சுவாமி! அவர்களால்மாத்திரம் எவ்விதமா யறியக்கூடும்? அருச்சுனா! சாதன சதுஷ்டய சம்பத்தியையடைந்து குருமுகமாக வுபதேசம்பெற்றுக்கொண்டு சாஸ்திரங்களுடைய ரகசியங்களையும், பிரகிருதிசம்பந்தமான சட லட்சணங்களையும், அதற் கப்பாற்பட்ட பிரத்தியகான்மாவாகிய சீவனை புருஷலட்சணங்களையு மிவைகளுக் கப்பாற்பட்ட புருஷோத்தமனுடைய லட்சணங்களையும் நன்று யறிந்தவர்களாயும், அந்த யெத்தனத்திலேயே சுகித்துக்கொண்டிருப்பார் இன்னமும் அந்த மகா புருஷாள் தேகேந்திரியங்களுடன் கூடிவாசஞ்செய்துகொண்டிருந்தாலுஞ் சதா அந்தர் முகத்தையுடைத்தானவராகி யிடைவிடாமற்றன்னையே பார்த்துக்கொண்டிருப்பதால் அந்தப்புருஷாளுக்கு மாத்திரஞ் சகசமா யறியப்படலாம் அது வன்னியில் அஞ்ஞானத்தோடுக்கூடிச்சித்தசுத்தியில்லாத மந்தபுத்திகளான சீவாள் எவ்வளவு சாஸ்திரங்களை வாசித்தாலும், அவைகளுடைய அர்த்தங்களைத் தெரிந்துகொண்டாலும், எவ்வளவு தானங்கள் யாகங்கள்செய்தாலும், மின்னமும் பலவிதமான எத்தனங்க ளெவ்வளவுசெய்தாலும் பரமான்மாவாகிய புருஷோத்தமனைக் காணவேமாட்டார்கள். (௰௧)

அருச்சுனா! இப்போது நான்சொன்ன புருஷோத்தமனைக்கண்ணொருவராலேயு முடியாதுபோலத் தோற்றுகிறதே யென்று கேட்பாயேயாகில் யாதொரு வருத்தமுமின்றிச் சுலபமாயுங் காணலாமென்கிற அர்த்தத்தையுஞ் சொல்லுகிறேன்கேள். அருச்சுனா! ஆதித்தன், சந்திரன், அக்கினி யிவர்களிடத்தில் யாதொருதேஜஸிருந்து லோகங்களையெல்லாம் விளங்கும்படிச் செய்விக்கிறதோ அவ்விதமான தேஜசுகளெல்லாம் நம்முடைய தேஜசாக அறி, (௰௨)

அருச்சுனா! இன்னமும் பிருதிவிரூபமாக இருந்துகொண்டு சமஸ்த பூதங்களையுந் தரித்துக்கொண்டிருக்கிறோம். அமிர்தமயமான இரசசொரூபமாகிய சந்திரனாயிருந்து சமஸ்த பயிர்களையும் விருத்தியடையும்படியாகவுஞ் செய்விக்கிறோம். (௧௩)

இன்னமுஞ் சாடராக்கினி ரூபமாகச் சர்வ பிராணிகளுடைய தேகங்களிலுமிருந்து சதுர்விதமாக அன்னங்களைப் புசிக்கிறோம். சதுர்விதமாவது மென்றல், உரிஞ்சல், நக்கல் குடித்தல் இந்தவிதமாகப் புசிக்கப்பட்டவைகளைப் பிராணாபானனோடுங் கூடினவனாய்ப் பக்குவமுஞ் செய்கிறேன். (௧௪)

அருச்சுனா! இன்னமுஞ் சகலபிராணிகளுடைய இருதயத்திலும் வாசஞ்செய்யப்பட்ட அந்தரியாமியும் நாமே சகல பிராணிகளுக்கும் ஞாபகமுண்டாகிறது மில்லாமற் போகிறது மிவைகளெல்லாவற்றிற்குங் காரணம் நாமே சகல தேகங்களிலுமிருந்துகொண்டு நல்லது பொல்லாததென்று தெரியத் தக்கதான ஞானமும் நாமே. சகலவேதங்களுஞ் சொல்லப்பட்டது நாமே. வேதாந்தத்தை யுண்டாக்கினவனும் நாமே. வேதங்களுடைய அர்த்தங்களை யறிந்தவனும் நாமே. (௧௫)

சுவாமி! இவ்விதமா யெல்லாந் தேவரீரேயிருந்தாற் பற்றுதலையாது? அருச்சுனா! நம்முடைய திட்டியாக நம்மைத்தவிர அன்னியமே கிடையாது; அப்படியிருக்கக் குருசிஷ போத்திய போதக நிலையை யொப்புக்கொண்டு உன்னிமித்தமாக நாம் சொன்னபோதிலுங்கூட எப்போதும் நமக்குப் பற்றுதலே கிடையாதென்கிற அர்த்தத்தை மூன்று சுலோகத்தினாற் சொல்லுகிறோங்கேள்; லோகத்திற் க்ஷரமென்றும் அக்ஷரமென்று மிரண்டுபுருஷாளுண்டு, இதிற் பிரகிருதிசம்பந்தமான இருபத்தினாலு தத்துவங்களுடன்கூடிய எல்லாச்சரீரங்களும் க்ஷரமென்று சொல்லப்படும். அவ்வித சரீரங்கள்போனாலு நித்தியனா யிருக்கப்பட்ட இருபத்தைந்தாவது தத்துவமான கூடஸ்தனாகிய சீவனையவனை அக்ஷரமென்று சொல்லப்படும். (௧௬)

அருச்சுனா! இன்னமும் அவ்வியயமாகிய எந்த யீஸ்வரன் லோகத்திரயங்களையும் வியாபித்துச் சகலத்தையுந் தரித்துக் கொண்டிருக்கிறாரோ அவர் க்ஷராக்ஷரங்கூடிய தொம்பத வாச்சியார்த்தங்களாகிய இருபத்துநாலு தத்துவங்களுக்கும் அட்சரமாகிய தொம்பத லட்சியார்த்தமான இருபத்தைந்தாவது தத்துவமான பிரத்தியகான்மாவுக்கும் அப்பாற்பட்டவரென்றும் அவரே உத்தமபுருஷரென்றும் அவரே பரமான்மாவென்றும் அவரே நாமென்றுஞ் சொல்லப்படும். இப்படியான நம்மை யெவ்விதமாகப் பற்றுதலடையப்போகிறது. (௧௭)



அருச்சுனா! நாமெப்போதும் நித்தியமாகையாற் க்ஷரமாகிய சகல சரீரங்களுக்கு மப்பாற்பட்டிருக்கிறோம். சமஸ்த சரீரங்களிடத்திலுந் தனித்தனியே யட்சரமாயிருக்கப்பட்ட கூடஸ்தனாகிய புருஷனையவனுக் கப்பாற்பட்டவரா யுள்ளும் புறம்பு மெங்கும் வியாபகமாயிருப்பதனாலே லோகங்களிலேயும், வேதங்களிலேயும், உத்தமனுக்கெல்லாம் உத்தமனென்றும், புருஷாளுக்கெல்லாஞ் சிரேஷ்டமாகிய புருஷோத்தமனென்றும் பிரசித்தமாகக் கீர்த்திமானானோம். (௧௮)

சுவாமி! இப்படிப்பட்ட வும்மையறிந்தாற் பலமென்ன? அருச்சுனா! சமஸ்தமும் நாமே யிருக்கிறோமென்றும் நம்மைத் தவிர அன்னியமேயில்லை யென்னப்பட்ட அஞ்ஞான சூனியனாயிருக்கப்படாநின்ற புருஷன் புருஷோத்தமனாகிய நம்மையறிவன். அவனே சகலத்தையுமறிந்தவனென்றுஞ் சர்வஞ்ஞனென்றுஞ் சொல்லப்படுவன். அந்தப் புருஷனானவன் சமஸ்த பிரகாரங்களினாலுஞ் சமமாக நம்மையே யுபாசித்துக்கொண்டிருந்து முடிவில் நம்முடைய சொரூபத்தையே யடைவன்.

அருச்சுனா! இந்த அத்தியாயத்திலே அதிக ரகசியமாயிருக்கிற சாரத்தை யுனக்குரகப்பண்ணினேன்; இதை யாவனறிகிறானோ அவனே புத்திமானுங் கிருதகிருத்தியனு மாவன். ஆனதால் நீயுஞ் சம்சாரமென்கிற அசுவத்தவிருட்சத்தை ஞானமென்கிற வாளாற் சேதித்துப்போட்டுப் பிரஞ்ஞையான மோட்சசொரூபத்தை யடையென்று பகவானானவர் அருச்சுனனுக் குபதேசித்த அர்த்தத்தைச் சஞ்சயனானவர் திருதராட்டிரமகாராசனுக்குச் சொன்னார். (௨௰)

இவ்விதமாகப் புருஷோத்தமனை வெளிப்படுத்தி விபரமா யநுக்கிரகஞ்செய்த பகவானாகிய கிருஷ்ணமூர்த்திக்கு நமஸ்காரஞ் செய்கிறேன்.

பதினைந்தாவது

புருஷோத்தம அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௧௫-க்குச் சுலோகம்-௫௭௧.

ஸ்ரீகோவர்த்தனசலோத்திரதோம:

---

உ

ஸ்ரீபுண்ணியசுலோகாயநம:

பதினாறாவது

# தெய்வ அசுரசம்பத்துவிபாகயோக அத்தியாயம்

அவதாரிகை:—முன் அத்தியாயத்திலே சம்சாரமென்கிற அசுவத்த விருட்சத்தை ஞானமென்கிற வாளினாலே சேதித்துப்போட்டு

மோட்சஸ்வரூபத்தை யடையலாமென்று சொல்லி யிருப்பதனாலே
அந்தப்பிரகாரந் தெய்வசம்பத்தை யடைந்த புருஷனாலே மாத்திரம்
அடையப்படலாமென்றும், அசுர சம்பத்தை யடைந்த புருஷனாலே
அடையக்கூடாமல் அநேக விதமான துக்ககரமாகிய பாபசனனங்களை
யடையப்படுமென்றுமிந்தஅத்தியாயத்திற்சொல்லத்தொடங்குகின்றார்.

தேவரீ ரனுக்கிரகஞ்செய்த பிரகாரம் லோகத்திற் சிரேஷ்டா
ரென்று கொண்டாடும்படியான புருஷாள் யாரோ அவாள் கூட
அடையமாட்டார்கள் போலத் தோற்றும்போது, மற்றவாளெவ்விதமா
யடையப்போகிறார்களென்று கேட்ட அருச்சுனனைப் பார்த்துப்பாரதா
நீ சொன்னகாரியஞ் சரியே; அதற்குத் தெய்வசம்பத்தென்றும் அசுர
சம்பத்தென்று மிரண்டுண்டு. அதில் தெய்வசம்பத்தையடைந்தபுருஷா
ளாரோ அவாளுலகத்தில் அபூருபமாயிருப்பார்கள். அவர்களாலேமட்
டுஞ் சுலபமா யடையப்படலாமே தவிர அசுரசம்பத்தை யடைந்த புரு
ஷாளுலகத்தில் அநேகருண்டு. அவர்கள் தான் நீ சொன்னபடியடை
யமாட்டார்கள்; ஆனதால் லிந்த இரண்டுசம்பத்துகளினுடைய
லட்சணங்களையு முனக்குத் தெரியும்படியாக அனுக்கிரகிக்கிறோம்.
அருச்சுனா! சத்துவகுணப் பிரதானத்தோடுங் கூடின புருஷனுக்குச்
சித்தத்திற் பயமில்லாமலிருக்கும், பிரகிருதி புருஷ விபாகஞ்செய்யப்
பட்ட விவேக ஞான முண்டாயிருக்கும், சத்பாத்திரங்களில் தானங்
கொடுக்கப்பட்டவனாயு மிருப்பன், இந்திரியங்கள் விஷயங்களிற் செல்
லாமற் புண்ணிய காரியங்களில் வைத்துக்கொண்டேவருவன், சகல
ஜீவாளுக்கும் இதமாகப் பஞ்ச யக்யங்கள் முதலானவைகளுஞ் செய்து
வருவன். வேதாப்பியாசத்துடன் தபசுஞ்செய்து கொண்டிருப்பன்.

அருச்சுனா! ஒருபிராணிக்குந் தன்னாலே பீட்சையுண்டாகும்படி
செய்யான். எப்போதுஞ்சத்தியமான நடவடிக்கையே யுண்டாயிருக்
கும். எந்த விஷயங்களைப் பற்றியுஞ் சோகத்தையடையான். தியாக
புத்தியுண்டானவனாயுஞ் சாந்த சித்தனாயு மிருப்பன் பிறருடைய
தோஷங்களை யெண்ணாமலு மிருப்பன். சர்வபூதங்களிடத்திலுந் தய
வுண்டானவனாயும் விஷயங்களில் லயமாய்ப் போகாமற் சாவதான
னாகவுமிருப்பன். மிருது பாவமும் அனுசிதவிஷயங்களில் லச்சையும்
எந்தவிஷயங்களிலுஞ் சபலத்துவமும் லோலத்துவமுமின்றி யிருப்
பன். (௨)

அருச்சுனா! தேஜசும், க்ஷமையுந், தைரியமும், சுசித்துவமும், அக்
குரோதமு முடையவனாயிருப்பன். பராளுக்குத் துரோகஞ்செய்யாம



லும் ஒருவிஷயத்திலும் அபிமானமுமில்லாமலிருப்பன். பாரதா! இப்
படிப்பட்ட இருபத்தாறுகுணங்களும் நம்முடைய கிருபையினால் தெய்
வசம்பத்தையடைந்த புருஷனைச் சார்ந்திருக்கும். (௩)

அருச்சுனா! இனி யொருக்காலும் நன்மையடையாதவர்களுக்
குண்டாகிய அசுரசம்பத்தையுங் கேள். டம்பம், தர்ப்பம் அபிமானம்,
குரோதம் இவைகள் நிரம்பியிருக்கும். சாதுக்களைத் துச்சமாய் வசனிக்
கிறதும் பருஷவாக்கியங்களுமுண்டாயிருக்கும். இப்படிப்பட்ட
அஞ்ஞானமுதலாகிய அவிவேகத்தோடுங்கூடிய குணங்கள் அசுரசம்
பத்தை யடைந்த புருஷனைச் சார்ந்திருக்கும். (௪)

அருச்சுனா! இந்த இரண்டு சம்பத்துக்களுக்கும் பயனையுங் கேள்.
மோட்சத்தையடைகிறதற்குத் தெய்வசம்பத்தும் சனனமரணமாகிய
பந்தத்துக்கு அசுரசம்பத்தும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். மகாபுஜா!
இதில் அருச்சுனனுமல்லாமிந்த நான் எந்தச் சம்பத்தையுடையவ
னென்று கேட்கிறாயோ, நீ தெய்வசம்பத்தையடைந்தவனாகவேயிருக்
கிறாய்; அதனாலே யாதொரு சோகத்தையு மடையத் தேவையில்லை
மோட்சத்தையே யடைவாய். (௫)

அருச்சுனா! ஜீவாளுக்குண்டாயிருக்கிற இரண்டுசம்பத்தில் தெய்வ
சம்பத்தை முன் விபரமாய்ச் சொன்னோம். அசுர சம்பத்தை யின்
னம் விபரமாய்ச் சொல்லுகிறோங் கேள். (௬)

அசுரசம்பத்தையடைந்தவர்கள் தன்மங்களிடத்திற் பிரவிர்த்தி
யும், அதன்மங்களிடத்தில் நிவர்த்தியு மறியமாட்டார்கள். சுசித்துவ
மும், ஆசாரமும், சத்தியமும், ஜீவாளிடத்திற்றயவும் அவர்களிடத்தி
லிருக்கவேமாட்டாது. (௭)

அருச்சுனா! இன்னமு மிந்தச்சகத்தில் விளங்கப்படாநின்றவேத
சாத்திரங்கள் அசத்தியமென்றுந், தன்மாதன்மங்களினாலுண்டாகிய
புண்ணியபாவங் கிடையாதென்றும், இந்தச் சகத்துக்குக் கர்த்தா
வாகிய ஈஸ்வரனொருவ னுண்டென்பதுங்கிடையாதென்றும், காமத்தி
னாலே ஸ்திரீபுருஷாளுடைய அன்னியோன்னியக் கூட்டுறவே சிருஷ்
டிக்கேதுவென்றும், இந்தப் பிரகாரஞ் சுபாவமாகத் தனக்குத்தானே
அனாதியாக நடந்துவருகிறதென்றும், இதைத்தவிர ஒருவரா லுண்
டாக்கவில்லையென்றுஞ் சொல்வார்கள். (௮)

அருச்சுனா! இன்னமுமிப்பேர்ப்பட்ட சித்தாந்தத்தினாலே பா
லோக சாதனத்துக்குத் தகுந்த எத்தனங்களில் மனதைச் செலுத்தா

மல் நாசமடைந்து புத்தியீனராகி லோகத்தில் ஏதாவது கிஞ்சித் மாத்திரஞ் சற்கிருத்தியங்கள்செய்து வரப்படாநின்ற சீவாளையுங் கெடுத்துத் தாமுங் கெட்டு நரகத்தையே யடைவார்கள். அருச்சுனா! எவ்வளவு பாக்கியங்கள் வந்தபோதிலுந் திருப்தியடையாமல் மேலுக்கு மேல் தங்களுக்கடையக்கூடாத வஸ்துக்களைக்கோரி அதனாலநேக விதமான துக்கங்களை யடைந்துகொண்டு அஞ்ஞானத்தினாலே மோகத்தையடைந்து அனியாயமாகத் தனத்தைச் சம்பாதித்துச் சத்பாத்திரத்திற்கூட அற்பமாயினுஞ் செலவுசெய்யாமலுஞ் சாத்திரோக்தமான விரதங்களையும்விட்டு அபவித்திரமானவிரதங்களுடன் உக்ரங்களாகிய இம்சாகரமான கன்மங்களைச் செய்துகொண்டு ஜகத்துக்குச் சத்துருவாய்ச் சனனத்தையு நாசத்தையு மடைந்துகொண்டிருப்பார்கள். (கூ)

அருச்சுனா! இன்னமும்மரண பரியந்தம் ஒழியாத துஷ்ட கருமத்தையாசரித்து டம்பம், அபிமானம், மதம், குரோத மிவைகளோடுங் கூடினவர்களாகி அஞ்ஞானத்தினாலே அந்த டம்பமாகிய விரதங்களை யாசரித்து அதற்குத் தகுந்த க்ஷுத்திர தேவதைகளை யாராதனைசெய்து கொண்டிருப்பார்கள். (க0)

அருச்சுனா! இன்னமும் விஷயங்களினாலுண்டான காமபோகங்களையே பரமபுருஷார்த்தமென்றும் இதையன்றி வேறே யாதொன்றுங் கிடையாதென்றும் நிச்சயித்துத் தேகமுள்ள வரையிலும் அந்தப் போகங்களுக்குச் சாதனமாகிய அர்த்தத்தினிடத்திலேயே கோரிக்கையுண்டானவர்களா யிருப்பார்கள். (கக)

அருச்சுனா! இன்னங் காமக்குரோதபரராகி ஆசைகளென்னு மநேகமாகிய கயிறுகளாற் கட்டப்பட்டவர்களாகிக் காமபோகங்களை யனுபவிக்கிற நிமித்தமே யனியாயமான தனங்களைச் சம்பாதித்துக் கொண்டிருப்பார்கள். (கஉ)

அருச்சுனா! இன்னமும் அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேள். இன்றைக் கெனக் கிவ்வளவு திரவியங் கிடைத்தது. இதற்கு முன் னிவ்வளவு திரவிய மெனக்கிருக்கிறது. இதை வருகிற வருடத்துக்கு ளித்தனையாக வர்த்திக்கப்பண்ணுவேன். இவைகளைப் பார்க்கிலும் அதிகமான தனங்கள் சம்பாதிக்கிறேன் இதனாலே நம்மைத் திரவியஸ்தனென்றுஞ் சொல்வார்கள் இந்த ஏதுக்களினாலே நா னிஷ்டமானபடி யடைகிறேனென்றுஞ் சொல்லிக்கொண்டிருப்பார்கள். (கங)



அருச்சுனா! இன்னமும் இந்தச் சத்துருவானவன் என்னாலே நாசத்தையடைந்தான் மற்றைச் சத்துருக்களைச் சம்மாரஞ்செய்கிறேன் நானேயீஸ்வரன் எனக்குச் சரியாக உலகத்திலொருவருமில்லைநானே சகல போகங்களு முண்டானவன். நானெதுநினைத்தாலும் அபுருபமல்ல நானே கிருதகிருத்தியன் நானே பலவந்தன், நானே யெல்லாவிதத்திலுஞ் சுகமுண்டானவன். (கச)

அருச்சுனா! இன்னமும் நானே தனமுண்டானவன் நானே குலமுண்டானவன் பெண்சாதி பிள்ளை பேரப்பிள்ளைகளுண்டா யிருப்பதில் எனக்குச் சமானன் ஆர் நா னெக்யங்கள் செய்வேன் * நடன், விடன் முதலியவர்களுக்குத் திரவியங்களையுங் கொடுப்பேன் இப்பேர்ப்பட்ட விதங்களினாலே சந்தோஷமு மகிழ்ச்சியு மடைகிறேனென்று அஞ்ஞானத்தினாலே மோகத்தை யடைந்துகொண்டிருப்பார்கள். (கரு)

அருச்சுனா! இப்படி நாநாவிதமாகிய மனோப்பிராந்தியடைந்து யோககாலத்திலகப்பட்டுக் காமபோகங்களிடத்தி லாசக்தி யுண்டானவர்களாகிப் போகமென்கிற வலையிலே சுழலப்பட்டு விஷயங்களென்னும் போகங்களை யனுபவித்துக்கொண்டு அசுசியென்னும் ரவுரவாதி நரகத்திலேயே விழுவார்கள். (கசு)

அருச்சுனா! இன்னமும் தான் திரவியவானென்கிற பெருமையினாலே மதம் கெருவம் மோகம் இத்தியாதிகளை யடைந்து எப்பேர்ப்பட்டவானிடத்திலுந் தயவு தாட்சண்ணியமில்லாமல் தான் எக்யங்கள் செய்வதினாலே தன்னைப் பெரியவனென்றுங் கீர்த்திமானென்றுஞ் சொல்லவேண்டுமென்பதா யெக்யங்கள் செய்கிறேனென்கிற நாமமாத்திரமேயல்லாமல் அவதி பூர்வமாக டம்பத்தோடுங் கூடினவராய் எக்யங்கள் செய்வார்கள். (கஎ)

அருச்சுனா! இன்னமும் அகந்தை மமதை கெருவம் பெலம் காமக்குரோதம் இத்தியாதிகளுடன் கூடினவர்களாய்த் தன் தேகத்தினிடத்திலேயுமிதரமாகிய சமஸ்ததேகங்களிடத்திலேயு நாம்அந்தரியாமியாக இருக்கிறவனென்கிறதையறியாமல் நம்மை மனுஷபாவமாகப் பாவித்து நேர்த்தபடி தூஷித்துக்கொண்டு நம்மை யதார்த்தமாயறிந்து பக்தி செய்யப்பட்ட பெரியவாளுடைய வார்த்தைகளிலுஞ் சிரத்தையின்றி அசூயையோடே நிந்தையாகிய வார்த்தைகளை வசனித்துக்கொண்டும் எக்யங்கள் முதலான இதர கன்மங்களையுஞ்செய்வார்கள்.

* நடன்—கூத்தாடுகிறவன்;

இப்பேர்ப்பட்ட மூடாள் ஒருக்காலும் நல்லகெதி யடையவே மாட்டார்கள். (௧௯)

சுவாமி! இப்படிப்பட்டவர்களுக்கு என்னதான் கதி? அருச்சுனா! மோட்சமார்க்கத்துக்குத் தூரானாயும், பாவிகளாயுங், குரூரானாயும், பாபகருமங்களோடுங் கூடினவர்களாயும்; நம்மையும் நம்முடைய பக்தர்களையுந் துவேஷிக்கப்பட்ட நர அதமர்களைச் சனன மரணத்தோடுங்கூடிய சம்சாரமாகிய அசுரசம்பத்தையடைந்து பாபயோனிகளிடத்திற் பிறக்கும்படியாகச்செய்விப்போம். (௧௯)

அருச்சுனா! அப்படிச் செய்விக்கிறதிலும் நம்மைப் பக்தி செய்யும்படியான சனன மல்லாத அசுரயோனிகளாகிய மூடமான புலி, பாம்பாதியாகப் பிறக்கும்படிச் செய்வித்து, அப்பாலும் ஜென்மஜென்மங்கள்தோறு மவைகளைக் காட்டிலும் நிகிருஷ்டமாகிய கிருமி கீடாதி ஜென்மங்களை யடையும்படியாகவுஞ் செய்விப்போம். (௨௦)

தேவரீர் அசுரசம்பத்தைக்குறித் தநேகவிதமா யனுக்ரகஞ்செய்தீர்கள். அவ்வளவு மனத்துக்கு வருவதானால் வருத்தமாயிருக்கிறது. ஆகையாற் சுருவாயுமிருக்கவேண்டும் அதை விட்டமாத்திரத்தில் அசுரசம்பத்து நீங்கித்தெய்வ சம்பத்துண்டாகி மோட்சத்தை யடையும்படியாகவு மிருக்கிற வுபாயத்தை யநுக்ரகம் பண்ணவேண்டும் அருச்சுனா! ஆத்மாவை நாசமடையும்படியாகச் செய்வித்து அசுரசம்பத்தை யடைந்து நரகத்துக் கேதுவாக்கிவைக்கப்பட்ட மூன்றுகுணங்களுண்டு அவைகளைச் சுத்தமாய் விட்டுவிடவேண்டும், அந்தப்படியேவிவேகிகள் விட்டேயிருப்பார்கள். அப்பேர்ப்பட்ட குணங்கள் எவையென்றால், காமமென்றுங் குரோதமென்றும் லோபமென்றுஞ் சொல்லப்படும். (௨௧)

சுவாமி! இந்த மூன்றையும் விட்டதாற் பலனென்ன? அருச்சுனா! நரகத்துக் கேதுவாயிருக்கிற இந்த மூன்று குணமாகியதோஷங்களைச் செயித்தவான் ஆன்மஞானத்தை யுடையவர்களாகிச் சிரேஷ்டமாகிய ஸ்வரூபத்தை யாசரிக்கிறதனாலே ஜீவன்முத்தாளாகி யாதொரு தோஷத்தையு மடையாமல் மோட்சமே யடைவார்கள். (௨௨)

அருச்சுனா! எவனிந்தக்குணங்களை விடாமலுஞ் சாத்திரங்களிற் சொல்லப்பட்ட விதிகளையுந்தள்ளித் தன்னுடைய இச்சைப்படி நடந்தால் அவன் அஞ்ஞானத்தினாலே ஞானம் நஷ்டமடைந்து சிரேஷ்டமான மோட்சத்தையுஞ் சுகத்தையு மடையான். (௨௩)



அருச்சுனா! ஆனதா லின்னதுசெய்தாற் றருமம், இன்னதுசெய்தால் அதர்மமென்று தெரியும்படியாகச் சொல்லப்பட்டிருக்கிற சுருதி ஸ்மிருதி சாத்திரங்களைப் பிரமாணமாகக்கொண்டு அவைகளிற்சொல்லப்பட்டிருக்கிறபடி யிராசத தாமதகுண சிரத்தைவிட்டுச் சுத்தவகுண சிரத்தையினாலே விகிதமாயிருக்கப்பட்ட சுதன்மங்களைச் செய்தால் அதனாற் சித்தசுத்தித்துவாரா தெய்வசம்பத்துண்டாய்த்தத்துவஞான முதயமாய் மோட்சமேயடைவாய். (௨௪)

தெய்வசம்பத்தும் அசுரசம்பத்தும் விபரமாய்த் தெரிந்து அசுரசம்பத்தைவிட்டுத் தெய்வசம்பத்தை யடைந்த சாத்விகசிரத்தாவந்தாளுக்குத் தத்துவஞான முதையமாய் மோட்சமே யடைவார்களென்று சொன்னபகவானாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்குநமஸ்காரஞ்செய்கிறேன்.

பதினாறுவது

**தெய்வ அசுரசம்பத்துவிபாகயோக அத்தியாயம் முற்றிற்று.**

ஆக அத்தியாயம் ௧௬-க்குச் சுலோகம் - ௫௯௪.

ஸ்ரீகந்தகோபப்பிரியாத்மஜாயநம:

---

உ

ஸ்ரீ ஆநந்தாயநம:

## பதினேழாவது
## சிரத்தாத்திரய விபாகயோக அத்தியாயம்.

அவதாரிகை:—சாத்திரவிதிகளை யறிந்து விகிதமான கன்மங்களைச் சாத்விக சிரத்தையோடுஞ்செய்தால் மோட்சத்தை யடையலாமென்பது சரிதானென்றும், அந்தப்படிக்குச் சாத்திர விதிகளையறிந்து நடவாமல் தங்களுடைய பூர்வாசாரத்தையநுசரித்துச் சிரத்தையோடுங்கூடி யுபாசித்துவருவார்களேயாகில் அப்பேர்ப்பட்ட சிரத்தையானது எத்தன்மைய சிரத்தையைச் சேர்ந்ததென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்கிறதாக அருச்சுனனுடைய அபிப்பிராயப்பட்டதற்கு மோட்சத்தைக்கொடுக்கத்தக்கதான சாத்விக சிரத்தையையன்றியிற் பூர்வாசாரத்தை யநுசரித்துச் செய்யப்பட்ட சிரத்தையானது மூன்றுவிதமா யிருக்குமென்கிற விபரத்தைப் பகவானானவர் இந்த அத்தியாயத்திற் சொல்லத்தொடங்குகின்றார்.

சுவாமி! முந்தின அத்தியாயத்தின் முடிவிற் சாத்திரவிதிகளை யறிந்துகொள்ளாமலே அவரவருக்கு வேண்டியபடி செய்கிறவாளுக்கு ஞானம் வாரதென்றும், அதனாற் சாத்திரவிதிப்படி யவனவனுடைய

சுதன்மத்தை யனுட்டித்து மோட்சத்தை யடையவேண்டுமென்றும் அனுக்கிரகஞ்செய்தீர்கள் அது சரியே; அப்படிப்பட்ட சாத்திரவிதிகளை யறிந்துகொள்ளச் சிரமத்தினாலாவது ஆலசியாதிகளினாலாவது கூடாமலாராகிலுஞ் சிரத்தாவந்தாளாய்த் தங்களுடைய பூர்வாசாரத்தைக்கொண்டு தேவர்களைப் பூசித்துவருவார்களேயாகில் அவர்களுடைய சிரத்தையானது சாத்விகமோ; இராசதமோ, தாமதமோ அவன் விபரத்தை யனுக்ரகம்பண்ணவேண்டும். (௧)

அருச்சுனா! சாத்திரவிதிகளையறிந்து பரமேஸ்வரனையுபாசிப்பதெதுவோ அதுவே சாத்விக சிரத்தை அதுதான் மோட்சத்தைக் கொடுக்கும். இதை விட்டுவிட்டுத் தங்களுடைய பூர்வாசாரத்தைக் கொண்டாவது அல்லது லோகாசாரத்தை யனுசரித்தாவது உபாசிக்கப்படுவதுஞ் சாத்விகம் இராசதம் தாமதமென்று சிரத்தையானது மூன்றுவிதமாயிருக்கும். அவைகள் சீவனுக்குப் பூர்வவாசனையினாலே சுபாவிகமாயுண்டாயிருக்கும் அதன்விபரமுஞ் சொல்லுகிறேன்கேள்.

அருச்சுனா! பிராணிகளுக்குப் பூர்வஜென்ம சமஸ்காரத்துக் கனுகூலமாய்ச் சத்துவாதி குணானுசாரியாகச் சிரத்தையுண்டாயிருக்கும். அந்தப் புருஷனுக்குப் பூர்வஜென்மத்திலெந்தச்சிரத்தை யதிகமாயுண்டாயிருக்குமோ அந்தச் சிரத்தையே வர்த்தமானத்திலுஞ் சுபாவிகமாயுண்டாயிருக்கும். (௩)

அருச்சுனா! அதெப்படியெனில், சிரத்தையானது சத்துவகுணத்தினாலேயுண்டாயிருந்தாலும் இராசதந், தமசுமாகிய இந்தக் குணங்களுடனுங்கலந்திருக்கும். அதெப்படித் தெரியுமெனிற் பூசாபேதங்களினால் தெரியவேண்டும். அதையுஞ் சொல்லுகிறோம். பூர்வாசாரப்படிக்காவது லோகாசாரப்படிக்காவது பலனையிச்சித்து இந்திராதி தேவதைகளை யுபாசிக்கப்பட்ட சிரத்தையெதுவோ அதற்குச்சத்துவகுண சிரத்தையென்று சொல்லப்படும். பலன்களுண்டாகவேண்டுமென்று எட்சராட்சசகணங்களை யுபாசிக்கப்பட்ட சிரத்தையெதுவோ அதற்கு ரசோகுண சிரத்தையென்று சொல்லப்படும் துஷ்டகோரிக்கைகள் நிறைவேற வேண்டிப் பூதப் பிரேத பசாசுகளைப் பூசிக்கப்பட்ட சிரத்தையெதுவோ அதற்குத் தமோகுணசிரத்தையென்று சொல்லப்படும். இந்தத் திரிவிதமான சிரத்தைகளும் மோட்சத்தின் பொருட்டல்லவென்றுஞ் சாமானியமாயிருக்கப்பட்ட சிரத்தையென்றுஞ் சனனமரணத்தைக் கொடுக்கப்பட்டதென்றும் நிச்சயமாயறியவேண்டும். (௪)



சுவாமி! இப்படி மோட்சத்தின்பொருட்டல்லாத சிரத்தைகள் விருதாவாயேன்செய்யவேண்டும்? அருச்சுனா! இப்போது நாம் சொன்ன திரிவிதசிரத்தைக்கு மிகவுங் கனிஷ்டமாயிருக்கானின்ற சிரத்தையோடுங்கூடி நடக்கப்பட்ட சீவனுண்டென்கிற விபரத்தையுஞ் சொல்லுகிறேன்கேள். தன்னைப்பெரியவனென்றுசொல்லவேண்டுமென்கிற இடம்பத்தினாலேயுந் தான் பிடித்தகாரியம் விடமாட்டேனென்கிற அகங்காரத்தினாலேயும் மேன்மேலும் விஷயங்கள் வரவேண்டுமென்கிற காமத்தினாலேயு மிருக்கிற விஷயங்களில் மிகவு மாசக்தியாகிய இராகமும் பெலமுங்கூடின ஜனங்கள் சாத்திரத்திற்கு முழுவதும்விரோதமாயிருக்கானின்ற இம்சாகரமாகிய கோரதபசுகளை ஆசரிப்பார்கள். (௫)

அருச்சுனா! இன்னமும் விருதாவாகிய உபவாசங்களினாலே பஞ்சபூதமாகிய சரீரம் * கிரிசமடையும்படியாகவும் நம்முடைய அம்சமாகிய சீவனை வனைச் சோகத்தையடையும்படியாகவுஞ் செய்துகொண்டு சமஸ்த தேகங்களிடத்திலும் அந்தரியாமியாக இருக்கிற நம்மையறிந்து நம்மை யடைகிறதற்குச் சாதகமாய் நம்மாற்செய்யப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களாகிய நம்முடைய ஆக்கினைப்படி நடவாமற்போன ஆக்கினைபங்கமாகிற அபராதத்தினாலே மிகுந்த கிலேசங்களுடனே அசுர சம்பத்தை யடைந்துகொண்டிருப்பார்கள். (௬)

அருச்சுனா! சீவனுக்கு ஆகாரங்கள், எக்யங்கள், தபசுகள், தானங்கள் இவைகளெல்லா மொவ்வொன்று மூன்று விதங்களாயுமிருக்கும் இவைகளில் இராசத தாமதத்தை விட்டுச் சத்துவத்தை யவசியம் பிடிக்கவேண்டும். அவைகளின் பேதங்களையுஞ் சொல்லுகிறேன்கேள். (௭)

அருச்சுனா! சாத்விகனுடைய ஆகாரங்கள் ஆயிசும், உச்சாகமும், பெலமும், ஆரோக்கியமும், சுகமும், பிரியமுமாகிய இவைகளை விருத்திபண்ணத்தக்கதாயும் மதுரங்களோடுங் கூடினதாயும் மிருதுவாயும் ஸ்திரங்களாயும் கண்டமாத்திரத்திற் சந்தோஷத்தைக் கொடுக்கிறதாயுமிருக்கப்படாநின்ற சொதசித்த நிர்வாடசத்தோடுங்கூடிய க்ஷீராதி ஆகாரங்கள் சாத்விகனுக்குப் பிரியமாயிருக்கிறதுமல்லாமல் அவைகள் தனக்குக் கிடைத்தபோது பெரியவாள் முதலானவர்களுக்குஞ் சமர்ப்பித்துத் தனக்கு வேண்டுவதைப் புசிக்கும்போது பகவானுக் கற்பணமாக நினைத்துப் புசிப்பன். (௮)

* கிரிசம் = இளைப்பு

அருச்சுனா! இராசோகுணவந்தனுடைய ஆகாரங்களைக்கேள். அதிகமான கசப்பும், புளிப்புங், உப்புங், காரமும், உஷ்ணமுமாகிய இவைகளுடன் தாகத்தையுஞ் சோகத்தையுங் கொடுக்கும்படியான கடுகுமுதலாகிய குரூரமாயிருக்கப்பட்ட வஸ்துக்களில் மிகவு மிச்சையோடுங்கூடி நான் புசிக்கிறேனென்கிற கருத்துடனே புசிப்பன் அப்படிப் புசிக்கிறதிலுந் தாரதம்மியமின்றிச் சுகமாகவினைத்து உபரியாகப் புசித்துப் பின்பு ஏனடா நிரம்பவும் புசுத்துவிட்டோமென்கிற கிலேசத்தையடைந்து ரோகத்தினல் துக்கமேயடைவன். (௯)

அருச்சுனா! தமோகுணவந்தனுடைய ஆகாரங்களைக்கேள். அதிகமான தாகத்தையுஞ், சோகத்தையும், ரோகத்தையுந், துக்கத்தையுங் கொடுக்கப்பட்ட ரசங்களுடன் தூர்க்கந்தத் தோடுங் கூடினதாயிருக்கிறதும் கொந்துபோனதும் பழையதும், சேஷப்பட்டதுங், குளிர்ந்துபோனதும், எச்சிலும், உள்ளிகளும் இத்தியாதிகுணங்களுடன் கூடியதும் பரிசுத்தமில்லாதனவு மெவைவோ அவைகளே தாமதாளுக்குப் பிரியமும் புசிப்புமாயிருக்கும். (௧௦)

அருச்சுனா! சாத்விக எக்கியத்தைக்கேள். யாதொரு பலனுமிச்சியாமற் சாத்திரவிதியோடுங்கூட அவசியஞ்செய்யவேண்டு மென்கிற அபேட்சையுடன் செய்யப்பட்ட எக்யமெதுவோ அதுசாத்வீக எக்யமென்று சொல்லப்படும். (௧௧)

அருச்சுனா! இராசத எக்யத்தைக்கேள். பலன்கள் வேண்டுமென்கிற அபேட்சையோடுங்கூடிப் பிறர் தன்னைப் பெரியவனென்று சொல்லவேண்டு மென்பதாக ஆங்காரமுதலானவைகளோடுங்கூடி டம்பார்த்தமாயாதோ எக்யஞ்செய்யப்படுகிறதோ அது ராசத எக்யமென்று சொல்லப்படும். (௧௨)

அருச்சுனா! தாமத எக்யத்தைக்கேள். பிராமணபோஜனமும் மந்திரமும் தெட்சணைகளும் அவாள்பேரிற் சிரத்தையும் சாத்திரவிதிகளுமின்றி அகங்காரமுதலானவைகளோடுங்கூடிப் பண்ணப்பட்ட எக்யத்துக்குத் தாமத எக்யமென்று சொல்லப்படும். (௧௩)

அருச்சுனா! சரீரதபசைக்கேள் தேவதைகள் பிராமணன் பெரியவாள் பிரக்ஞாவந்தாள் யிவர்களுக்கெல்லாம் விதிப்பிரகாரம் வந்தனங்களுடன் ஆராதனை செய்யப்படுகிறதுங் குருசுசுருஷையுஞ் சுசித்துவமும் பிரமசரியவிரதமு மொருபிராணிக்குந் தன் தேகத்தின விம்சையுமின்றிச் சத்தியபாவத்துடனே நடப்பது சரீரதபசென்று சொல்லப்படும். (௧௪)



அருச்சுனா! வாக்கினுடைய தபசைக்கேள். ஒருவருக்குப் பயம் வாராததாயுங் கேட்கிறவர்களுக்குப் பிரியத்தையுஞ் சுகத்தையுங் கொடுக்கிறதாயுஞ் சத்தியமாயு மிருக்கப்படாநின்ற வாக்கியங்களெவையோ அவைகளை வசனிக்கிறதும் வேதாப்பியாசங்களும் மந்திரங்கள், செபங்கள் முதலாகிய இவைகளெல்லாம் வாக்கின் தபசென்று சொல்லப்படும். (௧௫)

அருச்சுனா! மனசின் தபசைக்கேள். மனசானது பிரசாதமாகிச் சதா சந்தோஷத்தை யடைந்திருக்கிறதுங் குரூரமின்றிச் சவுமியமாயிருப்பதும் மவுனமாகியகுருசொன்ன அர்த்தத்தைமனனஞ்செய்கிறதும் சித்தவிரோதமும் மனசுத்தியும் இவையெல்லா மனசினுடைய தபசென்று சொல்லப்படும். (௧௬)

அருச்சுனா! இப்பேர்ப்பட்ட திரிவித கரணங்களுடன் செய்யப்பட்ட தபசிலுங் குணபேதங்களில் மூன்றுவிதங்களாக இருக்கும் அஃதெப்படியெனில், மிகவுஞ் சுமைமுதலான சிரத்தையோடுங்கூட ஏகாக்கிரசித்தமா யாதொரு பலாபேட்சையுமின்றிச் செய்யப்பட்ட தபசெதுவோ அது சாத்வீகதபசென்று சொல்லப்படும். (௧௭)

அருச்சுனா! இராசத தபசைக்கேள். தன்னை நல்லவனென்று கொண்டாடவேண்டும், தன்னைக் கண்டவுடனே யெழுந்திருந்து நமஸ்காரம்பண்ணவேண்டும், தன்னைப் பிறர் பூசிக்கவேண்டும், பிறரிடத்திலிருக்கிற நல்ல பதார்த்தங்களைத் தானடையவேண்டுமென்றித்தியாதி குணங்களுடன் டம்பமாகப் பண்ணப்பட்ட தபசானது சலனமாயும் *அத்துருவமாயு மிருக்கும். (௧௮)

அருச்சுனா! தாமததபசைக்கேள். அவிவேகத்தினற் புத்தியீனனாய்த் துராக்கிரகத்தினல் தன்சரீரத்தைப் பிடிக்கும்படியாகவுஞ்செய்வித்துக்கொண்டுபிறர்க்கு வஞ்சகமும்உபத்திரவமுஞ் செய்கிறநிமித்தமாக விரதங்கள் ஓமங்கள் முதலானவைவையும் பண்ணப்பட்ட தபசு தாமத தபசென்று சொல்லப்படும். (௧௯)

அருச்சுனா! தானத்திற் சாத்விகதானத்தைக் கேள். புண்ணிய தேசங்களிற் புண்ணியகாலங்களிற் பிரதியுபகாரஞ் செய்யச் சக்தியில்லாமல் வறுமையுடன் கூடினவனாயிருக்கப்பட்ட சத்பாத்திரங்களிற் கொடுத்தோமென்கிற மமதையின்றிப் பலத்தையுமிச்சியாமற் சிரத்தையோடுங்கூடக் கொடுக்கப்பட்டதே விதியென்று நிச்சயித்துப் பண்ணப்பட்ட தானமெதுவோ அது சாத்வீகதானமென்று சொல்லப்படும்.

* அத்துருவம் = நிலையில்லாதது.

அருச்சுனா! இராசத தானத்தைக்கேள். பிரதியுபகாரார்த்தமாக வும் சுவர்க்காதிபலத்தையும் நாமுபகாரஞ்செய்தோமென்கிறதையும் அபேட்சித்து மனசானது கிலேசத்தையடைந்து எந்தத் தானம் பண்ணப்படுகிறதோ அதை யிராசததான மென்றுசொல்லப்படும். (௨௧)

அருச்சுனா! தாமததானத்தைக்கேள். அசுத்ததேசத்தில் அசுசியான காலங்களில் அபாத்திரத்தில் அசிரத்தையுடன் அவமான பூர்வமாகச்செய்ததானம் தாமததானமென்று சொல்லப்படும். (௨௨)

இப்பேர்ப்பட்ட இராசத தாமதத்துக்குப் பிராயசித்தமுண்டா இல்லையா? அருச்சுனா! நேர்ந்தபடி நடக்காமல் ஆகியிற்றானே ஓர் ஏற்பாடுண்டாயிருக்கிறது; அதையுஞ் சொல்லுகிறேன் கேள். ஓமென்றும் தத்துவென்றும் சத்தென்றும் பிரமஸ்வரூபத்துக்கு மூன்று நாமங்களுண்டு. இவைகள் பிராமணாளிடத்திலும் வேதங்களிடத்திலும் எக்யங்களிடத்திலும் விளங்கும்படி பிரமதேவரானவர் பூர்வத்திற் சிருஷ்டித்தார். அதனுடைய விபரங்களைத் தெரிந்த பிரமஞானத்தையுடைய ஜீவன் முத்தர்களும் மோட்ச விச்சையுண்டான முமூட்சுவானவர்களும் கிரகஸ்தாச் சிரமத்திலிருக்கப்பட்ட கிரகஸ்தாளும் அந்தப்படியே விபரமாய் நடப்பிவித்துக்கொண்டே வருகிறார்கள். (௨௩)

அருச்சுனா! அவைகளாவன, பிரமஞானத்தையுடைய ஜீவன்முத்தர்கள் வேதோத்தமான எக்யம், தானம் தபசு முதலான சத்கருமங்கள் அனுட்டிக்கும்போது ஓமென்கிற பிரணவமந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு சமஸ்தமும் பிரமஸ்வரூபமென்றும் சர்வகருமங்களுஞ் செய்துவருவார்கள். (௨௪)

அருச்சுனா! மோட்ச இச்சையுண்டான முமூட்சுவானவர்கள் தத்துவென்கிறபதத்தை யுச்சரித்துப் பலனையிச்சியாமல் எக்யம், தானம் தபசுகள் முதலானவைகளுஞ்செய்து அந்தப்பலமும் பிரமஸ்வரூபத்திற்கே யற்பணஞ்செய்துவருவார்கள். (௨௫)

அருச்சுனா! கிரகஸ்தாச்சிரமத்தி லிருக்கப்பட்ட புருஷாள் வேதோக்தமான விவாகாதிமுதலான சற்கருமங்களனுட்டிக்கிறபோது எந்தவஸ்து உண்டென்றும், எது நல்லதென்றுஞ் சொல்லப்படுமோ அதற்குச் சத் என்கிற அர்த்தஞ் சொல்லப்படுமானதால் அதை யுச்சரித்துக்கொண் டெல்லாச் செய்கைகளும் அந்தச் சத்தையினாலே நடக்கிறதென்றும் நிட்காமமாய் நடப்பித்துக்கொண்டுவருவார்கள். இதனால் லோகத்தார் நல்லகாரியஞ் செய்வித்தானென்றும் நல்ல கருமங்கள் பண்ணினானென்றுஞ் சொல்வார்கள். (௨௬)



அருச்சுனா! சத் என்கிற சத்தஞ் சிரேஷ்டமானதால் வேதத்திலதிகாரமுண்டானபேர்கள் செய்கிற எக்யம், தானம், தபசு, இவைகளிடத்திலுண்டான நிலைக்கிடையான சத்தென்பித்துக்கொள்ளும்படியாக இருப்பதனாலே நாமத்திரயத்துக்கு லட்சியமான பிரமஸ்வரூபத்தை யுத்தேசித்துச் செய்யப்படாநின்ற பூசையாதி கன்மங்கள் முழுவதுஞ் சத், சத்தம்உச்சாரணபூர்வமாகச் செய்யப்படுகிறபடியினாலே மோட்சத்துக்கே யேதுவாகும். (௨௭)

அருச்சுனா! இப்போது நாம்சொன்னவிபரத்தைய பக்திசிரத்தையோடே செய்யாமற் செய்யப்படாநின்ற ஓமமும் தானமும் தபசும் இன்னமும் எந்தக்கருமங்களுண்டோ அவ்வளவுஞ் சாத்திரங்களிற் சொல்லிருக்கிறபிரகாரமிருந்தாலும், பாரதா! அவைகள் அசத்தென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட அசத்கருமங்கள் இகலோகத்திலும் பரலோகத்திலும் உபகரியாது; இப்படிச் சொல்வானேனென்றால், யதார்த்தமா யிருக்காநின்ற ஸ்வரூபத்தை நினைந்துச் செய்யப்பட்டதனாலே சத் என்றும் அதின்றிச் செய்வதினாலே அசத்தென்றுஞ் சொல்லப்பட்டது. ஆகையால் அருச்சுனா! ராசததாமத சிரத்தையோடுங்கூடின கன்மங்களைச் சந்நியாசம்பண்ணி நாம் சொன்ன சாத்வீகசிரத்தையோடுங்கூடின கன்மங்களைச்செய்து அவைகளின்பலனையுந் தியாகஞ்செய்யப்பட்ட புருஷனுக்குத் தத்துவஞான முண்டாய் மோட்சமடைய யோக்கியமாகிறபடியினாலே நீயு மிந்தப்படி நடந்து மோட்சத்தை யடைவாயாக. (௨அ)

பதினேழாவது

சிரத்தாத்திரய விபாகயோக அத்தியாயம் முற்றிற்று.

ஆ. அத்தியாயம் ௧௭ - க்குச் சுலோகம் - ௬௨௩.

ஸ்ரீமதுராநாதாயநம:

---

உ

ஸ்ரீமஹேவாசாமகோசராயநம:

பதினெட்டாவது

# சஞ்சேப அத்தியாயம்.

அவதாரிகை :—மேற்சொல்லிய பதினேழத்தியாயங்களினது சாராம்சத்தையும், சகல வேதோபநிஷதார்த்தங்களையுந் தெரிவித்தற்காக இவ்வத்தியாயங்கூறுவான்றொடங்கிக் கீதா சாஸ்திரத்தையு முப

சம்மரித்தற் பொருட்டுச் சந்நியாசத் தியாகங்களினது விசேஷத்தை நன்றாயறியவேணுமென் றபேக்ஷித்த அருச்சுனனது வினாவை முன்னிட்டுக்கூறத்தொடங்குகின்றார்.

சுவாமி! வேதாந்தவாக்கியங்களிற் சொல்லப்பட்ட சந்நியாசத்தின் லட்சணமும் தியாகத்தின் லட்சணமும் யதார்த்தமா யிருக்கப்படாநின்ற தத்துவத்தை வெவ்வேறாக அடியேனுக்குவிளக்கமாக அநுக்ரகம் பண்ணவேண்டும். (க)

அருச்சுனா! நிஷேத காமிய கன்மங்களைச் செய்யாமல்விடுகிறதே சந்நியாசமென்றும், நித்திய நைமித்திய பிராயச்சித்தமாகிய சகல கன்மங்களையும் நாம்செய்கிறோமென்கிற அகங்காரமின்றிச்செய்வித்து யாதொரு பலனையுங் கோராமல் ஈசுவரார்ப்பணமாக விட்டுவிடுகிறதே தியாகமென்றுஞ் சொல்லப்படும் அப்படியே வித்வாம்சராகியமகான்களுஞ் சொல்வார்கள். (உ)

இதையே யுன்புத்திக்குத் திடமாகவேண்டி யின்னஞ் சொல்லுகிறேன்கேள். கபிலமதமாகிய சாங்கியமதத்தாரும், இன்னமு மதற்குச் சமானமாயிருக்கப்பட்ட மதஸ்தாளும் அவாளவாளுடைய மதங்களை யநுசரித்துக் கன்மங்கள் செய்வதனாலே சுவர்க்காதிபலன்களை யநுபவித்துத் திரும்பச்சனனமரணத்தை யுடைத்தான தோஷங்களைக் கொடுக்கிறதால் ஒருகன்மமுஞ் செய்யாமலே விட்டுவிடவேண்டுமென்றும், இன்னமும் சில மதஸ்தர்கள் எக்யம், தானம், தவமுதலானபுண்ணிய கன்மங்கள்செய்தாற் புண்ணியலோகங்களை யடையும்படியாயிருப்பதால் அவைகளை யொருபோதும் விடவேகூடாதென்றும் அவசியஞ்செய்தேதீரவேண்டுமென்றும்செய்துகொண்டுவருவார்கள்.

அருச்சுனா! தியாகமானது திரிவிதங்களா யிருக்கும். அவைகளுடைய விபரங்களை யறியாமல் வீணான வாதங்கள் செய்துகொண்டு அவரவர்களுக்குத் தோற்றினபிரகாரம் சொல்வார்கள். அந்த அர்த்தத்தில் நம்முடைய சித்தாந்தத்தைக்கேள். நான் யாதொரு கன்மங்களும் பண்ணவில்லையென்றும் அவைகளாலுண்டாகிய பலனும் நான் அடையப்பட்டவனல்லவென்றுஞ் சர்வேஸ்வரனாலேயே சமஸ்தமும் உண்டாயிருக்கிறதென்றும் அவராலேயே சமஸ்த கன்மங்களுஞ் செய்விக்கப்படுகிறதென்றும் வேதயுக்த கன்மங்களைச்செய்து பலத்தைத் தியாகஞ் செய்யப்படுகிறதே நமக்குச் சம்மதம். (ச)

அருச்சுனா! அதனு லென்னபிரயோசனமெனில், எச்யம் தானம் தபோரூபமாகிய வேதயுக்த கன்மங்களை யொருபோதும் செய்யாமல்



விடலாகாது. அப்படிப்பட்ட கன்மங்கள் பண்ணினமாத்திரத்தில் விவேகமா யிருக்கப்பட்டவர்களுக்குச் சித்தத்தைப் பரிசுத்தம்பண்ணிவைத்து அதனால் ஞானஞ் சித்தித்து மோட்சத்தை யடையும்படியாகச் செய்விக்கும். (ரு)

அருச்சுனா! வேதயுக்த கன்மங்களானது மோட்சங் கொடுப்பதாயிருப்பதனாலே அந்தக் கன்மங்களை நான் செய்கிறேனென்கிற கர்த்தத்துவத்தையும், அந்தக் கன்மங்களினாலே யுண்டாகப்பட்ட பலன்களையும்விட்டு அவசியஞ் செய்தேதீரவேண்டுமென்று செய்யப்பட்டதே உத்தமமாகிய நம்முடைய சித்தாந்தம். (சு)

அருச்சுனா! இவ்விதமாக அவாளவாளுடைய சாதிவர்ணாச்சிரம தன்மத்துக்குத்தகுந்த நித்திய நைமித்தியமாகிய கன்மங்களைப்பரித்தியாகம்பண்ணக்கூடாது. அப்படியிருக்க அவைகளை யஞ்ஞானத்தினாலே மோகத்தையடைந்து அப்படிப்பட்ட கன்மங்கள் பண்ணாமற் சுத்தமாய் விட்டுவிடுகிறதே தாமசதியாகமென்று சொல்லப்படும். (எ)

அருச்சுனா! எவனாகிலும் காயக்கிலேச பயத்தினாலே கன்மங்கள் செய்வது துக்ககரமென்று பண்ணாமல்விடுவானோ அவன் இராசதத்தியாகத்தை யடைந்தவனாகையாலே மோட்சமடையான். (அ)

அருச்சுனா! நித்ய நைமித்தியமாகிய கன்மங்கள் செய்யவேண்டுவது அவசியம் கர்த்தவ்வியமென்று திடபுத்தியுடனேபற்றுதலின்றிப் பலமும் அபேட்சியாமலெவன் செய்வானோ அப்படிப்பட்ட தியாகமானது சாத்வீக தியாகமென்று சொல்லப்படும். (கூ)

சுவாமி! இந்தச் சாத்வீக தியாகத்துடன் கூடியிருக்கிற புருஷனுடைய லட்சணங்களை யநுக்ரகம்பண்ணவேண்டும்? அருச்சுனா! சகல கருமங்களினுடைய பலத்தைவிட்ட அந்தப் பலத் தியாகியானவன் சத்துவகுணத்தோடுக்கூடின செய்கைகளை செய்யப்பட்டவனும், திடமான புத்தியுண்டானவனும், சகல சமுசயங்களையுங் கடந்தவனும் குளிர்காலத்திற் பிராதஸ்நானமுதலாகிய கன்மங்கள் செய்வதிற் கிலேசமென்று நினைத்து அவைகளைத் துவேஷிக்காமலும் கோடைகாலத்தில் மத்தியானஸ்நான முதலாகிய கன்மங்கள்செய்வதிற் சுககரமாகநினைத்து அவைகளிடத்திற் சந்தோஷிக்காமலும் சமமாயிருப்பன். (க0)

சுவாமி! கன்மங்கள்செய்து பலன்களைவிட்டுவிடுகிறதைப் பார்க்க விஷயங்களிற் பிரவிர்த்தியின்றி யிருந்துகொண்டு கன்மங்கள்செய்

யாமலே யிருந்துவிட்டால் ஞானமெளிதாகச் சித்திக்கலாமென் றெனக்குத் தோற்றுகிறது. பாரதா! தேகாபிமானத்துடன் கூடியிருப்பவன் கன்மங்களைச் செய்யாமலிருப்பானேயாகில் முதலாவது சித்தசுத்தியே யாகமாட்டாது. சித்தசுத்தி யெதுவரையு மாகவில்லையோ அதுவரையும் ஞானமுண்டாகவேமாட்டாது. ஞானம் வராதவரையு மவனுக்கு மோட்சஞ் சித்திக்கவேமாட்டாது. ஆகையால் கன்மங்கள்செய்து பலத்தியாகஞ்செய்பவனையே தியாகியென்று சொல்லப்படும் (கக)

சுவாமிகள் அனுக்ரகப்படியே கன்மங்கள்செய்து பலத்தியாகஞ்செய்தால் அவனுக்குப் பலனென்ன? அருச்சுனா! தமோகுணமாகிய நிஷேதகன்மங்களை யாசரித்தால் நரகமும், சத்துவகுணமாகிய வேதங்களிற் சொல்லப்பட்ட யக்யமுதலான காமியகன்மங்கள்செய்தாற் சுவர்க்கமும், இரசோகுணமாகிய மிசிரகன்மங்களைச் செய்தால் மனிதலோகத்தையுமடைந்து ஜனனமரணமாகிய சம்சாரசமுத்திரத்திலிருந்துங் கரையேறவேமாட்டார்கள். நாம் சொன்ன பிரகாரம் நித்தியநைமித்திய பிராயச்சித்தமான புண்ணியகருமங்கள் விதிப்படி செய்து அதன்பலன்களைத் தியாகஞ் செய்யப்பட்டவன் இந்தமூன்று லோகமும் அடையாமலே சித்தசுத்திவந்து அந்தச் சித்தசுத்தித்துவாரா எளிதாக ஞானஞ்சித்தித்து மோட்சத்துக் கதிகாரியாய்க் கிருதார்த்தனுவன். (கஉ)

சுவாமி! கன்மம்பண்ணினும் பலனெப்படி வாராமற்போம்? அருச்சுனா! கன்மங்களில் ஆசக்தியைவிட்டுச் செய்கிறபடியினலே பலன்கள்வர வேதுவில்லை. ஆசக்தியில்லாமற்போனது யாதுகாரணம்? கன்மங்களெல்லாஞ்செய்கிறதுநீயல்லாததே யதற்கேதுவென்றறி. அறிவதெப்படியெனில், ஐந்துவிதகாரணத்தினலே சகல கன்மங்களும் செய்யப்படுகிறதென்றும் ஆத்மா அசங்கரென்றும் அதனுல் அவரொரு கன்மமும் பண்ணுகிறவரல்லவென்றுஞ் சாங்கிய சாத்திரங்களிற் சொல்லியிருக்கிறதை விபரமாகச் செ[illegible]கிறேன்கேள். (கங)

அருச்சுனா! தேகம்-க, அகங்காரம்-உ, இந்திரியங்கள் பத்தும்-ங, பஞ்சப்பிராணன் ஐந்தும்-ச, அதிட்டானதேவதைகள்-ரு, ஆகிய இவ்வைந்துமே சகல கன்மங்களும் பண்ணுகிறதென்றறியவேண்டும்.(கச)

அருச்சுனா! எந்தப்புருஷனுடைய சரீரம் வாக்கு மனதினலேயாரம்பிக்கப்படாநின்ற தர்மாதருமமாகிய சகல கருமங்களுக்கும் இந்தஐந்துங் காரணமாயிருந்து, பண்ணுகிறதென்றும்ஆத்மஅசாங்கரென்றும் அவரொருகன்மமும் பண்ணுகிறவரல்லவென்றும் நிச்சயமா யறியவேண்டும். (கரு)



அருச்சுனா! சகல கன்மங்களும் இந்த ஐந்தும் பண்ணுகிறதென்றறிந்துகொள்ளாமல் நிருபாதிகரான ஆத்மாவே கர்த்தாவாயிருந்து பண்ணுகிறதாக எவன் சொல்லுகிருனே அவன் சாத்திரங்களையுங் குருவாக்கியங்களையும் நன்ருயறிந்தவனேயல்ல அசமஸ்காரமான துஷ்டப் புத்தியுடைத்தானவனுயுந் துர்க்கருமங்கள்செய்ய நன்ருயறிந்தவனென்றும் அஞ்ஞானியென்றுஞ் சொல்லவேண்டும். - (கசு)

அருச்சுனா! ஆனல் நல்லபுத்தியுடையவனுரெனில்? தேகாபிமானம்விட்டு இந்தக்கருமங்களை நான் பண்ணுகிறேனென்கிற அபிமானமும் அகங்காரமும் பற்றுதலுமின்றி அவன் சுதன்மத்தினலேலோகங்களிலுள்ள சீவாளையெல்லாஞ் சம்மாரஞ்செய்தாலும் அவனொருகன்மமுஞ் செய்தவனேயல்ல, அதனுல் அவனுக்கு யாதொருபாபமும்பழியும் ஒட்டமாட்டாது. (கஎ)

சுவாமி! அகங்காரமும் பற்றுதலுமின்றிச் சுதன்மத்தினுல் எத்தனைபேர்களைச் சம்மாரஞ்செய்தாலும் அவனைமட்டும் எதனுற் பாவமொட்டாது? அருச்சுனா! சகல கன்மங்களுந் திரிவிதமாகிய திரிபுடியில் அடங்கியிருக்கையாலும் ஆத்மாவானவர் திரிபுடிக்கும் அதீதராயும் ஒன்றேடும் பற்றுதல் அடையாமலும் இருப்பதால் நாம்சொன்னபடி யொருபோதும் பாபத்தையடையவேமாட்டான். ஆனுல் பிரபஞ்சமுதலாகிய சமஸ்த கன்மங்களுந் திரிபுடிக்குளெவ்விதமாய் அடங்கியிருக்கிறதெனில் சமஸ்தகன்மங்கள் பிரவிர்த்திக்கிறதற்குங் காரணமாயிருக்காநின்ற அறிவென்றும் அறிந்ததென்றும்அறிபொருளென்றும் மூன்றுவிதமாயிருக்கும்; இவையேகர்த்தாவென்றுங் காரணங்களென்றும் கன்மமென்றுங் கன்மசங்கிரகம் மூன்றுவிதமாயிருக்கும். (கஅ)

அருச்சுனா! இந்தத் திரிபுடியின் சம்பந்தமாயிருக்கப்பட்ட ஞானம், கன்மம், கர்த்தா, இந்த மூன்றுங் குணபேதங்களினுல் ஒவ்வொன்று மூன்றுவிதங்களாயிருக்கும். அவைகளின் விபரங்கள் முழுதும் சாங்கியசாஸ்திரங்களில்யதார்த்தமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது அவைகளை நாமுஞ்சொல்லுகிறேங்கேள். (ககூ)

அருச்சுனா! பின்னபின்னமாயிருக்கிற தாபர சங்கமாத்மகமான சகல பூதங்களிடத்திலும் பூரணமாயும் அவ்யயமாயும் ஏகரூபமாயுமிருக்கப்பட்ட பரமான்மாவே யிருக்கிறதென்று எந்தஞானத்தினலே பார்க்கப்படுமோ அந்த ஞானத்துக்குச் சாத்வீகஞானமென்று சொல்லப்படும். (உ0)

அருச்சுனா! இராசதஞானத்தைக்கேள். சகலபூதங்களிடத்திலேயும் ஏகமாயிருக்கப்பட்ட பரமான்மாவையறியாமற் பெரியவாளிடத்திலும் ஏகதேசமான தலங்களிடத்திலும் தனித்தனியே பார்க்கப்படுகிற ஞானமெதுவோ அந்த ஞானத்துக்கு ராசதஞானமென்று சொல்லப்படும். (உக)

அருச்சுனா! தாமதஞானத்தைக்கேள். சபஸ்தத்திலும் ஆன்மா இல்லையென்னப்பட்ட அஞ்ஞானத்தையடைந்தவனுகி யொரு தேசத்தில் ஒரு தானத்தில் ஒரு பிரதிமையில் மாத்திரமுண்டென்று மிகவுந் துச்சமாய்ப் பார்க்கப்பட்ட ஞானமெதுவோ அதைத் தாமதஞானமென்று சொல்லப்படும். (உஉ)

அருச்சுனா! சாத்விக கன்மத்தைக்கேள். அவசியம் பண்ணவேண்டுமென்றும் பற்றுதலும் ராகத்துவேஷமின்றிப் பலத்தையும் இச்சியாமல் அவாளவாளுடைய சுதன்மங்களுக்குத்தகுந்த கன்மங்களைப்பண்ணப்படுகிறதோ அது சாத்வீககன்மமென்றுசொல்லப்படு.

அருச்சுனா! இராசதகன்மத்தைக்கேள். பலனைக்கோரிக் கன்மங்கள் செய்யவேண்டுமென்றும் அகங்காரத்தோடுங் கூடியிருக்கிறபுருஷனாலே வெகு பிரயாசையோடும் யதொருகன்மம் பண்ணப்படுகிறதோ அது ராசத கன்மமென்று சொல்லப்படும். (உ௩)

அருச்சுனா! தாமதகன்மத்தைக்கேள். தான்செய்யப்பட்ட கன்மங்களினால் வரப்பட்ட பலத்தி லிச்சையும் திரவியச் செலவிலே லோபமும் பிறரை யிம்சைபுந் துவேஷமுஞ் செய்வித்தான் தனக்குச் சரியான பேர் ஒருவருமில்லையென்று அகங்காரத்தோடும் மோகத்தினாலே யாதொரு கன்மம் பண்ணப்படுகிறதோ அது தாமத கன்மமென்று சொல்லப்படும். (உ௪)

அருச்சுனா! கன்மங்கள் பண்ணுகிற கர்த்தாவிற் சத்துவகுணகர்த்தாவைக்கேள். இந்த கருமங்கள் நான்செய்கிறேனென்கிற கர்த்தத்துவமும் பற்றுதலுமின்றிச் சேர்வையில்லாதவனாய்த் தைரியமும் உச்சாகமுமுடையவனாய்த் தொடங்கின காரியமுடிந்தாலும் முடியாவிட்டாலும் அவைகளாற் சந்தோஷமுஞ் சலிப்புமில்லாமல் கன்மங்கள் பண்ணப்படுகிறவன் நிர்விகாரனாகிய சாத்வீககர்த்தாவென்று சொல்லப்படும். (உ௫)

அருச்சுனா! இராசதகர்த்தாவைக்கேள். புத்திரதாராதிகளிடத்தில் மமதையும் கன்மபலத்திலிச்சையும் லோபகுணமும் பிறர்க்கு இம்சையும் பிறர்திரவியங்களி லிட்சையுமுடையவனும் அசுசியாயும்



சைபாக்யங்களிடத்திற் சந்தோஷமும் சலிப்புமேனகூடக் கன்மங்கள் பண்ணுகிறவன் இராசத கர்த்தாவென்று சொல்லப்படும். (உ௬)

அருச்சுனா! தாமதகர்த்தாவைக்கேள். சபலசித்தத்தோடுங்கூடிச் சாவதானமில்லாதவனாகவும் விவேகமில்லாதவனாகவும் ஆரிடத்திலும் வணக்கமில்லாதவனாகவும் வஞ்சகம்பண்ணுகிறவனாகவும் பிறரை அவமானம் பண்ணுகிறவனாகவும் எந்தக் காரியங்களிலுஞ் சோம்பலாயிருக்கிறவனாகவும் ஒருநாளிற்செய்யப்பட்ட காரியத்தை ஒருமாதம்வரையுமாயினும் முடியாமற்செய்துகொண் டிருக்கிறவனுமாயிருப்பவன் தாமத கர்த்தாவென்று சொல்லப்படும். (உஅ)

தனஞ்சயா சாத்வீகாதி குணங்களினால் மூன்றுவிதமாய் வேறுபட்ட புத்திபேதங்களை விபரமாகச்சொல்லுகிறேன்கேள். (உகூ)

அருச்சுனா! சாத்வீகபுத்தியைக்கேள். தன்மத்திலேயே பிரவிர்த்தியும் அதன்மத்தில் நிவிர்த்தியும் இந்தக்காரியம் அவசியம் பண்ணவேண்டியதென்றும் இந்தக்காரியம் பண்ணவேகூடாதென்றும் இது சுபத்தைச் சேர்ந்ததென்றும் இது அசுபத்தைச்சேர்ந்ததென்றும் இதனாலின்னதுபிரயோசன மென்றும் இதனால் யாதொருபிரயோசனமு மில்லையென்றும் இன்னது பந்தமென்றும் இன்னது மோட்சமென்றும் யாதொரு புத்தியினாலே நன்றாகவிசாரித்து நிச்சயிக்கப்படுகிறதோ அது சாத்விகபுத்தியென்று சொல்லப்படும். (௩0)

அருச்சுனா! இராசதபுத்தியைக்கேள். இது தன்மமென்றும் இது அதன்மமென்றும் இந்தக்காரியம் நல்லதென்றும் இந்தக்காரியம் நல்லதல்லவென்றும் இதுசெய்யலாமென்றும் இது செய்யக்கூடாதென்றும் இன்னமுஞ் சமஸ்த விஷயங்களையும் அஞ்ஞானத்தினாலேமூடப்பட்டு நன்றாக விபரப்படுத்தி யறியாமல் நிச்சயித்திருக்கப்பட்ட புத்தியெதுவோ அது ராசதபுத்தியென்று சொல்லப்படும். (௩க)

அருச்சுனா! தாமதபுத்தியைக்கேள். அஞ்ஞானத்தினாலேமோகத்தையடைந்து அதர்மத்தைத் தருமமாகவும் தருமத்தை யதர்மமாகவும் நல்லதைப் பொல்லாததாகவும் பொல்லாததை நல்லதாகவும் இன்னமுஞ் சகலவிஷயங்களையும் விபரீதமாக நிச்சயிக்கப்பட்ட புத்தியெதுவோ அது தாமதபுத்தியென்று சொல்லப்படும். (௩உ)

அருச்சுனா! தைரியம் மூன்றுவிதத்தில் சாத்விகதைரியத்தைக் கேள். விஷயங்களைச் செயித்திருக்கப்பட்ட யோகத்தினாலே மனசு, பிராணன், இந்திரியங்கள் முதலானவைகளையும் எந்தத் தைரியத்தினாலே நிரோதிக்கப்படுமோ அந்தத் தைரியம் சாத்விகதைரியமென்று சொல்லப்படும். (௩௩)

அருச்சுனா! இராசத தைரியத்தைக்கேள். தன்மார்த்த காமங்களினாலுண்டாகிய பலன்களை யடையவேண்டுமென் றிச்சையுடையவனாகி அதற்குத்தகுந்த பிரயத்தினங்களும் பிரசங்கங்களும் பண்ணப்படுகிற தைரியமெதுவோ அது ராசததைரியமென்று சொல்லப்படும்.

அருச்சுனா! தாமத தைரியத்தைக்கேள். நித்திரை, பயம், சோகம், துக்கம், இவைகளைக் கொடுக்கிற விஷயத்திலும் மதம் முதலானவைகளோடுங்கூடித் துஷ்டகிருத்தியங்களைத் துர்ப்புத்தியோடுஞ் செய்யப்படுகிற தைரியமெதுவோ அது தாமததைரியமென்றுசொல்லப்படும்.

அருச்சுனா! சுகமானது மூன்றுவிதமாயிருக்கும்; அதையும்விபரமாகச் சொல்லுகிறேன்கேள். எவன் மிகுந்த அப்பியாசத்தினாலே பிரம சுகத்திலேயே ரமித்துக்கொண்டிருக்கிறானோ அவனுக்குத் துக்கமானது நாசமடைந்து சதாசுகத்தையே யடைந்து கொண்டிருப்பன். (௩௬)

அருச்சுனா! எந்தச் சுகமானது துவக்கும்போது லேசாயும் அனேக பிரயாசைகளோடுங்கூடி விஷத்தைப்போலத் துக்கமாய்த் தோற்றி முடிவாகிய பரிணாமகாலத்தில் அமிர்தமயமாயுஞ் சுகமாயுந் தோற்றுமோ ஆத்மஞானப் பிரசாத மென்னப்படா நின்ற நிர்மலமான புத்தியினாலே யெந்தச் சுகமான துண்டாகுமோ அந்தச் சுகத்துக்குச் சாத்விகசுகமென்று சொல்லப்படும். (௩௭)

அருச்சுனா! எந்தச் சுகமானது ஆரம்பகாலத்தில் விஷயங்களும் இந்திரியங்களுஞ் சையோகமாகும்போது அமிர்தத்தைப்போலிருந்து பரிணாமகாலத்தில் விஷம்போ லிருக்குமோ அந்தச் சுகம் ராசதசுகமென்று சொல்லப்படும். (௩௮)

அருச்சுனா! அஞ்ஞானத்தினாலே நித்திரை, ஆலசியாதி பிரமாதங்களினாலே துவக்கிறபோதும், முடிகிறபோதும் மோகத்தினாலுண்டாகப்பட்ட சுகமெதுவோ அது தாமதசுகமென்று சொல்லப்படும். ()

அருச்சுனா! மாயாசம்பவமான இந்தச் சத்துவாதி குணத்திரயங்களினாலே உண்டாகப்பட்ட இவைகளைக் கடக்கப்பட்ட பேர்கள் சுவர்க்கலோகத்தி லிருக்கப்பட்ட தேவர்களிலுமில்லை. (௪௦)

சுவாமி! எல்லாருந் திரிகுணங்களுக் குட்பட்டவர்களா யிருந்தால் ஜீவாளுக்கு மோட்சம் எப்படியுண்டாகும்? அருச்சுனா! பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திராகிய நான்குவருணத்தாருக்குஞ் சம்பவமாகிய சத்துவாதி குணங்களுக்கு அனுசாரியாகக் கன்மங்கள் விதிக்கப்பட்டிருக்கிறது; அவைகளை விபரமாகத் தெரிந்துகொண்டு பூர்வ



ஜென்ம வாசனைகளினாலே பிரகிருதத்தி லுண்டாயிருக்கிற அவரவர்களுடைய சாதி வர்ணாச்சிரமத்துக்குத் தகுந்த சுபாவமாகிய கன்மங்களினாலே பகவானைப் பூசித்தால் அவருடைய அனுக்கிரகத்தாற் சித்த சுத்திவந்து அந்தச்சித்த சுத்தித்துவாரா ஞானம்வந்து மோட்சத்தை யடைவார்கள். (௪௧)

சுவாமி! இந்த நான்குவர்ணங்களுக்கு ந் சுபாவமாயிருக்கப்பட்ட கன்மங்களின் விபரங்களை யனுக்கிரகம்பண்ணவேண்டும்? அருச்சுனா! மனோநிக்ரகம் இந்திரியங்கள் நிக்ரகம் தபசு பாகிய ஆந்தரஞ் சுசித்துவம் சாந்தி ருஜுபாவம் சாத்திரசன்யஞானம் அனுபவஞானம் பரலோக முண்டென்பதிற் சத்தியபுத்தி இந்த ஒன்பது குணங்களும் பிராமணனுக்கு சுபாவமா யிருக்கப்பட்ட கன்மங்கள். (௪௨)

அருச்சுனா! பராக்கிரமத்தோடுங்கூடிய சௌரியம் கீர்த்தியாகிய தேஜசு தானம் தைரியம் எந்தக் காரியங்களிலுஞ் சத்தியமாயும் நியமமாயும் நடப்பிவைக்கிறது யுத்தத்திற் பின்வாங்காமலிருக்கிறது சத்ருவை ரட்சிக்கிறதும் துஷ்டரைச் சிட்சிக்கிற விஷயத்தில் ஈஸ்வரனைப் போல் ஆக்கினை செய்யப்படுகிறது இவைகள் க்ஷத்திரியனுக்குச் சுபாவகன்மம். (௪௩)

அருச்சுனா உழவு, கோக்களை ரட்சிக்கிறதும், வியாபாரமுதலானவைகளும் வைசியனுக்குச் சுபாவகன்மம். இந்த மூன்றுவருணத்தாருக்கும் ஊழியமுதலியவை செய்வதே சூத்திரற்குச்சுபவாகன்மம். இப்படிப்பட்ட கருமங்களை நிட்காமமாகச் செய்துவருவதனாலே சித்தசுத்தித்துவாரா ஞானமுண்டாய் மோட்சமடைவார்களே தவிரத் திரும்பச் சனனத்துக்கு வரமாட்டார்கள். (௪௪)

அருச்சுனா! தங்கள் தங்கள் சுதன்மத்தினாலேயே சகலரும் எவ்விதமுங் கிருதார்த்தராவார்களே தவிர ஒருபோதும் துர்க்கதிப் போகவே மாட்டார்கள். எதனாலெனில், தங்கள் தங்கள் தருமம் நடப்பிவைக்கும்போது என்னை நினைத்தும்; என்னிடத்தி லொருமைப்பட்டுக் கொண்டும் சத்தியமாயும் பிரியமாயும் நடந்துவரப்பட்ட ஏதுக்களால் என்னையே ஆராதனை செய்யப்படுகிறபடியால் அவர்கள் தப்பாமற் கிருதார்த்தராவார்கள். அதிலே நீ சுமுசயப்படாமல் உன் சுதன்மமாகிய யுத்தத்தை நிட்காமமாகச் செய்தால் நீயுங்கிருதார்த்தனேயாவாய். (௪௫)

மோட்ச இச்சையுண்டானவன் எப்படிப்பட்ட சுவாமியை யுத்தேசித்துத் தன்னுடைய சுதன்மஞ் செய்யவேண்டுமோ அதையுங்கேள். எந்தச் சுவாமியாலே சகல பூதங்களுமுண்டாகித் திதியடைந்து லயமா

கிறதோ எந்த மகாபுருஷன் சகல லோகங்களிலும் வியாபிக்கப்பட்டு ஏகஸ்வரூபமா யிருக்கிறாரோ எல்லாலோகங்களும் ஆரிடத்திலிருக்கிறதோ அப்படிப்பட்ட பரமேஸ்வரனை யுத்தேசித்து அவனவனுடைய சுதன்மத்தினாலே ஆராதிக்கவேண்டும்; அப்படி யாராதிக்கப்பட்டவன் எவனோ அவன் தவறாமல் ஞானத்துவாரா மோட்சமேயடைவன்.

சுவாமி! கன்மங்கள் செய்கிறபட்சத்தில் அவனவன் கன்மங்களிலுஞ் சிரேஷ்டகன்மஞ்செய்தால் மோட்சம் அடையானோ? அருச்சுனா! பிராமணகன்மஞ் சிரேஷ்டமென்று இதராள் செய்யலாகாது. அவனவன் சுதன்மமெதுவோ அதையே செய்யவேண்டும். விசேட தன்மத்தைச் செய்வதைவிட ஈனத்தோடு கூடினதானாலும் அவனவன் வருணாநுகுணங்களுக்குத் தகுந்த சுதன்மங்களை யனுட்டிக்கிறவனே சிரேஷ்டனவன் அவனை ஒருபோதும் பாபமடையாது. (௪௭)

அருச்சுனா! தன்னுடைய சாதிவர்ணத்துக்குச் சகசமாயிருக்கப்பட்ட கன்மங்களில் தோஷமுண்டாயிருந்தபோதிலும் அதை விடவே கூடாது; விட்டாற் புகையினால் அக்கினி மறைபட்டாப் போலப் பிறருடைய கன்மங்களிலேயுந் தோஷங்களுண்டாயிருக்கும்: அதனால் அகந்தை மமதையுடனே கூடிக்கொண்டு காமியமாகக் கன்மங்களைச் செய்து அதனாற் சமஸ்த தோஷங்களுக்குஞ் சமஸ்த பாபங்களுக்கும் ஏதுவாகிச் சனன மரணத்தை யடைவதைப் பார்க்க. (௪௮)

அருச்சுனா! புத்திரமித்திர களத்திராதிக ளிடத்தில் ஆசக்தியில்லாதவனாயும் இந்திரியங்களையும் மனதையுஞ் செயித்துச் சகல இச்சைகளையும் விட்டவனாயிருந்துகொண்டு விகற்பமின்றி யிருக்கப்பட்ட புத்தியோடுங்கூடி வர்ணாச்சிரமத்துக்குத் தகுந்த கன்மங்களானவை ஈனமாயிருந்தபோதிலும் நிட்காமனாக அவைகளை மாத்திரம் விடாமற் செய்து வருவானாகில் அதனாற் சித்தசுத்தித்துவாரா சிரேஷ்டமான ஞானநிட்டையாகிய பிரமஸ்வரூபத்தையே யடைவன். (௪௯)

சுவாமி! அவனவனுடைய சுதன்மமானது ஈனத்தோடுங்கூடினதாயிருக்கும்போது அதைச்செய்தால் எவ்விதமாகப் பிரமஸ்வரூபத்தை யடைவார்கள்? அருச்சுனா! அந்தச் சுதன்மங்களை விதிபூர்வமாகச்செய்துவந்ததனாலே அந்தக்கரண சுத்தியான யோகி யெவ்விதமாய் ஞானநிட்டையாகிய பிரமஸ்வரூபத்தை யடைவானோ அந்த விபரத்தைச் சங்க்ஷேபமாகச் சொல்லுகிறேன்கேள். (௫௦)



அருச்சுனா! சத்துவகுணப் பிரதானத்தோடுங் கூடினவனாகி நிட்காம கன்மங்களினாலே சுத்தமான புத்தியோடுந் தைரியத்தினாலே மனதை நிக்கிரகஞ்செய்தவனாய்ச் சத்தாதி விஷயங்களைப் பரிகரித்து ராகத்துவேஷங்களை விட்டவனானாலேயே யடைவன். (௫௧)

ஏகாந்தத்தலத்தி லிருந்துகொண்டு ஆகாரத்தை மட்டாக்கிப் பண்ணி மனம் வாக்குக் காயம் மூன்றையுஞ் செயித்தவனாயும் வைராக்யத்தோடுங்கூட எப்போது பிரமத்தியான பரனாய். (௫௨)

அகங்காரம், கெருவம், திரவியபரிக்கிரகம், காமம், குரோதம், மோகம், இவைகளைவிட்டு யானெனதென்பதும் விட்டுச்சாந்தனாயிருக்கிற யோகி பிரமஸ்வரூபத்தை யடைகிறதற்குச்சமர்த்தனாவான். (௫௩)

அருச்சுனா! இப்படி யான்மசொரூப நிட்டையையடைந்த யோகியினுடைய லட்சணம் எதுவெனில் போனபதார்த்தங்களைக் குறித்து எவ்வளவுஞ் சோகப்படான். வந்தபதார்த்தங்களைக் குறித்தும் மகிழான். வாராத பதார்த்தங்களைக் குறித்து இச்சியான் அகந்தை மமதை சுத்தமாய் விட்டிருப்பன். சர்வபூதங்களிடத்திலுஞ் சமமாய்ப் பார்க்கப்படாநின்ற சிரேஷ்டமாகிய நம்முடைய பத்தியையடைவன். (௫௪)

அருச்சுனா! அந்தப் பத்தியினாலே நம்மை யிப்பேர்ப்பட்ட ஸ்வரூபத்தை யுடைத்தானவனென்றும், இப்பேர்ப்பட்ட ஸ்வரூபமே சச்சிதானந்த ஸ்வரூபமென்றும் யதார்த்தமாக நம்மை யறிந்த ஞானத்தினாற் பின்பு நம்மையே யடைவன். (௫௫)

சுவாமி! தேவரீரை யிவ்விதமா யறியவும் அடையவும் லெகுவில் முடிகிறதாகத்தோற்றவில்லையே? அருச்சுனா! எல்லாவற்றிற்கும் நாமே சிரேஷ்டமென்றும், நம்மையே யர்ச்சிக்கத் தகுந்தவனென்றுந் திடமாயறிந்து நம்மையே உத்தேசித்து நித்தியமுஞ் சகல கன்மங்களும் பண்ணிக்கொண்டு வருவார்களேயானால் நம்முடைய அனுக்கிரகத்தினாலே சித்த சுத்தித்துவாரா ஞானஞ்சித்தித்து அவ்யயமாயுஞ் சாஸ்வதமாயு மிருக்கிற மோட்சமே யடைவார்கள். (௫௬)

அருச்சுனா! ஆகையால் நீயும் சர்வகன்மங்களும் மனசார நமக்கர்ப்பணஞ் செய்வித்தும் நானே பரமபுருஷார்த்தமென்றும் நிச்சயித்தவனாகி நம்முடைய தியானரூபமான பத்தியோகத்தை யாசரித்து சர்வகாலமும் நம்மிடத்திற் சித்தத்தை யுடைத்தானவனாக்கடவாய். (௫௭)

அருச்சுனா! இவ்விதமாக மனதை நிறுத்தினையேயானால் நம்முடைய அனுக்கிரகத்தினாலே அனந்த துக்கங்களுக் கேதுவாயுங் கடக்கிறதற்குத் * துஸ்தரமாயு மிருக்கப்பட்ட சம்சாரசமுத்திரத்தைத்

* துஸ்தரம் — தாண்டக்கூடாதது.

தாண்டுவாய். இப்படி நடவாமலும் இது செய்யலாம் இது செய்யக் கூடாதென்கிற விபரம் நமக்குத் தெரியாதோவென்கிற அகங்காரத்தினாலே நம்முடைய வார்த்தையில் விசுவசியாமலும் போவாயே யாகில் புருஷார்த்தத்தினின்றும் நாசத்தையே யடைவாய். (௫௮)

அருச்சுனா! நீ அகங்காரத்தினாலே யுத்தஞ் செய்யமாட்டேனென்கிறதாக ஒருவேளை நினைப்பாயேயாகில் அந்த நினைப்பு விருதாவாய் முடியும். எதனாலெனில் க்ஷத்திரிய தருமமான ரஜோகுணரூபமாய்ப் பரிணமித்த பிரகிருதியானது பலாத்காரமாக உன்னையினாலே யுத்தஞ் செய்யும்படியாகச் செய்விக்கப்போகிறது. அதனால் யுத்தம் பண்ணமாட்டேனென்கிற உத்தியோகம் ஒருபோதும் நிறைவேறமாட்டாது.

அருச்சுனா! இன்னமும், க்ஷத்திரியதருமத்தினால் உண்டாயிருக்கிற சௌரியாதி கன்மங்களினாலே பலமாகக் கட்டுப்பட்டுக்கொண்டிருக்கப்பட்ட நீ யுக்தமாய்ச் செய்யவேண்டிய கன்மங்களை அஞ்ஞானத்தினாற் செய்யாதேபோனாலும் பரதந்திரனாக அடைந்தவனாகித் தப்பாமல் யுத்தஞ்செய்யப்போகிறாய்; அது நாளைக்கு நன்றாகத் தெரியும்.

அருச்சுனா! பகவானாகிய நாம் எல்லாருடைய இருதயத்திலு மிருந்துகொண்டு சரீரத்திலே யந்திரமானதேறிக்கூடி யிருக்கிற சீவர்களெல்லாரையும் நம்முடைய மாயையினாலே அந்தந்த கன்மங்களைச் செய்யும்படியாக ஏவப்பண்ணுகிறோமென்று நிச்சயமாயறிந்து ஈசுவரத்தை பஜித்தவனாகி இந்த விவரமானது பிரகிருதி விசித்திரமென்றெண்ணி யுனக்குச் சுபாவமாயிருக்கப்பட்ட யுத்தத்தைப்பண்ணென்று சொல்ல, அருச்சுனனானவன் சுவாமி! எவ்விதமாகக் கன்மங்களைச் செய்யும்படி சொல்லுகிறீர்கள்? அந்த விபரத்தை யனுக்ரகம் பண்ணவேண்டுமென்றான். (௬௧)

அருச்சுனா! வித்தை காட்டப்பட்டவன் பதுமைகளையாட்டுகிறது போலச் சமஸ்த சீவர்களையும் அவரவருடைய கன்மங்களுக்குத் தகுந்தபடி நடக்கும்படியாகப் பகவானாகிய ஒருத்தனே யாட்டிவைக்கிறோம். அப்பேர்ப்பட்ட பகவானை நீ யறிந்து திரிகரணசுத்தியாக அவரைச் சரணமாயடைந்தாயாகில் அவருடைய அனுக்ரகத்தினால் உபசாந்தியுண்டாய்ச் சாஸ்வதமா யிருக்கப்பட்ட அவருடைய ஸ்வரூபத்தை யடைவாய். (௬௨)

அருச்சுனா! தயாளுவாயிருக்கிற நம்மாலே அத்தியந்தம் இரகசியங்களுக்குள்ளே ரகசியமாயிருக்கப்பட்ட கீதாசாஸ்திரமானதையுனக்



குபதேசிக்கப்பட்டது. இதை நன்றாக விசாரித்துப் பார்த்துக்கொண்டு உனக்கெப்படி யிச்சையுண்டாகிறதோ அப்படிச்செய். (௬௩)

சுவாமி! இப்போது அனுக்ரகஞ்செய்த கீதார்த்தங்களை யாலோசித்துப் பார்த்தால் யோகரூபமான சகத்து இல்லவேயில்லையென்று நிச்சயமடைந்து சுகஸ்வரூபனாகவே யிருக்கலாம். அதற்கு யாதொரு சந்தேகமுமில்லை; ஆனால் இப்பேர்ப்பட்ட அதிகெம்பீரமாயிருக்கப்பட்ட கீதாசாஸ்திரத்தை முழுதும் ஆலோசித்துப்பார்க்கச் சாமார்த்தியமில்லாதவனாயும், மோட்சத்தில்மாத்திரம் இச்சையுண்டானவனுமாயிருந்தால் அவன் எவ்விதமாய் நடக்கவேண்டுமோ அதை அனுக்ரகம் பண்ணவேண்டும்? அருச்சுனா! நீ நமக்குச் சீடனும் பிரியமுள்ளவனுமானபடியினாலேயும், நம்முடைய வார்த்தையில் விசுவாசமுள்ளவனானபடியினாலேயுந் தயவினாலே யின்னமும் உனக்கிதமாயுஞ் சாருவாயுமிருக்கப்பட்ட அர்த்தத்தைச்சொல்லுகிறோம். அதெப்பேர்ப்பட்டதென்றால், உலகத்துக்குள் சர்வ ரகசியங்களைப்பார்க்கிலும் மதிக ரகசியமாயும் சிரேஷ்டமாயுமிருக்கிறதானதாற் சாவதானமாய்க்கேள். (௬௪)

அருச்சுனா! நம்மிடத்திலே மனதைவை, நம்மையே பத்திபண்ணு நம்மையே குருவாயடை, நம்மையே பூசித்து நமஸ்காரம்பண்ணு. இப்படிச் செய்துகொண்டுவருவாயாகில் நம்முடைய அனுக்ரகத்தினாலே ஞானமுண்டாய் நம்மைத்தானே யடைவாய். இதிற் சந்தேகம் வையாதே. நீ நமக்குப்பிரியனானபடியினாலே யுனக்குச் சத்தியமாகப் பிரதிக்கினை பண்ணினோம். (௬௫)

அருச்சுனா! இதைப்பார்க்கிலும் இரகசியமாயிருக்கிறதை யுனக்கனுக்ரகம்பண்ணுகிறோம்கேள். சமஸ்த கருமங்களையும் விட்டு நம்மையொருவனையே பத்திவிசுவாசத்துடன் சரணமாக அடை. நா னுனக்கினிச் சனனமரணத்துக் கேதுவாயிருக்கிற சகல பாபங்களினின்றும் விடுபடுத்தி மோட்சத்தைக் கொடுக்கிறேன். ஆனதால் நீ செய்யப்பட்ட கன்மங்களினாலே பாபம்வருமென்று விசாரத்தையடையாதே.

இத்தன்மைய ரகசியமாயிருக்கப்பட்ட கீதார்த்தத்தையுனக்குபதேசித்தோம். இந்த அர்த்தத்தை யின்னாருக்குபதேசிக்கலாமென்றும் இன்னாருக்குபதேசிக்கலாகாதென்பதையுஞ் சொல்லுகிறோம்கேள். தபசுகள் செய்யாதவனுக்கும் சுதன்மங்கள் பண்ணாதவனுக்கும் பகவானாயிருக்கிற நம்மை மனிதனென்று நினைக்கிறவனுக்கும் நம்மிடத்தில் அசூயை யெண்ணுகிறவனுக்கும் நம்மிடத்திற் பத்தியில்லாதவனுக்கும் குருபத்தியில்லாதவனுக்கும் அவருக்குச் சிசுருஷை பண்ணாதவனுக்கும் எவ்வளவேனுஞ் சொல்லாதே. (௬௭)

அருச்சுனா! இந்தத் தோஷங்களில்லாமல் இருக்கிறவர்களுக்கு யாவனுபதேசிக்கிறானோ அவனுக்குப் பலனைச்சொல்லுகிறோங்கேள். இந்த ரகசியதன்மமாயிருக்கிற கீதார்த்தத்தை நம்முடைய பக்தாளுக்குபதேசிக்கப்பட்டவன் நம்மிடத்திற் சிரேஷ்டமாயிருக்கிற பக்தியைப் பண்ணி நம்முடைய சொரூபத்தை யெவ்விதமாக அடைவார்களோ அந்தச் சொரூபத்தையே யடைவன். இதிற் சந்தேகமில்லை. (௬௮)

அருச்சுனா! எவன் நம்முடைய பக்தாளுக்குக் கீதார்த்தத்தை யுபதேசிக்கிறானோ அவனைவிட நமக்குப் பிரியம்வரும்படி பண்ணின பேர்கள் இப்போது வர்த்தமானத்திலும் ஒருவருமில்லை; இதற்குமுன் போனபேர்களுக்குள்ளேயு மினிமே லுண்டாகப்பட்டபேர்களுக்குள்ளேயுங் கிடையாது. தனஞ்சயா! இந்த மகாத்மா கிடைக்கிறது மிக வுந்துர்லபமானதால் அவனை நமக் கத்யந்தமான பிரியனென்று சொன்னோம். (௬௯)

அருச்சுனா! இந்தக் கீதையைப் பாராயணஞ் செய்தவனுக்குப் பலனைச் சொல்லுகிறோங்கேள். உனக்கும் நமக்கும் சங்கை ரூபமாய்த் தன்மத்தோடுங்கூடியிருக்கிற கீதையை யெவன் பாடம்பண்ணுகிறானோ அவன் எல்லாயோகிகளுக்குஞ் சிரேஷ்டமாயிருக்கிற ஞான எக்யத்தினாலே நம்மைப் பூசித்தவனென்கிறதாக நம்முடைய நிச்சயமாகும். இன்னமும்அவன் வேறேபொருவரைப் பேர்சொல்லியழைத்தாலும் நம்மையே யழைக்கிறானென்று அவ்விடத்தில் நாம் பிரத்தியட்சமாய்ப்போவோம். (௭௦)

அருச்சுனா! ஒருவர் வாசிக்கும்போது சிரத்தையோடுங்கூட அன்னியசிந்தையில்லாமலும் அசூயையின்றிப் பிரமாணமாக எண்ணிக் கொண்டு விசுவாசத்துடன் கேட்பானேயாகில் அவன் சகல பாபங்களினு மிருந்து விடுபட்டவனாகி அனேக அசுவமேதயாகம் பண்ணினவாள் எந்தலோகங்களை யடைவார்களோ அந்தலோகங்களையே யடைவன். (௭௧)

அருச்சுனா! ஏகாக்ர சித்தத்தோடுங் கூடினவனாயிருந்து நானுபதேசித்த அர்த்தத்தை நன்றாகக் கேட்டதனாலே யிதுவரைக்கும் அஞ்ஞானத்தினாலே தோற்றப்பட்ட தேகத்தை நானென்றிருந்தபுத்தி நீங்கிற்றா இல்லையா? இன்னமும் நீங்காதிருந்தால் மீட்டு முபதேசிக்கிறோமென்று பகவானனவர் தயவுடன்கேட்டதற்கு. (௭௨)

அருச்சுனனானவன் மிகவும் பத்தி விசுவாசத்துடனே வணங்கிச் சுவாமி! பக்தாளை நழுவவிடாமல் ரட்சிக்கிறவரன்றோ தேவரீருடைய



கடாக்ஷத்தினாலே யெனக்குண்டாயிருந்த அஞ்ஞானமுழுவதும் போய்விட்டது. நான் பிரமசொரூபமானேன் இனி யடியேனுக்கு ஒரு சந்தேகமுமில்லை யெவ்விதமாய்த் தேவரீர் அனுக்ரகம் பண்ணுகிறீர்களோ அவ்விதமாயே நடக்கச்சித்தமாயிருக்கிறேனென்று பகவானைப் பார்த்து தோத்திரஞ் செய்கிறானென்று திரிதராட்டிரருக்குச் சஞ்சயர் சொல்லுகிறார். (௭௩)

மகாராசாவே! அருச்சுனன் எவ்விதமாகத் தோத்திரஞ் செய்கிறானென்றால், ஜெகத்துக்கெல்லாம் ஈஸ்வரனாயிருக்கிறவரே! என்னுடைய அஞ்ஞானத்தினாலே யிதுவரையிலுந் தங்களுடைய மகிமை தெரியாதிருந்தேன். இப்போது தங்களுடைய கிருபாகடாட்சத்தினாலே தெரிந்தேனென்று ஆனந்த பாவசனாய்த் தோத்திரம் பண்ணுகிறான். சகத்திலேயுண்டான அந்தகாரத்தினாலே பொன்றுந் தெரியாதிருந்த சீவாளுக்குச் சூரியப்பிரகாசத்தினாலே சகல பதார்த்தங்களுந் தெரிவதுபோலத் தேவரீருடைய அனுக்ரகத்தினாலே யெனக்குண்டாகிய அஞ்ஞானமெல்லாம் நிவிர்த்தியாகி என் னிசரூபத்தை யறிந்தேனென்றும் ஆகாயம் எல்லாத்துடனுங்கூடியிருந்தும் ஒன்றிலுங்கூடாமல் எல்லாவற்றிற்கும் ஆதாரமா யிருக்கிறதுபோல் இந்தப் பிரபஞ்சத்தை யீன்றுங் காத்தும் அழித்தும் இவைகளுடனுங் கலவாமல் எல்லாவற்றிற்கு மாதாரமாயிருக்கிற தெத்தவிதமென் றறியேனென்றும் தோத்திரம் பண்ணுகிறான். (௭௪)

அக்கினிக்கும் உஷ்ட்ணத்துக்கும் பேதமில்லா திருப்பதுபோல அந்தக் கரணங்களிடத்திலுங்கலந்து அந்த அந்தக்கரணங்களுக்குந் தெரியாமல் அவைகளுக் காதாரமாயும் அந்தரியாமியாயுமிருந்து இரட்சிக்கிறது எந்தவிதமென்றறியேனென்று தோத்திரம் பண்ணுகிறான்.

தேவரீருக் கடிமைபூண்டவர்களை யெவ்விதமும் இரட்சிக்கிற சுவாமியென்று இதுவரையும் அறியாதிருந்தேனே யென்றும் தோத்திரம் பண்ணுகிறான். (௭௬)

நானாவிதமாயிருக்கிற ஞானங்களினாலும் அறியப்படாத வுருவையுடையவரே! புலன்களென்கிற காட்டாறுகளிலேயுழலும் அந்தக் கரணங்களுக்கெல்லாம் தனித்தனியே நின்றும் அதனுடனுங் கலவாதிருந்தீர். அப்படியும்மை யொருவரும் அறியமாட்டார்கள். அப்பேர்ப்பட்ட தேவரீர் என்னை யிரட்சிக்கிற நிமித்தம் எழுந்தருளின சுவாமியென்று தோத்திரம் பண்ணுகிறான். (௭௭)

கண்ணாடியிற் பிரதிபலின மில்லாதபோது வேறொருவேற்றுமையுந் தோற்றாதிருப்பதுபோல யாதொரு கரணங்களிலுங் கூடாமல்

நின்றபோது அறிவானும் அறிபொருளு மின்றி யொன்றாயிருக்கிறது உன்னியற்கையன்றோ? ஆதிவஸ்துவேயென்று தோத்திரம் பண்ணுகின்றான். (௭௮)

ஆதித்தன் ஒருவனுயிருக்கச் செலங்கள்தோறும் பேதமாய் அனேகரூபங்கள் காட்டுறாற்போலத் தேவரீர் ஒருவராயிருந்தும் பேத பேதங்களாய் அந்தக்கரணங்கள் தோறும் அவையவையாகத் தோன்றுகின்ற மாயவனே! யும்முடைய சொருபத்தை விசாரித்துப் பிரமாணமாகச் சொல்லுகிறதற்கு எல்லாவற்றிற்கு மேற்பட்ட வேதங்களாலுங் கூடாது. சொல்லிறந்த சோதியென்று தோத்திரம் பண்ணுகிறான்.

எப்போதும் நித்தியனாய் அசைவில்லாத பூரணமாய்ச் செகச் சொருபமாய் நின்றவனென்றாலும் ஆகாயமுஞ் சூரியனுந் தண்ணீரிலே தோன்றித் தண்ணீ ரசைவினாலே விடயமு மசைகிறதென்று சொல்லுவதுபோல ஒவ்வொரு அந்தக்கரணங்களிலுந் தோன்றி ஒவ்வொரு பேதமாகக்காட்டினாலும் விப்பிரத்தைப்போலப் பேதப்படாமலிருக்கப் பட்ட உம்மைக் கலைஞானத்துடனே வேதங்கள் நன்றாய்த்தெரிந்த பெரியோர்களும் இப்பேர்ப்பட்டவரென்று காண்பதரிதா யிருக்குமென்றுந் தோத்திரம் பண்ணுகிறான், (௮௦)

பிரபஞ்சத்திலே பேதபேதமாய்த் தோன்றுகிற யாதொரு பொருளையுஞ் சர்வசீவாளுக்குஞ் சூரியப் பிரகாசத்தினாலே தெரியப்படுகிறது போல எல்லாச்சீவாளுடைய செய்வினைகளெல்லாம் நீரொருவரே யறிந்து அவர்கள் சனனங்கள்தோறும் அவரவர்களுக்குத் தகுந்த பலன்களைக் கொடுக்கிறவராயிருக்கிற வும்மை யறிவாரொருவருமில்லை. அப்பேர்ப்பட்ட உம்முடைய மகிமையை யெப்படி யறிவேனென்று தோத்திரம் பண்ணுகிறான். (௮௧)

நேத்திரத்துக்குச் சூரியப்பிரகாசத்தினால் எந்தப் பதார்த்தங்களும் விளங்குவதுபோல சகல சீவகோடிகளிடத்திலுமிருந்து அந்தப் புலன்களுக்கு அதனதன் தொழில்களை யுண்டாக்கிவைத்தாலும் உம்மை விசாரிக்குமிடத்தில் அவைகளுக்கு அசங்கமாயும் மறைசளுக் கெட்டாதவரென்றும் சொல்லுகிறபடியால் அப்பேர்ப்பட்ட தேவரீர் உலகரட்சணார்த்தமாக அவதாரஞ் செய்ததுபோலத் தோன்றிப் பசுக்கள் மேய்த்தாரென்று உமக்குக் குறையுண்டோவென்று தோத்திரம் பண்ணுகிறான். (௮௨)

ஆகாயத்திற் சஞ்சரிக்கிற மேகமானது சூரியனை மறைக்கப் பார்க்கிறவனுக்குச் சூரியபிம்பம் மறைபட்டாற்போல் அஞ்ஞானத்தை



யுடைய சீவாளுக்குத் தேவரீர் சனனமானார்போலக் காணப்படுகிறீர். தேவரீருடைய தன்மையைப்பார்க்குமிடத்திற் பற்றுதலுண்டோ விடுதலுண்டோ பரமயோகியென்று தோத்திரம் பண்ணுகிறான். (௮௩)

ஆகாயமானது மற்ற நான்கு பூதமுதற் சராசரங்கள்தோறுங் கலந்திருந்தாலும் அதொன்றிலும் பற்றமல் நின்றதுபோல இந்தப் பலவிதமான உலகமெல்லாம் உம்மிடத்திலே கலந்துநின்றாலும் உம்மிடத்திற் பற்றமலிருந்த தெப்படியோ தெரியவில்லையே? அப்படிப்பட்ட தேவரீர் கோபிகைகளுடனேகூடிப் பசுமேய்த்தாரென்றாலும் அவர்களுடன்கூடி விளையாடினாரென்றாலுங் குறையுண்டோ சுவாமியென்று தோத்திரம் பண்ணுகின்றான். (௮௪)

யாதொருதொழிலு மின்றித் தனியே ஏகனாகவும் நிர்விகாரியாகவும் இருக்கிற தேவரீர் பிரபஞ்சத்துடனுங்கூடி விகாரிபோலவுந் தோற்றுகிறீர். எப்படித் தோன்றுகிறீரென்றால், படிகக்கல்லிற் பஞ்சவர்ணம் பற்றினாற்போலும், நீரிலே தோன்றின சந்திரன் அலைகிறதென்றாற்போலும், மனமுதலான கரணங்கள்தோறும் அவற்றின் தொழிலுக்கும் ஆதாரமாய்த் தோன்றுகிறீர். சக்கரத்தைத்தரித்திருக்கிற கையையுடையவரே! உம்முடைய சொருபமான அகண்ட பரிபூரணத்தைக் கண்ணினாலே கண்டோமென்கிறபேர் ஒருவருமில்லையேயென்று தோத்திரம் பண்ணுகின்றான். (௮௫)

என்னைப் பந்திக்கப்பட்ட கருமபந்தங்களெல்லாம் விடுபடுத்தி அஞ்ஞானமென்கிற வியாதியை நிவிர்த்திசெய்வித்த பிரமஸ்வரூபமே யெனக்கு இனியொரு சுதந்தரமுமில்லை. தகுமென்பதையுந் தகாதென்பதையுந் துணியும்படி உபதேசித்தவரே! துரியோதனாதிகள் மேல் போர்தொடங்கென்றருளிச்செய்த கட்டளைப்பிரகாரம் செய்யக்கடவேனென்று யுத்தத்திலே பிரீதியுடையவனாய் அருச்சுனன் காண்டீபத்தைக் கையிலெடுத்தவனாகப் போரிலொருமைப்பட்டு நின்றானென்று திரிதராட்டிராருக்கு சஞ்சயர் சொல்லுகிறார். (௮௬)

சஞ்சயரைப் பார்த்து மாதவனுந் தனஞ்சயனும் ஏகாந்தத்திலிருந்து மோக்ஷப் பிரதிபாதனமாக நடந்த விருத்தாந்தங்களுனக்கெப்படித்தெரிந்ததென்று திரிதராட்டிரன் கேட்க, வேதவியாசருடைய கிருபாகடாக்ஷத்தினாலே யறிந்தேனென்று சொல்லி யிவைகள் வேறொருவருக்குந்தெரியத்தக்கதில்லையென்று சொல்லிச் சஞ்சயரானவர் தனக்குண்டாகிய ஆனந்தத்தினாற்றானே தோத்திரம் பண்ணுகிறார்

வாருமையா திரிதராட்டிரரே! மகத்துவத்தோடுங் கூடியிருக்

கிற அருச்சுனனுக்கும் பரமாத்மாவாகிய வாசுதேவருக்கும் சம்வாத மாயிருந்த தெப்படிப்பட்டதென்றால், அந்த ஆச்சரியத்தினாலே மயிர்க்கூச்செறிந்து அந்தச் சம்வாதத்தை நான் கேட்டபிரகாரம் உமக்குச்சொன்னேன். (அஅ)

யோகிகளுக்கெல்லாம் பகவானாயிருக்கப்பட்ட பகவான்றானே பகனுக்கிரகம்பண்ணின அத்யந்த ரகசியமாயும் இஷ்டமாயு மிருக்கப்பட்ட கீதார்த்தத்தை வியாசருடைய அனுக்கிரகத்தினாலே நானுங் கேட்டேன். (அகூ)

வாருமையா மகாராஜாவே! புண்ணியங் கொடுக்கிறதாயும் ஆச்சரியகரமாயு மிருக்கப்பட்ட சம்வாதமாய் சுவாமிக்கும் அருச்சுனனுக்கும் நடந்த கீதையினுடைய அர்த்தத்தை நினைந்து நினைந்து திரும்பியுந் திரும்பியுஞ் சந்தோஷத்தையடைகிறேன். (கூ௦)

வாருமையா திரிதராட்டிரரே! ஆச்சரியகரமாயிருக்கிற பகவானுடைய விசுவரூபத்தை நினைந்து நினைந்து பார்க்கிறபோதெல்லாம் அதிக்கடி சந்தோஷம் வருகிறது என்று சஞ்சயர் சொல்ல, (கூக)

திரிதராட்டிரன் இவ்விருவரில் யார் செயம் அடைவாரென்று கேட்டதற்கு, யாதொருவருடைய கூட்டத்திலே யோகிகளுக்கெல்லாம் யோகீஸ்வரனா யிருக்கப்பட்ட பகவான் எந்தப் பக்கத்தி லெழுந்தருளி யிருக்கிறாரோ, யாதொருவர் கூட்டத்திலே காண்டீபமென்கிற தனுசைப் பிடித்துக்கொண்டு அருச்சுனனிருக்கிறானோ, அவ்விடத்திலே ராசலட்சுமியும், செயமும், உத்தரோத்தரம் அபிவிர்த்தியும், நீதியும், நிச்சயமாயிருக்குமென்று என்னுடைய நிச்சயம். ஆகையா லிப்போதாகிலுந் துரியோதனாதிகளோடெங்கூட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைச் சரணமாக அடைந்து எல்லாருஞ் சுகமாயிருக்கலாமென்று சஞ்சயரானவர் திரிதராட்டிரரைப் பார்த்துச் சொன்னார். (கூஉ)

பகவானிடத்திலே பத்தியோடெங்கூடியிருக்கிறபேர்கள் பகவானுடைய அனுக்கிரகத்தினாலே ஞானம்வந்து மோக்ஷத்தை யடைவார்களென்று கீதையினுடைய சங்க்ஷேபார்த்தம். இப்பேர்ப்பட்ட பத்தியினால் என்னுடைய புத்திக்குத்தக்கதாகக் கீதையினுடைய அர்த்தத்தைத் தெரிந்தமாத்திரஞ் சொன்னேன். இதனாலே பரமானந்த ரூபமாயிருக்கிற ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் சந்தோஷத்தை யடையக்கடவர் இப்படி ஸ்ரீசற்குருவினுடைய கிருபாகடாக்ஷமாகிற அமிர்தம் போலக் கீதையினுடைய அர்த்தஞ் சொல்லப்பட்டது. (கூ௩)

பதினெட்டாவது சந்நியாச அத்தியாயம் முற்றிற்று.

அ அத்தியாயம் கஅ - க்குச் சுலோகம் - எகள.

பகவற்கீதைவசனம்

சம்பூர்ணம்.

ஸ்ரீஸ்வாமிர் தமசோதஸ்யோம: